தெய்வ வாக்கு

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்



வானதி
பதிப்பகம்

தெய்வ வாக்கு

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள்
ஸ்ரீ ஜெயேந்திர ஸரஸ்வதி
சங்கராசாரிய ஸ்வாமிகளின் அருள்வாக்குகள்

வானதி பதிப்பகம்
தி.நகர், சென்னை-17

முதற் பதிப்பு: பிப்ரவரி, 1979
இரண்டாம் பதிப்பு, பிப்ரவரி 1980

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை ரூ. 9-00

அச்சிட்டோர்:—
நாதன் அண்டு கம்பெனி,
சென்னை-600 042.



அன்பும் அருளும்

அகிலத்திலுள்ள மக்கள் அஞ்ஞான இருளிலிருந்து விலகவும் துன்பங்களிலிருந்து விடுபடவும் துயரங்களிலிருந்து மீளவும் ஞானிகளும் பெரியவர்களும் ஆசாரியர்களும் மோனத் தவமிருப்பதையும் தியானத்தில் திளைத்திருப்பதையும் காண்கிறோம்.

நானில மக்கள் நலமுற-எல்லோரும் எல்லாச் செல்வமும் பெற்றிட, அவர்கள் எல்லாவற்றையும் துறந்து, தூய வாழ்க்கை மேற்கொண்டு,சதாசர்வ காலமும் இறைவனையே நினைந்து, போற்றித் தியானித்து, அந்தத் தியானத்திலேயே அவர்கள் பேரின்பமடைவதைப் பார்க்கிறோம்.

ஞானிகளும் சமயக் குரவர்களும் ஆசாரியர்களும் தாம் பெற்ற பேரின்பத்தை, பேரறிவை, பெரு ஞானத்தை உலகமும் பெறும்படி செய்வது அவர்கள் வாக்கு வழியாகத் தானே! அந்த வாக்குகள் அவர்களுக்குச் சாதாரணமாகக் கிடைத்தவை அல்ல. பெறற்கரிய அனுபவத்தினாலும் ஆழ்ந்த படிப்பினாலும் தவவலிமையினாலும் தெய்வ வழிபாட்டினாலும் உபநிடதங்கள் உணர்த்திய உண்மை அறிவினாலும் தெய்வீக அருளினாலும் அவர்களுக்குக் கிட்டியவை. அந்த மெய்ப் பொருளும் பேரறிவும் அஞ்ஞானம் நிரம்பிய மக்களுக்கெல்லாம் பயன்படவேண்டுமென்ற பரம கருணையினால் ஞானிகளும் ஆசாரியர்களும் குருமார்களும் தாம் பெற்ற அனுபவத்தை நல்லறிவை நானிலமக்கள் பயன்பெறும் பொருட்டு திருவாய் மலர்ந்து அருளும்போது அதை "தெய்வ வாக்கு" என்கிறோம்; அருள்வாக்கு என்கிறோம். அந்த வாக்குகளினால் தெளிவடைகிறோம். அறிவும், அருளும்பெறுகிறோம். அதனால் தான்,

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல்தானே.'

என்கிறார் திருமூலர்.

மேற்சொன்ன சொற் செல்வக் கருத்துக்கேற்ப நூற்றுக்கு நூறு பொருத்தமுடன் நமக்குக் கிடைத்த மாபெரும் பொக்கிஷம்தான் தெய்வ வாக்கு.

இந்நூலை அருளியவர்கள் நடமாடும் தெய்வமென நானிலத்தாரும் போற்றும் காஞ்சி காமகோடி பீடாதீச்வர ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராசாரிய சுவாமிகள். அவர்கள் மக்களின் மேம்பாட்டையும் க்ஷேமத்தையும் கருதும் கருணைத் தெய்வம்.

உலகம் வாழ அவர்கள் நித்திய பூஜை செய்வதைக் கண்கூடாகப் பார்த்து வருகிறோம். சிலர் தாங்கள் மட்டும் வாழ வேண்டுமென்று இறைவனிடம் பிரார்த்திப்பார்கள். ஆனால் பெரியவர்கள் உலக மக்கள் யாவரும் சுபீட்சமாக வாழ வேண்டும் என்று சதா சர்வ காலமும் பிரார்த்தனை செய்து வருகிறார்கள். இது யாவரும் அறிந்ததே.

ஸ்ரீ காஞ்சி மடத்துடன் எனக்குப் பல்லாண்டுகளாகத் தொடர்பு உண்டு.

அந்த ஸ்ரீ மடத்தில் எளிமையும், புனிதமும், சத்தியமும் இறை ஒளியும் தவழ்வதை எப்பொழுது போனாலும் காண லாம். குளிர்பூந் தென்றலை அனுபவிக்கலாம்.

எவ்வளவு உயர்வான செல்வம் படைத்தவர்களும் நிம்மதி என்ற நிறைவு காண ஸ்ரீ காஞ்சி மடத்துக்கு ஓடோடி வருவதைக் கண்டிருக்கிறேன். தாயின் பரம கருணையும், தந்தையின் அரவணைப்பும் குருவின் திருவருளும், தெய்வத்தின் பேரொளியும் ஸ்ரீ காஞ்சி மடத்தில் காணலாம் தினம்தினம் பல்லாயிரக் கணக்கான மக்கள் தங்கள் குறைகளையும் கவலை களையும் போக்கிக்கொள்ளவும் பரிகாரம் காணவும் வருகிறார் கள். அவர்களுக்கெல்லாம் ஆசாரியப் பெருமான் அன்பாசி வழங்கி அருளுரைகள் மொழிந்து ஆனந்தத்தைப் பொழிந் தும் வருவதைக் காண்கிறோம்.

சிறப்புக்குரிய ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் மகிமைக்கு ஆதிசங்கரரின் காலடிச் சுவட்டை கவனமாகப் பின் பற்றும் ஆச்சார்யர்களின் புனிதப் பணியும், நித்திய பூசையும் சத்திய நெறியும்தான் காரணம். அந்த மாபெரும் பீடத்தை

அலங்கரித்த மகான்களின் அருட்கொடையினலும், நாம் செய்த பாக்கியத்தாலும், மோன தியான மூர்த்தியான மூலவர் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளும், உற்சவ மூர்த்தியான ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளும் தங்கள் அருளாட்சியின் மூலம் ஸ்ரீ மடத்தின் மகிமையை மேலும் சிறப்பாக்கி வருவதைக் கண்கூடாகக் காண்கிறேம்.

மக்களை மேம்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டு நாளும் நல்லுரைகளை வழங்கிவரும் பேசும் தெய்வமான காஞ்சிப் புதுப் பெரியவர்களான, ஸ்ரீ ஜெயேந்திர சரசுவதி சுவாமிகளின் வாக்குகளைத் தொகுத்து 'தெய்வ வாக்கு' என்னும் தலைப்பில் நூலாக்கித் தந்துள்ளேன். இதில் அவர்கள் விளையும் பயிர்களான இளையோருக்கும், வீட்டுத் தலைவியர்க்கும், வீட்டுத் தலைவருக்கும் நல்லறிவுரைகளையும் நற்சிந்தனைகளையும் தேர்ந்த நல் ஞானத்தினையும் வழங்கியுள்ளார்கள்.

இந்நூலை வானதி பதிப்பகத்தில் வெளியிட அன்போடு அனுமதியளித்த நடமாடும் தெய்வம் ஸ்ரீ ஜெயேந்திர சரசுவதி ஸ்வாமிகளுக்கு அனந்தகோடி வணக்கங்கள்.

மக்கள் நல்லறிவு பெறவும், நலம் பல பெறவும், நாடு சுபிட்சம் பெறவும் 'தெய்வ வாக்கு'கள் நிச்சயம உதவும்.

சுவாமிகள் பல்வேறு சந்தர்ப்பங்களிலும், பல்வேறு சமயங்களிலும் அருளிய வாக்குகளைத் தொகுத்து சிறப்பாக நூல் வடிவமாக்கிட உதவியவர் கல்கி உதவி ஆசிரியர் திரு. கௌசிகன் அவர்கள். நூல் செப்பமுற அச்சாக ஒப்புநோக்கி உதவியவர் கவிஞர் குயிலன் அவர்கள். சிறப்பாகவும் துரிதமாகவும் அச்சிட்டவர்கள் மாருதி அச்சகத்தினர். யாவருக்கும் மனம் நிறைந்த நன்றி.

வாக்கை வரவேற்கத் துடிக்கும் வாசகர்களுக்கு நன்றி.

வாக்கை வழங்கிய தெய்வத்துக்கு வணக்கம். மேலும் நல் வாக்குகளை அருளப் பிரார்த்திப்போம்.

அன்புள்ள,

ஏ. திருநாவுக்கரசு,

வானதி பதிப்பகம்

பொருளடக்கம்

பக்க எண்

விளையும் பயிர்களுக்கு

வீட்டுத் தலைவிக்கு

வீட்டுத் தலைவனுக்கு

விளையும்

பயிர்களுக்கு

குருபக்தி

நாம் எதைத் தெரிந்துகொள்ள வேண்டு மென்றாலும் பெரியவர்கள் மூலந்தான் தெரிந்து கொள்கிறோம். குழந்தை தன் தாயார் தகப்பனார் யார் என்பதை, தாயாரிடத்தி லிருந்தோ, தகப்பனாரிடத்திலிருந்தோ, அல்லது பெரியவர்கள் மூலமாகவோதான் தெரிந்துகொள்ள முடியும். மாதா, பிதா, குரு ஆகிய இந்த மூன்று பேர்களும் நமக்குப் பிரத்தியக்ஷ தெய்வங்கள். மாதா பிதாக்கள் நம் சரீரத்தைக் காப்பாற்று கிறார்கள். ரோகம் வந்தால் சிகிச்சை செய்ய ஏற்பாடு செய் கிறார்கள். அவர்கள் நம் தேகத்தைப் பொறுத்த மட்டும் ரக்ஷிப்பார்கள். ஆனால் இந்தத் தேகம் திரும்பியும் திரும்பியும் ஜன்மம் எடுக்கக் காரணமாகிறது.

சம்சார மென்கிறது ஒரு பெரிய வியாதி. அதிலிருந்து தப்பிக்க, குருதான் உபகாரம் பண்ணமுடியும். எக்காலத் திலும் வியாதியில்லாத நிலையைக் கொடுக்க, குரு ஒருவரால் தான் முடியும். அவர்தான் கரையேற்ற முடியும். இவ்வளவு உயர்ந்தவரான குருவுக்கு உபமானம் ஏதாவது சொல்ல முடியுமா என்று பார்த்தால்-ஒருவன் பணக்காரனாக இருந் தால், குபேரன் போல் பணக்காரன் என்கிறோம். அந்த மாதிரி குரு யாரைப்போல் இருக்கிறார் என்றால், அவருக்கு நிதர்சனம் யாரும் இல்லை. ஆனால் குருவின் சக்தி பரம்பரையாய் எல்லாச் சிஷ்யர்களுக்கும் வரக்கூடியது. குருவினிடம் பக்தி பண்ணி னால் வேண்டியதெல்லாம் கிடைக்கும். இதற்கு அநேக புராணக் கதைகள் உண்டு. ஓர் ஊரில் ஒரு குரு இருந்தார். அவரிடம் அநேக சிஷ்யர்கள் இருந்தார்கள். அவர்களுள் ஒரு சிஷ்யன் மிகவும் மந்தபுத்தி யுள்ளவன். மற்ற சிஷ்யர்கள்

எல்லா வித்தைகளையும் கிரஹித்துக்கொண்டு மிகவும் மேதாவிகளாய் இருந்தார்கள். படிப்பை முடித்துக்கொண்டு குருவினிடம் அநுமதி பெற்றுக்கொண்டு போய்விட்டார்கள். இந்தச் சிஷ்யன் மட்டும் சுச்ரூஷை பண்ணிக்கொண்டு குருவினிடமே இருந்தான். அவனுக்கு அநுக்ரஹகாலம் வரவில்லை. இந்தச் சமயத்தில் குருவுக்கு ஒரு பெரிய வியாதி வந்துவிட்டது. பகவான் ஸ்வப்னத்தில் தோன்றி, ''நீ காசி வாசம் பண்ணினால் உன் வியாதி ஸ்வஸ்தமாகும்'' என்றார். இந்த மந்த புத்தியான சிஷ்யனுடன் ஐந்தாறு சிஷ்யர்கள் இருந்தார்கள். ''நீங்கள் என்னைக் காசிக்கு அழைத்துக்கொண்டு போகிறீர்களா?'' என்று குரு கேட்டார். அவர்கள், ''எங்களால் முடியாது'' என்றார்கள். அப்படித்தான் உலக ஸ்வபாவம். ஒருவனுக்குப் பலமும் ஆரோக்கியமும் சம்பாத்தியமும் இருக்கும் வரைக்கும் பெண்டாட்டி, பிள்ளைகள், பந்துக்கள் கூட இருப்பார்கள். சம்பாத்தியம் இல்லாவிட்டால் ஒருவரும் லக்ஷ்யம் பண்ண மாட்டார்கள். ஆனால் மந்தபுத்தி, ''நான் வருகிறேன்'' என்றான். அவனை அழைத்துக்கொண்டு குரு காசிக்குப் போனார். அவர் வியாதியோ மிகவும் கஷ்டமான வியாதி. சிஷ்யன் சிரமப்பட்டு அவரைக் கங்கைக்கு அழைத்துப் போய், ஸ்நானம் பண்ணிவைத்து அவருக்காக பிக்ஷை வாங்கி அவருக்குப் போடுவான். இவ்வளவு செய்தும் குரு அவனைக் கோபித்துக் கொள்வார். சாப்பாடு நன்றாய் இல்லை என்பார். அப்படியும் தவறாமல் சிஷ்யன் குருவுக்குச் சுச்ரூஷை எல்லாம் பண்ணிக் கொண்டிருந்தான்.

ஒரு நாள் சிஷ்யன் கங்கைக்குச் சந்தியாவந்தனத்துக்காகப் போனான். அப்பொழுது மகாவிஷ்ணு கருடாரூடராய் வந்து, சிஷ்யனைப் பார்த்து, ''நீ இவ்வளவு தீவிரமாக குருசுச்ரூஷை பண்ணுகிறாயே! ஒரு வரம் கேள்; நான் தருகிறேன்'' என்றார். சிஷ்யன் மகாவிஷ்ணுவைப் பார்த்து, ''உங்களால் எனக்கு ஆகவேண்டிய காரியம் ஒன்றுமில்லை. எனக்கு உங்களிடத்திலிருந்து ஒரு வரமும் வேண்டாம்''

என்று சொன்னான். உடனே மகாவிஷ்ணு சிவனிடத்தில் போய் இதைச் சொன்னார். இரண்டு பேரும் சிஷ்யனிடம் வந்தார்கள். பரமசிவன் சிஷ்யனுக்கு வரம் தருகிறேன் என்றார். மகா விஷ்ணுவுக்குச் சொன்னபடியே சிஷ்யன் சிவனுக்கும் பதில் சொன்னான். பரமேசுவரன் நிர்ப்பந்தம் பண்ணினார். ஒரு தடவை, இரண்டு தடவை, பல தடவை சொல்லிப் பார்த்தார். அதன்பேரில், "என் குருவைக் கேட்கிறேன். அவர் வரம் வாங்கிக் கொள் என்றால் அவருக்கு வியாதி ஸ்வஸ்தமாக வேண்டும் என்றுதான் கேட்பேன்" என்று சிஷ்யன் சொன்னான்.

பிறகு சிஷ்யன் குருவினிடம் போய் நடந்ததைச் சொன்னான். "உனக்கு இஷ்டமிருந்தால் கேள்" என்று குரு சொன்னார். உடனே மகாவிஷ்ணு, பரமசிவன், மற்ற எல்லாத் தேவர்களும் வந்து குருவுக்கு வியாதி ஸ்வஸ்தமாக அநுக்ரஹம் பண்ணினார்கள். சிஷ்யனுக்கும் குரு பக்தியால் எல்லா வித்தையும் கிடைத்துவிட்டது. இதிலிருந்து குரு பக்தி பண்ணினால் வித்தை சம்பத்து எல்லாம் கிடைக்கும் என்று தெரிகிறது.

பித்ருபக்திக்கு ஒரு கதையுண்டு. நசிகேதஸ் என்று ஒரு பையன். அவன் தகப்பனார் ஒரு யாகம் பண்ணினார். அந்த யாகத்தில் தனக்குப் பிரியமான வஸ்துவைத் தானம் பண்ண வேண்டும். நசிகேதஸ் அப்பாவைப்பார்த்து, "என்னை யாருக்குத் தானம் பண்ணப்போகிறீர்கள்?" என்று கேட்டான். ஒரு தரம் கேட்டான், இரண்டு தரம் கேட்டான். அப்பாவுக்குக் கோபம் வந்தது. "உன்னை யமனுக்குத்தான் தானம் பண்ணப் போகிறேன்" என்றார். ஆனால் உடனே மிகவும் துக்கப்பட்டார். அப்பொழுது நசிகேதஸ்அப்பாவைச் சமாதானம் பண்ணினான். "உங்கள் தாத்தா, தாத்தாவுக்குத் தாத்தா எங்கே போனார்களோ, நீங்களும் எங்கே போகப்போகிறீர்களோ, அங்கே தான்நானும் போகிறேன். அதற்காக நீங்கள்கவலைப்படவேண்டாம்" என்றுயமலோகம் போனான்.

நசிகேதஸ் யமலோகம் போனபொழுது யமன் அங்கே இல்லை. பிறகு வந்ததும், நசிகேதஸைப் பார்த்து, "எப்பொழுது வந்தாய்?" என்று கேட்டான். "நான் வந்து மூன்று நாள் ஆயிற்று" என்றான் நசிகேதஸ். மூன்று நாள் காத்துக் கொண்டிருந்ததற்காக யமன் நசிகேதஸ்ஸுக்கு மூன்று வரம் கொடுத்தான் முதல் வரத்தால்,'என் அப்பாவுக்குக் கோபம் தணிய வேண்டும்'' என்று கேட்டான். பாக்கி இரண்டு வரம் ஆத்ம தத்வத்தைப் பற்றிக் கேட்டான். யமன் முதலில் சொல்ல விரும்பவில்லை. அப்பொழுது நசிகேதஸ், ''சத்யம் என்பது எங்களுக்குத் தானா? உங்களுக்கு இல்லையா?'' என்று கேட்டான். பிறகு யமன் நசிகேதஸ்ஸுக்குஉபதேசம் பண்ணினான். நசிகேதஸ் வரத்தைப் பெற்றுக்கொண்டு மறுபடியும் தந்தையிடம் வந்தான். அவன் பிரம்ம ஞானியாய்த் திரும்பி வந்ததைப் பார்த்து, "உன் பிராப்தி எனக்குக் கிடைக்க வில்லையே, என் அஞ்ஞானம் தொலைய வில்லையே!'' என்று அவன் தகப்பனார் வருத்தப்பட்டார். இந்தக் கதை, பித்ரு பக்தியின் விசேஷத்தைக் காட்டுகிறது.

மாத்ருபக்தி எல்லாரும் காட்டவேண்டும். பிறந்தது முதல் கடைசி வரைக்கும் மாதாதான் நம்மைக் காப்பாற்றுகிறாள். நமக்கெல்லாம் மாதா, பிதா, குரு இவர்கள் பிரத்யக்ஷ தெய்வங்கள். அவர்களுக்குக் கைங்கர்யம் பண்ணிக் கொண்டு எல்லோரும் க்ஷேமமாய் இருக்க வேண்டும்.

கல்வி

நமது இந்திய நாடு சுதந்திரம் அடைந்து 30 ஆண்டுகள் ஆகிறது. இதுவரையில் நாட்டில் பொருளாதார முன்னேற்றத்திற்காகவும் விவசாயத்திற்காகவும் தொழில்களுக்காகவும் பலவிதத் திட்டங்கள் தீட்டப்பட்டு, பல முறைகளில் நாடு முன்னேற்றம் அடைந்துவருகிறது. ஆனால் நாட்டிற்கே அடிப்படையானது கல்வி. கல்வி உணர்ச்சியை வைத்துத்தான் ஒரு நாட்டின் பெருமையெல்லாம் பேசப்படுகிறது. அமெரிக்கா, ரஷியா, ஜப்பான் போன்ற நாடுகள் கல்வித் துறையில் முன்னேற்றம் கண்டு விஞ்ஞானத்தின் முன்னேற்றமாக சந்திர மண்டலம் வரை சென்று புகழ் பெற்று விளங்குகின்றன. நம்முடைய பாரத நாட்டில் சர்க்காரும் கல்வி வளர்ச்சி விஷயத்தில் அக்கறை காட்டாமலிருப்பது வருந்தத்தக்கதாக உள்ளது. கல்வி பல நிலையில் உள்ளது. 5-வது வகுப்புவரை இளநிலைக் கல்வி; 6-லிருந்து 8-வரை நடுநிலைக் கல்வி; அதற்குமேல் உயர் நிலைக் கல்வி; அதற்கு மேலாகக் கல்லூரிக் கல்வி; அதற்கும் மேலாக ஆராய்ச்சி செய்யவேண்டிய ஒரு நிலை. எல்லா கல்வி நிலைகளிலும் பொதுக் கல்வியறிவோடுகூட இந்திய நாட்டிற்கு ஏற்றதான கலாச்சாரக் கல்வியும் தேசியக் கல்வியும் தொழில் இயல் கல்வியும் சேர்ந்து வளர்ந்தால் அந்தக் கல்வி முழுமை பெற்றதாக ஆகிறது.

தற்கால மாணவர்கள் பலர் கல்லூரிப் படிப்பு முடித்துங் கூட, ஆராய்ச்சிப் படிப்பு முடித்துங்கூட அவரவர்களுக்கு ஏற்றவாறு தொழில் துறையிலும் உத்தியோகத் துறையிலும், சரியான வாய்ப்பு இன்னும் கிடைக்கவில்லை. உயர்நிலைப் பள்ளியில்படித்த மாணவர்களுக்கும் இன்னும் வேலைகிடைக்கவில்லை, கல்லூரி மாணவர்களுக்கு இன்னும் வேலை கிடைக்காததினால் மாணவர் உலகம், இளைஞர் உலகம் வறண்டு

போயிருக்கிறது. அதனுல் எந்த ஒரு காரியத்திலும் உத்ஸாகம் இல்லாமல் திடீர் மாற்றமுள்ள வாழ்க்கையைப் பற்றி நம்பிக்கை யில்லாமை போன்ற பல வகைகளில் இருக்கிருர்கள். ஆகவே இதற்கு எல்லாவற்றிற்குமாக அரசாங்கமோ பல்கலைக் கழகமோ சீக்கிரம் முடிவெடுக்க வேண்டும். முக்கியமாக மாணவர்களிடையே அரசியல் பற்று நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. அதனுல் படிக்கக்கூடிய சூழ்நிலை குறைந்து வருகிறது. இந்நிலை மாறவேண்டும்.

காலேஜ் (கால்+ஏஜ்)

ஒவ்வொரு மனிதனுக்கும் ஆயுள் காலம் பொதுவாக 100 வயது என்று கூறுவதுண்டு. அதில் 4-இல் ஒரு பாகம் வயது 25. இந்த 25 வயதை "கால்-ஏஜ்" என்று கூறுவதுண்டு. மனிதனுடைய முழுமையான உடலில் முழங்காலின் கீழுள்ள பாகத்திற்கு கால் என்று பெயர். அதாவது உடம்பை நான்காகப் பிரித்தால் 4-ல் ஒரு பாகமாக, நாம் நடக்கும் பகுதி கால்பாகம் ஆகிறது. இதைத்தான் ¼ அல்லது கால் ஏஜ் என்கிறார்கள். இந்த வயதில் உடம்பு, உடம்பின் பலம், புத்தி, உறுப்புக்கள் எல்லாம் பலமுள்ளதாக இருக்கும். ஆனால் வாழ்க்கையனுபவம் மாத்திரம் 'கால் ஏஜிற்கு' ஏற்றவாறு கால் பாகங்கூட இருக்காது. இந்த இளம் வயதில் எல்லாம் முறுக்கேறி நிற்கும். நாம் ஒன்றைச் சிந்தனை செய்யுமாறு மனத்துக்குச் சொன்னால் அது இன்னொன்றைச் சிந்தனை செய்யும். நாம் இதைச்செய்ய வேண்டாம் என்றால் அது அதைத்தான் செய்யும். சிந்திக்கும் சக்தி நிறைய இருந்தும் சிந்திக்க மனது இடம் கொடுக்காது. இந்த இளம் வயதிலே பலருடைய மனதானது பலவிதமாகச் சிந்திக்கும். சிலர் நாம் ஒரு பெரிய ஐ.ஏ.எஸ். அதிகாரியாக ஆகவேண்டும். நல்ல நிர்வாகம் செய்து எல்லோருக்கும் உபகாரமாக இருக்கவேண்டும் என்று நினைப்பார்கள். ஒரு சிலர் பெரிய அரசியல்வாதியாகி பல புரட்சித் திட்டங்கள் வகுத்து மக்களுக்கு உதவி செய்யவேண்டும். அப்பொழுதுதான் நாடு முன்னேறும் என்று நினைப்பார்கள். ஒரு சிலர் டாக்டராக ஆகவேண்டும் என்றும், சிலர் என்ஜினீயராக ஆகவேண்டும் என்றும், இன்னும் சிலர் பெரிய விஞ்ஞானியாக ஆகிப் புகழ் பெறவேண்டுமென்றும், ஒரு சிலர் பத்திரிகை ஆசிரியராக வந்து புரட்சிகரமான பல நல்ல கருத்துக்களை எழுதி உண்மையான நல்ல செய்திகளைப் பத்திரிகையின் மூலமாகதைரியமாக

எழுதி சமுதாயத்திற்கு உதவ வேண்டுமென்றும் நினைப்பார்கள். ஒரு சிலர் சாந்தமாக ஏதாவது உத்தியோகம் கிடைத்தால் போதுமென்றும், ஆசிரியர் பணி கிடைத்தால் போதுமென்றும் நினைப்பார்கள். இவ்வாறு பலவிதமாகத் தன்னுடைய வருங்காலத்தைப் பற்றி யோசித்துக் கொண்டிருப்பார்கள்.

இத்தனை யோசனைகளும் மிக மிக நல்லவை. ஆனால் இந்த யோசனைகளின் மத்தியில் கல்லூரியில் மறியல், அரசியல் குழப்பம், பரீக்ஷைகளைப் பலமுறை நடத்தும் முறை பற்றிய சிந்தனை இவைகளெல்லாம், நாம் நினைத்த காரியங்களுக்கு இடையூறாக அவ்வப்பொழுதுவரும். இத்தனை இடையூறுகளையும் மீறி அல்லது இவைகளில் பங்கு கொள்ளாமல் நாம் நன்றாகப் படித்துத் தேறி வெளிவந்தால்,அப்போது நாட்டினுடைய சூழ்நிலைக்கும் வீட்டினுடைய சூழ்நிலைக்கும் அனுசரித்து முன்பு யோசித்ததில் ஏதாவது ஒன்று பலிக்கும்.

பள்ளிக்கூடத்திற்கு வந்து படிப்பவர்கள் குறைவு. கல்லூரியில் படிப்பவர்கள் பள்ளிக்கூடத்தில் படிப்பவர்களில் பாதிதான் இருக்கும். மேல் படிப்புபடிப் பவர்கள் கால்பாகம் தான் இருப்பார்கள். அப்படிப் படித்தவர் எல்லோருக்கும் தான் நினைத்தபடி வேலை செய்வதற்கு வாய்ப்பு கிடைப்பது அரிது. நாமெல்லாம் இளம் வயது சிந்தனையாளர்கள். ஆகவே நல்லதுதான் சிந்தனையில் ஏற்படும். ஆனால் பல ஆண்டுகளாக சுயநலத்தையும் குழப்பத்தையுமே கொண்ட பல அரசியல்வாதிகளாலும் கட்சிகளாலும் நம்முடைய எண்ணம் நிறைவேறுமா என்று சிந்தித்து அரசியல் வாதிகளோடு பழகவேண்டும். நாமெல்லாம் 'கால் ஏஜ்' (வயது) அனுபவம் உள்ளவர்களே.

பொங்கல் பண்டிகை

ஒவ்வொரு ஆங்கில ஆண்டும் ஜனவரி மாதம் முதல் தொடங்கும். நம்முடைய ஆண்டு சித்திரை மாதத்திலிருந்து தொடங்குவதை நாம் அறிவோம். ஆனால் நம்முடைய மதத்தின் அடிப்படையில் மார்கழி மாதம் மிகப்புனிதமாகக் கருதப்படுகிறது.

தை, மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி ஆகிய ஆறு மாதங்கள் தேவதைகளின் பகற்காலம். ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி ஆகிய ஆறு மாத காலம் தேவதைகளுக்கு இரவுக் காலம். மார்கழி மாதமானது தேவர்களின் விடியற்காலை வேளை.

நம் எல்லோருக்குமே விடியற்காலை வேளையில் எழுந்திருப்பது, புத்தகங்களைப் படிப்பது, நல்லவைகளைச் சிந்திப்பது ஆகியவை நல்லது. விடியற் காலையில் செய்யக்கூடிய பணிகள் எல்லாம் நீண்டகாலம் இருக்கக் கூடியவை. முந்தைய இரவில் பல காரியங்களைச் செய்து, மனம் குழம்பியிருக்கலாம். ஆனால் காலையில் எழுந்திருக்கும்போது மனம் தெளிவாக இருக்கும். எழுந்து சிறிது நேரத்திற்குப் பிறகு குழப்பம் ஏற்படலாம். ஆனால் தூக்கத்திலிருந்து எழுந்திருக்கும் நேரத்தில் மனம் தெளிவாக இருக்கும் ஆகவே, அந்த விடியற்காலை வேளையில் மனம் தெளிவாக இருக்கும்போது நல்லதை நினைத்தால் அது நிலைத்து நிற்கும். பள்ளிப் பாடங்களைப் படித்தால் நிலைத்து நிற்கும்.

விடியற்காலை வேளையில்தான் பட்சிகளெல்லாம் உறங்கி விட்டுத் தன் பணிகளைச் செய்யக் கூண்டிலிருந்து வெளியே கிளம்புகின்றன. உயிருள்ள அனேக பிராணி வர்க்கங்கள் தம் பணிகளைச் செய்யவும், இரை தேடவும் முயற்சித்து விடியும்

பொழுதை எதிர் நோக்கிக் காத்துக்கொண்டு உள்ளன. சூரியனும் தன் பணியைச் செய்ய வெளிக் கிளம்புகிறுன். ஆகவே விடியற்காலை வேளையில் இருள்அகலுகிறது. பிரகாசம் ஏற்படுகிறது. சோம்பல் அகலுகிறது. சுறுசுறுப்பு ஏற்படுகிறது. செயல்படுவதற்குச் சிந்தனை தூண்டிவிடப்படுகிறது. இத்தனையும் மனித வாழ்க்கையில் நாம் பலன் அடைவதற்காகத்தான்.

எந்தவொரு கலாசாரத்துக்கும் மூலமானது நமது ஹிந்து கலாச்சாரம் மார்கழி மாதம் புனிதமான மாதமாக, இறைவனுக்குச் சம்பந்தப்பட்ட மாதமாக, இறைவனால் கூறப்பட்டிருக்கிறது. மார்கழி மாதத்திலே கோபியர்கள் கிருஷ்ணனைத் துதித்ததாக வரலாறு கூறுகிறது. இப்போதும் மார்கழி மாதத்தில் எல்லா கோயில்களிலும் வீடுகளிலும் சுத்தம் செய்து, கோலமிட்டு, பூஜை பஜனை முதலியன செய்யப்பட்டு வருகின்றன.

உலக வாழ்க்கைக்குத் தேவையான எந்தவொரு பணியையும் இந்த மார்கழி மாதத்தில் தொடங்கமாட்டார்கள். இறைவனுக்காகச் செய்யப்படும் பணிகளை மாத்திரமே மார்கழி மாதத்தில் விசேஷமாகக் கொண்டாடுவார்கள். ஹிந்துக்களின் முக்கியமான வழிபாட்டுத் தெய்வங்கள் சிவபெருமானும் விஷ்ணுவும் ஆவர். இவ்விருவரின் திருவிழாக்கள் இந்த மாதத்தில்தான் வருகின்றன. வைகுண்ட ஏகாதசியன்று பெருமாளுக்கும் திருவாதிரையன்று சிவவடிவமான நடராஜப் பெருமானுக்கும் விழாக்கள் நடைபெறுகின்றன இந்தப்புனிதமான மாதத்தில்தான் மற்ற மதத்தினரும் வருடப் பிறப்பு விழாக்களைக் கொண்டாடுகின்றனர்.

ஆகவே, இந்தப் புனிதமான மாதத்திலே புனிதமான மனிதப் பிறவி எடுத்த நாம் அனைவரும் புனித எண்ணங்களும் புனிதச் செயல்களும் நம்மிடையே வளர வேண்டும் என்று புனிதமான ஆண்டவனைப் புனிதமான மனதுடன் பிரார்த்தனை செய்வோமாக.

இந்த மார்கழி முடிவில்தான் பொங்கல் பண்டிகை வருகிறது. ஒவ்வொரு நாளும் வீட்டில் பால் காய்ச்சும்போது பொங்கும். ஆனல் அது பண்டிகை ஆகாது. ஆனல் பொங்கல் பண்டிகையன்று "பால் பொங்கிற்று!" என்று கேட்பது மரபு.

பால் இனிப்பான வெல்லத்துடன் சேர்ந்து பொங்கி, சர்க்கரைப் பொங்கலாக ஆவதுபோல, நம்முடைய வாழ்க்கையிலும் தூய்மையான எண்ணங்களுடன் இனிப்பான சிந்தனைகள் வளர்ந்து பொங்கி ஆனந்தமான வாழ்க்கை அடைய முயற்சி செய்வோம்.

ஹிந்து கலாச்சாரம்

உலகில் அனேக நாடுகள் இருக்கின்றன. ஒவ்வொரு நாட்டு மக்களுடைய பழக்க வழக்கங்களும் ஒவ்வொரு மாதிரியாக இருக்கும். இதைத்தான் கலாச்சாரம், பண்பாடு என்பார்கள். கடவுளைக் கும்பிடும் முறை, உணவு உட்கொள்ளும் முறை, பெரியோர்களிடம் மரியாதையாக நடந்துகொள்ளும் முறை ஆகியவை போன்ற ஒவ்வொரு செயலும் நாட்டிற்கு நாடு, தேசத்திற்கு தேசம், மக்களுக்கு மக்கள் வெவ்வேறு மாதிரி இருக்கும். இத்தனை கலாச்சாரங்களுக்கும் மூலமாகவும், முதலாகவும், தாயாகவும் விளங்கக்கூடியது நம்முடைய பாரத கலாச்சாரம்.

கடவுளை, உருவம், அருவம், கிராமசக்தி போன்ற பல தன்மைகளில் வழிபடுவது நம்முடைய பாரத தேசத்திற்கே உரித்தான ஒன்றாகும். ஒரு உருவம் பல உருவமாக இருந்து அருள் செய்வதும் நமது இந்து கலாச்சாரத்தின் தனிப்பெரும் விசேஷமாகும்.

உணவு உட்கொள்ளும் முறையில், பூமியிலே உட்கார்ந்து சாப்பிடுவது, இலையில் சாப்பிடுவது, சாத்வீகமான பல்வகை உணவுகளை உட்கொள்வது என்பது இந்து கலாச்சாரத்தின் தனிப் பெரும் விசேஷமாகும்.

நாம் நமது தாய், தந்தை, ஆசிரியர், வயதில் மூத்தவர், வயதில் இளையவர், சகோதரிகள் முதலியவர்களை வணங்கும் முறைகள் பலவகைப்பட்டு இருந்தாலும் அடிப்படையில் நம்முடைய கலாச்சாரம் ஒன்றுதான். இதில் நமக்குத் தனிப் பெருமையுண்டு.

இந்தியாவில் பல பகுதிகள் இருக்கின்றன. அவைகளில் ஒவ்வொரு பகுதியும் தனி சீதோஷ்ண ஸ்திதியைக் கொண்

டுள்ளது. அந்த சீதோஷ்ணத்திற்கு ஏற்றவாறு உடை உடுத்தும் வகை இருந்தாலும் உடை உடுத்தும் முறையிலும், உடையை சுத்தமாக, புனிதமாக, தூய்மையாக ஆக்கிக் கொண்டு அதன் மூலம் வாழ்க்கையைத் தூய்மைப்படுத்திக் கொள்வதென்பது இந்தியாவிற்கே உரித்தான ஒன்றாகும். மற்ற நாட்டினர் உடல் அழுக்குப் போவதற்காகக் குளிக்கிறார்கள். இந்தியர்கள் உடல் அழுக்குப் போவதற்காக மாத்திரம் அல்லாமல், உள்ளத்தில் உள்ள அழுக்கையும் போக்கிக் கொள்ளும் வகையில் குளிக்கிறார்கள்.

ஆணுக்கு ஒரு பெண்ணும், பெண்ணுக்கு ஒரு ஆணும் தேவைப்பட்டாலும் அவர்களது திருமணத்தைப் புனிதமான சடங்குகளுடன் நடத்தி, காகிதத்தில் எழுதியதை மாத்திரம் சாட்சியாக வைத்துக் கொள்ளாமல்(Registration) அக்கினியை சாட்சியாக வைத்துக்கொண்டு ஆண்-பெண் உறவு பிரிக்கப்படமுடியாமல் பிணைக்கப்பட்டு பரிசுத்தமான ஒரு வாழ்க்கையை அமைக்கும் முறை, இந்தியாவிற்கே உரிய தனிப்பெறும் கலாச்சாரம் ஆகும்.

இந்திய மக்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் வெளிப்புற அழகுடன் மாத்திரம் நில்லாமல், புனிதத் தன்மையை உடையவையாகவும் நல்ல சிந்தனையையும், நல்ல சம்ஸ்காரத்தையும் தருபவையாகவும் அமைகின்றன.

மாணவர்களின் வாழ்க்கை

சைக்கிளில் செல்பவர்கள் முதலில் கொஞ்சதூரம் சைக்கிளைத் தள்ளிச் சென்று மெதுவாக ஏறி உட்காருவார்கள். உட்கார்ந்தவுடன் மெதுவாக பெடல் செய்யத்தொடங்கி பிறகு வேகமாக பெடல் செய்வார்கள். பிறகு பெடலே செய்யாமல் சைக்கிளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு சந்தோஷமாக உட்கார்ந்துகொண்டு செல்வார்கள். பிறகு பெடல் செய்வார்கள் கொஞ்சநேரம்; பெடல் செய்யாமல் போவார்கள் கொஞ்சநேரம்; இதுசமயம் முன்னும் பின்னும் பக்கவாட்டிலும் நிறைய போக்குவரத்துக்கள் உண்டு. அத்தனையும் கவனித்துக்கொண்டு ஜாக்கிரதையாக ஓட்டிச் செல்வார்கள். இவ்விதமாகச் சென்று கடைசியில் மெதுவாகச் சென்று மெள்ள இறங்கி, இறங்கியதும் சைக்கிளுடன் இரண்டடி சென்று நிற்பார்கள். இதுபோல்,

மாணவர்களுடைய வாழ்க்கையும் சிறிதாகத் தொடங்கி பிறகு வேகமாக வளர்ந்து, பிறகு கொஞ்சம் கொஞ்சமாகச் சோதனைகள் ஏற்பட்டு அவைகள் எல்லாவற்றையும் தாண்டி பிறகு வேகமாக வளர்ந்து பிறகு நிதானமாக ஓய்வு பெறுகிறார்கள். சிறுவயதில் பள்ளிக்குச் செல்வதற்கு விருப்பம் இருக்கும். ஆனால் படிப்பதற்கு விருப்பமிருக்காது. பிறகு கொஞ்சம் கொஞ்சமாக நல்ல வார்த்தைகளெல்லாம் சொல்லிப் படிக்க வைக்கிறோம். இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாகப் படித்து வந்தவுடன் யௌவனவயது வருகிறது. அப்பொழுதும் பள்ளிக்குச் செல்ல விருப்பமுண்டு; ஆனால், படிக்க விருப்பமிருக்காது. சிறிய குழந்தைகளாய் இருந்தால், அதட்டி உருட்டி மிரட்டி படிக்க வைக்கலாம், இளைஞர்களை அவ்விதம் படிக்க வைக்க முடியாது. பரீக்ஷை நெருங்கி விட்டால் இளைஞர்கள் குழந்தைகள்

எல்லோருமே வேகம் வேகமாகப் படிப்பார்கள். பாஸ் ஆக வேண்டுமேயென்று கவலையும் ஏற்பட்டுவிடும். பாஸ் ஆன பிறகு மிகுந்த சந்தோஷம் அடைவார்கள். பாஸ் ஆவதற்குப் பிரார்த்தனைகூடப் பலர் செய்வார்கள். பெயில் ஆகிவிட்டாலோ மிகுந்த துன்பத்திற்கு உள்ளாவார்கள். சிலர் துன்பம் தாங்காமல் தற்கொலைகூடப் பண்ணிக்கொண்டு விடுகிறார்கள்; அல்லது எங்காவது ஓடிவிடுகிறார்கள்.

இந்தக் கஷ்டங்களெல்லாம், துன்பங்களெல்லாம் வராமல் ஒழுங்காக பாஸ் ஆகவேண்டுமென்றால்-நல்ல முறையில் பாஸ்ஆகவேண்டுமென்றால் தினந்தோறும் பள்ளிப்பாடங்களை நன்றாகப் படிக்கவேண்டும். இரவில் அதிகநேரம் படிக்காமல் காலை வேளையில் நன்றாகப் படித்தால் படித்த பாடம் மனதில் நிற்கும். காலையிலும் மாலையிலும் தீபம் வைத்தபிறகும் கடவுள் ஸ்தோத்திரங்களைச் சொல்லிவிட்டு பிறகு பள்ளிப் பாடங்களைநன்றாகப் படிக்கவேண்டும். தீய மாணவர்களுடன் சேரக்கூடாது. பொய் பேசுபவர்-திருடுபவர்-ஒழுக்கமில்லாதவர்-கோபமுள்ளவர்-சண்டையில் பிரியமுள்ளவர்-வீட்டிற்கு அடங்காத பிள்ளைகள்-பள்ளியில் ஆசிரியருக்கு அடங்காத பிள்ளைகள்-சோம்பேறியாய் ஊர்சுற்றும் பிள்ளைகள்-கிண்டலாகப் பிறரைப் பரிகசிக்கும்பிள்ளைகள் போன்றவர்களுடன் நட்பு வைத்துக்கொள்ளக் கூடாது.

ஒழுக்கமுள்ள பிள்ளைகள்-உண்மை பேசும் பிள்ளைகள்-பிறர்பொருளை எங்கேனும் கண்டாலும் அந்தப் பொருளுக்கு சொந்தமானவரிடம் ஒப்புவிக்கும் விருப்பமுள்ள பிள்ளைகள் இன்பமாகப்பேசும் பிள்ளைகள்-எளிமையாக வாழும் பிள்ளைகள்-சுறுசுறுப்பாய் இருக்கும் பிள்ளைகள்—கடவுள் பற்றுள்ள பிள்ளைகள் வீட்டிலும் ஆசிரியரிடமும் நற்பெயர் வாங்கும் பிள்ளைகள்-போன்றவர்களுடன் சிநேகம் வைத்துக்கொள்ள வேண்டும். படித்துப் பரீக்ஷை எழுதுவது என்பது சில காலம் தான்.அந்தக் காலத்தை நாம் சோம்பேறித்தனமாய் போக்கிவிட்டால், திரும்பவும் அந்தக் காலம் நமக்குக் கிடைக்காது.

ஒரு நிமிஷமானாலும் அந்த நேரத்தை நல்ல பணிக்குச் செலவிடவேண்டும். ஒரு பைசாவானாலும் அதை வீணாக்காமல் சேமித்து வைத்து நல்ல பணிக்கு உபயோகப்படுத்த வேண்டும்.

நகத்தைக் கடிக்கக்கூடாது. கழுத்தில் அணியும் சங்கிலியைக் கடிக்கக்கூடாது. உணவு உட்கொண்டவுடனும் சிறுநீர் கழித்தவுடனும் கைகால்களைக் கழுவிக்கொள்ளாமல் இருக்கக்கூடாது. நல்ல அறிவுதரும், நீதிதரும் பத்திரிகைகளைப் படிக்க வேண்டும். வீட்டில் பெரியோர்கள் வாங்கும் பத்திரிகைகளைப் படிக்கக்கூடாது. படிக்கும் காலத்தில் அரசியல் பக்கமே போகக்கூடாது. நின்றுகொண்டு தண்ணீர் குடிக்கக்கூடாது. டம்ளரில் வாயை வைத்து சப்பி, தண்ணீர் குடிக்கக்கூடாது. நாம் உணவு உட்கொள்ளும் தட்டை சுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டும். ஏழை எளிய மாணவர்களிடம் அன்போடு பழகி நம்மாலான உதவிகளை அளிக்கவேண்டும். இதுபோன்ற நல்ல குணங்களை வளர்த்துக்கொண்டு ஒழுங்காக, தினந்தோறும் படித்துவந்தால் பரீக்ஷையில் பாஸ் செய்வது கஷ்டமல்ல. இந்த ஆண்டு எல்லோரும் நன்றாகப் படித்து பரீக்ஷை எழுதி பாஸ் செய்து விடுமுறை காலத்தில் நல்ல பயிற்சிகளெல்லாம் பெற்று நல்ல மாணவர்களாக வளரவேண்டும்.

வீட்டுத்
தலைவிக்கு

தீர்க்க சுமங்கலி

பெண்கள் பெரியோர்களை நமஸ்கரிக்கும்போது, "நீ தீர்க்க சுமங்கலியாக இருப்பாய்!'' என்று ஆசீர்வதிக்கிறார்கள். இதில், 'உன் கணவன் வெகு காலம் ஜீவித்திருக்க வேண்டும்' என்ற கருத்தும் உள்ளடங்கி இருக்கிறது. ஆகவே, பெண்ணினுடைய வாழ்க்கை முழுவதும் கணவனுடைய க்ஷேமத்தைப் பொறுத்தே அமைகிறது. ஒரு பெண் செய்யக் கூடிய நல்லது கெட்டதனுடைய பலனெல்லாம்கூட பூரணமாகப் பெண்ணுக்கே உரித்தாகி விடுகிறதில்லை. அது அவர்களது கணவனைத் தான் சேருகிறது. எனவே, பெண்கள் நல்லதை நிறையச் செய்தால், நல்ல ஆசீர்வாதத்தை நிறையப்பெற்றால், கணவன் குடும்பம் எல்லோரும் க்ஷேமமாக இருக்கமுடியும்.

சில பெண்கள் பெரியோர்களை நமஸ்கரித்துக்கொண்டு கீழ்க்கண்டவாறு பிரார்த்தனை செய்து கொள்கிறார்கள்: "நான் மஞ்சள் குங்குமத்துடன் சாகவேண்டும்." இதனால் பெண்கள் மஞ்சள்-குங்குமம்தான் இட்டுக்கொள்ள வேண்டும் என்று தெரிகிறது. மஞ்சள்-குங்குமம் என்பது அம்பாளின் நினைவுச் சின்னம். ஆதலால் தற்காலத்தில் உடைக்கு ஏற்றவாறு நெற்றிக்கு இட்டுக் கொள்வது-அல்லது கலர் சாந்தை இட்டுக் கொள்வது-அல்லது நெற்றிக்கே இட்டுக் கொள்ளாமல் இருப்பது போன்றவை வருந்தத் தக்கதாய் இருக்கின்றது. மேலும் நெற்றிக்கு இட்டுக்கொள்வதென்பது-சினிமாவில் எப்படி எல்லாம் இட்டுக்கொள்கிறார்களோ, அப்படியெல்லாம் விபூதி—குங்குமம் ஆகியவற்றை மேலும் கீழுமாக இட்டுக் கொள்வது என்பது சரியல்ல. சினிமாவில் வரும் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் பொழுது போக்காக எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர, வாழ்க்கைக்கு ஏற்றதாக எண்ணி அமைத்துக்கொள்ளக் கூடாது.

மங்கலப் பொருட்கள்

'ஸௌந்தர்யலஹரி' என்னும் நூலில் ஆதி சங்கர பகவத்பாதாள் பார்வதியை ஸ்தோத்திரம் செய்கையில், "உன்னுடைய காதணியான தோட்டின் மகிமையினால்தான் ஸ்ரீ பரமேஸ்வரன் சமுத்திரத்திலிருந்து உண்டான ஆலகால விஷத்தைச் சாப்பிட்டும்கூட, இறக்காமல் இருக்கிறார்" என்று கூறுகிறார். அதையே "தவ ஜனனீ தாடங்க மஹிமா" என்கிறார். தாடங்கமென்றால் தோடு. எல்லாக் கோயில் களிலும் உள்ள அம்மன், தோடு இல்லாமல்—தாடங்கம் இல்லாமல்—இருக்க மாட்டாள். தோடு என்பது மங்களகர மானது. மங்களத்தை அளிக்கக்கூடியது. ஆகவே பெண்கள்—முக்கியமாக சுமங்கலிகள்—தோடில்லாமல் இருக்கக் கூடாது.

காதில் தோடு, மூக்கில் மூக்குத்தி, கையில் வளையல், காலில்மெட்டி முதலியவை அணிகலன்களாக இருந்தாலும், மங்கலப் பொருள்களாகச் சொல்லப்படுகின்றன.

தற்காலத்தில் ஒரு கையில் வளையலும் மற்றொரு கை யில் கடிகாரமும் கட்டிக்கொள்கிறார்கள். அதனால் பல சௌ கரியங்கள் இருந்தபோதிலும் மங்களம் பெறுவதில் அரைப் பங்கு குறைந்து விடுகிறது. ஆகவே வினைப் பயனால் வரும் துன்பம் ஒரு முறை—நாமே இதுபோன்ற பல காரியங்கள் மூலம் வரவழைத்துக் கொள்ளும் துன்பம் மற்றொரு முறை.

கல்யாணத்தில் முக்கியமானது தாலி கட்டுவதென்பது. அதைத்தான் மங்கள சூத்திரம், மங்கள நாண் என்பார்கள். ஆகவே இந்தத் தாலி கட்டுவது என்பது மூன்று முடிச்சு போடக்கூடிய நூலாகத்தான் இருக்க வேண்டுமென்று தெரிகிறது. ஆனால் தற்காலத்தில் பலர் தங்கச் சங்கிலியை

வாங்கி அதைக் கோத்து விடுகிறார்கள். தாலி கட்டும் போது சொல்லக்கூடிய மந்திரத்தில், 'கழுத்தில் தாலி கட்டு கிறேன்" என்றுதான் இருக்கிறதே தவிர, கோத்துப் போட்டு விடுகிறேன் என்றில்லை.

மேலும் தாலி என்பது ஒரு மங்களப் பொருள். அதை அணிகலன்கள் போல் எடுத்து மாட்டி வைப்பதென்பது சரியல்ல. ஒரு விசேஷப் புண்ணிய காலங்களில்-தாலிக் கயிறு நைந்து போகும் சமயம்வேறு கயிறு மாற்றிக்கொள் ளலாம். அணிகலன் போல் அவ்வப்போது மாற்றக்கூடாது.

பெண்ணின் பெருமை

உலகத்தில் எந்த நாட்டிலுமில்லாத பெரும் மதிப்பு இந்த நாட்டிலே பெண்களுக்குண்டு. குழந்தைப் பருவத்திலே-ஒரு வயது முதல்—பெண்களை அம்பாளாகப் பாவித்து நவராத்திரி சமயத்தில் பூஜை செய்யும்படியாகச் சொல்லப் பட்டிருக்கிறது.

மணமான பிறகு தம்பதிகளையே வைத்து, உமா மஹேஸ்வரராகப் பாவித்து, தம்பதி பூஜை செய்யச் சொல்லப்பட்டிருக்கிறது.

சுமங்கலிகளை திரிபுர சுந்தரி வடிவமாகப் பாவித்து, பூஜை செய்யச் சொல்லப்பட்டிருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக தாயையே தெய்வமாகவும் நினைக்கும்படி சொல்லியிருக்கிறது.

இவ்வளவு புனிதத்துவம் பெண்களுக்கு எந்த நாட்டிலும், எந்த மதத்திலும் கொடுக்கப்படவில்லை.

ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்தவுடன் இரண்டு உள்ளங்கைகளையும் உரசிப் பார்த்துவிட்டு, உள்ளங்கை நுனிப் பாகத்தில் பொருளாதாரத்திற்கு அதி தேவதையான லக்ஷ்மி தேவியான சக்தியையும், உள்ளங்கை மத்தியில் கல்விக்கு அதிபதியான சரஸ்வதி சக்தியையும், உள்ளங்கை அடிப் பாகத்தில் துன்பங்களையெல்லாம் அகற்றி, இன்பத்தை—மோக்ஷத்தை—அளிக்கக்கூடிய பார்வதி தேவியான சக்தியையும், நினைத்துப் பார்ப்பதென்பது பழங்காலத்திலிருந்து வரக்கூடிய ஒரு முறை. பிறகு நித்திய கன்னிகைகளான-புனிதமானவர்களான-புண்ய ஸ்திரீகளான-அகல்யா, திரௌபதி, சீதா, தாரா, மண்டோதரி போன்றவர்களை மனதிலே நினைத்துக்கொள்ள வேண்டும்.

இப்படி நினைத்துக் கொள்வதினால், நம்முடைய வாழ்க்கையிலே சம்பவிக்கக் கூடிய மாபெரும் பாபங்கள்கூட அழிந்து விடுகிறது என்று சொல்லப் பட்டிருக்கிறது.

நம் நாட்டில் கல்யாணம் முடிந்தவுடன் மங்களப் பாட்டு பாடும்போது, "கௌரி கல்யாணம் வைபோகமே-சீதா கல்யாணம் வைபோகமே-ராதா கல்யாணம் வைபோகமே" என்று வைபோகம் பாடுவார்கள். இதனால் பெண்கள் தம் வாழ்க்கையில் கௌரியைப் போல் தன்னையே தன் கணவனுக்காக அர்ப்பணம் செய்துகொள்ள வேண்டுமென்பதையும், சீதையைப் போல் தர்மத்தின் அடிப்படையின் கீழ் நிழல் போல் கணவனுடன் தொடர்ந்து இருக்க வேண்டுமென்பதையும், ராதையைப் போல் பக்தியையும் அன்பையும் தம்முடைய கணவரிடமும் குடும்பத்திலும் வைக்க வேண்டுமென்பதையும் "வைபோகமே" பாட்டு நமக்கு நினைவூட்டுகிறது.

பெண் சுதந்திரம்

நம்முடைய நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பு அன்னிய நாட்டினர் ஆட்சி செய்தனர். நம்முடைய நாடு சுதந்திரம் அடைய வேண்டும், அன்னிய நாட்டின் ஆதிக்கத்திலிருந்து விடுபடவேண்டும். என்ற நோக்கத்தோடு சுதந்திரப் போராட்டம் தொடங்கியது.

சுதந்திரமென்றால் அன்னியர் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு, நம்மை நாமே ஆட்சி செய்துகொள்ள வேண்டும் என்று பொருள். ஆனால் சுதந்திரப் போராட்டக் காலத்தில் இருந்தே பெண்களைக் கவர்வதற்கு, பெண்களுக்கும் சில சுதந்திர உரிமைகளை சமுதாயத்திலிருந்து வாங்கிக் கொடுப்போமென்று கோஷமிட்டு, பல பெண்களை சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடுத்தினார்கள்.

அப்படிப் பெண்களைக் கவரச் செய்த கோஷங்கள்--

பெண்களுக்கு பூரணமாகக் கல்வி வசதி.

உத்தியோகங்களுக்கு வழி வகை செய்வது.

ஆண்களுக்குச் சமமாக எல்லாத் துறைகளிலும் பெண்களைக் கொண்டுவருவது.

விதவைகளின் மறுமணத்திற்கு-மறுமலர்ச்சிக்கு-ஏற்பாடு செய்வது.

சிறுவயதுக் கல்யாணத்தைத் தவிர்ப்பது-போன்றவை.

தற்காலத்தில் ஓரளவு பொது மக்களே இவற்றுக்குத் தயாராகிவிட்டார்கள்; அந்தச் சூழ்நிலை இன்று உருவாகிவிட்டது.

ஆனால் அதனால் வந்த பலனைப் பார்க்கும்பொழுது, அது மிகவும் குழப்பமாகவே ஆகிக்கொண்டு வருகிறது.

பேச்சு சுதந்திரமென்றால்—கண்டபடி பேசுவது எல்லாம் பேச்சு சுதந்திரமல்ல; உள்ள விஷயங்களை ஒளிவு மறைவு இன்றி-ஒருவருக்கும் அடங்கி பயப்படாமல் தெளிவாகச் சொல்வது பேச்சு சுதந்திரம்.

நாக்குக்கு சுதந்திர மென்றால்?

இப்போது நாம் கண்டவேளையில்-கண்டதை-கண்ட நிலையில் உட்கொள்ளுகிறோம். அதனாலுள்ள விபரீதத்தை தினம் தோறும் வயிற்றுவலி போன்ற பலவிதமான வியாதிகளால் கஷ்டப்படும்போது உணர்கிறோம். அதுபோல் பேச்சு சுதந்திரத்தின் மூலமும்-எழுத்துச் சுதந்திரத்தின் மூலமும்-கடவுள் நிந்தனை முதல் பலவிதமான ஆபாச முள்ளவைகளையும்--அருவெறுப்பு உள்ளவைகளையும்-காமக் குரோதங்களை உண்டாக்கக் கூடிய பல விஷயங்களையும் பேசுகிறோம்-எழுதுகிறோம்.

இது பேச்சு எழுத்து சுதந்திரங்களின் அடையாளம் அல்ல! இதனால் விபரீதமான போக்குகள்தான் நிகழும்.

கண்களுக்குப் பார்க்கும் சுதந்திரம் இருக்கிறது. ஆகவே எப்பொழுதும் சினிமா போன்றவைகளையோ-டெலிவிஷன் போன்றவைகளையோ-ஆபாசமான படங்களையோ-புஸ்தகங்களையோ பார்க்க வேண்டுமென்பது பொருளல்ல!

இதேபோல் பெண்களுக்குச் சுதந்திரமென்றால், தற்கால சூழ்நிலையில் உள்ளது போல, கண்டபடி உடைகளை உடுத்திக் கொள்வது-கண்ட இடத்திற்கு இரவு பகல் என்று பாராமல் போவது-கண்டவைகளைச் சாப்பிடுவது-கண்டபடி குடிப்பது போன்றவைகளெல்லாம் சுதந்திரத்தின் அடையாளச் சின்னங்களல்ல.

ஒரு நாட்டைக் காப்பதற்கு இராணுவத்திற்கு எவ்வளவு சுதந்திரம் உண்டோ, அதற்குக் கொஞ்சமும் குறைவில்லாத சுதந்திரம், வீட்டையும்-கிராமத்தையும்-நகரத்தையும்-தாய்

நாட்டையும் காக்கும் ஒவ்வொரு பெண்மணிக்கும் உண்டு. இராணுவ வீரன் எந்த நிமிஷமும் தாய் நாட்டிற்காக, வெளி நாட்டிலிருந்து வரும் ஆபத்தைத் தடுப்பதற்காக-தயாராக இருப்பான். அதே வேளையில் அவனும் உணவு உட்கொள்வான்-டிரான்ஸிஸ்டர் போன்றவைகளை வைத்துக்கொண்டிருப்பான். சினிமாப்பார்ப்பான். பத்திரிகை படிப்பான். இருந்த போதிலும் எந்த நிலையிலும் தாய் நாட்டைக் காக்கும் தயார் நிலையிலேயே உஷாராக இருந்துகொண்டே இருப்பான். அப்படித்தான் இருக்கவும் வேண்டும். அதுதான் இராணுவ வீரனின் இலக்கணம் கூட!

அது போல வீட்டிலுள்ள பெண்கள் எல்லாவற்றையும் தெரிந்துகொள்ள வேண்டும். ஆனால் தனக்கும்-தன் குடும்பத்திற்கும் எந்த விதமான இடையூறும் வராத நிலையிலே, தனக்கும் தன் குடும்பத்திற்கும் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும் முறையிலேயே வாழ்க்கையை நடத்தவேண்டும்.

ஆண்களுக்குப் போட்டியாக பெண்கள் சம்பாதிக்கப் போவதைக் காட்டிலும், பழங்காலம் முதல் இருந்து வரக் கூடிய-ஆண்கள் சம்பாத்தியத்தைக் கொண்டு-சிக்கனமான முறையில் தன் பரிபூரணமான சுதந்திரத்தைப் பயன்படுத்தி, தன் கணவனுக்கு அடுத்த மாதம் கடன் வராமல் குடும்பம் நடத்தும் பணியே பெரும்பணி!

நாட்டிற்குத் தொண்டன் என்று பெருமை பாராட்டிக் கொள்வதைக் காட்டிலும், தன்னுடைய குழந்தைகளையும்-தன்னுடைய குடும்பத்தில் உள்ளவர்களையும்-ஒழுக்கமுள்ளவர்களாகவும், தூய்மை உள்ளவர்களாகவும், பரஸ்பரம் உதவிக்கொள்ளும் சேவா மனப்பான்மை உடையவர்களாகவும் வளர்த்து, தன்னுடைய குடும்பத்திற்காகத் தொண்டு செய்வதில் வெற்றி பெற்றால், அதுவே உன்னதமான பணி!

கொக்கென்று நினைத்தாயோ

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்று, அதாவது 'தாயையும் தந்தையையும் கண்கண்ட தெய்வமாக நினை' என்று குழந்தைகளுக்குச் சொல்வது வழக்கம். அதே போல் 'கணவனே தெய்வம்' என்று பெண்களுக்குச் சொல்வது உண்டு. தெய்வத்தை உபாசனையால் வழிபட்டால்— என்னென்ன அருளைப் பெறமுடியுமோ, அத்தனையும் கணவனைத் தெய்வமாக நினைத்து வருவதனால் ஒரு பெண் பெற முடியும்.

மகாபாரதத்தில் ஒரு கதை உண்டு.

ஒரு மாணவன் தன்னுடைய தாய் தகப்பனார் சொல் கேளாமலும், படிக்கவேண்டிய வயதில் படிக்காமலும் ஊரைச் சுற்றிக்கொண்டிருந்தான். அப்பொழுது அந்தப் பக்கம் ஒரு சாது வந்தார். அந்த சாது பல சித்து வேலைகள் செய்பவர். அவரிடம் இந்த மாணவன் சில மந்திர, தந்திரங்களைக் கற்றுக் கொண்டான்.

ஒரு நாள் இந்த மாணவன், தான் கற்றுக்கொண்ட மந்தர தந்திரங்களைப் பரீட்சித்துப் பார்க்க வேண்டுமென்ற ஆவலுடன் ஒரு மரத்தடியில் உட்கார்ந்துகொண்டு, சாது சொல்லிக் கொடுத்த மந்திர தந்திரங்களை அப்பியாசம் செய்ய ஆரம்பித்தான்.

கொஞ்ச நேரத்திற்குப் பிறகு அந்த மரத்தின் மீது ஒரு கொக்கு வந்து உட்கார்ந்து, எச்சமிட்டது. அந்த எச்சம் கீழே உட்கார்ந்திருந்த இந்த மாணவன் தலைமீது விழுந்தது. உடனே மரத்தை ஏறிட்டுப் பார்த்தான். ஒரு கொக்கு உட்கார்ந்திருப் பது தெரிந்தது. அந்த மாணவனுக்குக் கோபம் தாளவில்லை. தான் கற்றிருந்த மந்திர தந்திரங்களைச் சொல்லி, மரத்தின் மேலிருந்த கொக்கைப் பார்த்தான். கொக்கு எரிந்து கீழே

வீழ்ந்துவிட்டது. அதைக் கண்டு தனக்கு சாது சொல்லித் தந்த மந்திர தந்திரங்கள் எல்லாம் பலித்துவிட்டது என்று மகிழ்ச்சி அடைந்த அம் மாணவன் நகரத்திற்குச் சென்று எல்லாரையுமே நம்முடைய மந்திர தந்திரத்தினால் திடுக்கிட வைக்கவேண்டுமென்று, புறப்பட்டுச் சென்றான்.

முதன் முதலாக ஒரு வீட்டு வாசல் முன்பு நின்று கொண்டு "பகவதி பிக்ஷாம் தேஹி" என்று சொல்லி, உணவு அளிக்கும்படி கேட்டுக்கொண்டான். அந்த வீட்டிலுள்ள பெண்மணி, இந்த மாணவன் வந்திருப்பதைக் கண்டும் வீட்டின் பணிவிடையிலேயே நாட்டம் கொண்டிருந்தாள். அதைக்கண்டு கோபமடைந்த மாணவன், தன்னுடைய மந்திர தந்திரத்தைச் செய்துகொண்டே, வீட்டிலுள்ள அந்தப் பெண் மணியை முறைத்துப் பார்த்தான். சிறிது நேரத்தில் அந்தப் பெண்மணி வெளியே வந்து அந்த மாணவனைப் பார்த்து, "கொக்கென்று என்னையும் நினைத்துக்கொண்டு, உன் மந்திர தந்திரத்தோடு இங்கு பார்வையைச் செலுத்த வேண்டாம்" என்று கூறினாள்.

தன்னுடைய பார்வைக்கு இலக்காகி உயிரிழக்காமல், இந்தப் பெண்மணி துணிச்சலாக வேறு பேசுவதையும் கண்டு அதிசயப்பட்டு, "அம்மணீ...கொக்கை எரித்த சம்பவம் எவ்விதம் உங்களுக்குத் தெரியும்?" என்று மாணவன் கேட்டான்.

அப்பொழுது அந்த அம்மணி சொன்னாள்:

"உன்னிடம் பேசிக்கொண்டிருக்க எனக்கு நேரமில்லை. இந்தத் தெருக் கோடியில் ஒரு மாமிச வியாபாரி இருக்கிறார். அவரிடம் போய்க் கேள்" என்று சொல்லிவிட்டு, உள்ளே போய்விட்டாள்.

மாணவன் ஆர்வத்துடன் அந்தக் கசாப்புக் கடையைத் தேடிப் போனான்.

கசாப்புக் கடை வியாபாரி அப்பொழுது இவனைப் பார்த்து விட்டு, ''ஏ, மாணவனே! அந்த வீட்டு அம்மணி உன்னை என்னிடம் அனுப்பி வைத்துள்ளாரா?'' என்று குறிப்பாகக் கேட்டான்.

இதைக் கேட்ட மாணவனுக்கு ஆச்சரியம் தாங்க வில்லை!

''ஆமாம், அந்த அம்மணி அனுப்பியது உனக்கு எப் படித் தெரியும்?'' என்று கேட்டான்.

அந்த வியாபாரி ''உன்னிடம் பேசுவதற்கு இது நேர மல்ல. சிறிது நேரம் உட்கார்'' என்று சொல்லிவிட்டு, தன்னுடைய வியாபாரத்தை முடித்துக்கொண்டு வீட்டிற் குச் சென்று சிறிது நேரம் கழித்து வந்தான்.

பிறகு மாணவனைப் பார்த்து, ''நான் என் தொழிலை வயிற்றுப் பிழைப்புக்காக வைத்துக் கொண்டிருந்தாலும், நான் தெய்வமாக நினைப்பது என் தாய் தந்தையரை!... ஆகவே தெய்வத்தின் அருளால் என்னென்ன பெற முடி யுமோ அத்தனையும் பெற்று-அனுபவித்து-உணர்ந்திருக் கிறேன். அதன் அருளால் எல்லாவற்றையும் தெரிந்து கொண்டேன். அதே போல் அந்தப் பெண்மணியும் கண வனைத் தெய்வமாக நினைத்து-வழிபட்டு-உபசரித்து வாழ்க்கை நடத்திவருகிறார். அதனால் அந்த அம்மையும் தெய்வத்தின் அருளால் எல்லாவற்றையும்—அடைந்து அறிந்து கொண்டு உன்னிடம் சொன்னார். ஆனால் நீயோ, தாய் தந்தையர் பேச்சையும் கேளாமல், அவர்களைத் தெய்வமாகவும் நினைக் காமல் படிக்கவேண்டிய பருவத்தில் படிக்காமல்—மந்திர தந்திரங்களைக்கற்றுக்கொண்டு வாழ்க்கையில் ஏமாற்றுகிறாய்! ஆகவே நீ உடனே வீட்டிற்குச் சென்று தாய் தந்தையர் சொல்படி கேட்டு நடந்து அதன்படி படித்துமுன்னுக்குவா'' என்று சொல்லி அந்த மாணவனை அனுப்பி வைத்தார் கசாப்புக் கடை வியாபாரி.

இந்தக் கதையிலிருந்து நமக்குத் தெரியக்கூடியது என்ன? 'கணவனே கண்கண்ட தெய்வம் பெண்களுக்கு' என்று உணர்ந்து அதன்படி செயல்பட்டால் இறைவன் அருளால் எல்லாவற்றையும் பெறமுடியும் என்று தெரிகிறது. கணவன் தெய்வமாக நினைக்கக்கூடிய நிலையில் இல்லாமல் இருந்தாலும் கூட, அவரைத் தெய்வமாக மதித்தால் பெண்களுக்கு தெய்வத்தின் அருள் குன்றாது வளரும்.

விவாகரத்துக்கு உரிமை இல்லை

கணவன் எவ்வளவு தூய்மையற்றவனாய் இருந்தாலும், மாற்று மதத்திற்குச் செல்லக்கூடிய அளவு அவன் சுபாவம் மாறினாலும், பொதுவாக மனைவிக்குத் தகுதி இல்லாதவனாக கணவன் இருந்தாலும், இந்து சமயத்தில் மனைவி கணவனை ஒதுக்குவது-விவாக ரத்துச் செய்வது- என்பதற்கு இடமே கிடையாது. இந்து சமயம் தவிர, மற்ற மதத்திலே ஒரு மனைவி பல புருஷர்களை மாறிமாறி மணம் செய்யலாம்; புருஷன் இல்லாமலும் இருக்கலாம்; ஒரு புருஷனோடும் இருக்கலாம்.

ஆனால் நமது இந்து சமயத்தைப் பொறுத்தவரையில், கணவன் வம்ச விருத்திக்காகவும், தான் செய்ய வேண்டிய கர்மாக்களை நிறைவேற்றுவதற்காகவும், ஒரு பெண்ணையோ பல பெண்களையோ மணக்கலாம். அதற்காகப் பெண்களை விவாக ரத்து செய்யவேண்டிய அவசியமில்லை. விவாக ரத்து என்ற சொல்லுக்கே இந்து சமயத்தில் இடமில்லை. பெண் ஆனாலும் சரி, ஆண் ஆனாலும் சரி, விவாக ரத்து செய் வதற்கு உரிமையே கிடையாது!

கணவனுக்கு மனைவியைப் பிடிக்காவிட்டாலும் விவா கத்தை—மனைவியை- ரத்து செய்யவேண்டிய அவசியமில்லை. கணவன் வேண்டாமென்று சொன்னாலும்கூட, மனைவி யானவள் கடவுளையே கணவனாக நினைத்துக்கொண்டு, தன் கடமைகளைச் செய்துகொண்டு, தனக்கு உகந்த இடத்திலே இருந்துகொண்டு, கணவனுக்கு நல்ல புத்தி வந்து திரும்பவும் தன்னை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இறைவனிடம் பிரார்த்தனை செய்துகொண்டு தன் வாழ்நாளைக் கழிக்க வேண்டும். தன் வாழ்க்கை நடப்பதற்கு தகுதியுள்ள இடத் திலே, பத்திரமாக, ஜாக்கிரதையாக இருந்துகொண்டு வாழ்க்கையை நடத்திக்கொண்டு வரவேண்டும்.

மனைவிக்குக் கணவனைப் பிடிக்காவிட்டாலும் ஒத்து வராவிட்டாலும், மனைவிக்கும் கணவனை விவாகரத்து செய்யும் உரிமை கிடையாது.

இந்து மதத்தில், கணவனை இழந்த பெண்ணானவள் மறு மணம் செய்துகொள்ளாமல் கணவனை நினைத்துக் கொண்டே எப்படி இருப்பாளோ அதுபோல்தான் கண வனால் கைவிடப்பட்ட பெண்ணும்—தனக்கு ஏற்றவாறில்லாத கணவனை அடைந்த பெண்ணும்-கணவனை நினைத்துக் கொண்டே தன் வாழ் நாளை நடத்திக்கொள்ளவேண்டுமே தவிர விவாகத்தையே ரத்து செய்வது என்பது, ஆண்கள் தரப்பிலாகட்டும் பெண்கள் தரப்பிலாகட்டும் இந்து சமயத்தில் இடம் கொடுக்கவில்லை.

கணவன் இரண்டாம் விவாகம் செய்துகொள்ளும் போதுகூட முதல் மனைவியின் அனுமதியைப் பெறவேண்டும் என்று இருக்கிறது.

அனுமதியைப் பெறுவதென்பது கடிதாசு மூலம், விவாக ரத்தின் மூலம் ஆவதல்ல!

விவாகம் என்பது அக்கினி சாட்சியாக நடக்கக் கூடிய ஒரு புனிதமான செயல்! வெறும் உடல் சுகத்திற்காக மாத் திரம் விவாகம் என்பது அல்ல. 'விசேஷணை வாஹய்தி விவாகம்' என்று சொல்லப்படுகிறது. அதாவது இதுவரை தனிமையாக இருந்த ஆண் பெண் இருவரும் புதுப் பொறுப் புடன் சமூகத்தை—சமுதாயத்தை—தாம்பத்தியத்தை—குடும்பத்தை—நடத்த வேண்டுமென்று பொருள்!

குழந்தை இல்லாதவர்கள் குழந்தையை சுவீகாரம் எடுத்துக்கொண்டால், சுவீகாரம் எடுத்துக்கொண்ட குழந் தைக்கோ சுவீகாரம் எடுத்துக்கொண்ட பெற்றோருக்கோ சுவீகாரத்தை ரத்து செய்யக்கூடிய உரிமை கிடையாது. இந்து மதம் இதை அனுமதிக்கவில்லை. அது போல்தான்

கல்யாணமான தம்பதிகளுக்குள் அபிப்பிராய பேதம் எவ்வளவு வந்தாலும், ஒதுங்கி இருக்கலாமே தவிர, விவாகத்தை ரத்து செய்யும் உரிமையே கிடையாது.

மதுரையை ஆண்ட கூன்பாண்டியன் என்னும் அரசன், இந்து சமயத்தை விட்டுவிட்டு ஜைன சமயத்தைத் தழுவி தன் நாடு முழுவதும் மக்கள் முழுவதும்-தன் மனைவி உட்பட-எல்லோரும் ஜைன மதத்தைத் தழுவவேண்டு மென்று ஆணையிட்டார். ஆனால் மனைவி மங்கையர்க்கரசி அரசனுக்குத் தெரியாமல் மதுரை மீனாக்ஷி சுந்தரேசரை மனதில் தியானித்து வழிபட்டு, மந்திரியின் உதவியுடன் திருஞான சம்பந்தரை வரவேற்று அதன் பலனாக மன்னனுடைய மனதையே மாற்றி, சைவ சமயத்திற்கு மன்னனைத் திரும்பவும் வரும்படி செய்தாள்.

இது நம்முடைய கலியுகத்திலேயே நடந்த ஒரு நிகழ்ச்சி!

வரதட்சணை

கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என யுகங்கள் நான்குவகைப்படும். இந்த நான்கு யுகங் களிலும் யுகத்திற்கு ஏற்றவாறு செய்யவேண்டிய தர்மங் களை நமது இந்து மத நூல்கள் கூறுகின்றன. இந்த நான்கு யுகங்களிலும் மனிதர்கள் கடைப்பிடிக்க வேண்டிய விஷயங் கள் அநேகமாக ஒன்றுகத்தான் இருக்கும். ஆனல் சில விஷயங்களில் சில மாறுதல் இருக்கும்.

மனிதர்களுக்கு பிரம்மச்சரியம் கிருஹஸ்தம் வானப் பிரஸ்தம் சன்யாசம் என நான்கு ஆஸ்ரமங்கள் உண்டு. இதில் கலி தவிர, மற்ற மூன்று யுகங்களிலும் பிரம்மச்சரியத் துடனேயே தன் வாழ்நாள் பூராவும் இருக்கலாமென்று மத நூல்கள் கூறுகின்றன. இது ஆண்களுக்குள்ள விதி!

பெண்களுக்கோவெனில் கன்னிகா, சுமங்கலி, விதவா என்று மூன்று நிலை மாத்திரமே. இந்த மூன்று நிலையில் கன் னிகா நிலையிலேயே ஒரு மாது தன் வாழ்நாள் முழுவதும் இருக்கக்கூடாது என்பது நியதி. சீக்காளியாகவோ அல்லது வேறு ஏதாவது காரணத்தாலோ கல்யாணம் நடப்பது அரிது என்று தெரிந்தால், அது சமயம் சாளிக்கிராமத்தை வைத்து, அதற்குக் கல்யாணத்திற்குச் செய்யவேண்டிய அத்தனை சடங்குகளையும் செய்து, அந்த சாளிக்கிராமத்தி லுள்ள பகவானையே பர்த்தாவாக—கணவனுக— கொண்டு, பூஜித்து வழிபட்டு, தன் காரியங்களையும் செய்துகொண்டே சுமங்கலி நிலையில் அவள் வாழவேண்டும்.

இரண்டாவதாக வாழை மரத்திற்கு எல்லா வைதீக கல்யாணச் சடங்குகளையும் செய்து, பிறகு அந்த வாழை மரத்தை வெட்டிவிடவேண்டும். இது விதவா நிலையைக்

குறிக்கும். அன்று முதல் விதவா நிலையை அடைந்து விதவா தர்மத்தைக் கடைப்பிடித்து வாழவேண்டும். இந்த இரண்டையும் தவிர, கன்னிகா நிலையிலேயே வாழ்ந்ததாக வரலாறும் கிடையாது; எந்த நூலிலும் சொல்லப்படவில்லை.

தற்காலத்தில் பலர், வரதட்சணைக் கஷ்டத்தினாலோ அல்லது குடும்பத்தைப் பராமரிப்புச் செய்யவேண்டிய பொறுப்பை ஏற்றுக்கொண்ட நிலையினாலோ, அல்லது சந்தோஷமாக—உல்லாசமாக—சுதந்திரமாக இருக்க வேண்டுமென்ற எண்ணத்தாலோ கல்யாணமே செய்துகொள்ளாமல் வாழ்கிறார்கள்.

வரதட்சணை என்பது உண்டு; ஆனால் வரனுக்கு—மாப்பிள்ளைக்கு தட்சணை கொடுப்பது என்பதல்ல! வரன்—புருஷன் பெண்ணை தானமாகப் பெறுகிறான். அந்த தானத்திற்குப் பிரதிபலனாக புருஷன் பெண்ணுக்குக் கொடுப்பது என்ற பழக்கம் உண்டு. அதை வைத்துத்தான் வரன் கொடுக்கும் தட்சணை வரதட்சணை என்றாயிற்று. ஆனால் அது மாறி, இன்று வரனுக்குக் கொடுக்கும் தட்சணை வரதட்சணை என்று நடை முறையில் வந்துவிட்டது.

அதேபோல் கன்னிகாதானம் என்பதனால் கன்னிகையை தானம் செய்யும்பொழுது, சக்திக்கு ஏற்றவாறு பெண்ணை நன்றாக அலங்கரித்து, தட்சணையுடன்கூட தானம் அளிப்பது வழக்கம். இதெல்லாம் வெறும் வழக்கங்களே தவிர, வரதட்சணை என்பதற்கு சாஸ்திரங்களில் ஆதாரம் ஒன்றும் கிடையாது.

அதே போல் ஜானுவாசம் என்று சொல்லக்கூடிய மாப்பிள்ளை அழைப்பு ஒன்று. அதாவது கல்யாணத்திற்கு முதல் நாள் மாப்பிள்ளை முதலியவர்களை வரவழைப்பது என்பது மரபு. ஆனால் இப்பொழுதுபோல் மாப்பிள்ளைக்கு புதிய உடை, ஊர்வலம், கச்சேரிகள் எல்லாம் பழக்கத்தை ஒட்டியும் பொருளாதாரத்தை ஒட்டியும் வளர்ந்ததே!

கல்யாணம் சடங்குகளுக்கு முக்கியத்துவம் கொண்டது. அதற்கும் பெரிய பெரிய கல்யாண மண்டபங்கள் தேவையல்ல. வீட்டிலேயே அதைச் செய்துவிடலாம். நண்பர்களுக்கு பந்து வர்க்கத்தினர்களுக்குத் தெரிவிக்க வேண்டி, மாலையில் ஏதோ ஓர் இடத்தில் வரவேற்பு வைத்துக் கொண்டு விடலாம். மாப்பிள்ளை அழைப்புச் செலவு—கல்யாணச் செலவு இவைகளை கணிசமாகக் குறைத்துக் கொண்டு, சடங்குகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இதில் பெண்கள்தான் முக்கிய பங்கு எடுத்து நடத்தவேண்டும். நடத்தவும் முடியும்.

அதாவது தங்கள் கல்யாண காலத்திலே, 'தங்கள் தகப்பனார் எவ்வளவு கஷ்டத்திற்கு உள்ளானார்; எவ்வளவு பணச் செலவு செய்தார்; அதனால் கண்ட பலன் என்ன?' என்பதை எல்லாம் சிந்தித்து தங்கள் பிள்ளைகளின் கல்யாணங்களை இவ்விதம் நடத்தவேண்டும். அதே நேரம் பெண்களுக்கு கல்யாணம் என்று வரும்போது, முடிந்த அளவு பொருளாதார சௌகரியம் செய்துகொடுத்து கல்யாணத்தை கட்டாயம் முடித்துவிடவேண்டும். ஆகவே பெண்கள் கல்யாணத்தைத் தாமதப்படுத்தாமல் பையன்களை மேற்சொன்ன முறையில் தயாரிக்க வேண்டும். இதன் பொறுப்பு பெண்ணைப் பெற்ற ஒவ்வொருவருடைய கையிலும் இருக்கிறது.

பெண்கள் கண்ணீர் விடுவது நாட்டிற்கு நல்லதல்ல! ஆகவே எந்த ஒரு காரியத்திலும் பெண்கள் மனம் கலங்கும்படி கண்கலங்கும்படி வாழக்கூடாது. சமுதாயம் அப்படி வாழ விடவும் கூடாது.

பெண்ணே பண்பட வேண்டும்

எங்கும் நிறைந்த பரம்பொருள், மாயா சக்தியினால் ஈஸ்வரன் மூலமாக உலகைப் படைத்தது. அப்படிப் படைக்கப்பட்டபோது, எல்லாப் பிராணி வர்க்கத்திலும் ஆண்-பெண் என இரு வர்க்கம் பிரிக்கப்பட்டது.

இந்தப் பூமி, பூமாதேவி என்றும்-பாரத மாதாவென்றும்-பெண் வர்க்கமாகவே அழைக்கப்பட்டு வருகிறது. பூமி தேவியானவள் பொறுமைக்கு இருப்பிடமானவள். எல்லா விதப் பயிர்களும் உண்டாவதற்கு ஆதாரமானவள். பூமாதேவி இல்லையென்றால் உலகமே இல்லை!

மனித வர்க்கத்தில் ஆண்-பெண் இரண்டு வகை. பூமி தேவி போல், வாழ்க்கையிலே ஏற்படக்கூடிய எல்லாவித சுக துக்கங்களுக்கும் ஆதாரமாக உள்ளது பெண் இனம். வாழ்க்கை என்பது ஆண்-பெண் இருவரையும் பொதுவாகக் கொண்டாலும், பெண்ணின் மூலமாகத்தான் வாழ்க்கை ஒளி வீசுகிறது. நல்ல ஒரு பெண்ணைப் பார்த்தால் 'கிரஹலக்ஷ்மி வந்திருக்கிறாள்' என்று சொல்வார்கள்.

ஒரு பூமியில் நெல் விதைக்க வேண்டுமானால், நெல் நன்றாக இருக்கவேண்டும் என்பது பொதுவிதி. இருந்தபோதிலும் விதைநெல்லை பத்திரமாக வைத்திருப்பார்கள். மற்றபடி விதை நெல்லை ஒன்றும் செய்யமாட்டார்கள். பூமியைத் தண்ணீர்விட்டு நன்றாக உழுது பண்படுத்திப் பிறகு நெல்லைப் போடுவார்கள். அப்படி நெல் போட்டபிறகும் நெல் நன்றாக விளைவதற்கு பூமிக்குத்தான் உரமிடுவார்கள். நெல் வளர்ச்சிக்கு இடையூறாக முளைக்கக்கூடிய களைகளை பூமியில் இருந்து எடுத்து வெளியே எறிவார்கள். நெல்வளர்வதற்கு

பூமிக்குத்தான் அதிக காரியங்கள் நடைபெறுகின்றன: ஆனால் நெல்லுக்கல்ல!

அதுபோல் ஒரு சமுதாயம் வளரவேண்டுமானால், நெல் போன்றஆண்களைக் காட்டிலும் பூமி போன்ற பெண்களுக்குத் தான் அதிக காரியங்கள் செய்யவேண்டியிருக்கின்றன. நெல் நிறைய மகசூலாகி லாபம் வந்தாலும் அல்லது குறைந்துபோய் நஷ்டம் வந்தாலும், இந்த இரண்டினாலும் அடையக் கூடிய பலன் மனிதனுக்கே தவிர, பூமிக்கல்ல! அதுபோல் இந்த மனித சமுதாயத்தில்-வாழ்க்கையில் ஏற்படக்கூடிய சுகதுக்கங்களை எல்லாம் பொறுத்துக்கொண்டு பெண் இனம் வாழ்ந்தாலும், அதனால் வரக்கூடிய கௌரவம் குடும்பத் தலைவனுக்கு ஏற்படுகிறது.

உதாரணமாக ராணுவத்தில் பணி புரிபவர்கள் எல்லோரும் நன்றாகப் பணி புரிந்தால் அதன் புகழ் அந்தப் படைத் தலைவனுக்குப் போய்ச் சேருகிறது. ராணுவத்தில் பணிபுரிபவர்களுக்கு தனியாகவும் வெகுமதி வழங்குகிறோம். அதுபோலத்தான்—இராணுவம் போன்று, பொறுப்புகளைத் தாங்கும் பெண் இனங்கள் சொந்தப் பணிகளையும்—வீட்டுப் பணிகளையும் நன்றாகச் செய்தால், அதன் பெருமை—புகழ் எல்லாம் கணவனைச் சேரும். பெண்களையும் புகழ்வார்கள்.

தற்காலத்தில் ஆண்களுக்குச் சமமாக பெண்கள் இருக்க வேண்டுமென்று எல்லாத் துறையிலும் முயற்சிக்கப்பட்டு வரு கிறது. எவ்வளவு சமத்துவம் கொடுத்தாலும் ஆண் இனத் திற்கும்—பெண் இனத்திற்கும் இருக்கக்கூடிய சில குணங்களை —சில செய்கைகளை யாராலும் மாற்ற முடியாது. ஆண் பெண் இருவரும் பகவத் சிருஷ்டியில் சமானமாகவே படைக் கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே சமானமாகச் செய்யவேண்டிய வேலை நமக்கல்ல! சமானமாகக் கொடுத்த பொறுப்பை சரியாகப் பார்த்துக்கொள்ளவேண்டிய நிலைமை மாத்திரமே மனித சமுதாயத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இதை

மறந்து, உலக இயல்புக்கு ஏற்றவாறு நாமும் இருக்கவேண்டு மென்று எண்ணி, ஆண்-பெண் இருவருக்கும் கொடுத்த சமான பொறுப்பை இருவரும் உபயோகிக்காமல் மாறி வாழ்க்கை நடத்தினுல், தற்போது நாட்டிலுள்ள சூழ்நிலையே நீடித்து வரும்.

இவைகளால்தான் 'ஆவதும் பெண்ணுலே-அழிவதும் பெண்ணுலே' என்ற பழமொழியும் ஏற்பட்டது போலும்! ஆகவே பெண் இனம் தங்களைத் தாழ்த்திக் கொள்ளாமல் தாங்கள் வளர்வதுடன், தங்கள் குடும்பமும் சமுதாயமும் நன்ருகச் செழித்து வளர உதவியாக சிந்தனை செய்து செயல்படவேண்டும்.

ஒரு பூமியில் பயிர் ஆகவேண்டுமென்ருல், பூமிக்குத்தான் அதிக கஷ்டம்—வேலைகள்-அதிக பொறுமை எல்லாம் வேண்டி இருக்கிறது. பூமி நன்ருக இல்லாவிட்டால், எந்த விதை போட்டாலும் நன்ருக விளையாது. பூமி நன்ருக இருந்து விட்டால், விதை சுமாராக இருந்தாலும் பூமிக்கு உரத்தைப் போட்டு ஒரு மாதிரியாக பயிர் பண்ணி விடலாம். ஆகவே பூமி ஸ்தானத்திலுள்ள பெண் இனம் பொறுமையோடும்—ஒழுக்கத்தோடும்—சுக துக்கங்களைத் தாங்கிக் கொள்ளும் இதயத்துடனும்—அகத் தூய்மையுடனும்—புறத் தூய்மை யுடனும் வாழவேண்டும்.

சக்தியே ஆதாரம்

நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு உறுப்புகளின் மூலமாக ஒவ்வொரு காரியத்தைச் செய்கிறோம். ஒவ்வொரு உறுப்புக்கும் ஒவ்வொரு சக்தியுண்டு. அந்தச் சக்தியினால் தான் நாம் காரியங்களைச் செய்ய முடிகிறது.

கையினால் பளுவான சாமானைத் தூக்கவேண்டும் என்றால், கைக்கு சக்தி வேண்டி இருக்கிறது. பக்க வாதம் வந்து விட்டாலோ கை சக்தியை இழந்து விடுகிறது. கையினால் எதையும் தூக்க முடிவதில்லை.

கண்ணால் உருவங்களைப் பார்க்கிறோம். அதே கண் பார்க்கும் சக்தியை இழந்துவிட்டால் எதையும் காண முடியாது.

காதால் விஷயங்களைக் கேட்கிறோம். காது செவிடாகி விட்டால்—காது கேட்கும் சக்தியை இழந்துவிட்டால்—பின்னர் காதால் எந்த விஷயத்தையும் கேட்க முடியாது.

வாயால் பேசுகிறோம். ஆனால் ஊமை ஆகிவிட்டால் அதாவது பேசும் சக்தியை இழந்துவிட்டால், பேசமுடியாது.

இதுபோல் ஒவ்வொரு செயலும் ஒவ்வொரு சக்தி மூலமாக, உலகம் முழுவதிலும் ஒரு சக்தியை ஆதாரமாக வைத்துக்கொண்டு, செயல்பட்டு வருகிறது. உடம்பில் காரியங்களைச் செய்யும் சக்தி இல்லாவிட்டால், "சிவனே என்று கிட" என்கிறார்கள். ஆகவே சக்தி இல்லாமல் ஒரு காரியமும் நடக்காது.

அந்தச் சக்தி பல விதம்.

அதாவது உணவை உட்கொள்வதன் மூலமாக உடம்பில் சக்தி வளருகிறது.

பணபலம் இருக்கும்வரை ஒருவித சக்தி உடனிருக்கிறது.

விஷயங்களைச் சிந்திப்பதற்கு புத்தியிலும் ஒரு விதமான சக்தி இருக்கிறது. உண்ட உணவு ஜீரணம் ஆவதற்கு உடம்பிலே ஒருவித சக்தி வேண்டியிருக்கிறது. நாலு பேரிடம் பேசி விஷயங்களைச் சாதிப்பதற்கு செல்வாக்கெனும் சக்தி வேண்டியிருக்கிறது. பேசும் பொழுதே பலரைச் சிரிக்கவைக்க, நகைச் சுவைச் சக்தி வேண்டி இருக்கிறது.

துன்பங்களைத் தாங்கிக் கொள்வதற்கு இதயத்தில் ஒருவித சக்தி தேவைப்படுகிறது.

பெரிய கட்டிடக் கலைகள், தொழிற்சாலைகள், விஞ்ஞான முன்னேற்றம் போன்ற ஒவ்வொரு காரியத்திற்கும் ஒவ்வொரு சக்தி தேவைப்படுகிறது. இந்தச் சக்திகள் ஒவ்வொன்றிற்கும் சேர்த்து, சக்தி கொடுப்பதற்கு ஒரு பெரிய மாபெரும் சக்தி தேவைப்படுகிறது. அந்தச் சக்தியைத்தான் பராசக்தி என்பார்கள். 'அந்தப் பராசக்தியினுடைய தொடர்பு இல்லாவிட்டால் பரமசிவனாலும் எந்த ஒரு வேலையும் செய்யமுடியாது' என்று ஆதி சங்கரர் சௌந்தர்ய லஹரியில் கூறுகிறார்.

'இறைவனை வழிபடவேண்டும். இறைவனைத் துதிக்க வேண்டும். இறைவன் அருளைப் பெறவேண்டும் என்றால் அதற்கும் இந்தப் பராசக்தியினுடைய அருள் இல்லாமல், அதைப் பெறமுடியாது' என்று சௌந்தர்ய லஹரி கூறுகிறது. இந்தப் பராசக்தியை விஷ்ணு, பிரம்மா, இந்திரன் முதல் எல்லா தேவர்களும் வழிபட்டு, அவள் அருளைப்பெற்றுத் தான் தங்கள் காரியங்களைச் செய்து வந்திருக்கிறார்கள்.

ஆகவே அந்தப் பராசக்தியான தேவியை—நாம் நம்மிடையேயுள்ள ஒவ்வொரு சக்தியையும் பெறுவதற்குத் தூண்டுகோலாக இருக்க-ஒவ்வொரு நாளும் துதித்து-வழிபட்டு அருளைப் பெறுவோமாக!

கோதூளி மகிமை

ஒவ்வொரு நாளும் காலையில்சூரியோயதத்திலும் மாலையில் சூரிய அஸ்தமனத்திலும் கோதூளி லக்னம் என்று ஒரு நல்ல நேரத்தைக் குறிப்பிடுவார்கள். அந்த கோதூளிலக்னத்தில் நாம் எந்த ஒரு நல்ல பணியை-காரியத்தைத் தொடங்கினாலும், அது வெற்றிகரமாக முடியுமென்பார்கள்.

அதாவதுவீட்டிலுள்ள, கிராமத்திலுள்ள பசுமாடுகளெல்லாம் கறந்த பிறகு மேய்ச்சலுக்காக அனுப்பும் காலை நேரம். மேய்ந்து விட்டுஅந்த மாடுகள் வீடுநோக்கிவரும் மாலைநேரம். இந்த இரண்டு நேரத்தையும் கோதூளி லக்னம் என்பார்கள்.

இந்தப் பசு மாடுகள் வெளியில் செல்லும்போதும் திரும்ப வரும்போதும் அதனுடையகால்கள் பூமியில்பதிவதன் பயனாய் பூமியிலிருந்து மண் கிளம்பும். அது ஒரேபுழுதிமண்டலமாகத் தென்படும். இதைத்தான் கோதூளி என்பார்கள். பசுவின் பாதத்தின் தூளி என்பார்கள்.

பசுவே புனிதமானது. அதனுடைய திருவடிபட்ட இடம் மிகவும் புனிதமானது.அந்த இடத்திலிருந்து கிளம்பும் தூளி அதைக் காட்டிலும் புனிதமானது. பெரும் தீட்டு உள்ளவர்கள் ஸ்நானம் செய்ய முடியாதவர்கள்கூட இந்தக் கோதூளி தன் மீது படும்படியாகச் செய்துகொண்டு ஸ்நானம் செய்ததற்கு மேலான பலனை அடைவார்கள், லக்ஷ்மிதேவி வாசம் செய்கிற பசுவினுடைய திருவடியிலிருந்து புறப்பட்ட தூளி அவ்வளவு மகிமை வாய்ந்தது.

''லக்ஷ்மி-பார்வதி-சரஸ்வதி இந்த மூன்றுசக்திகளுக்கும் மேலான பராசக்தியின் திருவடி தூளியினுடைய சக்தியினால், பிரும்ம தேவரானவர் எல்லா உலகையும் படைக்கிறார் விஷ்ணுவானவர் ஆதிசேஷனாக இருந்து கொண்டு, இந்தப்

பூமியை-இந்த உலகை- தலைமீது தாங்கிக் கொண்டிருக்கிறார். பரமசிவனோவெனில் திருவடியின் தூளியைப் பஸ்பமாக ஆக்கி தன் உடல் முழுவதும் பூசிக்கொண்டு வருகிறார் என்று ஆதிசங்கரரின் சௌந்தர்யலஹரி கூறுகிறது.

சமீப காலத்தில்கூட- சில நூற்றாண்டுகளுக்கு முன்புகூட- கரூருக்கு அடுத்த நெரூரில் சமாதி அடைந்த ஸ்ரீ சதாசிவ பிரும்மேந்திர ஞானியினுடைய திருப்பாதம்பட்ட மணலை வீட்டிலே, அரண்மனையிலே இன்னும் பலர் வைத்துக் கொண்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

பக்தி மார்க்கத்திலே பிரார்த்தனையைப் பற்றிச் சொல்லும்போது, 'உங்கள் திருவடியிலே என் மனம் பதிய வேண்டு'மென்றுதான் சொல்லுவார்கள். ஆகவே இறைவனுடைய பக்தி-இறைவனுடைய திருவடிபட்ட இடத்தின் பெருமை-அதனுடைய தூளியின் பெருமை-முதலியவைகளெல்லாம் நம்முடைய வாழ்க்கை உய்வதற்கு, மேம்படுவதற்கு உதவிகரமாக உள்ளவை. ஆகவே இறைவனிடம் இடைவிடாது பக்தி செலுத்த வேண்டும்.

கோகுலத்திலே தோன்றி, மதுரையிலே வளர்ந்து, துவாரகையிலே வசித்த ஸ்ரீ கிருஷ்ணபிரானுடைய திருவடி பதிந்த இடமெல்லாம் சங்கு சக்கர ரேகைகள் காணப்படுகிறது என்று பாகவதம் கூறுகிறது. அந்த திருவடிபட்ட இடத்திலிருந்து வந்ததுதான் கோபி சந்தனம். இன்று நாம் அணிந்து கொள்ளும் சந்தனம்.

பூமியிலிருந்து கிளம்பிய தூளியானது மேல் நோக்கித்தான் செல்லும். அதேபோல் இறைவனுடைய திருவடியை பக்தி செய்தால், இறைவனுடைய தூளி மகிமையானது நம்முடைய வாழ்க்கையை மேலே உயர்த்தும்.

வீட்டுத் தலைவனுக்கு

ஸ்ரீ ஆதிசங்கரர்

கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என நான்கு யுகங்கள் உண்டு. கிருதயுகத்தில் தர்மங்கள் பூரண மாக இருந்தன. ஆனாலும் சிறிய அளவில் அதர்மங்கள் இருந்து வந்தன. அந்த யுகத்திலே மச்ச அவதாரம், கூர்ம அவதாரம், வராக அவதாரம், நரசிம்ம அவதாரம், வாமன அவதாரம் என்ற ஐந்து நிலையில் வைகுண்ட லோகத்தில் உள்ள ஸ்ரீமன் நாராயணன் அவதாரம் எடுத்தார். இந்த ஐந்து அவதாரங்களுக்கும் தாய் தந்தையர் இல்லை. ஸ்ரீமன் நாராயணன் ஒரு சிறிய பணிக்காக, ஆவேசப் பணிக்காகத் தோன்றி அந்தப் பணி முடிந்தவுடன் மறைந்துவிடுகிறார். இராமாவதாரம் திரேதாயுகத்தில் நடைபெற்றது. பரசு ராம அவதாரமும் திரேதாயுகத்தில் நடைபெற்றது. இரண்டு அவதாரத்திற்கும் தாய் தந்தையர் உண்டு; பலநூறு ஆண்டு கள் வாழ்ந்த வரலாறு உண்டு. திரேதாயுகத்தின் ஒருபகுதி யில் ஒரு பாகத்தில் அதர்மம் மேலோங்கி நின்றது. இதனைச் சரிசெய்ய இராமரும், பரசுராமரும் தம் வாழ்நாள் முழு வதும் பாடுபட்டார்கள். பிறகு பலராமனும், கிருஷ்ணனும் துவாபர யுகத்தில் தோன்றினார்கள். அப்போது சரிபாதி அதர்மம் தலை தூக்கி நின்றது. கோடிக்கணக்கான மக்களைக் கொல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. இதற்காகவே மகா பாரத யுத்தம் நிகழ்ந்தது.

அடுத்தபடியாக கல்கி அவதாரம் மட்டும் உள்ளது. அது, கலியுகத்தின் கடைசியில் வருகிறது. இதன் மத்தியில், கலியுகம் பிறந்து 2000 ஆண்டுகளுக்குப் பிறகு நாட்டில் உள்ள சூழ் நிலையை அனுசரித்து கயிலையில் வசிக்கும் பரமேஸ்வரன் ஸ்ரீ சங்கரராக கேரள நாட்டில் காலடி என்ற ஊரில் அவதரித்தார்.

விஷ்ணுவின் அவதாரங்கள் எல்லாம், சிலரை சிக்ஷித்து தர்மத்தை நிலைநாட்ட வேண்டிய சூழ்நிலையில் ஏற்பட்டது. ஆனால் கலியுகத்திலே பாதி அதர்மமான யுகமாக இருந்த போதிலும் மனிதர்களுடைய இரத்தம்வரை அதர்மம் படிய வில்லை. ஆகவே அவனை, சிக்ஷிக்க வேண்டிய அவசியம் இல்லை. மனிதனுடைய புத்தியிலேயே அவைகள் இருந்தன. அந்த புத்தியைத் தெளிவுபடுத்துவதற்கு, உண்மை ஞானத் தை ஏற்படுத்துவதற்கு, தத்துவ சிந்தனையைத் தூண்டு வதற்கு தக்ஷிணா மூர்த்தியாய் ஞானோபதேசம் செய்த பரமேஸ்வரன், பூலோகத்தில் அவதரித்து, 32 ஆண்டுகள் இந்தப் பூவுலகில் வாழ்ந்து அனேக பணிகளை மக்களுக்கு அருளியுள்ளார். ஐந்து வயதில் உபநயனம். எட்டு வயதிற் குள் எல்லா சாஸ்திரங்களிலும் புலமை. எட்டு வயதிற்குள் நதியை வீட்டுக்குப் பின்புறம் வரவழைக்கும் பெருமை, ஏழைக்குத் தங்க நெல்லிக் கனியை வரவழைத்துத் தரும் சிறப்பு ஆகிய அற்புதங்களைச் செய்துகாட்டினார். 8 வயதில் துறவியானார். 16 வயதிற்குள் காசிக்குச் சென்று பிரம்ம சூத்திர பாஷ்யம், கீதைக்கு பாஷ்யம், உபநிஷத்துக்கு பாஷ்யம் ஆகியவற்றைச் செய்தார். பல பண்டிதர்களி டையே சாஸ்திர வேதாந்த விசாரம் செய்தார். காசியில் இருக்கும் விஸ்வேஸ்வரரே ஸ்ரீ சங்கரரின் கொள்கைகளை அங்கீகரித்தார். ஸ்ரீ சங்கரர், வேத வியாசரின் அருளினால் அத்வைத வேதாந்த சித்தாந்தத்தை நிலைநாட்டினார். நாடு முழுவதும் பலமுறை யாத்திரை செய்தார். பல க்ஷேத்திரங் களில் யந்த்ரஸ்தாபனம் செய்தார். கடைசியாக காஞ்சி காமாக்ஷி கோயிலில் யந்த்ரஸ்தாபனம் செய்தார். சர்வக்ஞ பீடம் ஏறினார். பல கோயில்களில் பூஜை முறைகளை ஒழுங்கு படுத்தினார்.

ஸ்ரீ சங்கரரின் கொள்கை இந்து மதத்தின் கொள்கை.

(1) நிர்குண, சகுண அவதார மூர்த்தங்களை ஒப்புக் கொள்ளுதல் (2) கர்ம காண்டத்தை ஞான காண்டத்துக்குச் சாதனமாக ஆக்குதல் (3) நம்முடைய பாரதநாட்டை-பாரத

நாட்டில் உள்ள நதிகள், குளங்கள், மலைகள் இவற்றைப் புனித மாகக் கருதுதல் (4) மக்களிடையே பரஸ்பர அன்பு, சேவை, பக்தி ஆகியவற்றைத் தோற்றுவித்து ஒற்றுமையை ஏற்படுத்துதல் (5) ஆத்மீகத்தின் மூலம் தேசிய ஒருமைப் பாட்டை ஏற்படுத்துதல் ஆகியவை இந்து மதத்தின் கொள்கைகள்.

குழந்தைகளின் பிஞ்சு உள்ளங்களில் ஆன்மீக உணர்வு ஏற்படுவதற்காக, பிள்ளையார் முதல் ஆஞ்சனேயர் வரையி லான பல தெய்வங்கள் பற்றிய சுலோகங்களை ஸ்ரீ சங்கரர் செய்தார். மக்களுடைய அன்றாட பிரச்னைகள் முதல் ஆத் மீகம் வரை பல மந்திர தந்திரங்கள் அடங்கிய 'பிரபஞ்ச சாரம்' போன்ற நூல்களை இயற்றினார். மக்களின் வாழ்க்கை முறைகளை வகுத்துக் கொடுக்கும் நோக்கத்துடன் 'பஜ கோவிந்த'த்தையும், கேள்வி—பதில் அடங்கிய 'பிரச்னோத் தர ரத்ன மாலிகா' என்ற நூலையும் இயற்றி அருளினார்.

இந்தப் பணிகளெல்லாம் தொடர்ந்து நடைபெறுவ தற்குப் பல பீட ஸ்தானங்களை நிறுவினார்.

பொதுவாக, ஸ்ரீ சங்கரரின் தோற்றத்தினாலும் அவர் செய்த பணிகளாலும் பிற்காலத்தில் இருந்த மதாச்சார்யார் களும், சமூகப்பணி செய்பவர்களும், சமூகத்தொண்டு புரியும் ஸ்தாபனங்களும் ஒரு வழி அமைத்துக்கொள்ள முடிந்தது. ஸ்ரீ சங்கரர், ஜகதகுரு—(World Philosopher). இந்தப் பெருமானுடைய ஜயந்தி விழா ஆண்டுதோறும் வைசாக சுத்த பஞ்சமி அன்று வருகிறது.

வேற்றுமையில் ஒற்றுமை

நாம் மண்ணிலிருந்து பல பாத்திரங்களைச் செய்கிறோம். அவற்றின் பெயர், வடிவம், உபயோகம் எல்லாம் மாறுபட்டிருக்கின்றன. ஆனாலும் இந்தப் பாத்திரங்கள், செய்யப்படுவதற்கு முன்னதாக, களி மண்ணாகத்தான் இருந்தன. இந்தப் பாத்திரங்கள் உடைக்கப்பட்டாலும் களி மண்தான் கிடைக்கும்.

தங்கத்திலிருந்து பல நகைகளைச் செய்கிறோம். அவற்றிற்கு பல பெயர்களைச் சூட்டுகிறோம். ஆயினும் பல பெயர்களும் வடிவங்களும் கொண்ட நகைகளாகத் தோற்றமளிப்பது அதே தங்கம்தான்.

ஒரேவிதமான மாவிலிருந்தும் சர்க்கரையிலிருந்தும் பலவிதமான இனிப்புப் பண்டங்களைச் செய்கிறோம். அவை ஒவ்வொன்றின் பெயரும் வடிவமும் வேறுபட்டிருக்கின்றன. ஆனால் இனிப்பு என்பது அனைத்திலும் ஒன்றாகவே இருக்கிறது.

இவ்வாறுதான், இறைவன் எல்லா உயிர்களிலும் பொருள்களிலும் ஊடுருவி நிற்கிறான்.

இன்று மதங்கள் பலவாகத் தோற்றமளித்தாலும் அவை அனைத்துக்கும் குறிக்கோள் ஒன்றுதான். இறைவனின் கருணையைப் பெற்று மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கான வழியை மனிதனுக்குக் கற்றுக் கொடுப்பதுதான் அந்தக் குறிக்கோளாகும்.

மனிதனை உயர்த்தும் மதங்கள்

இந்த லோகம் எத்தனையோ கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் தோன்றியது. அந்த நாளிலிருந்து மனிதனும் தோன்றியிருக்கிறான். மனிதன் தோன்றியது முதல் அவனுக்குத் தலைவலி, வயிற்றுவலி உண்டு. அப்படிச் சங்கடமுண்டாகும்போது கைகொடுக்கச் சமயம் உண்டானது. கஷ்டங்கள் தோன்றும்போது அதைத் தோற்கடிக்க, காலம் காலமாக மதம்தான் உதவியுள்ளது. அவனுக்கு ஏற்படும் சங்கடங்களைத் தீர்த்துவைக்க மதங்கள் உதவிய மாதிரி வேறு எதுவும் அவனுக்கு உதவியதில்லை. உலகில் உள்ள மனிதர் யாவரும் ஏதாவது ஒரு மதத்தைச் சேர்ந்தவராயிருப்பர். இந்த மாதிரி வாழ்ந்தால் குறைந்த அளவு துக்கத்துடனும் நிறைந்த அளவு சந்தோஷத்துடனும் இருக்கலாமென்ற வழியை மதங்கள் போதிக்கின்றன.

சிலர், வயிற்றுப்பாட்டிற்கே கஷ்டப்படும்போது மதம் எதற்கு என்று கூறலாம். இந்தியா பூராவும் நானும் சுற்றி வந்திருக்கிறேன். ஏராளமான மக்களைப் பார்த்திருக்கிறேன். குடிசையில் வாழும் மக்களிடம் உள்ள மதப்பற்றோ, சமயப் பற்றோ வேறு எங்கும் காண முடியாது. நாகரீகமாயுள்ள மக்களுக்குத்தான் மதபோதனை தேவைப்படுகிறது. கிராம மக்களிடையே மதப்பற்று நன்றாக உள்ளது. சந்தர்ப்பவசத்தால், சூழ்நிலை காரணமாக, மத நம்பிக்கை ஓரளவு குறையலாம். சூழ்நிலை நன்றாயிருந்தால் எல்லோரிடமும் மத நம்பிக்கை மிகுந்து காணப்படும். இது உலகைப் பார்ப்பவர்களின் உள்ளப் பாங்கைப் பொறுத்தது. கெடுதலிலும் நல்லதை தருமர் கண்டார். நல்லதிலும் கெடுதலை துரியோதனன் கண்டான். அது அவனது மன நிலையைப் பொறுத்ததாகும்.

மாமிச வியாபாரம் செய்து ஜீவனம் செய்யும் ஒருவனை அவர்கள் இருவரும் பார்த்தனர். பிராணி இம்சை செய்கிறனே என்று ஒரு நொடி தருமர் நினைக்கிறார். அந்த வியாபாரி முதலில் ஓரளவு இறைச்சியை எடுத்துத் தெருவிலும், கூரையிலும் போட்டுப் பிராணிகளுக்கும் பட்சிகளுக்கும் உணவளித்து விட்டு, வியாபாரத்தைத் தொடங்குவதைப் பார்த்ததும், அவன் செய்யும் தொழில், கெடுதலாகத் தருமர் கண்ணிற்குப் படவில்லை. அப்படி ஒரு நொடி அதர்மச் செயல் என்று எண்ண நேர்ந்ததுகூட, துரியோதனன் பக்கத்தில் இருந்தது காரணமாக இருக்கலாம்.

எனவே, மனித வாழ்வில் சூழ்நிலை நல்லதாக இருக்க வேண்டும் என்பது அவசியமாகும். கெடுதல் குறைவாகவும் நல்லது அதிகமாகவும் உள்ளவற்றை வைத்துக்கொள்ள வேண்டும். கடவுள் பக்தியுடன் இருப்பது தவிர, வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய வழிகளைச் சொல்லும் மத நூல்களில் நம்பிக்கைகொண்டு, அவற்றைப் பின்பற்றவேண்டும். அதற்கு விரோதமாகப் போகக்கூடாது. எந்த அளவு அவற்றிலிருந்து விலகிச் செல்லலாமென்பதையும் அந்நூல்கள் கூறுகின்றன. அந்த அளவிற்குள் வாழ்ந்தால் போதும். மனிதன் தேவனுகவேண்டு மென்பதில்லை. ஆனல் மனிதன் மனிதனுக வாழ்ந்தால்கூடப் போதும். அதிலேயே எல்லாவித இன்பங்களையும் பெற முடியும் மனிதப் பிறவி கடைசிப் பிறவி. மனிதராய்ப் பிறப்பதரிது என்று பெரியோர் கூறுவர்: இப் பிறவிலேயே கடவுள் அருளை அடையவேண்டும்.

எல்லா மதத்திற்கும் ஒரு நூல் உண்டு. இந்து மதத்திற்கு நூல் எதுவென்றல் பதில் சொல்ல முடியாமல் திகைக்கின்றனர். இந்து மதத்திற்கு அதைச் சேர்ந்தவர்கள் எத்தனை எழுதியிருக்கிறர்கள்! கணக்கில்லை. ஆனல் கீதையில் அர்ஜுனனைச் சாக்காக வைத்துக் கண்ணன் மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய தர்மங்களைக் கூறுகிறர்.

என்னிடத்தில் மனத்தைச் செலுத்து என்கிறர். மனம் என்ன இலேசில் கட்டுப்படக்கூடியதா? அலை பாய்கிறது.

மனத்தை அடக்குவது சிரமமான காரியமா யுள்ளவர்கள் கோவிலுக்குப் போகலாமென்றால், அங்கும் உலக விசாரணை யில் ஈடுபட நேரிடுகிறது. ஆகவே எளிதாக ஒரு வழியைச் சொல்கிறார். சாஷ்டாங்கமாக உடல் முழுவதும் தரையில் படும்படி நமஸ்காரம் செய்தால் போதுமென்கிறார். ஆதிசங் கரர், எல்லா அங்கங்களும் தூங்கும்போது தரையில் படு மாதலால், அதையே தனது சாஷ்டாங்க நமஸ்காரமாக எடுத்துக் கொள்ளும்படி இறைவனை வேண்டுகிறார். தண்டம் என்றால் குச்சி. அது தரையில் விழும்போது எல்லாப் பாகங்களும் தரையைத் தொடும். அதனாலேயே 'தண்டம் சமர்ப்பித்தல்' என்கின்றனர். எவ்வளவோ காரியம் செய்யும் இந்த உடல் தண்டம் போன்றதுதான். அதனால் அதை இறைவனுக்குச் சமர்ப்பித்துச் சரண மடைந்து. மனத்தால் ஒரு விநாடி கடவுளை நினைக்கச் சொல்கிறார். இதிலும் ஆத்ம பூஜைக்கு முக்கியத்துவம் கொடுத்தார்.

மத அடிப்படையில் வெளிப்படையாகச் செய்யும் காரியங்கள் எல்லாம், ஆத்ம சுத்திக்கு ஒருவனை அழைத்துச் செல்வதாகும். வாழ்க்கையில் மனிதன் உயர்மட்டத்தை அடைய வழி கூறுகின்றன. எங்கும் ஒரே பரமாத்மாவைக் காணும் நிலை கடைசியில் ஏற்படும்.

எல்லா மதங்களும் மனிதனை உயர்த்தும் படிக்கட்டு கள் போன்றவை. அவை ஒன்றுக்கொன்று உபகாரமாக இருக்குமே தவிர, சண்டை போட ஏற்பட்டதில்லை. மத நூல்களில் அடிப்படையில் வேறுபாடு எதுவுமில்லை. அவற் றை வியாக்கியானம் செய்வதில்தான் முரண்பாடு ஏற்படு கிறது. நெற்றியில் விபூதி, திருமண், திலகம் இடுபவர்கள் எல்லாம் பந்துக்கள் என்று ஆதிசங்கரர் கூறுகிறார்.

பகவான் அனுக்கிரகத்தை அடைய மனிதப் பிறவி கிடைத்துள்ளது. அவர் தொடர்பில்லாமல் எந்தக் காரிய மும் நடப்பதில்லை. மின்சாரம் எப்படி மைக் விளக்கு போன்ற எல்லாவற்றிலும், ஒரே சமயத்தில் ஊடுருவி இருக்

கின்றதோ, அதுபோல் பகவான் எல்லாவற்றிலும் ஊடுருவியுள்ளார். பகவானைச் சரணடையும்போது மனோ, வாக்கு, காயம் மூன்றினாலும் சரணடைவதே சிறந்தது. அத்தகைய நிலை ஏற்பட்டால்தான் பரிபூரணமான சாந்தி கிடைக்கும். நல்லது நடக்கையில் அதற்குத் தானே காரணமென்று நினைப்பது சகஜம். அப்படியில்லாமல், இரண்டும் பகவானால் தான் நடத்தப்படுகிறதென்ற உணர்வு ஏற்படவேண்டும். அதற்கு வழி ஏற்படுத்துவதே மதம். அசைக்க முடியாத நம்பிக்கையுடன் கடவுளிடம் பக்தி செலுத்தவேண்டும். நாம் அனைவரும் பகவானின் குழந்தைகள் என்பதை உணர்ந்து அன்புடனும் மதப்பற்றுடனும் வாழ்ந்தால் மன அமைதி கிடைக்கும். அனாதி காலமாகக் காத்து வரும் மதம், நம்மைக் கைவிட்டுவிடாது. சமயப் பற்றுடன் சேர்ந்த கடவுள் பக்தியை எல்லோரும் வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். நமது கலாசாரம் என்ன என்பதுகூட நமக்குத் தெரியாத நிலை உள்ளது பிராணிகளாவது ஒரு நிமிடம் நின்று சாப்பிடும். நமக்கு அதற்குக்கூட நேரமில்லை. இந்த நிலை மாறி நமது கலாசாரப் பழக்க வழக்கங்களைப் பின்பற்றினால் நமது தேசம் நன்றாயிருக்கும். இதை அரசு செய்ய முடியாது. அரசியல்வாதிகளோ, அரசாங்கமோ இது ஏற்பட உதவியாயிருக்கலாம். ஆனால் தனி மனிதர்ஒவ்வொருவரும் மாறுவதன் மூலமே, சமுதாயம் முழுதும் மாறுபடும். மதத்தை விட்டுக் கலாசாரம் தனியாயிருக்க முடியாது. கலாசாரமில்லாத மதமில்லை; தத்துவமில்லை. சமயப் பற்றும் கலாசார வழியும் ஒன்றாயிருக்கவேண்டும். அப்போது பிரச்னைகள் குறையும்; தேசம் சுபிட்சமாயிருக்கும்.

உள்ளம் ஒரு கண்ணாடி

நமது உள்ளம் கண்ணாடி போன்றது. அதில் இறைவனுடைய பிரதிபிம்பம் தெரியவேண்டும் என்றால் பக்தி, தூய்மை, ஒழுக்கம் என்ற ரசம் கண்ணாடியின் பின்பக்கம் பூசப்படவேண்டும். முன்பக்கம் இறைவனைக் காண பின் பக்கம்அதற்குரிய வழியில்பக்தி என்னும் ரசம் பூசப்படவேண்டும். இதுபோல் அல்லாமல் நாம் அனைவரும் கஷ்டம் வரும் காலத்தில் மட்டும் இறைவனை வழிபடுகிறோம். அத்துடன் இல்லாமல் தூய்மையான இறைவனுடைய நாமத்துடன் மனிதனுடைய பெயர்களையும் சேர்த்து அதன் தூய்மையைக் கெடுக்கிறோம். இறைவன் நாமம் தனியாகவே பாடப்பட வேண்டும். தியாகப்பிரும்மம், போதேந்திராள் ஆகிய பெரியோர்கள் இதற்கு வழிகாட்டி இருக்கிறார்கள். இறைவனுடைய நாமத்தைத் தெரிந்து தூய்மையாகக் கூறுவோமானால் அது கட்டாயம் நல்ல பலனையே தரும். மனிதப் பிறவியே உயர்ந்த பிறவி என்று கூறுகிறார்கள். அப் பிறவியின் பயனை அடைய சமயத்தின் வழியைப் பின்பற்ற வேண்டும். உடல், உள்ளம், புத்தி இவைகளிலும் தூய்மைவேண்டும். உடலிலும், உள்ளத்திலும், தூய்மை ஏற்பட்டால் புத்தி தானாகவே தூய்மை அடைந்துவிடுகிறது. சமய வாழ்க்கை, சமுதாய வாழ்க்கை இவ்விரண்டும் அப்பொழுதுதான் தூய்மை அடையும்.

சமுதாயவாழ்க்கை என்ற பெயரில்இன்று பல தவறுகள் நடக்கின்றன. சமய வாழ்க்கை சரிவரப்பின்பற்றப்படவில்லை. நமது கலாசாரம் பண்பாடு, வேதம் இவைகாப்பாற்றப்பட வேண்டுமானால் சமயமும் சமுதாயமும் ஒரு வண்டியின் இருபக்கச் சக்கரங்கள் போல இணைந்து செயல்படவேண்டும்.

நமது கலாசாரத்திற்கு நெருக்கடி

உலகத்தில் முன்னேற்றமடைந்துள்ளதாகச் சொல்லப்படும் நாடுகளில் வசிக்கும் ஜனங்களுடைய வாழ்க்கைத் தரத்துக்குச் சமதையாக நமது நாட்டு ஜனங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும். அதாவது அவர்களுடைய அன்றாட வாழ்க்கையில் சுக சௌகரியங்களை அதிகரிக்கச் செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன் இப்பொழுது நமது நாட்டில் தீவிரமான முயற்சிகள் செய்யப்பெற்று வருகின்றன இந்த நோக்கத்தையும் முயற்சிகளையும் பாராட்ட வேண்டியதுதான். ஆனால் ஓரளவுக்குட்பட்டுத்தான் பாராட்ட வேண்டியிருக்கிறது. ஏனென்றால் இந்த நோக்கத்தை நிறைவேற்றுகின்ற முறையில் முயற்சிகள் செய்கிறபோது, வாழ்க்கையின் லட்சியத்தையும், வாழ்க்கையின் பிரயோஜனங்களையும் நாம் புறக்கணித்துவிடக் கூடாது. அவைகளை அறிந்து செயல்படுத்துவதுதான் உண்மையான வாழ்க்கை.

ஆனால் சமீப காலமாக, இந்த உண்மையான வாழ்க்கையைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதிலும், இந்த உண்மையான வாழ்க்கையைப் பின்பற்ற வேண்டுமென்பதிலும் நியாயமாக இருக்க வேண்டிய ஆவல் மிகவும் குறைந்து காணப்படுகிறது. சிறப்பாக நமக்கு சுயராஜ்யம் கிடைத்த பிறகு, அதிலும் சென்ற பத்து வருஷங்களாக இந்த ஆவல் வேகமாகக் குறைந்து வருகிறது. இது மிகவும் வருத்தப்பட வேண்டிய விஷயம். இந்த நிலைமை நாம் அந்நியர் ஆட்சிக்குட்பட்டிருந்தபோது ஏற்படவில்லை.

முஸ்லிம்கள் நமது நாட்டின்மீது படையெடுத்து வந்து வெற்றி கொண்ட காலத்தில் நமது கலாசாரத்திற்கும் மதத்திற்கும் ஏற்பட்ட அதிர்ச்சி, அதிலும் வட நாட்டில் ஏற்பட்ட அதிர்ச்சி மிகக்கடுமையானதுதான். ஆனால் அந்த அதிர்ச்சியை

நாம் தாங்கிக்கொண்டோம். அதனால் நமது மத நம்பிக்கைகளுக்கோ, ஆசார அனுஷ்டானங்களுக்கோ, நமது கலாசார மரபுக்கோ அதிகமான ஊனம் ஏற்படவில்லை. முஸ்லிம்களின் படையெடுப்பினால், நமது கிராமங்களுக்கு எவ்வித பாதகமும் உண்டாகவில்லை. அதுபோலவே சுமார் முந்நூறு வருஷ பிரிட்டிஷ் ஆட்சியிலும், நமது மதக் கோட்பாடுகளும் வாழ்க்கை முறைகளும் பாதிக்கப்படவில்லை. ஜனங்களுடைய மத சம்பந்தமான விவகாரங்களில் தலையிடாமல் அவர்கள்—பிரிட்டிஷார்-நடுநிலைமை வகித்து, நமது கொள்கைகளுக்கும் ஆசார அனுஷ்டானங்களுக்கும் மதிப்புக் கொடுத்துக் காப்பாற்றி வந்தார்கள்.

நாம் சுயராஜ்யம் பெற்ற பிறகு, நம்முடைய வாழ்க்கை முறைகள் பெரிதும் மாறுதலடைந்துவிட்டன. நமது சன்மார்க்க வாழ்க்கையில், இதற்கு முந்தி இல்லாத, அளவுக்குக் கறை படிந்து வருகிறது. நம்முடைய பாரமார்த்திக வாழ்க்கையைப் பற்றி முந்தியெல்லாம் நாம் பெருமைப் பட்டுக் கொண்டிருந்தோம். ஆனால் இப்பொழுது அது பழையகதையாகி விட்டது. நம்முடைய கலாசார பரம்பரைக்கும், வாழ்க்கையின் லட்சியங்களுக்கும் விடை கொடுத்து விட்டோம். லௌகீகபரமான அனுகூலங்களை யடைய, அதாவது பணம், பதவி, அதிகாரம் ஆகியவைகளை யடைய வேண்டுமென்ற மோகத்தில் பாரமார்த்திக சம்பந்தமான விஷயங்களில் அலட்சிய மனப்பான்மை காட்டுகிறோம். சீலந்தான் பெரிதெனக் கருதவேண்டியதற்குப் பதில் இன்ப நுகர்ச்சியில் ஈடுபடுகிறோம். மத சம்பந்தமான விஷயங்களில், பலர், அசிரத்தை உடையவர்களாயிருக்கிறார்கள்: அல்லது கடவுளை ஏற்கவோ மறுக்கவோ, முடியாதென்ற கொள்கை யுடையவர்களாயிருக்கிறார்கள். நம்மிலே அநேகர் ஏதோ ஒரு பிரதிப் பிரயோஜனத்தைக் கருதி மத சம்பந்தமான சடங்குகளைச் செய்கிறார்கள்.

நமது முன்னோர்களைக் காட்டிலும் நாம் மிகவும் நாகரிகமுடையவர்களென்று பெருமைப்பட்டுக்கொள்கிறோம். நமது

வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறதென்று சொல்லி சந்தோஷப்படுகிறோம். இந்த தரத்தை எப்படி கணிக்கிறோமென்றால், ஆகாய விமானங்கள், மோட்டார் வாகனங்கள், டெலிபோன், நைலான் துணிகள், டிரான்சிஸ்டர்கள், டெலிவிஷன் இப்படி நவீனமானவற்றைக் கொண்டு கணிக்கிறோம். எளியவாழ்க்கையினால் ஏற்படக்கூடிய நன்மைகளை நாம் மறந்தே விட்டோம். யந்திரம் போல் நடத்துகிற வாழ்க்கையின் விளைவாக, உண்மையான வாழ்க்கையினால் ஏற்படக்கூடிய சந்தோஷத்தைத் துறந்துவிட்டோம். நம்மிலே ஏழைகள்கூட, பணக்காரர்களைப்பார்த்துப் பொறாமை கொள்கிறார்கள். அவர்களுடைய பழக்க வழக்கங்களைப் பின்பற்றப் பார்க்கிறார்கள். நமது வாழ்க்கையில், எளிமைக்குப் பதில் பகட்டே முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. பணக்காரர்கள் ஆடம்பர வாழ்க்கை நடத்துவதன் மூலமாகவும், தங்கள் செல்வச் செழுமையை வெளிப்படையாகக் காட்டிக் கொள்வதன் மூலமாகவும், ஏழைகளுக்குக் கெட்ட வழியைக் காட்டுகிறவர்களாயிருக்கிறார்கள்.

எளிய வாழ்க்கையைத்தான் துறந்துவிட்டோமென்றால், உயர்ந்த சிந்தனையையும் துறந்துவிட்டோம். இப்பொழுது வெளியாகும் பெரும்பாலான நூல்கள், இளைஞர்களை துன்மார்கத்தில் இழுத்துச் செல்லக்கூடியனவாகவும், இந்திரிய சுகங்களில் ஈடுபடச் செய்யக் கூடியனவாகவும் இருக்கின்றன. தற்கால இளைஞர்களுக்கு உயர்ந்த சிந்தனைகளைத் தூண்டிவிடக் கூடிய இலக்கியங்கள் பயனற்றவை என்று தோன்றுகின்றன. வியாசர், வால்மீகி, காளிதாசன் போன்ற மகா கவிகளின் படைப்புக்களில் அவர்களுக்கு ருசி இல்லை. பொழுது போக்குவதற்காக நடைபெறுகின்ற சினிமா போன்றவை அவர்களுடைய மனத்தைக் கறைப்படுத்தி விடுகின்றன. அதிலும் கல்லூரிகளில் படிக்கும் மாணவிகளும் மற்ற இளம் பெண்களும் கீழ்த்தரமான சினிமாக்களைக் கண்டு களிப்படைவதன் மூலம் இளைஞர்களின் மனம் இன்னும் அதிகமாகக் கறைபட்டுப் போகிறது.

தவிர, கிராமங்களிலுள்ளவர்கள், நகரங்களுக்கு வந்து குடியேறுவது அதிகமாகிக்கொண்டு வருகிறது. இதனால் கிராம வாழ்க்கையில் கிடைக்கக்கூடிய அமைதி போய் நகர வாழ்க்கையில் கிடைக்கக் கூடிய சிக்கல்களும் போட்டா போட்டி மனப்பான்மையும் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. அமைதியான கிராம வாழ்க்கையில் அனுபவிக்கக்கூடிய சந்தோஷத்தை ஜனங்கள் இழந்துவிட்டார்கள்.

அரசியல் விவகாரங்களில் அறிவுக்கும் நேர்மைக்கும் எடுத்துக்காட்டுபோல் இருந்த மந்திரிமார்களின் துணைகொண்டு, பிரஜைகளின் நலனில் எப்பொழுதும் விருப்புடனிருந்து வந்ததும், நெடுங்காலமாக நடைபெற்று வந்ததுமான மன்னராட்சி முறை மறைந்துவிட்டது. வால்மீகி முனிவர் ராமராஜ்யத்தைப் பற்றி அழகாக வருணித்திருக்கிறார். அத்தகைய ராமராஜ்யம், நமது நாட்டில் ஏற்பட வேண்டுமென்று மகாத்மா காந்தி வெகுவாக ஆசைப்பட்டார். ஆனால் அந்த ஆசை அவருடைய மரணத்தோடு முற்றுப் பெற்று விட்டது. இப்பொழுது ஜனநாயக ஆட்சி நடைபெற்று வருகிறது. இது செயல்படுகிற வகையில் தேர்தல்கள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு தேர்தலின் போதும், மிகவும் விபரீதமான முறையில் ஒழுக்கம், நேர்மை முதலியவை சீர்குலைந்து வருகின்றன. திருதராஷ்டிரன் சபையில், துரோபதை, "வான் சபையில் கேள்வி பலவுடையோர், கேடிலா நல்லிசையோர், மேலோர் இருக்கின்றார்கள் அவர்கள் தர்ம நியாயத்தை எடுத்து சொல்லாமலிருக்கின்றார்களே" என்று கதறியழுத குரல் நம்மில் யாருடைய காதிலும் விழவில்லை போலும்.

நமது கலாச்சாரத்தையும் சீலத்தையும் பேணிப் பாதுகாத்து வருகின்றவை இரண்டு. ஒன்று வீடு; மற்றொன்று கல்விக் கூடம். இவ்விரண்டும் இப்பொழுது சீர்திருத்த முடியாத அளவுக்குச் சீர்குலைந்து போயிருக்கின்றன. நமது நாட்டில் எப்பொழுதுமே, சமுதாயத்தின் ஓர் அங்கமாகக் குடும்பம் இருந்து வந்திருக்கிறது. வயதிற்கும் அனுபவத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்து நடைபெற்று வந்த அவி

பக்த குடும்பம் இப்பொழுது அடியோடு இல்லாமற் போய்விட்டது. வயதானவர்களுக்கும், வறுமை நிலையில் உள்ளவர்களுக்கும், பலவீனர்களுக்கும் பாதுகாப்பளித்து வந்த ஸ்தாபனமாக அவிபக்த குடும்பம் இருந்து வந்தது. வயிற்றுப் பிழைப்பு நிமித்தம் தொலை தூரம் சென்று வேலை வாய்ப்புகளைப் பெறவேண்டிய நிலை ஏற்பட்டதன் விளைவாக, இந்த அவிபக்த குடும்ப முறை சின்ன பின்னப்பட்டுப் போய்விட்டது. இதனால் குடும்பத்தைச் சேர்ந்த ஒவ்வொருவருக்கும் நமக்கு நாமே என்ற உணர்ச்சி ஏற்பட்டுவிட்டது. குலாசாரத்தை அனுஷ்டிப்பதனால் ஏற்படக்கூடிய நன்மைகளை அறியாதவர்களாகவும் அல்லது அதனை அலட்சியம் செய்கிறவர்களாகவும் பலர் இருக்கின்றனர்.

கல்வித்துறையில் குரு—சிஷ்ய உறவு என்பது போய் விட்டது. சிஷ்யன் என்று சொன்னால், ஒழுங்குக்கு உட்படுத்தப்பட வேண்டியவன் என்று பொருள். சிஷ்யன் பணிவோடு இருக்கிறவன் என்ற பொருளில் விநேயன் என்று அழைக்கப்படுகிறான். இந்த இரண்டு சொற்களும், அதாவது சிஷ்யன், விநேயன் என்ற இரண்டு சொற்களும், தற்காலக் கல்வி முறையில் அர்த்தமில்லாமற் போய்விட்டன. குரு பக்தி செலுத்துவாருமில்லை; அதை ஏற்றுக்கொள்ளத் தகுதி படைத்தவருமில்லை.

இந்த மாதிரியான விஷயங்களில், நமது முன்னோர்கள் கடைப்பிடித்துவந்த நியதிகள் பலவும் இப்பொழுது சீரழிந்து போயிருக்கின்றன. நம்மில் பலருக்கும் மன அமைதியும் அதனால் ஏற்படக் கூடிய சந்தோஷமும இல்லாமற் போய் போய்விட்டன. இந்த ஜட உலகத்தைச் சேர்ந்த பொருள்கள் எதுவும் மனிதனுக்கு மன அமைதியையோ சந்தோஷத்தையோ கொடுக்காது, என்ற வாசகத்தின் உட்பொருளை நாம் மறந்துவிட்டோம்

நமது முன்னோர்கள் லௌகிக சம்பந்தமான விஷயங்களைப் புறக்கணித்து வந்தார்கள் என்று நாம் கருதிவிடக் கூடாது. உண்மையில் இந்த மாதிரியான விஷயங்களின் அவசியத்தைப் பற்றி அதிகம் சொல்லி இருக்கிறார்கள். தர்மம்

அர்த்தம், காமம், மோட்சம் என்ற சதுர்வித புருஷார்த்தங்களை அடையவேண்டியதே மனிதர்களுடைய லட்சியமாயிருக்க வேண்டுமென்பது குறித்துப் பலவிதமாகச் சொல்லியிருக்கிறார்கள்.

நம்மிலே ஒரு சிலரைத் தவிர, பெரும்பாலோர் இல்லறம் நடத்துகிறவர்கள். ஒரு சமுதாயம் ஒழுங்காக இயங்கி வர வேண்டுமானாலும், இல்லற வாழ்க்கையிலுள்ளவர்கள் பொருளையும் இன்பத்தையும் நாட வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த இரண்டையும்—பொருளையும், இன்பத்தையும்—தர்மத்திற்குட்பட்டும் மோட்சத்தைக் குறிக்கோளாகக் கொண்டும் அடைய வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. தற்கால சமுதாய வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கிற தீமைகளுக்கெல்லாம் அடிப்படைக்காரணம், நாம் தர்மத்தைப் புறக்கணித்துவிட்டு, பொருளையும் இன்பத்தையும் நாடுவதுதான்.

தர்மம் எது, அதர்மம் எது என்பதை, மனிதர்கள் வகுக்கும் சட்ட திட்டங்களைக் கொண்டு நாம் நிர்ணயிக்கக் கூடாது. இது பற்றி சாஸ்திரங்கள் என்ன சொல்லியிருக்கின்றன என்பதைத் தெரிந்துகொண்டு அதன்படி அனுசரிக்க வேண்டும். செய்யத் தகுந்தது எது, செய்யத் தகாதது எது என்பதை நிச்சயிக்க, சாஸ்திரம் நமக்குப் பிரமாணமாகிறது. "சாஸ்திரம் ஆக்ஞாபித்திருப்பதை அறிந்து தர்மத்தைச் செய்யக் கடவாய்" என்பது கீதாவாசகம். ஆனால் தற்காலத்தில் சாஸ்திரங்களை நிராகரித்துவிட்டு, சமயோசிதப்படியும், அவரவர் விருப்பங்களுக்கேற்றாற் போலவும் நடப்பது சர்வ சாதாரணமாகிவிட்டது.

தர்மத்தின் அடிப்படைத் தத்துவம் உலகனைத்திற்கும் பொதுவானது. ஆனால் அதனை அனுஷ்டிப்பது ஒரே மாதிரியாயிருக்க முடியாது. எல்லா தர்மங்களும் ஒவ்வொருவருக்கும் பொருந்தும் என்று சொல்ல முடியாது. அவரவருடைய தகுதிக்கும் நிலைமைக்கும் ஏற்றாற்போல் தர்மம் அனுஷ்டிக்கப்படவேண்டுமென்று நமது முன்னோர்கள் நிச்சயித்து விட்

டிருக்கிறார்கள். உதாரணமாக, ஆசிரியனுடைய தர்மம் வேறே! மாணாக்கனுடைய தர்மம் வேறே; கணவனுடைய தர்மம் வேறே. மனைவியினுடைய தர்மம் வேறே எஜமானனுடைய தர்மம் வேறே; வேலைக்காரனுடைய தர்மம் வேறே; இப்படிஇப்படி, இவர்களெல்லோரும்சமம் என்று சொல்லிக் கொண்டு, ஒருவர் தர்மத்தை மற்றொருவர் அனுஷ்டிக்கக் கூடாது. உதாரணமாக ஒரு ஸ்திரி, ஒரு புருஷன் செய்கிற காரியத்தை, நானும் செய்யக்கூடும் என்று சொல்லலாம். ஆனால் அப்படிச் செய்வது அவள் தர்மமன்று. அப்படிச் செய்தால், அவளுக்கு இயற்கையாகவுள்ள அழகு, மகத்துவம் ஆகியவை குன்றிப் போகும். யார் யார் எந்த எந்த தர்மத்திற்கு அதிகாரிகள் என்பதைத் தெரிந்துகொள்கிற விஷயத்தில் ஏற்பட்டிருக்கிற குழப்பம், எந்த தர்மத்தை அனுஷ்டிக்க நமக்கு உரிமையும் தகுதியும் இல்லையோ, அந்த தர்மத்தை அனுஷ்டிப்பது, இப்படிப்பட்டவைதான் இப்பொழுதேற்பட்டிருக்கிற சண்டை சச்சரவுகளுக் கெல்லாம் காரணம். "ஸ்வதர்மத்தில் இறப்பது மேல். பிறர் தர்மம் பயம் தருவதாகும்" என்பது கீதா வாசகம்.

ஒருவன் கட்டாயம் செய்தாக வேண்டிய தர்மங்களைப் போல், மற்றொருவன் செய்ய வேண்டிய கடமைகள் இருக்கமாட்டா. ஒன்றுக் கொன்று சம்பந்தமில்லை. ஸ்வதர்மத்தைச் செய்ய வேண்டியதுதான் ஒருவனுக்கு முக்கியமே தவிர, மற்றொருவன் செய்ய வேண்டிய தர்மத்தைப் பொறுத்ததாக இருக்கக் கூடாது. அதுபோல, ஒருவன், மற்றொருவருடைய கடமைகளைச் செய்வதாகச் சொல்லிக் கொண்டு தான் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யாமல் விட்டுவிடக்கூடாது. பிறர் செய்ய வேண்டிய கடமைகளைப் பற்றிக் கருதாமல், தன் கடமையை ஒவ்வொருவனும் செய்துகொண்டு போகவேண்டும். ஒரு கணவன், தன்மனைவி விஷயத்தில் செய்ய வேண்டிய கடமைகளைச்செய்யாமல்விட்டு விட்டிருக்கலாம். அதற்காக, மனைவி தன் கணவனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளில் தவறக் கூடாது. இப்பொழுதெல்லாம், செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யாமல்

பெற வேண்டிய உரிமைகளைப்பற்றி மட்டும் அதிகம் பேசப் படுகிறது. இப்படிப் பேசாமல், அவரவரும் அவரவர் கடமை களைச் செய்துகொண்டு போனால் சமுதாயத்தில் ஏற்பட்டு வருகிற பூசல்கள் தாமாகவே மறைந்துபோகும்.

பொதுவாகச் சொல்லப் போனால், இப்பொழுது நாம் நல்வாழ்க்கை நடத்த வேண்டுமென்று ஆசைப்படுகிற பழக் கத்தை இழந்துவிட்டோம். கட்டுப்பாடு என்பது போய் விட்டது. அதற்குப் பதில், எதற்கும் இணங்கிக் கொடுத்துக் கொண்டுபோகிற சுபாவம் நமக்கு ஏற்பட்டுவிட்டிருக்கிறது.

நமது அன்றாட வாழ்க்கையில் ஆடம்பரம் புகுந்து கொண்டு எளிமையை அப்புறப்படுத்திவிட்டது. அழிவில் லாத ஆத்மா நமக்கு இருக்கிறது. அதன் வளர்ச்சிக்கு நாம் பாடுபட வேண்டும் என்ற எண்ணம் நம்மிடமிருந்து அகன்று விட்டது. அதற்குப் பதில், அழிந்து போகக்கூடிய உடம் பைத் திருப்தி செய்வதைப்பற்றி எப்பொழுதும் எண்ணமிட் டுக்கொண்டுருக்கிறோம்.

மனத்தையும் சன்மார்க்க வாழ்க்கையையும் ஒழுங்குக்குட் படுத்துவதே தபஸ். ஆனால் இந்த தபஸ் என்பது, இப் பொழுது பொருளில்லாத சொல்லாகிவிட்டது. ஆத்ம சக்திக்கு வேர்கள்போன்றவை, ஒழுங்குக்குட்பட்ட மனமும் சன்மார்க்கவாழ்க்கையும். அந்த வேர்கள் இப்பொழுது உலர்ந்துவருகின்றன. நமக்கு ஆத்ம சக்தி எப்படி ஏற்படும்?

பிருஹதாரண்ய உபநிஷத்தில் ஒரு கதை சொல்லப்படு கிறது. ஒரு சமயம் தேவர்கள், அசுரர்கள் மனுஷ்யர்கள் ஆகிய மூவகையினரும் பிரும்மாவிடம் சென்று, தாங்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதைப்பற்றி உபதேசிக் குமாறு கேட்டார்கள். அப்பொழுது தா—தா—தா என்று இடி இடித்தது. பிரும்மாவின் உபதேசம் இந்தச் சப்தத்தில் அடங்கியிருப்பதாக மூவகையினரும் தெரிந்துகொண்டார் கள். எப்படியென்றால், தேவர்கள் தா என்ற அக்ஷரத்திற்கு

தாம்யத அதாவது, தாங்கள் நிதானமாக—அளவோடு—இருக்கவேண்டுமென்று பொருள் கொண்டார்கள். அப்படியே அசுரர்கள், தாங்கள் எல்லோரிடத்திலும் தயை காட்ட வேண்டுமென்று பொருள் கொண்டார்கள். மனுஷ்யர்கள், தத்தம் என்ற அட்சரத்திற்கு தாங்கள் தானம் செய்ய வேண்டுமென்று பொருள் கொண்டார்கள்.

பொதுவாகவே பிரதியொரு மனுஷ்யனிடத்திலும், மனுஷ்யத்தன்மையோடு தெய்வத்தன்மையும் கலந்திருக்கின்றது. அதாவது, அவன் இன்பநுகர்ச்சி, பிறருக்குத் தீங்கிழைத்தல், பேராசை கொள்ளுதல் ஆகிய இந்த மூன்று குறைபாடுகளையும் களைந்தெறிய வேண்டுமானால் அவன் நிதானமுடையவனாகவும், தயையுடையவனாகவும், தானம் செய்கின்றவனாகவும் முறையே இருக்க வேண்டும். இதுதான் இந்தக் கதையின் தாத்பரியம். எந்த ஒரு நாகரிக பரம்பரையும், நிதானம், தயை, தானம் ஆகியவற்றோடு, சத்தியம், பிறர் பொருள் வெளவாமை, அஹிம்ஸை ஆகியவற்றைப் பிரதானமாகக் கொண்டிருந்தால்தான் மதிப்புப் பெற்றிருக்கும். சிறப்பாக, பாரதநாட்டின் கலாசாரத்திற்கும், நாகரிக பரம்பரைக்கும் இந்தச் சேர்க்கை அவசியம். இந்தச் சேர்க்கை நம்மில் ஒவ்வொருவரிடத்திலும் இடம் பெறுவதற்கு நாம் எந்த அளவுக்கு முயற்சி செய்கிறோமோ அந்த அளவுக்கு நம்முடைய பாரத சமுதாயத்தை, அதற்கேற்பட்டிருக்கிற கலசார நெருக்கடியிலிருந்து மீட்டவர்களாவோம்.

ஸ்ரீ சங்கர பகவத் பாதர்கள் ஷட்பதி ஸ்தோத்திரத்தில், அருளியிருக்கிறபடி பகவானை நோக்கி, நாம் அனைவரும் பின்வரும் பிரார்த்தனையைச் செய்வோமாக:—

"பகவானே, என்னிடமுள்ள தன்னடக்கமின்மையை நீக்கு; என்னுடைய மனம் கட்டுப்பட்டிருக்கும்படி செய். இந்திரிய சுகங்களிலிருந்து என்னை விடுதலை செய். எல்லா ஜீவ ராசிகளிடத்திலும் அன்பு செலுத்துகிற மாதிரி என் இதயத்தை விசாலப்படுத்து; சம்சார சாகரத்தைக் கடக்க எனக்குத் துணை செய்!"

ஞானதீபம்

பிரதியொரு மனிதனும், இந்த உலகத்தில் எவ்வித துக்கமுமில்லாமல், எவ்வித கஷ்டங்களையும் அனுபவிக்காமல் வாழவேண்டுமென்று ஆசைப்படுகிறான். அது மட்டுமன்று; பரிபூரண சந்தோஷத்தை, அதாவது துக்கக் கலப்படமில்லாத சாசுவதமாக இருக்கக்கூடிய சந்தோஷத்தை—சுகத்தை—அனுபவிக்க வேண்டுமென்றும் விரும்புகிறான். இங்ஙனம் துக்கத்தினால் கறை படாமல் எப்பொழுதும் பூரணமாயுள்ள சந்தோஷத்தை ஆனந்தம் என்றுஅழைப்பர். இந்த ஆனந்தத்தை அனுபவிப்பது நமது பிறப்புரிமை.

நம் ஒவ்வொருவரிடத்திலும் ஆத்மா என்பதொன்று இருக்கிறது. அதுதான், அநித்தியமான சரீரத்திற்குள் சரீரியாக இருந்துகொண்டு நம்மை இயங்க வைக்கிறது. ஆனால் இந்த ஆனந்தம் அடர்ந்த ஓர் இருளில் மறைந்திருக்கிறது.

இந்த உலக வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிற நாம் எத்தனையோ காரியங்களைச் செய்துகொண்டு வரவேண்டியிருக்கிறது. ஆனால் இந்த உலக வாழ்க்கையின் பெரும் பகுதி துக்க மயமாகவே இருக்கிறது. இருந்தாலும் இந்த வாழ்க்கையின் மத்தியில், அவ்வப்பொழுது, மேற்படி ஆனந்தத்தின் சிறு சிறு துளிகளை நாடிச் செல்கிறோம்.

இருள் அகன்றுவிட்டால், அந்த இருட்டினால் ஏற்பட்ட கஷ்டங்களும் அகன்று போகும். அப்படி அகன்று போவதற்கு வெளிச்சம் தேவை. ஒரு விளக்கை ஏற்றிவைத்த மாத்திரத்தில், இருள் தானாகவே அகன்றுவிடுகிறது.

சம்சாரமென்னும் அந்தகாரச் சூழலில் சிக்கிக்கொண்டிருக்கிற நமக்கு வெளிச்சத்தை—விளக்கை—அருளக்கூடியவன் ஒருவன் இருக்கிறான். அவன்தான் சர்வேசுவரன்.

'உலகம் யாவையும் தாமுள வாக்கலும், நிலைபெறுத்தலும், நீக்கலும் நீங்கலா அலகிலா விளையாட்டுடையவன்' அந்த சர்வேசுவரன். அவன் சர்வக்ஞன்; சகல சக்திகளுமுடையவன். ஆத்ம சாட்சாத்காரத்தின் மூலம் அவனைக் கண்டறிந்த மகரிஷிகளென்ன, பக்தர்களென்ன, இப்படிப் பலரும் ஒன்றிய மனத்துடனும், தங்கள் ஆவி உடைமை யெல்லாமும் அவனிடத்தில் ஒப்புக் கொடுத்துவிட்ட மனப்பான்மையுடனும் அவனை—அந்த சர்வேசுவரனை வழிபட்டு வந்திருக்கின்றனர். அப்படி வழிபட்டு வருவதுதான் அவர்களுடைய வாழ்க்கையின் லட்சியமாக இருந்துவந்திருக்கிறது அவர்கள் அவனைப் பற்றியே சதா சிந்தித்து வந்தார்கள்; வேத சாஸ்திரங்களின் பிரமாணப் பிரகாரம், அவனைப் பற்றியே பேசி வந்தார்கள்; தங்கள் வாழ்க்கை முழுவதையும், அவனிடத்தில் திட பக்தி கொண்டவர்களாய் கழித்து வந்தார்கள்; இப்படி அந்த சர்வேசுவரனை வழிபட்டு வந்ததன் மூலம், தங்களுக்குத் தேவைப்பட்ட ஆத்மீகச் செல்வம் அனைத்தையும் பெற்றுவிட்டதாக உணர்ந்து, லௌகிக சுகங்களில் பற்றில்லாதவர்களாய், ஆனந்தமாக வாழ்ந்து வந்தார்கள். இதை கீதையில், பகவான் பின்வருமாறு வலியுறுத்துகிறார்:—

"நான் அனைத்திற்கும் பிறப்பிடம். யாவும் என்னிடத்திலிருந்தே விரிகின்றன. இதை யறியும் ஞானிகள் என்னை அன்புடன் வாழ்த்துகின்றனர்."

"சித்தத்தை என்பால் வைத்து, உயிரை எனக்குரிய தாக்கி ஒருவருக்கொருவர் என்னை விளக்கிக்கொண்டும் என்னைப் புகழ்ந்து பேசியும், மனநிறைவடைந்தும் மகிழ்வடைந்தும் இருக்கின்றனர்."

இங்ஙனம் பக்தி செலுத்தியவர்களிடத்தில் பகவான் அதிக பிரீதியடைந்தவராய், அவர்கள்மீது தமது கருணையை மழையாகப் பொழிகிறார். அவர்களிடத்தில், அதிகமாக ஈடுபட்டு, அவர்கள் தம்மிடத்தில் எந்த அளவுக்கு எந்தவிதமாக பக்தி செலுத்துகின்றார்களோ அந்த அளவுக்கு அந்த

விதமாக அவர்களுக்கு அனுக்கிரகம் செய்கிறார். பகவான் கீதையில் கூறுகிறார்:—

''யார் என்னை எப்படி வழிபடுகிறாரோ அவர்க்கு நான் அப்படியே அருள்புரிகிறேன்.''

பகவான், தம்மிடத்தில் அசஞ்சலமான பக்தி கொண்டவர்களுக்கு, தம்மை வந்தடையும் ஞான பரிபக்குவத்தை அளிக்கிறார்.

யாரொருவர், தம்மிடத்தில் (அதாவது பகவானிடத்தில்) பரம பக்தி கொண்டு, அவருடைய நினைவாகவே இருக்கிறாரோ அவருக்கு—அந்த பரம பக்தருக்கு—அவரையறியாமலே பரப்ரஹ்மமும் தாமும் ஒன்று என்ற அனுபவ அறிவு உண்டாகும்படி பகவான் அருள்கிறார். அதாவது 'அஹம் ப்ரஹ்மாஸ்மி'—நானே ப்ரஹ்மமாயிருக்கிறேன்—என்ற இரண்டறக் கலந்திருப்பதற்கான அனுபவம் அந்த பக்தருக்கு ஏற்படுகிறது.

'ஞானத்'தை வெளிச்சத்திற்கும் அஞ்ஞானத்தை இருட்டுக்கும் ஒப்பிட்டுச் சொல்வது வழக்கம், பகவான் இப்படியே கீதையில் சொல்கிறார்:—

''நான் அவருக்கு அருளால் இரங்கி அந்தக்கரணத்தில் வீற்றிருந்து மெய்ஞானச் சுடர் விளக்கால் அஞ்ஞானத்து உதித்த ஆரிருளை அகற்றிவிடுகிறேன்.'' (அத் 10, சுலோகம் 11)

ஒரு விளக்கை எரிய வைக்க எண்ணெய் தேவையாயிருக்கிறது. அந்த எண்ணெய் கொள்வதற்கு ஒரு பாத்திரமும் அந்த எண்ணெயில் தோய்த்த திரியும் அவசியம். திரியை ஏற்றியதும் லேசான காற்று இருக்கும் பட்சத்தில் விளக்கு அணையாமல் எரிந்து கொண்டிருக்கும். அந்த விளக்கின் பிரகாசத்தில், எப்படிப்பட்ட மையிருட்டும் நம்முடைய முயற்சி இல்லாமல் தானாகவே அகன்றுவிடும்.

ஞானதீபம் என்பது, 'அஹம் பரஹ்மாஸ்மி' என்பது போன்ற மகாவாக்கியங்களினால் அறிவிக்கப்பட்ட அந்தக்

கரணத்தின் பரிணாமமேயாகும். ப்ரஹ்மசரியத்தை அனுஷ்டித்தல் முதலிய கடமைகளைச் செய்துகொண்டு வருவதனால் பரிசுத்தமடைந்த மெய்யறிவுதான் மேற்படி தீபத்திற்குத்திரி. பகவானிடத்தில் பக்தி செலுத்தி அது காரணமாக அவனுடைய அருளைப் பெறுவதுதான் மேற்படி தீபத்திற்கு எண்ணெய். இந்த எண்ணெயில் மெய்யறிவு என்ற திரி நனைக்கப்பட்டிருக்கிறது. பகவானிடத்தில் மனத்தை ஒருமுகப் படுத்தி செலுத்துவதுதான் மேற்படி ஞானதீபத்தை அணையாமல் ஒளிவிட்டுப் பிரகாசிக்கச் செய்யவல்ல மெல்லிய பூங்காற்று. வைராக்கியத்திற்கு எடுத்துக்காட்டாகவுள்ள அந்தக் கரணமே எண்ணெய்ப் பாத்திரம். பேராசையும் துவேஷமுமில்லாத மனந்தான் திறந்த வெளி. இந்த வெளியில் பலத்த காற்று வீசுவதில்லை. பகவான் அஞ்ஞானமான இருட்டைப் போக்கி ஞானமான தீபத்தை அணையவிடாமல் பாதுகாக்கிறார். அந்தப் பாதுகாப்பின் விளைவாக, ஆத்மாவைப் பற்றி ஏற்படுகின்ற தப்பபிப்ராயங்களெல்லாம் அழிந்து ஒழிந்து விடுகின்றன. அந்த நிலையில் பக்தன் செய்வதற்கொன்றுமில்லை. ஆனந்தமயமான ஜோதி ஸ்வரூபத்தில், அதாவது ப்ரஹ்மத்தினிடத்தில் தன்னை ஐக்கியப்படுத்திக்கொண்டு விடுகிறான்.

ஒரு தீபமானது, ஒரே சமயத்தில், ஒன்று, ஓரிடத்தில் சூழ்ந்துகொண்டிருக்கிற இருட்டைப் போக்குவது, மற்றொன்று அதுகாறும் அந்த இருட்டில் மறைந்துகிடந்த பொருள்களைத் தெரியும்படி செய்வது ஆகிய இரண்டு காரியங்களைச்செய்கிறது. தீபவெளிச்சத்தில் புதியதொரு பொருள் நம் பார்வைக்குத் தென்படுகிறது. தீபத்தை ஏற்றுவதைத் தவிர நாம்வேறொரு காரியத்தையும் செய்யவேண்டியதில்லை. அதுவரையில் இருட்டில் மறைந்து கிடந்த பொருள்களெல்லாம், தாமாகவே நமக்குத் தெரியவருகின்றன. அதுபோல், ஞானமானது, ஆனந்தமான ஆத்மாவை மூடிக் கொண்டிருக்கும் அஞ்ஞானத்தை அகற்றி விடுகிறது. இதிலிருந்து, ஞான தீபத்தின் வெளிச்சத்தில் புதிய பொருள்

ஒன்றும் சிருஷ்டியாவதில்லை யென்பதும், ஏற்கனவே மறைந்துகிடந்த பொருள்தான் வெளிப்படுகின்றதென்பதும் உறுதியாகின்றன. ப்ரஹ்மமே ஆனந்த மயமானது தான். நாம் ஒவ்வொருவரும் உண்மையில் பரப்ரஹ்மஸ்வரூபமாகவே இருக்கிறோம். ஜீவாத்மா, ப்ரஹமமாக இருக்கிறதென்று சாஸ்திரங்கள் முழங்குகின்றன. இந்த ஜீவ—ப்ரஹ்ம ஐக்கியத்தை ப்ரஹ்மானுபவம் என்று அழைப்பர்.

மாயையானது மிகவும் சக்தி வாய்ந்தது. அந்த சக்தியானது, நம்முடைய சுயத்தன்மையை அறிந்து கொள்ளாமற் செய்துவிடுகிறது. அப்படிஅறிந்து கொள்ளாமலிருப்பது தான் அஞ்ஞானம்; இருட்டு. அந்த அஞ்ஞான இருட்டைப் போக்க, அதாவது நமது சுயதன்மையை அறிந்து கொள்ள ஞானதீபம் உதவுகிறது. ஆதலின் நாமெல்லோரும் இந்த ஞான தீபத்தை ஏந்திக் கொண்ருக்கும் பரப்ரஹ்மத்தை நோக்கி, ''தமஸோமா ஜோதிர்கமய'' என்று (இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு அழைத்துக் கொண்டுபோ.) என்று பிரார்த்தனை செய்வோமாக!

ஆண்டவனுக்கே அர்ப்பணம்

உலகத்தில் பல மத நூல்கள் உள்ளன. நல்ல நடத்தையோடு வாழ வழி காட்டுவதே இவை அனைத்துக்கும் முக்கியமான குறிக்கோளாகும். இப்படிப்பட்ட மத நூல்களுக்குள் முதன்மையானது பகவத்கீதை. மற்ற மத நூல்கள் சொல்வதெல்லாம் கீதையில் உள்ளன. அதோடுகூட வேதாந்த நூலிலும் காணாத பல சத்தியங்களை அது பிரத்தியேகமாகக் கூறுகிறது.

கீதையில் ஓரிடத்தில் ''எந்தப் பிராணியும் ஒரு க்ஷணம் கூடக் காரியத்தில் ஈடுபடாமல் இருக்க முடியவில்லை'' என்று சொல்லி இருக்கிறது. எறும்பிலிருந்து தேவதைகள் வரையில் எல்லா ஜீவராசிகளும் எப்போதும் ஏதாவது காரியம் செய்த படியே உள்ளன. மனிதன் காலையில் எழுந்ததிலிருந்து இரவு தூங்கப் போகிறவரையில் ஏதாவது காரியம் செய்தவாறு இருக்கிறான். தபஸ்வியும்கூட மனத்தினால் காரியம் செய்கிறார். ஞானிகளுக்குச் சுய காரியம் இல்லாவிட்டாலும் அவர்களும்கூட பூர்வ சம்ஸ்காரம் காரணமாக லோக க்ஷேமத்துக்கான காரியங்களில் ஈடுபட்டுத்தான் இருக்கின்றனர். இதையும் கீதை கூறுகிறது—''ஜனகர் முதலிய ஞானிகள் கர்மத்தின் மூலமே பூரணத்வம் அடைந்தனர். லோக நலனை முன்னிட்டுப் பார்த்தாலும் ஒருவன் எதைச் செய்கிறானோ அதையே மற்றவர்களும் அநுசரிக்கிறார்கள். எனவே பொது ஜனங்களுக்கு வழிகாட்டியாக உத்தம புருஷர்களும் கர்மாக்களைச் செய்யவேண்டும்'' என்று ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ஜுனனுக்கு உபதேசிக்கிறார். ''பார்த்தா! மூவுலங்களிலும் நான் அடைய வேண்டிய யாதொன்றும் இல்லை. எனக்கு இதுவரை கிட்டாமல் இனி கிட்டவேண்டியதாக எதுவும் இல்லை. எனினும் நான் கர்மம் புரிந்தபடி

யே இருக்கிறேன். ஏனெனில் நான் இவ்விதம் சோம்பலின் றிக் கர்மம் செய்வதிலிருந்து மாறினேனுகில் மக்களும் என் வழியைப் பின்பற்றத் தொடங்கி விடுவர். இவ்விதம் ஜனங் கள் காரியங்களைவிட்டால் உலக வாழ்விலேயே குழப்பம் உண்டாகி உலகமும், ஜனங்களும் அழிந்து போகும்படியா கும். ஏதாவது ஒரு கருமத்தில் ஈடுபட்டிருப்பதே பாமர ஜனங்களின் சுபாவம். அவர்கள் சுயபற்ருேடு, காரியத்தில் ஈடுபடுவர். ஆனுல் சுயபற்றே இல்லாமல் ஞானிகளும்கூட இப்படிப்பட்ட ஜனங்களை உயர்த்தும் பொருட்டுக் கர்மத் தில் ஈடுபடவேண்டும்'' என்கிருர் பகவான்.

ஏதோ ஒரு காரியத்தில் சமஸ்தப் பிராணிகளும் ஈடுபட் டுள்ளன. காரியங்களில் நல்லது கெட்டது என்று இரண்டு வகை உண்டு. ஒவ்வொரு காரியத்திற்கும் ஒரு பலன் உண்டு. அவை இன்பமாகவோ துன்பமாகவோ இருக்கும். ''உனக் கென விதிக்கப்பட்ட கர்மாக்களைச் செய்ய மட்டுமே நீ அதிகாரம் பெற்றிருக்கிருய்! அதன் பலனை எதிர்பார்ப்ப தற்கு உனக்கு அதிகாரம் இல்லை'' என்று துக்க நிவிருத்தி பண்ணும்படியான ஆசீர்வாதத்தைச் செய்கிருர்.

திருடர்களிடமிருந்து ஒரு நாய் நம்மைக் காக்க வேண்டு மென்ருல், நாம் அந்த நாயை நன்ருகக் கவனித்துக்கொள்ள வேண்டும். நாம் எதைப் பரிபாலனம் பண்ணுகிருமோ அது நம்மைப் பரிபாலனம் செய்யும். 'நீ தர்மத்தை தைரி யமாகப் பரிபாலனம் பண்ணி வருகிருய். அது உன்னைப் பரிபாலனம் செய்யட்டும்' என்று சொந்தத் தாய் தன் குழந்தை காட்டுக்குப் போகிறதே என்று அழாமல் ஆசீர் வாதம் செய்கிருள்.

'தர்மம் தலை காக்கும்' என்பார்கள். ராகவன் தைரியத் தோடு நியமத்தோடு பரிபாலனம் பண்ணிவந்த வேத தர் மந்தான் எத்தனையோ ஆபத்துகள் காட்டில் வந்தபோதிலுங் கூட அவன் தலையை ரக்ஷித்தது. ராவணனுக்குப், பத்துத் தலைகள் இருந்தபோதிலும் அவன் பண்ணிவந்த அதர்மமா னது அவனுடைய ஒரு தலையைக்கூட ரக்ஷிக்கவில்லை.

வேதோகிலோ தர்மமூலம்

வேதம் தர்மத்தையே சொல்கிறது என்று வருகிறது. 'வேதம்பரம்பொருள் ஒன்றைத்தான் குறிக்கின்றது' என்று வேதத்தின் முடிகளான உபநிஷத்துக்கள் சொல்கின்றன. 'வேதத்தினால் அறியப்படுகிற பரம்பொருள்தான்—பரம புருஷன்தான் தசரதனுடைய பிள்ளை ராமனாக அவதாரம் செய்தான்' என்று ஒரு சுலோகம் சொல்கிறது. 'தர்ம ஸ்வரூபிதான் ராமன்' என்பது கௌஸல்யா தேவியினுடைய வாக்கியத்திலிருந்து-ராமயாணத்திலேயே வரும்படியான சுலோகத்திலிருந்து நமக்குத் தெரிகிறது. இன்னோர் இடத்தில் சொல்கிறபோது,

ரமோ விக்ரஹவாந் தர்ம

என்று வருகிறது. இதனால் தர்மமும் பரம்பொருளும் ஒன்றே என்றாகிறது. தர்மம் என்பது மனோபாவம். அது ஓர் உருவத்தை எடுத்துக்கொண்டால் எப்படி இருக்குமோ அதுதான் ராமன். கொஞ்சங்கூடத் தப்பு வழிக்குப் போகாமல் ஆபத்துக் காலத்திலும் தைரியத்தோடு, நியமத்தோடு த்ருதியாக வைத்துக் கொண்டிருக்கும்படியான ஸ்வரூபத்திற்கே தர்மம் என்று பெயர். அந்தத் தர்ம ஸ்வரூபந்தான் ராமனாக அவதாரம் பண்ணிற்று. வேதத்தினாலே அறியப்படுகிற தர்மமாகிற பரம் பொருள் சகல ஜனங்களுடைய கண்களினாலும் பார்க்கப்படுகிற ராமனாக அவதாரம் செய்தது. அப்போது வேதம் ராமாயணமாக அவதாரம் செய்தது.

வேதத்தின் பெருமையைச் சொல்ல முடியாது. எது எது மிக மிக உயர்ந்ததோ அதையெல்லாம் வேதமாகவே சொல்வது வழக்கம். ஆழ்வார் பிரபந்தம் பாடினார். அந்த நூல் வேதந்தான். 'வேதம் தமிழ் செய்த மாறன் சடகோபன், என்று சொல்கிறார்கள். 'இதை மட்டம் என்று நினைக்காதே. வேதத்தைத்தான் தமிழ்ப் பிரபந்தமாகப் பாடியிருக்கிறார்' என்று சொல்வதிலிருந்து வேதம் உயர்ந்தது என்பது தெரிகிறது. உயர்ந்த பொருளைச் சொல்ல வேதத்தைச் சொல்லி உயர்த்திக் கொள்கிற வழக்கம் இப்படி அநேகம் உண்டு. பாரதத்தை பஞ்சம வேதம் என்று சொல்வார்கள்

வேதம் அனந்தம். அதாவது எல்லையற்றது என்று சொல்லப்படுகிறது. அனந்தமாக இருக்கக்கூடியது எல்லாம் ஒரே பரம்பொருளை உணர்ந்துகொள்ளத்தான்.

கிருஷ்ண பரமாத்மா அர்ஜுனனிடம் கூறுகிறார். அதாவது ஒரு கருமம் தனக்கு சந்தோஷம் தருமா துக்கம் தருமா என்று பலனைக் கருதாமல், இந்தக் கருமம் லோக க்ஷேமத்துக்காகத் தனக்கு விதிக்கப்பட்டிருக்கிறது என் பதில் மட்டும் கருத்து வைத்து, அக் கருமத்தைச் செவ்வை யாகப் புரியவேண்டும்.

ஆனால் பிரத்தியட்சத்தில் நாம் பார்ப்பதென்ன? பள்ளிக்குப் போகிற குழந்தைகளிலிருந்து மிக உயர்ந்த ஸ்தானம் வகிக்கிற முதியவர்கள் வரையில் எல்லா வயதின ரும் தங்களது சுய லாபங்களை உத்தேசித்துத்தான் காரியம் செய்கிறார்கள். எப்படிப் பார்த்தாலும் பலனை எண்ணுகிற மாதிரி, கடமையைச் செய்ய வேண்டும் என்று எண்ணக் காணோம். ஆனால் சாஸ்திரங்களில் அதி முக்கியமான ஆக்ஞை யாதெனில் நாம் நம் கடமையை உணர்ந்து அதற்குரிய கருமங்களை முறைப்படி ஆற்றவேண்டும் என்பதே யாகும். ஆண்டவனுடைய அனுக்கிரஹத்தைப் பெற இதுவே வழி என்று ஸ்ரீ சங்கரபகவத்பாதர்கள் கூறுகிறார். நமக்கு வேதத்தில் விதிக்கப்பட்ட கர்மத்தைப் பலனில் ஆசை வைக்காமல் அப்பழுக்கின்றிப் புரிந்து, ஈசுவரார்ப்பணம் செய்துவிட வேண்டும் என்கிறார்.

வேதோ நித்யம் அதீயதாம்
ததுதிதம் கர்மஸ்வநுஷ்டீயதாம்
தேன ஈசஸ்வ விதியதாம்

கருமங்களைச் செய்து, கொஞ்சம்கூட அகம்பாவமின்றி அவற்றின் பலனை பகவத் அர்ப்பணமாக்கிவிட வேண்டும். ஸ்ரீ சங்கர பகவத்பாதர்கள் இவ்விதம் உபதேசிக்கும்போது பகவத் கீதையில் ''அவனவனும் தனக்குரிய கருமங்களைச் செய்வதன் மூலம் பகவானை பூஜித்தவனாகிறான்; இதனா

'லேயே மனிதன் பூரணத்வம் அடைகிறான்'' என்று கூறி இருப்பதைக் கருத்தில் கொண்டிருப்பார் போலும்.

மாணவனின் கடமை என்ன? கல்வியில் கவனம் செலுத்துவதும், மாதா-பிதா-குருவினிடம் அடங்கி நடப்பதும்தான். பெரியவர்களின் கடமை என்ன? அவர்கள் வீட்டில் உள்ளோருக்குத் தங்கள் பொறுப்புகளை ஆற்ற காரியாலயத்தில் தனக்குத் தரப்பட்டுள்ள பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டும். இதோடு நில்லாமல் உலகப் பொது நலனிலும் கருத்து செலுத்த வேண்டும். எதற்கும் அவசரப்படாமல் பொறுமையாக இருக்க வேண்டும். தெய்வீகமான நூல்களைப் பக்தி பூண்டு ஒழுக வேண்டும். வீட்டிலுள்ள சிறியவர்கள் மனத்திலும், இவர்களே பக்தியையும், சிரத்தையையும் தூண்டி வளர்க்கவேண்டும். இவ்விதம் பெரியோரும், சிறியோரும் சேர்ந்து கவனத்தோடு வழுவின்றி நடந்துகாட்டுவாரேயாகில் லோகம் முழுவதும் சாந்தமாக இருக்கும்.

எழுந்ததிலிருந்து படுக்கப் போகும் வரையில் நாம் செய்கிற பலவிதமான காரியங்களையும் இறைவனின் திசையில் திருப்புவோமாக. நம் இதயத்தில் சாந்தி காண இதுவே வழி. நாம் பேசுகிற பேச்செல்லாம் பகவத் விஷயமாக்குவோம். நம்முடைய பேச்சு அனைத்தும், நாம் ஜபம் செய்கிற மந்திரங்கள் அனைத்தும் ஐம்பத்தியோரு அட்சரங்களில் அடங்கும். பராசக்தியான பரதேவதை இந்த அட்சரங்களின் ஸ்வரூபமாவாள். எனவே நம் பேச்சு எல்லாம் அவள் விஷயமாகவே ஆக்கவேண்டும். நாம் எந்தக் காரியங்கள் செய்தாலும் கை, கால்களை அசைக்கிறோம். இந்த அசைவுகள் யாவும் பகவானை வழிபடும் 'முத்திரைகள்' என்ற அங்க அசைவுகளாக வேண்டும். நாம் நடப்பதெல்லாம் ஆண்டவனைச் சுற்றும் பிரதட்சணம் ஆகட்டும். நாம் உண்பதெல்லாம் நமக்குள்ளே உறையும் ஈசுவரனுக்கு நிவேதானமாகட்டும். உண்ட உணவை ஜீரணிக்கிற ஜாட

ராக்னி என்கிற தீயாக இருப்பவன் அவனே. ''அஹம் வைச்வா நரோ பூத்வா ப்ராணிநும் தேஹம் ஆச்ரித'' என்று இதையே கிருஷ்ண பரமாத்மாவும் கூறுகிறார். எனவே நாம் சாப்பிடும்போது ஆண்டவனுக்கு நைவேத்யம் செய்கிறோம் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். இவ் விதம் நாம் படுப்பதை பகவானுக்குச் செய்கிற நமஸ்கார மாக ஆக்கவேண்டும். இவ்வாறு பேச்சு, அங்க அசைப்பு, நடை, உண்ணுதல், சயனித்தல் எல்லாம் அம்பாளின் ஜபமாகவும், முத்திரையாகவும் பிரதட்சணமாகவும், நைவேத்தியமாகவும், நமஸ்காரமாகவும் ஆகி அனைத்தையும் அவளுக்கு அளித்து, ஆத்மாவையே அவளுக்குச் சமர்ப்பித்து விடவேண்டும்'' என்று ஸ்ரீ பகவத்பாதர்கள் 'ஸௌந்தர்ய லஹரி'யில் பிரார்த்திக்கிறார். கீதையிலும் பகவான் ''நீ எதைச் செய்தாலும், எதைப் புசித்தாலும், எதை ஆஹூதி செய்தாலும், எதைக் கொடுத்தாலும், எதைத் தவமாகப் புரிந்தாலும் அதை எல்லாம் எனக்கு அர்ப்பணமாகக் கருதிச் செய்வாயாக'' என்கிறார். ஜீவாத்மா ஒவ்வொரு வருக்கும் உள்ளே அந்தர்யாமியாக இருப்பவர் பரமாத்மாவே ஆதலால் இவனது சகல காரியங்களும் அவருக்கு உரித்தாகவே ஆகின்றன. எந்தக் கர்மத்தை எவன் செய்தாலும் இறுதியில் அது இவனது இதயத்துள்ளும், சகல ஜீவராசிகளின் உள்ளும் குடிகொண்டிருக்கிற ஆண்டவனைத்தான் அடைகிறது.

இதை உணர்ந்து ஒவ்வொருவரும் தான் புரிகிற காரியத்தையெல்லாம் பகவானுக்குக் காணிக்கையாகக் கருதிச் செய்யவேண்டும். இந்த எண்ணம் வந்துவிட்டால் நாம் செய்வதெல்லாம் உத்தமமாகவே இருக்கும். ஏனெனில் பகவானுக்கு அதமமான வஸ்துக்களை காணிக்கையாகத் தரமாட்டோம் அல்லவா? உதாரணமாக வீட்டிலும் கோயிலிலும் ''ஷோடச உபசாரம்'' என்று பதினாறு உபசாரங்களுடன், பூஜை செய்யும்போது அதில் நைவேத்யமும் ஓர் உபசாரமாக வருகிறது. அப்போது

அழுகின பழத்தை பகவானுக்கு முன் வைப்போமா? இவ்வாறே வாடிய பூவால் அர்ச்சனை செய்ய மனம்வருமா? அழுக்கு நீரால் எவரேனும் அபிஷேகம் செய்ய முற்படு வாரா? அசுத்த உணவை நைவேத்தியம் செய்வோமா? மாருக ஒவ்வொன்றும் தோஷமில்லாததாக இருக்க வேண்டும் என்ற கவனத்துடன் இருக்கிறோம். எத்தனை சிரமப்பட்டும் சுத்தமான வஸ்துக்களையே பூஜா திரவியங் களாகச் சேகரிக்கிறோம். சிறிது தோஷம் உள்ள வஸ்து வையும் நீக்கிவிடுகிறோம். லௌகீகமாக நாம் செய்கிற சகல காரியங்களும் சமஸ்த ஜீவராசிகளின் இதயவாசியான ஈசுவரனுக்குச் செய்கிற பூஜா உபசாரங்களே ஆகும், என்ற உணர்வு நமக்கு வந்துவிட்டால் அப்போது எந்தச் செயலிலும் தோஷமே இராது! இந்த உணர்வைப் பெற நாம் ஒவ்வொருவரும் முயலவேண்டும். நாம் எந்தக் காரியத்தையும் செய்யும் முன்பு 'இது இறைவனுக்குக் காணிக்கையாகத் தகுந்ததா' என்று சுயநலக் கலப்பின்றி நடு நிலையான மனத்தோடு ஆராய்ந்து பார்க்க வேண்டும். இந்தக் காரியம் சுத்தமானதா, இதை பகவான் ஏற்பாரா என்று ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கேட்டுக் கொள்ள வேண்டும். பகவான் அங்கீகரிப்பார் என்கிற திட உறுதி உண்டானால்தான் அந்தக் காரியத்தில் இறங்க வேண்டும். ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு செயலிலும் இதையே விதியாகக் கொண்டு வாழ்க்கை நடத்தினோமாயின், நமது ஜீவனம் பரிசுத்தமாகும். பொருள் பொதிந்த, பக்தி நிறைந்த, தூய வாழ்வு நடத்தி நமக்கும் சுகம் தேடிக் கொண்டோம், உலக சாந்திக்கும் உதவினோம் என்ற திருப் தியைப் பெறலாம்.

ஸத்சங்கம்

துரியோதனனும் தர்மபுத்திரரும் சுற்றிக்கொண்டு வந்தார்கள். துரியோதனனுக்கு எல்லாரும் கெட்டவர்களாகத் தென்பட்டார்கள். ஆனால் தர்மருக்கு எல்லாரும் நல்லவர்களாகவே தெரிந்தார்கள். தர்மருக்கோ ஓர் இடத்தில் மனம் கொஞ்சம் சஞ்சலப்பட்டது, ஒருவன் பிராணிகளைக் கொன்று மாமிசம் தயார் செய்துகொண்டு இருந்தான். "ஏன் இவ்விதம் கொலை செய்கிறான்? இவன் கெட்டவனாகத் தென்படுகிறானே"- என்று எண்ணினார். அந்தக் கசாப்புக் கடைக்காரனிடமும் அவருக்கு ஒரு நல்ல அம்சம் தென்பட்டது. வியாபாரம் துவங்குவதற்கு முன்னால் தான் தயாரித்த மாமிசத் துண்டுகளைக் கூரை மீது காகங்கள் சாப்பிட எறிந்தான். சிலவற்றை நாய்க்குப் போட்டான். அவனும் பிராணிகளிடம் அன்பு காட்டினான். இதைக் கண்டு தருமர் அவனையும் நல்லவனாகவே கொண்டார். நல்லவர்கள் பிறரிடம் கெடுதல்களைக் காண மாட்டார்கள். கெட்டவர்கள் மற்றவரிடம் கெட்டதையே காண்பர். தர்மசீலரான தர்மபுத்திரரே க்ஷணக்காலம் ஒருவனைக் கெட்டவனாக எண்ணலாமா? சிந்திக்கவேண்டும். இதற்குக் காரணம். அவருடன் ஒருவன் வந்துகொண்டிருந்தானே, அந்தச் சிறிது நேரச் சேர்க்கையே தர்மசீலரின் புத்தியை மாற்றிவிட்டது. இது துர்ச்சங்கத்தின் விளைவு. இதற்கு நேர்மாறானது ஸத்சங்கம். கண் இரண்டானாலும் பார்வை ஒன்றுதான், எதிலும் நல்லதைக் காணவேண்டும். நான் தினசரிப் பத்திரிகைகளைப் படிக்கும்போது, 'உலகம் கெட்டுப் போகிறதே' என்று வருத்தப்படுவதுண்டு- ஆனால் உலகத்தில் நல்ல காரியங்கள் நடக்கின்றன. பல கும்பாபிஷேகங்களும் பல தார்மீகப் பிரசங்கங்களும் நடந்துகொண்டு இருப்பதைக் காணும்போது நாம் நினைத்தபடி தர்மம் கெட்டுப் போகவில்லை; என்று தெரிகிறது. தர்ம சிந்தனையும் பக்தியும்

காணப்படுவதில் மகிழ்ச்சி. இருப்பினும் அது வறண்ட பக்தியாக இல்லாமல் மனத் தூய்மையுடனும் ஒழுக்கத்துடனும் கலந்திருக்க வேண்டும். இதற்கெல்லாம் முதற்படி ஸத்ஸங்கம்.

ஸத்ஸங்கம் என்றால் ஸாதுக்களின் கூட்டம் என்று சொல்லுவார்கள். 'ஸத்' என்றால் ஈச்வரன் என்ற அர்த்தம் உண்டு. எனவே ஆண்டவனுடன் சேருதல் என்றும் ஒரு பொருள்கொள்ளலாம். தான்வேறு, ஈசுவரன் வேறு என்ற எண்ணம் நீங்கிப் பரம்பொருளை அறிந்து அதனுடன் ஒன்று தல் வேண்டும். தவறு செய்கிறவர்களை, "ஏ அஸத்து, ஏன் இதைச் செய்தாய்?" என்று கோபிக்கிறோம். அஸத் என்றால் 'ஸத்' அல்லாதது, பொய், உண்மை இல்லாதது, கெட்டது என்று அர்த்தம். ,ஸத்' ஒன்றுதான் உண்மையானது. நிலையானது, இதனுடன் சேருவதுதான் ஆனந்தம்.

இத்தகைய ஆனந்தமடையச் செய்ய நன்மக்களோடு சேரவும் ஸத்ஸங்கம் உதவுகிறது.

ஸத்ஸங்கத்தாலேயே இந்து மதம் அநாதிகாலமாக அழியாமலிருந்து வருகிறது. இந்து மதம் அழிந்துவிடவில்லை. இதை விளக்க நான் ஓர் உதாரணம் சொல்வதுண்டு! காவேரிக்கு வர கப்பிரோடு உள்ளது. சீக்கிரம் வரவேண்டுமானால் குறுக்குப் பாதை வேண்டும். புல் புதர்கள் நிறைந்த வழியாக வரவேண்டியிருப்பதாகக் கொள்வோம். மனிதன் நடக்க நடக்க அருமையான ஒற்றையடிப் பாதை உண்டாகும். காவேரியில் ஜலம் வற்றிவிட்டால் இந்தப் பாதை மறையலாம். காரணம்; இதன் வழியாக ஜனங்கள் வருவது குறைந்து விட்டதேயாகும். மீண்டும் ஜலம். மனிதர்கள் நடக்க ஆரம்பித்ததும், அந்தப் பாதை உருவாகிவிடும். பாதை அழிந்துவிட்டதா? இல்லை. இதுபோல இந்து மதத்துக்குச் சற்று குறை ஏற்பட்டாலும், அது அழியாது. மறுமலர்ச்சி ஏற்பட்டுவிடும். ஸத்ஸங்கம் நம் மதத்தின் வளர்ச்சிக்கும் நல்வாழ்வுக்கும் உதவுகிறது.

நமது மதத்துக்கு ஒரு பெருமை உண்டு. அது என்னவென்றால் பிற சமயங்களின் கொள்கைகள் யாவும் நமது

மதத்தில் அடங்கியுள்ளன. அஹிம்ஸை, அன்பு, அருவ வழிபாடு,உருவவழிபாடு எல்லாவற்றையும் நமது மதம் கூறுகிறது. எல்லா மதங்களும் 'ஸத்' ஆன ஆண்டவனிடம் நம்பிக்கை கொண்டுள்ளன. இந்தச் சக்தியை எந்தப் பெயர் கொண்டு அழைத்தாலும் பொருள் ஒன்றுதான்.

இப்படிப்பட்ட கடவுளைக் காட்டினல்தான் நம்புவேன் என்று கேட்கலாம். இதோ என் எதிரில் மைக் வைக்கப் பட்டிருக்கிறது! என் பேச்சை வெகு தூரத்தில் அமர்ந்திருப்பவர்கள் கேட்க முடிகிறது. எப்படி? இதற்குக் காரணம் மின்சக்தி. இந்தச் சக்தியைக் காட்டுங்கள் என்றால் முடியுமா? முடியாது. இந்த மின் சக்தியையே பார்க்க முடியவில்லையே: நம்மையெல்லாம் படைத்து, இந்த மின் சக்தியையும் சேர்த்து உண்டு பண்ணின மாபெரும் சக்தியைக் காண முடியுமா? எலக்ட்ரானிக்ஸ் படித்தால், மின் சக்தியைப் பற்றி நன்கு தெரிந்து கொள்ளலாம். இதே போல் வேதங்களைப் படித்தால் கடவுள் சக்தியைப் பற்றித் தெரியும்.

மின்சக்தியைக் காணவேண்டும் என்று விஷப் பரீக்ஷை செய்து பார்க்க ஒருவன் விரும்பி, மின்சாரக் கம்பியைத் தொட்டதுமே ஒருவித இழுபபதான அதிர்ச்சியை உணர்வான். இவனைக் காப்பாற்றச் சென்றவனையும் அது இழுக்கும். மின் சக்தியை உணர்கிறன்; ஆனல் காட்ட முடியாது. அதே போல் ஆண்டவனது சக்தியையும் உணர முடியும். உணர்ந்தவர்கள் அந்தப் பேரின்பத்தை உணர வழி சொல்லியிருக்கிருர்கள். முறையோடு சாதனைகள் செய்தால் நிச்சயம் பேரின்பம் அடையலாம். கையுறை அணிந்துதான் மின்சாரத்தில் வேலை செய்ய முடியும். பக்குவப்பட்டவர்கள் தாம் ஆண்டவனது சக்தியை அணுக முடியும். அறைகுறைச் சாதனையின் மூலம் உண்மையின் சொரூபத்தைக் காண முடியாது. ராமன், கிருஷ்ணன் முதலிய உருவங்களை வழிபட்டால், மாபெரும் சக்தியை அறிய முடியும், உருவத்தின் மூலம் அருவத்தை அறிகிறோம்.

மின்சக்தியால் இயங்கும் பொருள்களைக் காண்கிறோம். விளக்குகள் எரிகின்றன. ஒலிபெருக்கி பேசுகிறது. இதில் இருந்து மின்சக்தி உள்ளது எனத் தெரிகிறது. இதேபோல, ஆண்டவனின் அருமையான படைப்புகளைப் பார்த்துத்தான் கடவுள் சக்தியை அறிகிறோம். இந்த சக்தியை உணரத்தான் முடியும். அந்தச் சக்தியை எப்பெயர் வேண்டுமானாலும் சொல்லி அழைக்கலாம்.

அமைதியும் சாந்தமுமானசூழலில்தான் கடவுள் சக்தியை உணரமுடியும். இதை ஸத்துக்களின் சங்கமே விசேஷமாக அளிக்கவல்லது. அமைதிக்காகத்தான் கோயிலுக்குச் செல்லுகிறோம். இக்காலத்தில் சற்று மனநிம்மதிக்காகச் சினிமாவுக்குச் செல்கிறார்கள். ஆனால் அங்கே முதலில் டிக்கெட் வாங்குவதில் பெரிய கஷ்டம். இதைச் சகித்துக்கொண்டு படம் பார்க்கும்பொழுது அதில் துக்கக் காட்சிகள் படம் பார்ப்பவரின் மனத்துக்கும் வேதனை தருகின்றன. இவனும் அழுகிறான். திரும்பி வரும்பொழுது மிகுந்த மனவேதனையுடன் வருகிறான். நிம்மதி கிடைக்கவில்லை. காசு கொடுத்துக் கஷ்டத்தை வாங்குவானேன் நம் கஷ்டத்தைப் பிறரிடம் சொல்லி அதற்குப் பரிகாரம் தேடிக்கொள்வோம் என்றாலோ, அவர்கள் தங்களுடைய கஷ்டத்தை நம்மிடமே சொல்ல, நமக்கு இருபங்கு கஷ்டம் உண்டாகிவிடுகிறது. ஆனால் கடவுளிடம் நமது கஷ்டத்தைச் சொல்லிக்கொண்டால் அவர் பேசாவிட்டாலும் நமது கஷ்டம் ஒருவாறு நீங்கிவிடுகிறது. அவரிடம் பக்திகொண்டு செய்த தவறுதல்களுக்கு உள்ளம் உருகி மன்னிப்புக் கேட்டுக்கொண்டு பிரார்த்தித்தால் நிச்சயம் ஸத்ஸங்கம் கிடைக்கும். நித்யானந்தம் கிட்டும். நாமே 'ஸத்' ஆகிவிடுவோம்.

தேசிய ஒருமைப்பாடு

*"இரண்டாவது என்பதால் தான் பயம் உண்டாகிறது. எல்லாவற்றையும் ஒன்றுகப் பார்ப்பவனுக்கு மோகமோ, சோகமோ எங்ஙனம் உண்டாகும்" என்று உபநிஷத் கூறுகிறது. மேற்கூறிய உபநிஷத் வாக்கியங்கள் பரம் பொருள் ஒன்றே என்பதையும், பலவும் வேற்றுமையும் தான் சண்டைக்கும் பயத்திற்கும், துக்கத்திற்கும் காரணம் என்று கூறுகின்றன. இவை பரம் பொருள் ஒன்று என்றும், இரண்டு அற்றது என்றும் முடிவான உண்மையை நமக்குத் தெரிவிக்கின்றன. இதிலிருந்து நாம் அறிய வேண்டுவது என்னவெனில் வேற்றுமைகள் உண்மையல்ல என்றும், அதனுல் நாம் ஏமாந்துக் போகக்கூடாது என்பதுமேயாகும். அத்வைத வேதாந்தத்தின்படி முடிவான மெய்ப் பொருள் இரண்டல்லதான ஒன்று என்பதும் கடைசியில் வேற்றுமைகள் உண்மையல்ல என்பதுமேயாகும்.

இந்த அத்வைதக் கொள்கையே தேசிய ஒருமைப்பாடு என்று இப்பொழுது கூறப்படும் விஷயத்திற்கு மிகவும் இணங்கியது. நாம் நம்முள் ஒற்றுமையைக் காக்க இதை மனத்தில் வைக்கவேண்டும். இந்த ஒற்றுமையை நிலைநாட்டப் பல முயற்சிகள் நடந்து வருகின்றன. ஆனுல், அவை எல்லாம் பலன் உள்ளனவாக இருப்பதாகத் தோன்றவில்லை. அவை மேலெழுந்தவாரியாக இருப்பதோடல்லாமல் வேற்றுமைகளை அதிகப்படுத்துகின்றன. அவைகளைத் தவிர்க்க அவை முயற்சிக்கவில்லை. முன்போல நாம் பல துறைகளில் வேறுபட்டுத்தான் இருக்கிறோம். இன்னும் கூறப்போனுல் இந்த வேற்றுமைகள் முன்னைவிடப் பல பங்கு அதிகமாய் இருக்கின்றன.

வேறுபட்டிருக்கும் பலவற்றிலிருந்து ஒருமையைக் காண முயன்றுல் அது கடினமாகவே இருக்கும். இந்த முயற்சி

எப்பொழுதும் பயன்பட்டதாக இல்லை. அத்வைத வேதாந்தம் இம்முயற்சியை மாறிமாறி அமைக்கிறது. ''ஒன்றிலிருந்து பல எவ்வாறு உண்டாயின? அல்லது ஒன்றே எவ்வாறு பலவாய்த் தோன்றுகிறது?'' என்று அத்வைதம் கூறுகிறது. இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் "ஒன்று தான் சத்தியம். பலவாய் இருப்பது அதன் தோற்றங்களே. தவிர, பலவாய் இருப்பதின் தற்கால சத்தியமும், அவை அந்த ஒன்றின் தோற்றங்களாய் அமைந்திருப்பதால்தான். ஒன்றே பலவாய்த் தோன்றுகிறது. ஆகையால் பல வெவ்வேருக இருக்கலாம்—ஆனால் அவை ஒன்றுக்கொன்று முரணுகவும், விரோதமாகவும் இருக்கவேண்டியதில்லை. இருக்கவும் இல்லை.'' இந்த அத்வைத வேதாந்தத்தின் உண்மையைத் தெரிந்துகொண்டால் தேசிய ஒருமைப்பாடு, ஒரு பிரச்சினையாக இருக்காது.

நம்முள் ஏற்படும் சண்டை சச்சரவுக்கெல்லாம் இரண்டு காரணங்கள் உள்ளன. அவை சமயவேற்றுமைகளும், பல தரப்பட்ட மொழி வேற்றுமைகளுமாகும். ஒரு உபநிஷத் வாக்கியம் கீழ்க்கண்டவாறு கூறுகிறது:—"என் அருமைக் குழந்தாய், ஆதியில் பரம்பொருள் ஒன்றுதான் இருந்தது. அது ஒன்ருக இரண்டற்றதாக இருந்தது. அது 'நான் பலவாய் ஆவேன்' என்றது. தன்னிலிருந்து பலவற்றைத் தோற்றுவித்தது. அவைகளைத் தோற்றுவித்து அவைகளுள் புகுந்தது.'' இந்த வாக்கியம் நமக்குள் ஏற்பட்டிருக்கும் மதத்தையும் மொழியையும் பற்றிய சச்சரவுகளைத் தீர்க்க ஒரு வழிகாட்டியாய் அமைந்திருக்கிறது. மொழியை முதலில் எடுத்துக் கொண்டால் உலகத்துப் பல்வேறு ஜனங்கள் பேசும் மொழிகள் அனைத்தும் சிவன் நடராஜராய் நர்த்தனம் செய்த காலத்தில் அவரது உடுக்கையிலிருந்து உண்டான பதினைங்கு மகேஸ்வர சூத்திரங்கள்தான். அவை மனிதனின் கண்டத்தின் பல்வேறு பாகங்களிலிருந்து எழும் சப்தத்தைக், குறிக்கின்றன. அவைகளே எல்லாவித மொழிகளுக்கும் அடிப்படையாய் உள்ளவை. இதைத் தெரிந்து

கொண்டால் உலகத்தில் உள்ள மொழிகள் எல்லாம் அவை களுக்குப் பொதுவான ஒரே மூலத்திலிருந்துதான் தோன்றி யுள்ளன என்று தெளிவுபடும். மேலும் இந்துக்களாகிய நாம் நம்முடைய பேசும் மொழியை 'ஈஸ்வராம்சம்' என்று கருது கிறோம். சரஸ்வதி, 'வாணீ' என்றும் 'வாக்தேவி' என்றும் போற்றப்படுகிறாள். ஆகவே ஏனைய மொழிகளும் சரஸ்வதி யின் சொரூபங்களே. அப்படி இருக்க ஒரு மொழிக்கும், மற்றொரு மொழிக்கும் உயர்வு தாழ்வு என்கிற தாரதம் மியம் இருக்கமுடியாது. 'சப்த பிரம்மம்' என்ற பரம் பொருளே பல மொழிகளில் அவதரித்து இருக்கிறது.

மேலும் மொழி என்பது சிந்தனைக்கு ஒரு கருவியேதான். காளிதாஸன் கூறியபடி மொழியும் பொருளும், பார்வதி பரமேஸ்வரர்களைப் போல் பிரிக்க ஒண்ணாதவை. மொழிகள் பலவாய் இருந்தாலும், அவைகளின் பொருள் ஒன்றே தான். மொழியையும் பொருளையும் பிரிப்பது, பார்வதி பரமேஸ்வரர்களைப் பிரிப்பதுபோலாகும். இறைவன் மனிதர் களுடைய அவசியத்திற்கும் சக்திக்கும் தகுந்தவாறு தன் னைப் பலவாறாகத் தோற்றுவித்துக் கொள்கிறான். நாம் அடிப்படையான ஈஸ்வர தத்துவத்தை மறந்து அது தோன்றும் பல உருவங்களைக் கண்டு நாம் ஒருவருக்கொருவர் சண்டையிட அவசியமில்லை.

சமயம் என்பது மனிதன் கடவுளை அடைய வழிகாட்டும் கருவி. மானிட சரித்திரத்தில் பல காலங்களில் பல சமயங்கள் தோன்றி இருக்கின்றன. சமயம் இல்லாத காலம் உலகத்திலேயே இருந்ததில்லை. கிறிஸ்துவ சமயம், முகம் மதிய சமயம், பௌத்த சமயம், ஜைனசமயம் போன்ற எல் லாச் சமயங்களும் சரித்திர காலத்தில் தோன்றியவை. இவை தோன்றுவதற்கு முன்னால் ஒரு சமயம் இருந்திருக்க வேண்டும். ஏனெனில் மனிதனும்,சமயமும் ஒன்றாய் உண்டா யின. எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் வேதம் தான் மானிட சமூகத்தின் தொன்மையான இலக்கியம். அதில் குடிகொண்ட தத்துவம் மிகவும் பழமையானதாகவும்

உலக மக்களுக்குப் பொதுவாகப் பரவி உள்ளனவாகவும் இருந்திருக்க வேண்டும். காலப் போக்கில் இந்த வைதீக சமயத்தின் பல கோட்பாடுகளை, உலகின் பல்வேறு நாட்டின் ஜனங்கள், காலக்கிரமத்தில் மறந்து மறைந்திருக்கவேண்டும். நம்முடைய வைதீகசமயம், முற்காலங்களில் மத்தியதரைக் கடல், மேற்கு ஆசியா, போலினேஷியா முதலிய இடங்களில் இருந்து வந்ததாக மூதறிஞர்கள் கூறுகிறார்கள். அதனுடைய சின்னங்கள் இப்பொழுதும் மேற்கே மெக்ஸிகோவிலும், கிழக்கே இந்தோனேஷியாவிலும் இருப்பதைக் காணலாம்.

உலக சரித்திரத்தில் பல தேசங்களில் பல காலங்களில் பல மகான்கள் தோன்றி பரத்துவமாய் அமைந்த உண்மைகளை அவர்களுடைய மனத்திற்குப் புலனாகும்படி செய்து தங்களைப் பின் பற்றுபவர்களுக்கு அவைகளை எடுத்துக்கூறி, புது சமயம் போல் தோற்றுவித்தார்கள். ஆனால் அவை எல்லாம் நம் பழைய வைதீக சமயத்தின் அடிப்படைக் கோட்பாடுகளைக் கற்றுத்தெளிந்து தாங்கள் அறிந்தபடி கூறினார்கள். இந்தச் சமயங்களின் சில கோட்பாடு, வேறுபாடுகள் ஜனங்களுடைய மனோபாவத்திற்கு இயைந்தபடி இருக்கலாம். ஆனால் எல்லா மதங்களிலும் அடிப்படையாக நல் வாழ்வு, பக்தி என்கிற ஒரு சமயத்தின் அவசியமான மார்க்கங்கள் ஒன்றேதான். வேதத்திற்கு சாரம் தான் எல்லா சமயங்களும்.

சமயங்களின் கொள்கைகள் வேறுபடலாம். அவைகள் ஒன்றுக்கொன்று முரணாகத் தோன்றலாம். ஆனால் சமய மனப்பான்மை அவைகளுக்கெல்லாம் ஒன்றுதான். கொள்கைகள் நம்மைப் பிரிக்கலாம்; ஆனால் பக்தி நம்மை ஒன்று சேர்க்கும். நாமெல்லோரும் ஒரே கடவுளின் குழந்தைகள்.

சமயங்கள் எல்லாம், இறைவனை நாம் அடைவதற்கு இறைவனாலேயே அமைக்கப்பட்ட பல பிரிவுகள். அவைகள் நம்முடைய சக்திக்கும் ருசிக்கும் தகுந்தவாறு, பிரிவு

பட்டு இருக்கின்றன. பகவான் கீதையில் "மனிதர்கள், என்னைப் பலவாறாக எந்த ரூபத்திலும், எப்படி வணங்கினாலும் அவரவர்களுடைய பக்தியை நான் வேரூன்றச் செய்கிறேன்" என்று கூறியிருப்பது இதற்குச் சான்றாகும். இதை நாம் அறிந்துகொண்டால் சமயச் சச்சரவுகளும் சண்டைகளும் நம்மில் ஏற்படக் காரணமில்லை.

வேறுபட்ட சிக்கல்களிலிருந்து ஒருமையைக் காண முயற்சிப்பதால் தேசிய ஒருமைப்பாடு ஒரு சிக்கலான பிரச்னையாக ஏற்பட்டுவிட்டது. வேற்றுமைகள் எப்பொழுதும் ஒருமையாகச் சேரமாட்டா. ஆனால் நாம் ஒருமையிலிருந்து வேற்றுமைகளை நோக்கி அவைகளில் ஒருமையின் பிரிவுகள் என்று கண்டால் இந்தப் பிரச்னை எளிதில் தீர்ந்துவிடும். அவ்வண்ணம்தான் உலகப் பெரியோர்கள் எல்லாம் மொழியையும், மதத்தையும் கருதி உலக அமைதியை நிலைநாட்டினார்கள். உண்மையாகச் சொன்னால் அவர்கள்தான் ஒருமைப்பாட்டிற்கு ஆதிகர்த்தாக்கள். அவர்கள் எப்போதும் ஒருமையையே கண்டுகளித்து வேற்றுமையை 'தற்காலிகம்' என்று கருதி அதற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

உபநிஷத் வாக்கியம் "ஏகத்வம் அனுபச்யதா" என்று கூறுகிறது. ஏகத்துவம் என்ற ஒருமையை நாம் கவனித்து நோக்க வேண்டும். அதாவது உபநிஷத்து "அனுபச்யதா" என்று கூறுகிறது. அனு என்பது அடிப்படையிய் அமைந்ததை நன்றாய்ப் பார்க்கவேண்டும் என்பதைக் காட்டுகிறது. மேலெழுந்தவாரியாகப் பார்க்கக்கூடாது என்று பொருள். ஞானிகள் ஒருமையைப் பார்க்கிறார்கள்! அஞ்ஞானிகள் பலவற்றைப் பார்த்து மோகம் கொள்கிறார்கள்.

கர்ம மார்க்கம்
(இறைவனை அடையும் வழி)

உலகில் பிறந்த மனிதர் அனைவரும் 'மர்த்யா' எனப் படுகின்றனர். அதாவது மிருத்யுவுக்கு—மரணத்திற்கு ஆளாகவேண்டியவர்கள் என்று அர்த்தம். மரணத்தைக் கடந்து அமரராகி, அமிருதத்வத்தை அடைய வாழ்க்கை என்பது ஒரு வாய்ப்பாகத் தரப்பட்டிருக்கிறது. "மரணத்தி லிருந்து என்னை அமர நிலைக்கு இட்டுச் செல்வாயாக" என்று உபநிஷதம் பிரார்த்திக்கிறது.

"ம்ருத்யோர் மா அம்ருதம் கமய"

உலக வஸ்துக்கள் அனைத்தும் அழிவுக்கு உட்பட்டவை. கடவுள் ஒருவரே என்றும் அழியாமல் அமரராக இருப்பவர். மனிதன் மரணத்தைக் கடந்து அமிருதமாக வேண்டுமாயின் அவனும் கடவுளாகிவிடவேண்டும். இதையேதான்வேதாந்தம் உபதேசிக்கின்றது. மனிதன் ஒவ்வொருவரும் கடவுளே தான். ஆனால் இந்த உலக வாழ்வில் அவன் கடவுளிடமி ருந்துபிரிந்திருப்பதுபோல் காணப்படுகிறான். அவன் மீண்டும் கடவுளே ஆகமுடியும். அந்த நிலையைப் பெறுவதே அவனது கடமை, ஸ்வதர்மம். முடியுமானால் இந்தப் பிறவியிலேயோ அல்லது படிப்படியாக அடுத்த ஜன்மங்களின் மூலமோ மனிதன் கடவுளோடு இரண்டறக் கலந்துவிட வேண்டும் என்பதே வேதாந்த போதனை.

ஆங்கிலத்தில் 'மதம்'என்பதை Religion என்று சொல்லு கிறார்கள். Religion என்பதன் பொருள் என்ன என்று விஷய மறிந்தவர்களைக் கேட்டேன். Religare என்ற ஃபிரெஞ்சு மொழிப் பதத்திலிருந்து Reiligon உண்டானதாகவும், Religion என்பதற்கு 'மறுபடியும் கட்டிப் போடுவது' என்று

அர்த்தம் என்றும் அவர்கள் தெரிவித்தார்கள். மறுபடி, கட்டுவது ஆகிய இருபதங்களும் அர்த்த புஷ்டி வாய்ந்தவை யாகும்? முதலில் கடவுளாகவே, அல்லது கடவுளோடு கட்டுண்டவனுகவே இருந்த மனிதன் இப்போது அஞ்ஞானத் தாலோ தனது பூர்வ பாப கர்மத்தாலோ, அல்லது இரண் டாலுமோ தான் கடவுளிடமிருந்து பிரிந்து தனித்தியங்குவ தாக எண்ணிக் கொண்டிருக்கிருன். இந்தப் பிரிவு உணர்ச்சி யைப் போக்கி அவனை மறுபடியும் கட்டிப் போடுவதற்கான சாதனமே Religion என்று புரிந்துகொள்ளவேண்டும். அதாவது மனிதனுக்கு அவனது உண்மையான இயல்புகளை உணர்த்துவிப்பதே மதம்.

மனிதனை கடவுளோடு மீண்டும் கட்டுகிற காரியக் கிரமத்திற்கு மூன்று உருவங்கள் உள்ளன. கர்மம், பக்தி, ஞானம் என்பனவே அவை. பொதுவாக பக்தி, ஞான மார்க்கங்களே வலியுறுத்தப்படுகின்றன; கர்ம மார்க்கத் தின் முக்கியத்துவம் அலட்சியம் செய்யப்படுகிறது. இறுதி யில் ஞானம் மூலமே பரம்பொருளை அநுபவிக்க முடியும் என்கிற அத்வைதக் கொள்கையாயினும் சரி,அல்லது ஞானத் தினுல் வலுப்பெற்ற பக்தியே முடிவான சாதனம் என்று மற்ற வேதாந்த மதப் பிரிவுகள் கூறுகிறபடியும் சரி, இரண்டு கோட்பாடுகளிலுமே, பூர்வாங்கமாக கர்மாநுஷ்டானங்கள் முக்கியத்துவம் பெறுவதை ஒப்புக்கொள்ள வேண்டும்.

இந்தக் கர்மம் என்பது என்ன? அது எப்படி கடவுளை அடைய வழியாகும்? ஈசுவர அநுக்கிரகம் பெற்று, விவேகம், வைராக்யம், இவற்றைக் கையாண்டு நன்னெறிகளையும், ஆத்மீகக் கட்டுப்பாடுகளையும் பற்றி ஒழுகுகிறவனுக்கு, பரமாத்மாவும், ஜீவாத்மாவும் ஒன்றே என்ற ஞானம் உண் டாகிறது. கடவுளிடம் பக்தி செலுத்தினுலே அவரது அநுக்கிரகத்தைப் பெறமுடியும். இவ்விதம் பக்தி செலுத்து வதற்குச் சித்தம் சுத்தமாக இருக்கவேண்டும். தூய்மையற்ற சித்தம் கடவுளிடம் நிலைத்து நில்லாது. தன் கடமைகளை விதித்தபடி செய்வதொன்றே, அதாவது கர்மாநுஷ்டானம்

ஒன்றே, ஒருவன் சித்த சித்தி அடைய உதவி புரியும் ஏனெனில் கர்மாநுஷ்டானத்திலே வழுவாது ஈடுபட்டிருப்பவனுக்கு எந்தப் பாபத்தையும் சிந்திக்கவோ, எந்தத் தீங்கையும்செய்யவோ காலமும் இராது; விருப்பமும் எழாது. மேலும் இந்தக் கர்மங்களே கடவுளோடு ஆன்மீகத் தொடர்பையும் ஏற்படுத்துகின்றன. ஆகவே தவற்றை விலக்கும் எதிர்மறையாகவும் நல்லதை கூட்டுவிக்கும் நேர் வழியாகவும் கர்மங்கள் சித்த சுத்திக்கு வழி செய்கின்றன.

ஆகையினால்தான் ஸ்ரீ சங்கர பகவத் பாதர்கள் உபதேச பஞ்சகத்தின் தொடக்கத்திலேயே

வேதோ நித்யம் அதீயதாம் தத்ருதிதம்
கர்ம ஸ்வநுஷ்டீயதாம் தேநேசச்ச விதீயதாம் அபசிதி:

என்கிறார்.

தினமும் வேதம் பயில்க—வேதோ நித்யம் அதீயதாம்—என்பது முதல் உபதேசம். ஏனெனில் . வேதங்கள்தாம் மனிதன் ஆன்ம உயர்வு பெறுவதற்காகப் புரிய வேண்டிய கர்மங்கள் யாவை என்று எடுத்துக் கூறுகின்றன. பௌதிக உலகில் நாம் சாதாரணமாகப் புரியும் செயல்கள் நமக்கு உலகியல் இன்பங்களை மட்டுமே அளிப்பன. நாம் பரமாத்மாநுபவம் என்கிற ஆன்ம சுகத்தைப் பெற விரும்பினால், நமது புலன்களுக்கு எட்டாத—அதீந்திரியமான—பலன்களை உடைய கர்மங்களைப் பூர்வாங்கமாகப் புரிய வேண்டும். அதீந்திரியமான பலனை உடைய கர்மங்களை வேதங்களே பிரகடனம் செய்கின்றன ஆனபடியால், வேதங்களை அறிவது அவசியமாகிறது. எனவேதான் வேதத்தை தினமும் பயிலுக என்கிறார் ஸ்ரீ பகவத் பாதர்கள்.

அதைத் தொடர்ந்து "வேதத்தில் விதிக்கப்பட்ட கர்மங்களை கவனத்துடன் நன்றாக அநுஷ்டானம் செய்க"—தத்ருதிதம் கர்மஸ்வநுஷ்டீயதாம்—என்கிறார். வெறுமே அநுஷ்டீயதாம் என்று கூறாமல் ஸு அநுஷ்டீயதாம் என்கிறார். இந்த ஸு முக்கியத்துவம் வாய்ந்தது. அதாவது கர்மங்களை வழுவின்றி பூரணமாக, நன்றாகப் புரியவேண்டும். குற்றமறப்

புரிகிற கர்மத்தின் இலட்சணத்தை கீதை பின்வருமாறு கூறுகிறது.

கர்மண்யே வாதிகாரஸ்தே மா பலேஷுதோசன |
மா கர்மபலேஹேதுர் பூர்மா தே ஸாங்கோஸ்த்வகர்மணி! ||

"உனக்கு அதிகாரம் கர்மம் செய்வதில் மட்டுமே ஆகும். அதனுடைய பலனில் அல்ல. பலனை நோக்கமாகக் கொண்டு கர்மம் செய்யலாகாது. அதற்காக கர்மமே செய்யாமலிருப்பதில் பற்றுக் கொள்ளாதே."

யோகஸ்த: குரு கர்மாணி ஸங்கம் த்யக்த்வா தனஞ்ஜய: |
ஸித்யஸித்யோ: ஸமோ பூத்வா ஸமத்வம் யோக உச்யதே ||

"வெற்றி தோல்விகளைச் சமமாகக் கொண்டு பற்றதலை விட்டு யோகியாக கருமம் புரிவாயாக. சமமாகக் காணும் பான்மையே யோகம் எனப்படுவது."

கர்மஜம் புத்தியுக்தா ஹி ப்லம் த்யக்த்வா மனீஷஸா: |
ஜன்ம பந்த விநிர்முக்தா: பதம் கச்சந்த்யநாமம் ||

"அறிவுள்ளோர் கர்ம பலனை விடுத்துவிடுகின்றனர். ஞானத்துடன் கூடியோராக பிறவிக் கட்டினின்று விடுபட்டு அழிவற்ற நிலையை எய்துகின்றனர்."

பொதுவாக கர்மம் என்பது மனிதனைக் கட்டிப்போட்டு பிறப்பு இறப்புச் சுழலில் தள்ளுவதாகும். இவ்விதம் ஆளாகாமலிருக்க வழி அதை யோகமாகச் செய்வதே: அதாவது வெற்றி தோல்விகளில் சமத்துவபுத்தியோடு எல்லா கர்மங்களையும் ஈசுவரார்ப்பணமாகச் செய்வதே. இவ்வாறு "யோக: கர்ம ஸுகௌசலம்" என்ற சுலோகத்திற்கு ஸ்ரீபகவத் பாதர்கள் பாஷ்யத்தில் விளக்குகிறார். இவ்விதம் ஈசுவரார்ப்பணமாக கர்மம் புரிவதால் சித்தம் சுத்தமாகிறது. சுத்தமான சித்தமே பக்தி விளைவதற்குரிய செழுமையான நிலமாகிறது. அதனால்தான் கண்ணபிரான் பின்வருமாறு கூறுகிறார்:

யக்தரோஷி யதச்ஞஸி யஜ்ஜுஹோஷி ததாஸியத் |
யத்த பஸ்யஸி கௌந்தேய தத்குருஷ்வமதர்பணம் ||

"நீ எக்காரியம் செய்தாலும், எதை உண்டாலும், எதை ஹோமம் செய்தாலும், எதை தானம் செய்தாலும், எந்தத் தவம் செய்தாலும் அதை எனக்கு அர்ப்பணம் செய்க."

இவ்விதம் நம் காரியங்களையெல்லாம் கடவுளுக்கு அர்ப்பணமாகச் செய்வதெனில், அறிவுள்ள எந்த மனிதனும் அவருக்கு மிகச் சிறந்தது அன்றி எதையும் அளிக்க முற்படமாட்டான். ஆனபடியால் நமது உலகக் கடமைகள், ஆன்மீகப் பொறுப்புகள் இரண்டையுமே மிகச் சிறந்த முறையில் ஆற்றியாக வேண்டும் என்று நம்மீது விதிக்கப் படுகிறது. இவ்விதம் செய்தால்தான் கடவுள் மகிழ்ச்சி கொண்டு நம்மீது அருள் பொழிவார். தேனேசஸ்ய விதீய தாமபசிதி என்று இதைத்தான் ஸ்ரீமத் பகவத்பாதர்களின் வாக்கு எடுத்தியம்புகிறது.

நாம் பூரணத்துவத்தை நோக்கிச் செல்லும் பாதையில் நமக்கு விதிக்கப்பட்ட கர்மங்களை அநுஷ்டித்தல் அத்தியாவசியமான ஆரம்ப நிலையாகும். இதில் தொடங்கி மேலும் மேலும் சென்றால் முடிவாக பரம்பொருளை அநுபவிக்கும் இலட்சியத்தை எய்தலாம். பரப்ரஹ்மாத்மனாஸ் தீயதாம்என்று இதையே ஸ்ரீபகவத்பாதர்களின் "உபதேச பஞ்சகம்" கூறுகிறது. பரப்பிரம்மத்திலேயே நிலைத்து நிற்கிற இந்நிலையிலேயே ஜீவாத்மா எப்போதும் இருந்துகொண்டு இருக்கிறான். ஆயினும் அந்நிலையை அநுபவபூர்வமாக அறிவதிலிருந்து அவன் தற்காலிகமாகத் தன்னைத்தானே பிரித்துக் கொண்டு இருக்கிறான்.

கர்மத்தைக் குறித்து இரு விஷயங்கள் கவனத்துக்குரியன. முதலாவதாக ஏன் இப்படி கர்மம் செய்யவேண்டும் என்று நாம் அறிவுவாதம்செய்ய அதிகாரம் பெற்றிருக்கவில்லை. சாஸ்திரங்கள் அவற்றை விதிக்கின்றன, என்பதொன்றையே அதிகாரவாசகமாக நாம் அநுஷ்டிக்க வேண்

டியதுதான். இது பிரபு சம்மிதம் என்பதைச் சேர்ந்தது. அதாவதுமுதலாளி உத்திரவு போட்டால் அடிமைஏனென்று கேட்காமல் அதற்குக் கீழ்ப்படிவதற்கு ஒப்பானது. ஏனெனில்இது நம் புலன்களுக்கு அப்பாற்பட்ட அதீந்திரிய எல்லையினுள்வருகிறவிஷயம். நமது குறுகிய அறிவுகொண்டு, அதீந்திரியமானதை விளங்கிக்கொள்ள இயலாது. ஆகவே இந்தக் கர்மங்களைப் புரிய வேண்டியதற்கான காரணங்களை நாம் நமது சிற்றறிவால் கண்டுகொள்ள முடியாது. நம் அறிவுக்கு எட்டவில்லை என்பதால் இதையெல்லாம் மூட நம்பிக்கை என்று தள்ளிவிடக்கூடாது. நம் மூளைக்கு அவை சரியாகப்படவில்லை என்பதனால் அவை அறிவற்றவை என்று ஆகிவிடா. மனித அறிவுகொண்டு அறிகிற விஷயங்களிலேயே ஒருத்தருக்கொருத்தர் வித்தியாசங்கள் இருக்கிறது. ஒருவனுக்குப் புரிகிற ஒரு விஷயம் இன்னொருவனுக்குப் புரியாமல்போகிறது. இதனால் அந்தவிஷயத்தை அறிவுக்குப் புறம்பானதென்றோ, மூட நம்பிக்கை என்றோ கூறுவது நியாயமாகுமா? நாட்டை ஆள்கிற பெரிய புள்ளிகளின் வீடுகளில் நடத்தப்படும் மேற்கத்திய பாணி விருந்துகளில் பின்பற்றப்படும் விதிகள், ஆடை உடுத்துவதற்கான விதிகள், ஒருவருக்கொருவர் பழகிக் கொள்வதற்கான விதிகள் ஆகியவற்றைவிட சாஸ்த்ரீயமான கர்ம விதிகள் பலன் தரு வதில் மிகவும் சக்தி படைத்தனவாகும். மேற்சொன்ன விதத்தில் சாப்பாடு, உடை, உரையாடல், முதலியவற்றில் சகலரும் ஏதேதோ விதிகளை எதிர்க்கேள்வியின்றி ஒப்புக் கொண்டு கீழ்ப்படிந்து நடக்கிறார்கள். ஆனால் சாஸ்திர விதி கள் மட்டும், பொருளற்றவை என்று கேலி செய்யப்படு கின்றன. உண்மையில் இவையே பரம்பொருளை அநுபவிக்கிற அரண்மனையின் அஸ்திவாரக் கற்களாகும்.

இரண்டாவதாக கடவுளும் தானும் ஒன்று என்று சாக்ஷாத்கரித்துவிட்ட பூரணஞானியும், தெய்வபக்தி மதுவில் மதர்த்துக் கடவுளோடு விளக்கவொண்ணாத வகையில்

கூடிக்களிக்கும் பக்த சிரேஷ்டனும் கர்மாநுஷ்டானங்கள் புரியாமலிருப்பது கண்டு, கர்மங்கள் எவருக்குமே அத்யா வசியத் தேவை இல்லை என எண்ணப்படுகிறது. உண்மை யாதெனில், ஞானியும், பக்தனும் தாங்களாகக் கர்மங்களை விடுவதில்லை. கர்மமே இவர்களை விட்டுவிடுகிறது. 'இனி இவனுக்கு என்னால் உதவி இல்லை' என்று கர்மமே ஞானி யிடமிருந்து, பக்தனிடமிருந்து, கழன்றுவிடுகிறது. ஒருவன் கட்டடத்தில் உச்சிமாடிக்குச் சென்றபின், அதனின்று அவன் கீழே இறங்காமலே இருக்கப்போகிறான் என்னும்போது அவனுக்கு ஏணி தேவைப்படுவதில்லை—'ந ஸ புனராவர்ததே' ''அவன் திரும்பி வருவதில்லை'' என்றும் வேதம் முழங்கு வதேபோல், கடவுளை சாட்சாத்கரித்த பின் ஒருவன் இந்த உலகியல் வாழ்வுக்கு இறங்குவதில்லை. ஆதலால் கர்மங்கள் அவனுக்கு அதிகாரபூர்வமாகா. இப்படிச் சொல்வதால் (கர்ம) ஏணி இல்லாமலே எவரும் பரம்பொருளை அனுபவிக்கும் உச்சிமாடிக்கு ஏறிவிடலாம் என்று அர்த்தமாகாது. ஆரம்ப நிலையிலேயே கர்மத்தை விட்டால் தனது ஆத்ம முன்னேற் றத்துக்குத் தானாகவே ஊறு செய்துகொண்டதாகவே ஆகும்.

அன்னம் சுத்தமானால் எண்ணம் சுத்தமாகும்

ஆஹார சுத்தே ஸத்-த்வ சுத்தி

இன்று நாம் படும் அநேக இன்னல்களுக்குக் காரணம், வெளிநாட்டுப் பழக்க வழக்கங்களையே நாமும் காப்பி அடிப்பதுதான். இவற்றில் ஒன்று, பயிர்பச்சைகளுக்கு ரஸயான எரு(Chemical fertiliser) போடுவது. இந்த வழக்கத்தை விட்டு இயற்கையான எரு உபயோகிக்க ஆரம்பித்தாலே போதும், நம் தேசத்துக்கே விசேஷமான ஞானத்தைத் திரும்பப் பெறுவதில் வெகுதூரம் முன்னேறிவிடுவோம்.

நம்முடைய மனசு, எண்ணங்கள் சுத்தமாக இருக்க வேண்டுமானால், நாம் உண்ணும் உணவு தூயதாக இருப்பது மிகவும் அவசியம். தானியத்தையும், காய்கறிகளையும் சமைக்கிற போதில் அவற்றில் பலவிதமாகத் தூய்மைக் குறைவு உண்டாவது ஒரு பக்கம் இருக்கட்டும். முதலில் இந்தத் தானியங்கள், அல்லது காய்கறிகளை எப்படி விளைச்சல் செய்யப்பட்டன என்று கவனிக்க வேண்டும். ரஸாயன உரம் போட்டு விளைவிக்கும் பயிர் பச்சைகள் சுத்தக் குறைவானவைதாம்.

பசும் சாணத்தை உரமாக உபயோகிப்பதுதான் நம் பழைய வழக்கம். பசு ஸத்வ குணம் நிறைந்த பிராணி. எனவே அந்த உரத்திலிருந்து விளைந்த பயிரும் நமக்கு ஸத்வ குணம் உண்டாக உதவியது. இப்போது உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் கெமிகல்ஃபெர்டிலைஸருக்கு மாறியிருக்கிறோம். மனசுக்கு அநுகுணமாக தேகத்தை வளர்க்கிற முறையே இதனால் மாறிவிட்டிருக்கிறது. இது மிகவும் கவனத்துக்குரிய விஷயம் என்று நான் கருதுவதால்தான், இந்தத் தவற்றைத் திருத்த வேண்டும் என

அடிக்கடி வலியுறுத்தி வருகிறேன். உணவு உற்பத்தியைப் போலவே, அல்லது அதைவிடவும், மக்களின் மன இயல்பை நல்லபடியாக வளர்ப்பது அவசியமல்லவா?

தூய உணவு என்றால் நன்றாகத் தீட்டி, 'பாலிஷ்' செய்த அரிசியை வெள்ளைவெளேறென்று சமைத்துப் போடுவது அல்ல. பலவிதமான எச்சில், துப்பல், அநாசாரங்களைச் செய்து கொண்டே ஒரு லாண்டிரியில் துணியை வெள்ளை வெளேரென்று ஆக்கிக் கொடுத்துவிட்டால், அதை மடி என்று வைத்துகொள்வோமா? எனவே பார்வைக்கு வெளுப்பாக இருந்துவிட்டாலே ஒன்றை நல்லது என்றோ, தூயது என்றோ, ஆசாரமானது என்றோ சொல்ல முடியாது. வெளியில் சுத்தமாகத் தெரிவது வேறு, உள்ளே புனிதமாயிருப்பது வேறு.

சமைக்கிறவனின் மனோபாவம், அவன் சமைக்கிற உணவில் இறங்கி, அதை உண்பவன் உள்ளும் சென்றுவிடுகிறது. ஸத்வகுண அபிவிருத்திக்கு உதவுகிற உணவுகள் என்று கீதை முதலான சாஸ்திரங்கள் சொல்லியுள்ள வஸ்துக்களை நல்ல ஸத் சிந்தனையோடு சமையல் செய்து போட்டால் அது போஜனம் செய்கிறவனுக்குச் சித்த சுத்தியைக் கொடுக்கும். மற்றவர்கள் சமைக்கிறபோது வெளித் தூய்மை, உள் தூய்மைகளை எவ்வளவுக்குக் கைக்கொள்கிறார்கள் என்று நாம் தீர்மானமாகத் தெரிந்து கொள்வதற்கில்லை. அதனால் அவரவரும் தானே சமைத்துச் சாப்பிட வேண்டும் என்று வைத்து, இதை ''ஸ்வயம் பாகம்'' என்ற ஒரு உத்தமமான விதியாக சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறது. பகவந்நாமாக்களைச் சொல்லிக் கொண்டே அவரவரும் சமைத்துச் சாப்பிடுவது என்று ஏற்பட்டால் ஸத்வகுணம் தேசத்தில் விபரிதமாக வளர்ந்துவிடும். முன்காலத்தில் மோர் சிலுப்புவது, சமைப்பது ஆகிய சமயங்களில் பெண்மணிகள் ஏதாவது ஸ்தோத்திரங்கள், தெய்வ சம்பந்தமான பாடல்கள் பாடியபடிதான் இருப்பார்கள்.

அவரவரும் தானே தன் சாப்பாட்டைச் சமைத்துச் சாப்பிடுவது மிகவும் விசேஷம். அடுத்தபடி வீட்டுச் சாப்

பாடு. இதிலே வஸ்துக்களின் தூய்மை, சமைக்கிற காலத்தில் சமைக்கிறவரின் மனத் தூய்மை இவற்றை ஓரளவுக் காவது பெறமுடியும். உணவு படைப்பவருக்கு உண்பவர் மீதுள்ள நல்லெண்ணத்துக்கே ஒரு நல்ல சக்தி உண்டு. ஹோட்டல் சாப்பாடு என்று எடுத்துக் கொண்டால், அது தீட்டின அரிசி போலவும், லாண்டிரித் துணி போலவும் வெளியே பார்த்தால் அழகாக, சுத்தமாக இருந்தாலும் அதில் வாஸ்தவத்தில் சாரமில்லை. உடம்பு உள்ளம் இரண்டுக்கும் அதில் நல்லதில்லை. போஜனசாலைகளில் சமைக்கிறவர் எப்பேர்ப்பட்ட எண்ணங்களுடன் தன் காரியத்தைச் செய்வாரோ? நிச்சயமாக அவருக்கு அதைச் சாப்பிடப் போகிறவரிடம் அன்பும், நல்லெண்ணமும் பெருகப் போகிறதில்லை. விற்பனை என்று வந்துவிட்டதால், உண்கிறவருக்கு வயிருரப் போட வேண்டும் என்ற எண்ணத்துக்குக்கூட இடமில்லை.

சாப்பிடுகிறவர், உண்கிற வேளையில் நிறைந்த மனஸோடும் சந்தோஷத்தோடும் உண்ணவேண்டும் ஹோட்டலில் சாப்பிடும்போது, பரிமாறுகிறவர் பரிந்து பரிந்து போடவில்லைஎன்பதுஒருபக்கமிருக்க, சாப்பிடுகிறவனுக்கேஇன்னும் கொஞ்சம் கேட்கக்கேட்க அதற்குப் பணம் கொடுத்தாக வேண்டுமே என்று கவலையிருக்கிறது. ஹோட்டல்காரர், சாப்பிடுபவர் இருவருக்கும் பைஸாவைப் பற்றிய கருத்தே முக்கியமாயிருக்கிறது. அதோடு கூட, தான் நிறையச் சாப்பிட்டால் பக்கத்தில் உட்கார்ந்து உண்பவர் என்ன நினைப்பாரோ என்றுவேறு உண்பவருக்குக் கூச்சமாக இருக்கிறது. இதெல்லாம் தவிர, 'ஹோட்டல் சரக்கில் என்னென்னகெடுதல் இருக்குமோ? நிறையச் சாப்பிட்டுவிட்டால் அது வயிற்றைக் கெடுத்துவிடப் போகிறதே!' என்ற பயம் வேறு. வயிற்றுக்கு வஞ்சனையில்லாமல் நிறைந்த மனஸோடு சாப்பிடுவதே ஹோட்டலில் முடியாமலிருக்கிறது. இதனாலெல்லாம்தான் சாதாரணமாக வீட்டில் ஐந்து, ஆறு இட்லி சாப்பிடுகிறவர்கள்கூட ஹோட்டலுக்குப் போனால் இரண்டு

இட்லிக்கு மேல் சாப்பிடாமல் வந்துவிடுகிறார்கள். உடம்புக்குப் போஷாக்கு தருகிற அளவுக்குக்கூட, ஹோட்டல் முதலான வெளியிடங்களில் சாப்பிட முடிவதில்லை. சித்தசுத்திக்கோ அது துளிகூட உதவுவதில்லை.

ஹோட்டலிலேயே (அல்லது அது போன்ற வெளி விடுதிகளிலேயே) சாப்பிட்டவர்கள், ஒரு வாரம் அல்லது பத்து நாள், நல்ல அக-புறச் சூழலில் தயாரித்த வீட்டுச் சாப்பாட்டை பந்துக்களோடு சேர்ந்து ஆனந்தமாகச் சாப்பிட்டால் தெரிந்து கொள்வார்கள், சித்தத்துக்கு எவ்வளவு தெளிவு பிறக்கிறதென்று.

வீட்டிலேயே மனைவி பரிமாறுவதைவிடத் தாயார் பரிமாறும் உணவுக்கு விசேஷம் அதிகம்

எல்லாவற்றையும்விட ஸ்வயம் பாகம்—தானே சமைத்துச் சாப்பிடுவது—அதி விசேஷமானது. நாம் நல்ல சித்தவ்ருத்திகளோடு இருக்கவேண்டும் என்ற கவலை மற்ற எவரையும்விட நமக்குத்தானே நிறைய இருக்கும்? ஆனதால், சுத்தமான வஸ்துக்களாகவே கவனமாகப் பார்த்து எடுத்து, பகவந் நாமாக்களைச் சொல்லிக்கொண்டு நாமே சமைத்துச் சாப்பிடுவது என்ற பழக்கம் வந்துவிட்டால், இந்த ஆஹார சுத்தியால் சித்த சுத்தி பெறுவோம். "ஸ்வயம்பாகி" களுக்குத் தன்னால் உத்தமமான பண்புகள் ஸித்தித்து விடுகின்றன.

இதற்கு நான் கண்கூடாகப் பார்த்த ஒரு உதாரணம் சொல்கிறேன்:

விந்தியமலைப்பகுதிக் காடுகளில் நான் யாத்திரை செய்துகொண்டிருந்தேன். நாங்கள் ஒவ்வொரு ராஜ்யத்து வழியாகச் செல்கிறபோதும், அந்தந்த ராஜ்யத்துப் போலீஸ் கான்ஸ்டேபிள்கள் எங்களுக்குத் துணை வருவது வழக்கம்.

மத்யப் பிரதேசத்துப் போலீஸ்காரர்கள் தாங்களேதான் ரொட்டி செய்து சாப்பிடுவார்கள். நாங்கள் மடத்தில் சுத்தமாகத் தயாரித்து அவர்களுக்கு ரொட்டி கொடுக்கிறோம் என்று எவ்வளவோ சொல்லியும்கூட, அவர்கள்அதை ஏற்க மறுத்து, ஸ்வயம் பாகம்தான் செய்து கொண்டனர்.

விந்திய வனங்களில் எங்களுக்கு இவர்கள்தாம் முதலில் துணைக்கு வந்தவர்கள். பிற்பாடு உத்தரப் பிரதேசம் தொடங்கி விட்டது. ம. பி. போலீஸாரிடமிருந்து காவல் பொறுப்பை வாங்கிக் கொள்ள உ. பி. போலீஸ்காரர்கள் வந்தனர். அடுத்த முகாமிலிருந்து இவர்கள் 'சார்ஜ்' எடுத்துக் கொள்ள வேண்டும். அதுவரையில் இரண்டு ராஜ்யங்களின் கான்ஸ்டபிள்களுமே சேர்ந்து எங்களோடு வந்தனர்.

இரவு சுமார் பத்து மணி இருக்கும். எங்களுக்கு எதிரில் வன விலங்குகள் சஞ்சரிக்கத் தொடங்கின.

உ. பி. கான்ஸ்டபிள் ஒருவன் தடியை வீசிக் கொண்டு அவற்றை அடிக்கப் புறப்பட்டான்.

அவனிடம் அப்போது ம. பி. போலீஸ்காரன் கூறியது என் நினைவில் என்றும் பசுமையாகப் பதிந்திருக்கும்.

''நீ யாரோடு போகிறாய் என்பதை நினைவுவைத்துக் கொள். ஸ்வாமிஜியோடு போகிறாய். எனவே, மிருகங்களை அடிக்காதே. வெறுமே பயமுறுத்தியே அவற்றை அப்பால் மட்டும் விரட்டிவிடு'' என்று சொன்ன அவன் தொடர்ந்தான்.

''ப்ராணியோம் ஸே ஸத்பாவனா ஹோ.''

''உயிரினங்களிடம் நல்லெண்ணமே இருக்கட்டும்'' என்று இதன் அர்த்தம்.

என் மீது விலங்கு பாய்ந்துவிடப்போகிறதே என்ற கவலையில்தான் உ. பி. போலீஸ்காரன் அதன் மேல் தண்டப் பிரயோகம் செய்ய இருந்தான். அந்தச் சமயத்திலும்கூட, வாஸ்தவத்தில் அதைத் தடியால் ஹிம்ஸித்து விடாமல், தடியை ஆட்டியே விரட்டும்படி ம.பி. கான்ஸ்டபிள் புத்திமதி கூறி, அவனைத் தடுத்தான். தடியால் ஒரு போடுபோட்டிருக்க வேண்டியவன் சட்டென்று அதைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டான். மிருகமும் ஓடிவிட்டது.

போலீஸ் படையில் இருந்தும்கூட இவ்வளவு அஹிம்ஸா சித்தம் அந்த மத்தியப் பிரதேசக் கான்ஸ்டபிளுக்கு இருந்த

தென்றால் அதற்கு அவனது ஸ்வயம்பாகம்தான் காரணம் என்று எனக்குத் தோன்றுகிறது.

இன்று மக்களின் மனம் பல தவறான வழிகளில் சென்றிருப்பதற்குத் தூய்மைக் குறைவான உணவு ஒரு மிக முக்கியமான காரணம். இனிமேலாவது நாம் சீரியசிந்தனையும், ஸத்வ குண வளர்ச்சியும் பெறும்பொருட்டு ஸாத்விக உணவுப் பழக்கத்தை மேற்கொள்ளவேண்டும்.

பக்தியும் பண்பாடும்

இவ்வுலகில் பக்தி என்பது எல்லோரிடத்திலும், பரந்து, நிறைந்து இருக்கின்றது. ஆலயம் செல்வதிலும் குறைவில்லை! ஆண்டவனை வணங்குவதிலும் குறைவில்லை! நாளுக்கு நாள் கோயில்களிலும், திருவிழாக்களிலும் கூட்டம் அதிகமாகிக் கொண்டுதான் வருகிறது. ஆனால்?

எண்ணத்தில் மாற்றம், இதயத்தில் மாற்றம் பெற்றுள்ளனரா? இளஞ்சிறுவர் முதல் வயோதிகர் வரை எண்ணத்தால் திருந்தியுள்ளனரா? இல்லையே! ஏன்?

பக்தி வளர்ந்திருக்கிற அளவுக்கு நம்மவரிடையே பண்பாடு ஒழுக்கம் இவை வளரவில்லை. வளர்த்துக் கொள்ளவும் முயன்றது கிடையாது! மேல்நாட்டு நாகரிகத்தில் மோகங் கொண்டு, தன்னைத் தானே இன்றைய சமுதாயத்தினர் அழித்துக் கொள்கிறார்கள்!

இந்து மதம்—பிறமதங்களைவிட, முதன்மையானது; பழமையானதும்கூட! சிந்து சமவெளியில் புதையுண்டு, வெளிக்கொணர்ந்த 'மொகஞ்சோதாரோ—ஹரப்பா—நாகரிகத்திற்கு முன்பிருந்தே—இந்து மதம் சீரும் சிறப்பும் பெற்று விளங்கி வருகிறது. இதற்கு இரு கண்களாக அன்றும் இன்றும் என்றும் இருப்பது பக்தியும், பண்பாடும்தான்.

'இந்து என்ற உணர்வு
எழுச்சி பெற வேண்டாமா?

கடந்த காலங்களை நாம் சிறிது எண்ணிப் பார்ப்போமேயானால்—முகமதியர்களும்—கிறித்தவர்களும்—நம்மை— நம் இந்து மதத்தை—வளரவிடாமல் வெட்டிக் கொண்டே வந்தார்கள்! காசுக்கு ஆசைப்பட்ட இந்துக்களும், நம்மதத்தை

விட்டு பிறமதத்தில் ஒட்டிக்கொண்டே சென்றார்கள்! அப்படி அவர்கள் சென்றாலும் இந்து மதம் இன்னும் இந்து மதமாகத் தான் சிறப்புடன் விளங்குகிறது.

இருப்பினும், பிறமதத்தைவிட ஓரளவு முன்னேற்றம் பெற்றுள்ள நாம், இந்து மதம் இந்து சமுதாயம் வளர்ச்சியுறப் பாடுபடவேண்டும்! முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை. மொழி, மதம், நடை, உடை, பாவனைகளால் நாம் வேறு வேறாக இருந்தாலும், 'நான் ஓர் இந்து' என்ற எண்ணமும், என் நாடு இந்தியா என்ற உணர்வும் நெஞ்சத்தில் எழுச்சி பெற்று நிற்கவேண்டும்.

நேப்பாள மன்னரின்
நெஞ்சுகந்த நிதி உதவி

உலகத்தில் எத்தனையோ பணக்காரர்கள், மன்னர்கள் இருக்கிறார்கள்! ஒவ்வொருவரும், ஒவ்வொரு குறிக் கோளுக்காக நிதியுதவி செய்து, பெருமைப்படுவார்கள்: ஆனால், நேப்பாள மன்னர் தன்னிடத்தில் பல கலைகளை, கலாசாரத்தை வளர்க்க வசதிகள் செய்துகொண்டிருக் கலாம்!

அம்மன்னருக்கு ஸ்ரீசங்கரமடத்தினின்றும், பிறமொழிகளை வளர்க்கவேண்டும், சங்கரமடத்தின் மூலமாக இந்திய கலாச் சாரத்தை வளர்க்கவேண்டும், என்ற ஆசை ஏற்பட்டது. அதனால் மன்னர் பெயரிலேயே ஒரு டிரஸ்டு அமைத்து, நிர் வாகம் செய்துவருகிறது சங்கரமடம்!

நேப்பாள மன்னரும், ஒரு நிதி ஒதுக்கி, இராமேசுவரத்தில், ஸ்ரீசங்கராச் சாரியார் பெயரில் ஒரு பாடசாலை அமைத்து நடத்தி வருகிறார்! வடக்கென்றும், தெற்கென்றும் பேதம் இருந்தால் மன்னருக்கு, இந்த உணர்வு தோன்றியிருக்குமா?

ஒரு குறியீட்டுக்காகத்தான், வடக்குத்தெரு என்றும், தெற்கு வீதி என்றும் அமைத்தார்கள்! நாம் பிரிந்து போவதற்கும் பிரச்சினை கிளப்புவதற்கும் வைத்தது அல்ல!

இருப்பதிலேயே, தென்னிந்தியர்கள்தான் பல விதத்திலும் பாக்கியம் செய்தவர்கள்! அதை, நான் சொல்லியா தெரிய வேண்டும்! ஆகவே! ஒற்றுமையோடு பழக, நடக்கக் கற்றுக் கொள்ளுங்கள்!

புவனம் முழுவதும் இந்தியர் என்றால்
புரிந்து கொள்பவர் யாருளரோ?

உதாரணத்திற்கு ஒன்று மட்டும் சொல்கிறேன்! மகரிஷி-என்னும் சொல்-ரிஷ்ய என்றாயிற்று! பின்னர் அதுவே ருஷ்ய என்று மருவி இருக்கிறதென்றால் ருஷ்யர்களும் இந்தியர்கள் தான் என்றால் தவறாகுமா?

நீங்கள் எந்த நாட்டிற்கு வேண்டுமானாலும் போய்ப் பாருங்கள். 'Four Faces' நான்முக அமைப்பு உடையவர்கள் தான் பெரும்பாலும் உலகின் எல்லாப் பாகங்களிலும் வாழ்கிறார்கள்!

அவர்களைத்தான்-அவர்கள் வாழும் நாட்டின் பெயரால் அழைக்கிறோம். உண்மையில் 'சதுர்முக' அமைப்புடைய அவர்கள் அனைவரும் இந்தியர்கள்தான். அது எப்படி என்பதை நீங்களே ஆராய்ந்துகொள்ளுங்கள்!

பிஞ்சு நெஞ்சங்களைப்
பண்படுத்தும் உழவர்கள்!

புலவர்களே! ஆசிரியர்களே! நான் இதுவரை சொன்ன கருத்துக்களை எண்ணங்களை, நீங்கள் புரிந்து கொண்டிருப் பீர்கள் என்று எண்ணுகிறேன்.

நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு உழவர். உங்களிடத்திலே வரும் மாணவன் களர்நிலம் மாதிரி! அந்தக் களர் நிலத்தைப் பண்படுத்தி, நல்ல விளைநிலமாகச் செய்யவேண்டிய பொறுப்பு உங்களைச் சார்ந்தது! இளஞ்சிறுவர் நெஞ்சங்களில் கல்லூரி மாணவர் உள்ளங்களில் இந்து மதத்தின் பெருமையினைச் சொல்லிப் பதிய வைக்கவேண்டும். வரலாற்றுச்

சம்பவங்களை விளக்கவேண்டும்! பண்பாட்டு நிகழ்ச்சிகளை கதைகள் வாயிலாகப் புரியவைக்க வேண்டும்.

ஒழுக்கத்தின் உயர்வினை விளக்க வேண்டும்! ஒவ்வொரு வரும் கடைப்பிடித்து ஒழுக நீங்கள்தான் துணைபுரிய வேண்டும்! அணியும் சின்னங்களின் அர்த்தத்தை, அதன் தத்துவத்தை புரிய வைக்க வேண்டும்!

இப்படிப்பட்ட பணிகளை யான் ஒருவன் மட்டும் செய்து விடமுடியும் என்று சொல்லமாட்டேன்! ஒருகை தட்டினால் ஓசை எழும்புமா? ஆகவேதான் உங்களை அழைத்து, இங்கே ஒன்றுகூட்டினேன்.

நீங்கள் மாணவ மாணவியர்க்குச் சமயவகுப்புகள் நடத்தி அதன் மூலமாகவும், இந்து சமயக் கருத்துக்களைப் பரப்பலாம். சமயம் கிடைக்கும் போதெல்லாம்கூட வகுப் பறைகளில் பாடங்கள் நடத்தும்போது தெரிய வைக்கலாம்! இதற்கு நேரம், காலம், கிழமை தேவையில்லையல்லவா?

எங்கும் சொல்வீர்!
இந்து மதத்தின் பெருமையை!

குழந்தைகள் பச்சை மரத்திற்குச் சமமானவர்கள்! பசுமையான மரத்தில் ஆணி அடித்தால் வேகமாக உள்ளே இறங்கும்! அதனால்தான் ஔவை பிராட்டியார் 'இளமையிற் கல்' என்றார்கள்!

அந்த இளமைப் பருவம் கிடைத்தற்கரிய பருவம்! அந்தப் பருவத்தில், நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கத்தை 'விதைக்க' வேண்டும்! உலகத்தோடு ஒட்ட ஒழுகும் பண் பாட்டைப் 'பயிர்'செய்ய வேண்டும்! பக்தி-கடவுள் பற்று, பெரியோர்களுக்குக் கீழ்ப்படிதல் போன்ற 'விளைச்சலை' அறுவடை செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் இந்து மதம் ஏற்றம் பெற வாய்ப்புகள் ஏற்படும். மற்றவரும் புரிந்துகொண்டு நல்வழியில் நடக்கத் துணைபுரியும்.

கொள்கையைப் பரப்பக்
கும்பல் தேவையில்லை!

நம் நாட்டில் ஒரு பழக்கம் நீண்ட காலமாக இருந்து வருகிறது! நல்ல விஷயம் சொல்கிறார்கள் கேட்கலாம் என்பதற்குக் கூட்டம் சேராது! நல்ல செயல் செய்யலாம் என்பதற்கும் கூட்டம் சேராது! அப்படி நாம் எடுத்துக் கொண்ட பணிக்கு—தொண்டுக்கு—கூட்டம் சேரவில்லையே என்று வருத்தப்படக் கூடாது! கூட்டம் நிறையக் கூடும் என்றும் எதிர்பார்க்கக் கூடாது!

ஏனெனில் பன்றி, பல குட்டிகள் போடும்! கொசுக்கள்-பல்லாயிரக் கணக்கில் முட்டையிடும்! இவைகளினால் என்ன பயன்?

சிங்கம் ஒரு குட்டிதான் போடும்! யானை ஒரு குட்டிதான் போடும்! பசுவும் ஒரு கன்றுதானே போடுகிறது! ஆனால் ஒன்றுதானே என்று ஒதுக்கி விடுகிறோமா? இல்லையே! அந்த ஒரு கன்றாலே, ஒரு குட்டியாலே எத்தனை பெருமை எத்தனை சிறப்பு எத்துணை லாபம்!

ஆகவே, கூட்டம் குறைவானாலும், கூட்டத்தை, கும்பலை வைத்து, எடை போடாமல், இந்து மதத்தின் கருத்துக்களை - வந்தவர்கள் புரிந்துகொள்ளும்படி விளக்குங்கள்! அதுவே போதும்!

இந்த மனிதன் சென்றது
எந்த சந்திர மண்டலம்?

வான மண்டலத்தில் எத்தனையோ கோள்கள் இருக்கின்றன! அமெரிக்காவும், ரஷ்யாவும், சந்திரனுக்குப் போனோம் என்றும் அதில் இறங்கி நடந்தோம் என்றும் பெருமை அடித்துக் கொள்கிறார்கள். ஆனால், அவர்கள் உண்மையில் 'எந்த சந்திரமண்டலம் சென்று வந்தீர்கள்' என்று கேட்டால் மௌனியாவார்கள்!

ஆகாயத்தில் அநேக கோள்கள் இருக்கின்றன! அதில் பல மண்டலங்கள் இருக்கின்றன. நம்முடைய கண்ணுக்கு, சில கோள்கள்தான் தெரிகின்றன. பல கோள்கள் தெரிவதில்லை.

நம் கண்ணுக்குப் புலப்படும் 'சந்திரன்' மிகவும் வெப்பமுடையது! உங்களுக்கு வியப்பாக இருக்கிறதா? 'ஐஸ்' சாப்பிடுகிறோம்!-அது நமக்கு சாப்பிடும்போது. 'ஜில்' என்று, குளிர்ச்சியாக இருக்கிறது. ஆனால் அது வயிற்றில் சென்றவுடன்-குளிர்ச்சியாகவா இருக்கிறது? சூடாகி விடவில்லையா?

அதுபோல, கண்ணுக்குத் தெரியும் சந்திரனில் நடந்ததாக, வண்டிவாகனம் விட்டதாக-வல்லரசுகள் கூறிக்கொண்டிருக்கின்றன. உண்மையில் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும், நாம் தினமும் பார்க்கும் சந்திரனுக்கு - இவர்கள் போகவில்லை.

விண்ணில் பல சந்திரமண்டலங்கள் இருக்கின்றன! வேதத்தில் கூறப்பட்டுள்ளவைகளை நோக்கினால்தான் உங்களுக்குப் புரியும். உருவ அமைப்போடு வழிபடும் 'சந்திரன்' நவகிரகத்தில் இருக்கிறான். இளம்பிறைச் சந்திரன் சிவபெருமான் தலையில் இருக்கிறான். தேய்வோ வளர்ச்சியோ அவனுக்குக் கிடையாது. ஆனால், சூரியனிடமிருந்து ஒளி பெற்று வீசும் சந்திரன்-நமக்குக் குளிர்ச்சியாகத் தோன்றுகிறது. அதன்வெப்பத்தை—மனிதன் தாங்க முடியாது. அப்படி இருக்க-இவன்-அங்கே எப்படிச் செல்ல முடியும்? ஆகவே, இந்த மனிதன் சந்திர மண்டலம் போயிருக்க நியாயமில்லை.

ஒன்றின்றி ஒன்று
உயிர் வாழமுடியுமா?

மறுபிறப்பில் நம்பிக்கை உடையவர்கள், மறுபிறப்பு இல்லையென்று கூறுபவர்கள், இருவருமே நேராக மோட்ச லோகம், அதாவது 'சொர்க்கம்' அடைவார்கள்.

மறுபிறப்பில் நம்பிக்கை இல்லாதவர்கள்-மறுபிறப்பு உடையவர்கள்-சந்திர மண்டலத்திற்குச் சென்று-சுகம் அனுபவித்து-மீண்டும் உலகத்தில் பிறக்கிறார்கள்.

சந்திர மண்டலம் போய் வந்ததாகக் கூறினார்களே, இதிலிருந்து ஓர் உண்மை எனக்குக் கிடைத்தது! இந்த உயிர் அந்த இடம் போய்ச் சேர்வதற்கும், வேறு காற்று தேவைப் படுகிறது! அந்த இடத்தில்- இவன் காற்றுக்கு வேலை இல்லை! பயன்படவும் இல்லை. ஆகவே, ஒன்றின் துணையின்றி, ஒன்று உயிர் வாழ முடியாது என்பது இதன்மூலம் தெரிகிறதல்லவா? இவன் உயிர் வாழ-அந்த உலகத்திலும், வேறொன்றின் துணையை நாடத்தானே செய்கிறான் என்பதை நாம் உணர வேண்டும்.

'ஜகத்குரு' என்பதன்
பொருள் விளக்கம்!

நான் வடஇந்திய புனித யாத்திரை செய்யும்போது, ஓரிடத்தில் தங்கினேன்! அப்போது ஒருவர், என்னிடம் வந்தார்! "'நீங்கள் 'ஜகத்குரு' என்கிறீர்களே! உலகத்திற்கெல் லாம் நீங்கள் எப்படி குருவாக முடியும்?" என்று கேட்டார்!

அவருக்கு ஏற்பட்ட சந்தேகத்தைத் தீர்த்தேன்! எல்லா மூர்த்தங்களும் மூர்த்தி நிலை உடையது! தனித்தனியே இருக் கும் மூர்த்தங்களை 'ஈசனாக' நாங்கள் வழிபடுகிறோம்! முத் தொழிலுக்கும் ஈசன்தான் முழுமுதற் பொருளாகிறான்! உள்ளத்தில் சக்தியும் [அம்பாளும்] சின்னத்தில் சிவச்சின்னமும் நாவில் விஷ்ணுவும் [உச்சரிக்கும் போது] வைத்திருப்பவரே, உண்மையான இந்து ஆவார்! அவரே உலகத்தின் 'குருவும்' ஆவார்!

"ஆகவே, நாங்கள் 'ஜகத்குரு' என்பதில் தவறில்லையே!" என்று விளக்கம் சொன்னபோது, வந்தவர் உண்மை உணர்ந்து வாய்மூடி, வணங்கிப் போனார்.

அமிர்தசரசில் அற்புதக் கோயில்!

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக-சீக்கியர்கள் வாழும் பகுதி-பஞ்சாப் எனப்படும்!

நெஞ்சத் துணிச்சல் உடையவர்கள்! நேர்மையானவர்கள் குருவை வணங்கும் கோட்பாடு உடையவர்கள். இந்தியாவில் பண்பாடு உடைய மாநிலம்! பஞ்சாப்மாநிலம்! பிச்சைக்காரர் களே இல்லாத மாநிலம்! உழைப்பின் உயர்வை உணர்ந்தவர் கள் வாழும் மாநிலம்! இங்கே-அமிர்தசரஸ் என்ற-அவர்கள் புண்ணியதலத்திற்கு-அழைத்துச் சென்றார்கள்! பிறமத ஆல யங்களை இங்கே-எங்கேயும் காணமுடியாது! குருநானக்கின் கொள்கைகளை ஏற்றுக்கொண்டு அவரையே-தெய்வமாக வணங்கி வரும் பூமி அது!

அங்கு ஒரு நாள் என்னை அழைத்து-என்றும்-எவரும் கண்டிராத-அளவுக்கு-சிறப்பான வரவேற்பு அளித்தார்கள். அப்போது, சீக்கியர்களில் ஒருவர்- 'நாங்களும் உங்கள் இந்து மதத்தில் ஈடுபாடு கொள்ள முடியுமா?' என்றார்! அதற்குநான் திருஷ்டாந்தமாக-விளக்கம் கொடுத்தேன்.

சீக்கியர்களிடத்தில் உள்ள ஒழுங்கும் கட்டுப்பாடும் வேறு இடத்தில் காண்பது அரிதுதான்!

''எங்களுக்குக் கண்ணன் கீதையிலே உபதேசம் செய்தா லும், துஷ்டர்களை, அதர்மத்தை ஒழிக்க அர்ச்சுனனை இடுப்பில் வாள் வைத்திருக்கச் சொன்னார் பகவான்!

''அதுபோல, உங்கள்குருவாகிய, குருநானக் என்பவரும், ஐந்து அங்கங்களை-அடையாளங்களை-இடுப்பில் கத்தியை-வைக்கச் சொன்னார்! அடிப்படைக் கருத்தில், இரண்டும் ஒன்று தான்! ஆகவே, நீங்கள் என்னிடத்தில்-இந்து மதத்தில்-தாராளமாக ஈடுபாடு கொள்ளலாம்'' என்றேன்.

பரம்பொருள் ஒன்றுதான்! விநாயகரும், முருகனும், அம்பாளும், விஷ்ணுவும், அனைத்து-மூர்த்தங்களும், பரம் பொருளாம் ஈசனின் கூறுபாடுகள்! ஈசன் ஒருவனே! என்று ஏற்றுக் கொண்டுள்ள மதம்! இந்து மதம்! "ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்பதும் திருமூலர் வாக்குதானே!

இந்து என்பவன் யார்?

எவன் ஒருவன் ''ஈசன் ஒருவன்'' என ஏற்றுக் கொள்கிறானோ, உருவ வழி பாட்டினைச் செய்கிறானோ, கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபடுகிறானோ, சிவச் சின்னங்களை அணிந்து அனுஷ்டானங்களை ஏற்று நடத்துகிறானோ, அவனே ''இந்து'' என்பவனாவான் என்ற விளக்கத்தை சொன்னேன்! அமிர்தசரஸ் - பொற்கோயிலில் அமர்ந்திருந்த அத்தனை சீக்கியர்கள் முகத்திலும் மகிழ்ச்சி வெள்ளம் கரை புரண்டோடியது.

''அங்கத்தைத் தீயிலிட்டு
அக்கினியைக் கெடுக்க மாட்டோம்!''

பார்சிக்காரர் பண்பாடு

பார்சிக்காரர்கள் வாழும் பகுதிக்குச் சென்றேன். அக்கினியை கடவுளாக வணங்கும் இவர்கள்-இறந்தவர்களை-நெருப்பிலிடும் வழக்கமில்லை.

இறந்தவரின் உடலை இழுத்தெறிந்து கழுகுக்கும், காக்கைக்கும், பருந்துக்கும், பிராணிகளுக்கும் இரையாக்கி விடுகிறார்கள்!

அவர்கள் பண்பாட்டினை நீங்கள் இப்போது கேட்கும் போது,ஆச்சரியப்படுகிறீர்கள்.நானும் அவர்கள் நாகரிகத்தை, பண்பாட்டை, பழக்க வழக்கங்களைஅறிந்துகொள்ள விரும்பினேன். ''நீங்கள் ஏன் இறந்தவர்களைத் தீயில் இடுவதில்லை?'' என்று ஒரு வயது முதிர்ந்த பெரியவரிடத்தில் கேட்டேன். அதற்கு அவர் கூறினார்;''அக்கினியை ஆண்டவனாக வணங்கும் பழக்கம் உடையவர்கள்பார்சிகாரர்கள். அக்கினியை ஆன்மாவில் இரண்டறக் கலந்து வாழ்பவர்கள் நாங்கள்! அப்படிப் பட்ட புனிதத் தீயில் ஸ்தூல சரீரத்தைப் போட்டு புனிதமான அக்கினியைக் கெடுக்கவிரும்பவில்லை'' என்றார் பார்சிக் கார முதியவர்!

தேசங்கள் தோறும் பாஷைகள் வேறு! ஆனால் பண்பாடு மட்டும் கிட்டத்தட்ட நம் இந்து மதத்தின் பண்பாட்டினை அடியொற்றியே அமைந்து வந்திருக்கிறது! மைசூர்க்காரர்கள்-லிங்கத்தை வழிபடும் லிங்காயர்கள் இருக்கிறார்கள்! அவர்கள் இறந்தவர்களின் சடலங்களை எரிக்கமாட்டார்கள்! புதைத்து விடுவார்கள்.

எதிர்காலத்தை உருவாக்குகிறவர்களுக்கு-
எடுத்துச் சொல்ல வேண்டிய பணிகள்!

விடியுமுன் எழுந்து யோகாசனம் செய்து உடலைத் தூய்மைப் படுத்திக் கொள்ளவேண்டும்!

நாமாவளி சொல்லி, உள்ளத்தைத் தூய்மைப் படுத்திக் கொள்ள வேண்டும்!

நீதி போதனைகளை வரலாற்றுச் சம்பவங்களைக் கேட்டு ''ஆன்மா''வைத் தூய்மைப்படுத்த வேண்டும்!

ஆலயங்களுக்குச் சென்று இறைவனைவழிபட்டு முன்னோர் களின் முயற்சியினை வியந்து, எண்ணத்தைத் தூய்மைப்படுத்த வேண்டும்.

ஒருவரோடு ஒருவர் கலந்து பேசி, அச்சத்தைப் போக்கி, பொறுமையைப் பொசுக்கி, தீய எண்ணங்களை விட்டு, ஆன்மீகத் துறையில் பற்று ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

புண்ணிய பூமியில் எண்ணியவை நடக்கும்

உலகத்தில் மற்ற நாடுகளுக்கெல்லாம் இல்லாத பெருமை நம்முடைய பாரத நாட்டிற்கு உண்டு! ஈஸ்வரன் இருக்கும் கயிலாயம் இருக்கிறது. பனி மூடிய, உயர்ந்த 'இமயமலை' இருக்கிறது. கங்கை, யமுனை, கோதாவரி, காவிரி போன்ற பல புண்ணிய நதிகள் ஓடுகின்றன.

ஸ்ரீ இராமன், கண்ணன், நாயன்மார்கள் போன்றவர்களும் தவத்தில் சிறந்த முனிவர்களும், அவதாரம் செய்த பூமி இந்த பாரதபூமி! இப்படிப்பட்ட பூமியில், தூய எண்ண முடையவர் 'எண்ணியது எய்துவர்' நினைத்ததை முடிப்பார்கள்.

புனிதத் தன்மை பெறுவதற்கும், இந்தியாவைத் தவிர வேறு எந்த நாட்டையும் கூறமாட்டார்கள்! கூறவும் முடியாது!

வெளிநாடுகளுக்கு யாத்திரை செய்பவர்கள் பலர் இருக்கிறார்கள்! ஆனால் அவர்கள் அங்கே-இயற்கைக் காட்சிகளைக் காண்பார்கள்! தொழில் நுட்பங்களைக் காண்பர்கள்! நாடாண்ட மன்னர்களின் கோட்டை கொத்தளங்களைக் காண்பார்கள். விஞ்ஞானத் திறனைக் கண்டு வியந்து நிற்பார்கள்! ஆனால்—

நம்முடைய நாட்டிற்கு யாத்திரை வருபவர்கள்-புனிதத் தலங்களைக் கண்டு தரிசிக்க வருகிறார்கள்! புண்ணிய நதிகளில் நீராடி, தன் பாவத்தைப் போக்க வருகிறார்கள்.

முன்னோர்கள் அவதரித்து, வளர்ந்து வாழ்ந்து உபதேசம் செய்த மண்ணில் வீழ்ந்து வணங்கிச் செல்ல வருகிறார்கள். கோயிலின் சிறப்பும், கோபுரத்தின் அழகும் நம் நாட்டிலன்றி வேறு எந்த நாட்டிலும் கிடையாது!

உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால் காஞ்சிபுரம் யாத்திரை வருகிறவர்கள் 'பட்டுப்புடவை' வாங்கவா வருகிறார்கள்?

ஏகாம்பரநாதர், வரதராஜப் பெருமாள், காமாட்சி யம்மன்,கயிலாசநாதர் கோயில்களைக் கண்டு தரிசிக்கத்தானே வருகிறார்கள்?

இராமேஸ்வரம் செல்கிறார்கள்! தீவின் நடுவில் இருக்கும் கோயிலின் அழகையும் அங்கு கிடைக்கும் புனிதமும் புண்ணியமும் பெறுவதற்குத்தானே செல்கிறார்கள்!

ஏன் இந்த யாத்திரை?

வெளி நாட்டினரின் வருகை இந்தியாவில் மிகுந்து வருகிறது.

ஆன் மீகத்திற்காக, வெளிநாட்டு யாத்ரீகர்களால், நமக்கு 'அந்நியச் செலவாணி' அதிகமாகக் கிடைக்கிறது.

மற்ற நாடுகளில் யாத்திரை செய்தால், மனத்திற்கு எந்த விதமான 'சுகமும்' கிடைத்திருக்காது! அதனால்தான்-வெளி நாட்டினர் கூட, இந்தியாவுக்குச் சென்றால் சாந்தி கிடைக்கும் என்று வருகிறார்கள்.

இந்தியாவில் கிடைக்கின்ற 'மனச்சாந்தி' போல வேறு மன அமைதியை ஒரே இடத்திலிருந்து பெற முடியாது. அதனால்தான் இந்த யாத்திரையை மேற்கொண்டிருக்கிறேன்.

யான் பெற்ற இன்பம்!
பெறுவீர் நீங்களும்!

நம் நாட்டில், ஒவ்வொரு ஊரும் ஒவ்வொரு விதத்தில் புனிதத்தன்மை வாய்ந்துள்ளது;

மனிதனுக்கு வாழ்விலே இரண்டு கோட்பாடுகள் வேண்டும்! ஒன்று மனத்தூய்மை. மற்றொன்று மன அமைதி! இந்த இரண்டும் பெறுவதற்கு நல்ல எண்ணம் வேண்டும். நம் நாட்டில் பழங்காலந் தொட்டு வளர்ந்து வருகின்ற ஆன்மீகத் துறை போன்று வேறு எங்கேயும் காண முடியாது!

அதனால்தான், யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என்பதை-எண்ணத்தில் கொண்டு, யான் சென்ற புனித யாத்திரையில், யான் பெற்ற புண்ணியத்தை- உங்களுக்கும் கொடுப்பதற்காகவே இது போன்ற நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்து பகிர்ந்துகொள்கிறேன்.

கலிக்குப் பலியாகாதீர்!

நாட்டின் சூழ்நிலை இப்போது சரியில்லை. அதற்குக் காரணம், இப்போது 'கலியுகம்' தானே நடக்கிறது ஒவ்வொரு யுகமும், பல ஆயிரம் ஆண்டுகள் கொண்டது. கலியுகமும் பல ஆயிரம் ஆண்டுகள் கொண்டது.

கலி என்றால் 'பாவம், தவறு' என்பது பொருளாகும். அப்படிப்பட்ட இந்தக் கலிகாலம் பாவமானது. தவறுகள் நிறைந்தது. அதில் வாழும் மனிதன் மட்டும் எப்படி அதிலிருந்து தப்ப முடியும்?

சிலருக்குப் பெயர் மட்டும் நன்றாக அமைந்துவிடும்! ஆனால், பெயருக்கும் செயலுக்கும் சம்பந்தமே இருக்காது! 'அன்னபூரணி' என்று பெயர் இருக்கும்! சாப்பாட்டிற்கே—திண்டாடிக் கொண்டிருப்பாள்! அது போல-இந்தக் கலியுகத்தில், மக்கள் தன் மனம் போல-சொல்லுக்கும் செயலுக்கும் மாறுபட்டு உழல்வர்! ஆகவே, கலிக்குப் பலியாகாமல் விழிப்புடன் இருங்கள்!

மக்கள் நோக்கும்
எங்கள் பார்வையும்

நம் நாட்டில் யாத்திரை செய்யும்போது, எங்கும் அமைதியே இல்லை! ஊரெங்கும் ஒரே சப்தம்! அமைதியைக் கெடுக்கும் அருவெறுப்பான ஆரவாரங்கள். இவற்றையெல்லாம் சகித்துக்கொண்டு யாத்திரை செய்வது என்பது கடினமாகத்தான் இருந்தது!

காக்கைக்கு இரண்டு கண்கள் இருக்கின்றன! ஆனால் அது, தன் இரண்டு கண்களாலும், ஒரு பொருளைப் பார்ப்பதில்லை! இடது பக்கம் பொருளைப்பார்க்கும்போது,கழுத்தைத் திருப்பிச் சாய்த்து, வலக்கண்ணால்தான் பார்க்கும். அப்போது இடக்கண்ணால் அது பார்க்க முடியாது! அதாவது இடக்கண் தெரியாது! அதுபோலவே வலதுபுறம் பார்க்கும்போது' இடக் கண்ணால்தான் பார்க்கும். வலக்கண் தெரியாது.

அந்த நிலைதான் யாத்திரை செய்த எங்களுக்கு ஏற்பட்டது.

யான் தங்கிய ஊர்களில்—தங்கியிருந்த நாட்களில்—அமைதியும் இருந்தது. ஆன்மீகமும் வளர்ந்தது! அன்போடும் ஆன்மீக எண்ணத்தோடும்தான் வரவேற்றார்கள். வழியனுப்பினார்கள்.

பின்னர்தான் தெரிந்தது. யான் அங்கு போவதற்கு முன்பிருந்த நிலைமையும்-புறப்பட்டு வந்தபின் நிகழ்ந்த நிகழ்ச்சிகளும்!

எனக்கே சில சமயங்களில் இந்த மக்களின் பழக்கவழக்கங்களை எப்படி மாற்றுவது, எப்படித் திருத்துவது என்ற எண்ணம் வருவதுண்டு.

சினிமாக்காரர்கள் வந்தால் - முதலில் கூட்டம் கட்டுக்கடங்காது. பின்னர் படிப்படியாக, இரண்டொரு நாட்களில் குறைந்துவிடும்.

ஆனால், ஆன்மீகத் துறையில் ஈடுபட்டிருக்கும் யான் சென்றபோது, முதலில் கூட்டம் கொஞ்சமாக இருக்கும்! இரண்டொரு நாளில் படிப்படியாக கூட்டம் கட்டுக்கடங்காது! அந்த நேரத்தில் நாங்கள் முகாமை வேறு ஊருக்கு மாற்றி, அவ்வூரிலிருந்து புறப்பட்டு விடுவோம்.

அரக்க மனம் விட்டு இரக்க குணம் பெறுங்கள்!

திரேதாயுகம், துவாபரயுகம் இவற்றில் நன்மைகள் அதிகம் இருந்தன. தீமைகள் குறைந்திருந்தன! இது எப்படி

யென்றால், முதலில் முதலாளிக்கு நிலத்தில் வரும் விளைவில் 80%ம் தொழிலாளிக்கு 20%ம் இருந்தது! அதன் பின்னர் 60% முதலாளிக்கும், 40%தொழிலாளிக்கும் ஆயிற்று. அதன் பின்னர் 40%முதலாளிக்கும், 60%தொழிலாளிக்கும் ஆயிற்று. அதுபோல நல்லது அதிகமாகி பின்னர் அதுவே குறைந்தும் போயிற்று!

இந்தக் காலத்தில், உழுபவனுக்கே நிலம் 'சொந்தம்' என்பது போல, கலியுகத்தில் பாவங்கள் அதிகமாகி, தவறுகள் மலிந்து-நன்மை எல்லாம் போய்-நிலம் சொந்தமானது போல—பாவமும்தவறும் கலியுகத்தில் மனிதனுக்குச் சொந்தமாகிவிட்டன!

இப்போது மனிதனின் வாழ்க்கையில் இருந்தநல்லகுணம் சென்று, தீயகுணம் 90%ம், 10% நல்ல குணமும்தான் நிற்கிறது.

முன்பு நடந்த யுகத்தில் ஒரு ராவணன் ஒரு தாடகை, ஒரு 'அரக்கன்' என்றுதான் இருந்தார்கள். இப்போது, இந்த கலியுகத்தில், நல்ல குணமெல்லாம் சென்று எல்லோரும் இராவணனாக, தாடகையாக,அரக்கனாக மாறிவருகிறார்கள்.

சமயங்கள் தோன்றியது யாருக்காக?

மாதத்தில் நான்கு வாரங்கள் இருக்கின்றன! சம்பளம் வாங்கிய முதல் வாரம் மகிழ்ச்சியாக இருப்பார்கள். சினிமா, டிராமா, கேளிக்கை போன்றவற்றில் ஈடுபடுவார்கள்! இரண்டாவது வாரம் குதூகலம் கொஞ்சம் குறையும். மூன்றாவது வாரம் சுமாராக நடக்கும். நான்காவது வாரம் கடன் வாங்குதல் - கைமாற்றுப் பெறுதல் போன்றவற்றில் ஈடுபடுவர், அமைதி இருக்காது: எரிந்து எரிந்து விழும் குணம் தான் இருக்கும்.

சூரியன் உதிக்கும்; மறையும். அதற்கு அழிவே கிடையாது! மனிதனுக்குத்தான்ஆக்கமும், தூக்கமும், அழிவும்ஏற்படும். மனிதன் நல்லவனாக வாழ வேண்டுமென்றுதான்

சமயங்கள் தோன்றியிருக்கின்றன. மனிதனை நல்லவனுக்கு வதற்கே சமயங்கள்- சாத்திரங்கள் தோன்றியிருக்கின்றன.

சிலர் சமயத்தை வாழவைக்கிறேன் என்கிறார்கள்! சமயங்கள்தான் மனிதனை வாழவைத்துக் கொண்டிருக்கின்றன.

மனிதன் மனிதனாக வாழவேண்டுமென்பதற்காகத்தான் மதங்களும் தோன்றின! ஆகவே, மனிதன் ஒழுக்கத்தை நிலைப்படுத்திக்கொள்வதற்காக, சமயங்கள் தோன்றின; மனிதனுக்காகவே தோன்றியுள்ளன!

இன்பம் பெற்றிட இறைவனை வணங்கு!

கடவுளை ஏன் கும்பிடவேண்டும் என்று பலர் என்னைக் கேட்பதுண்டு! நான் பலஇடங்களில் அதற்கு வியாக்கியானம் சொல்லியிருக்கிறேன்!

தன்னுடைய சுகதுக்கங்களை நெருங்கிய நண்பர்களிடத்தில் சிலர் கூறுகிறீர்கள்! எவ்வளவுதான் நெருங்கிய நண்பன் ஆனாலும் சிறிது நேரம் உன் 'குறைகளைக் காது கொடுத்துக் கேட்பான்! கொஞ்ச நேரத்தில் அவன் கஷ்ட நஷ்டங்களை உன்னிடம் சொல்லத்தொடங்குவான்! ஆறுதல் பெறப்போன உனக்கு ஆதரவுகூட இருக்காது. 'இவனிடத்தில் சொல்ல வந்தோமே" என்று எண்ணத்தோன்றும்! கஷ்டங்கள்தீராது!

கடவுள் உடனே பதில் சொல்லாவிட்டாலும் பலன் மட்டும் கிடைக்காமல் போகாது. வாழ்வு தூய்மை பெறும் அல்லவா?

ஆகவே, இறைவனைத் தூய்மையான மனத்தோடு வணங்குங்கள்! துன்பம் அகன்று இன்பம் பெறுவீர்கள்!

மனிதன் மனிதனை நம்பினால் துன்பத்தைத்தான் சுமக்க வேண்டும். மனிதனை மனிதன் ஏன் நம்பவேண்டும்?

இறைவனிடம் சென்று முறையிடுங்கள்! இறைவனை நம்புங்கள்! உங்கள் குறைகளை அவனிடத்தில் சொல்லிக் கண்ணீர் சிந்துங்கள். நம் கஷ்ட நஷ்டங்களை ஏற்றுக்கொள்ள வேண்டுங்கள்.

பாகவதம், ராமாயணம், மஹாபாரதம்

நம்முடைய மதத்திற்கு மூலகாரணம் வேதம். அதனை விளக்கமாக நமக்கு எல்லாம் கதைகள் மூலமாகச்சொல்லப் பட்டிருக்கிறது. வேதம் 18 பிரிவுகளாகச் சொல்லப்படுகிறது. அதற்கெல்லாம் சாரமாக அமைவது மூன்று. (1) பாகவதம், (2) ராமாயணம், (3) மகாபாரதம் என்று மூன்று நூல்கள் உண்டு. ராமாயணத்தைச் சொல்லும்போது வேதமே ராமாயணம் என்றும் சொல்வது உண்டு. மகாபாரதத்திலே ராமாயண வரலாறு வருகின்றது. பாகவத வரலாறும் வருகின்றது. ஏனென்றால் மகாபாரதம் இராமயணத்திற்கு முன் நிகழ்ந்தது.

இராமாயணம் தோன்றிய வரலாற்றைப் பார்க்க வேண்டும். ஒரு மனிதன்காட்டுவாழ்க்கை வாழ நேரிடுகிறது. அவன் காட்டிலுள்ள மக்களோடு சேர்ந்து வாழும்போது அவர்களுடைய பழக்கங்களான, திருடுதல், கொள்ளையடித்தல் போன்ற பல தீய செயல்களைச் செய்து வந்தான். ஏனென்றால் அவர்களோடுசேர்ந்து அவனுக்கும் அந்தப் பழக்கம்தானாகவே வந்துவிடுகிறது. குழந்தையிலேயே சில பேர்களுக்குத் திருடும் பழக்கம் எல்லாம் வந்துவிடுகிறது. அந்தக் காட்டில் வாழ்ந்த அவனுக்கு இது செய்தால் நல்லது, அதைச் செய்தால்தவறு, என்று தெரியவில்லை. ஏனென்றால் அதை எடுத்துச் சொல்ல யாரும் இல்லை. அதனால் திருந்தும் வாய்ப்பே இல்லாமல் போயிற்று அவனுக்கு!

ஒரு நாள் 18 பெரியோர்கள் சேர்ந்து அந்தக் காட்டு வழியாகச் சென்றார்கள். அவர்களிடம் உள்ள பொருள் களையெல்லாம் கொள்ளையடிக்க அவன் வந்தான். வரும் போது அவர்களெல்லாம் அவனிடம் சில வார்த்தைகள் சொன்னார்கள். ''எங்களிடம் உள்ளது எல்லாம் ஒரே துணி மட்டும்தான்; வேறு ஒன்றும் இல்லை'' என்றனர். பல நல்ல

வார்த்தைகளும் சொன்னார்கள். எப்போதும் பெரியோர்கள் எது சொன்னாலும் சில பேர்களுக்குப் பிடிக்காது. அது போலவே அந்தக் காட்டில் வாழ்ந்து வந்த அந்த மனிதனுக்கு இதுவெல்லாம் புரியவில்லை: பிடிக்கவுமில்லை. அவன் அந்த மாதிரி பழகிவிட்டான். "நல்லது வரும்போது நமக்கு உதவி செய்வதற்கு எல்லோரும் வருகிறார்கள். ஆனால் தீமை வரும் போது யாரும் வராமல்,அது உனக்கு மட்டுமே சொந்தம் என கூறி, அதில் பங்கெடுத்துக் கொள்வதில்லை," என்று பல நல்லவைகளை எடுத்துச் சொன்னவுடன் அவன் மனசும் மாறுகின்றது பிறகு சிந்திக்கும் எண்ணம் வந்தது. நல்லவர்களின் காற்று பட்டாலே தீயவர்களின் மனசு கொஞ்சமாவது மாறி விடும். இதனாலேயே அவனது மனசும் மாறியது. இதைத்தான் ஆதி சங்கரர் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே கூறினார். நாம் எதுவரைக்கும் சம்பாதிக்கிறோமோ அதுவரைக்கும் எல்லோரும் வருவார்கள். அதன் பிறகு வரமாட்டார்கள். இதைத்தான் அன்றைக்கு அந்தப் பெரியவரும் கூறினார்.

அந்தக் காட்டில் உள்ளவனிடம் அந்தப்பெரியவர்கள் "நீ ராம், ராம் என்று இரண்டு தடவைகள் சொல்லு. நீ செய்த பாவத்திற்கு பிராயச்சித்தம் கிடைக்கும்" எனக் கூறினார்கள். அவன் "ராம் ராம்" என்று கூறியபடியே அமர்ந்துவிட்டான். அப்படியே அவன் மேல் மண் புற்று வளர்ந்துவிட்டது. அதிலிருந்து தோன்றியவரே வால்மீகி. இவரே இன்றைக்கு வரலாறு போற்றும் இராம காவியம் படைத்தவர்.

ஒரு நாள் காட்டிற்குச் சென்ற ஒரு அரசன் மிகவும் நாவறண்டு போய் தண்ணீர் தண்ணீர் என்று கத்திக்கொண்டு அங்கு தவம் செய்துகொண்டிருந்த முனிவரிடம் தண்ணீர் கேட்டான். ஆனால் அவர் கண் திறக்கவில்லை. இதனால் கோபமடைந்த அவன் அங்குவந்தபாம்பை அடித்துஅந்தப் பாம்பை எடுத்து அவர் மேல் மாலையாகப் போட்டுவிட்டான். பிறகு கண் விழித்த அவர் தன்மீது பாம்பு இருப்பதைக் கண்டவுடன் சினந்து, அரசனைப் பார்த்து "எந்தப் பாம்பை என்மீது போட்டாயோ அந்தப்பாம்பாலேயேசாவாய்" எனக்கூறினார்

பிறகு அவன் சமாதானம் அடைந்து, "நான் இன்னும் எத்தனை நாள் உயிரோடிருப்பேன்" என்று கேட்டதற்கு, "இன்னும் ஏழு நாட்கள் மட்டுமே இருப்பாய்" எனக் கூறியதும், அவன் கோபப்படாமல் ஏழு நாட்களுக்குள் எல்லா நல்லவற்றையும் செய்து முடித்துவிட்டு மேலுலகம் சென்றான்.

நாம் கடைசி காலத்தில் எதை நினைக்கிறோமோ அந்த நினைப்பே நமக்கு அடுத்த பிறவியாக வரும் எனக் கூறுவதுண்டு. அவன் சாவதற்கு முன்னால் கங்கைக் கரையோரத்தில் அப்படியே தியானத்தில் ஆழ்ந்துவிட்டான். நாங்கள் வடநாட்டிற்குச் சென்றபோது "சுகதால்" என்ற ஒரு இடத்திற்குச் சென்றோம். அங்கே இருந்த ராஜாவின் சிலையும் அவனைக் கடித்த பாம்பின் உருவமும் அமைக்கப்பட்டிருந்தது. அவன் மைந்தன், தன் தந்தை இறந்த கதையைக் கேட்டு எந்தப் பாம்பு தன் தந்தையைக் கடித்ததோ அந்த பாம்பினமே இல்லாமல் செய்துவிடுகிறேன் என்று கூறி, ஒரு யாகம் செய்து அந்த வேள்வியில் எல்லாப் பாம்பும் வந்து விழும்படி செய்ய ஏற்பாடு செய்தான். இதை அறிந்தார் ஒரு முனிவர். அவர் எப்போதும் ஒரு இடத்திலே ஒரு நாழிகூட இருக்கமாட்டார். அவர் அவனுக்காக அவனிடமே இருந்து, நன்மை தீமைகளை எடுத்துக் கூறி, அந்த வேள்வியைத் தடை செய்தார். இதனால் நாம் யாரும் எதற்கும் கோபப்படக்கூடாது என்பது மகா பாரதக் கதையிலிருந்து தெரியவருகிறது.

வெறும் முயற்சி இருந்தால் மட்டும் வெற்றி கிடைக்காது. கூடவே திருவருள் இருந்தால்தான் அந்த வெற்றி முழு வெற்றியாக அமையும். அதைப் போலவே திருவருள் ஒன்றை மட்டுமே நம்பி முயற்சி செய்யாமல் இருந்தாலும் வெற்றி கிடைக்காது. ஆகவே முயற்சியும் திருவருளும் சேர்ந்திருந்தால் தான் காரியம் நல்லதாக நடக்கும். மின்சாரத்தைத் தொடும் போது நமக்கு ஷாக் அடிக்கிறது. அதைத் தொட்டால் ஷாக் அடிக்கும் என்பதைச் சொல்லயாராவது வேண்டும். இதைச் சொல்ல இப்படிப்பட்ட பெரியவர்கள் இருக்கும்போது நமக்கு நல்லது நடக்கும். இந்த மகாபாரதத்திலே வந்ததைப்போன்ற கோபம் நமக்கு கஷ்டத்தைக் கொடுக்கும். இதனால் அத்தகைய

கோபம் யாருக்கும் வரக்கூடாது. இதைத்தான் ஔவையார் அன்று "ஆறுவது சினம்" என்று கூறியுள்ளார். கோபத்தை அடக்கியாள ஒருவனுக்குத் தெரிந்திருக்கவேண்டும் என்கிறார். முன்பெல்லாம் ஒவ்வொரு வீட்டிலும் ராமாயணம், மகா பாரதம் போன்ற புத்தகங்கள் இருக்கும். இந்தப் புத்தகங்கள் இருக்கும் வீட்டில் தீமை எதுவும் வராது என்ற நம்பிக்கை இருந்தது. ஆனால் அதற்கு மாறாக இப்போது அந்தப் புத்த கங்கள் வீட்டில் இருந்தால் கதையில் உள்ளதைப் போல சண்டைகள் அடிக்கடி வீட்டிலும் வரும், அதனால் அப் புத்த கங்கள் வீட்டிலேயே இருக்கக்கூடாது என்ற கருத்தை சிலர் கொண்டிருக்கிறார்கள். இது மிகவும் தவறானதாகும்.

கடவுளின் அவதாரமானது முதலாவதாக நல்லதை மக்களுக்கு அளிப்பதற்காகவும், இரண்டாவதாக தீயவர்களை அழிப்பதற்கும், மூன்றாவதாக நல்லதும் செய்யாமல், தீயதும் செய்யாமல் இரண்டுங்கெட்டானாக இருப்பவர்களைத் திருத்து வதற்காகவுமே இருக்கும்.

இராமாயணப் புத்தகத்தைப் படித்தால் மட்டும் போதாது. அதன் முழு வரலாற்றையும் தெரிந்துகொள்ள முற்படவேண்டும். அதிலுள்ள சந்தேகங்களை நீக்கிக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அதைப் படித்த பயன் நமக்குக் கிடைக்கும். திரௌபதி-பஞ்ச பாண்டவர்களைப்பற்றி படிக்கும் போது 'ஒரு மனைவிக்கு ஐந்து புருஷர்களா. அது எப்படி?' என்று இப்போதுள்ளவர்கள் கேட்கிறார்கள். ஒரு கண்ணனுக்கு இத்தனை கோபிகாஸ்திரீகளா என்றுகேட்கலாம். திரௌபதி அக்கினியிலிருந்து பிறந்தவள் என்பதை நாம் அறிய வேண்டும். இதையெல்லாம் அறிய கதையை நன்கு படித்து உணர்ந்தால் தான் நாம் நல்ல உண்மையான கருத்தை அறிய முடியும். எந்த சந்தேகமும் வராது. நல்ல சமா சாரங்களை அடிக்கடி படிக்க வேண்டும். நாம் எல்லாம் நல்ல சமய நூல்களைப் படித்து நல்ல விஷயங்களை நன்றாகத் தெரிந்து கொள்ளவேண்டும். குழந்தைகளையும் நல்ல முறையில் சமய நூல்களைப் படிக்கச் செய்ய அதற்கு ஏற்றாற் போல் வழிகளைச் செய்ய வேண்டும்.

கடவுள் பக்தி

முன்பு பழைய காலத்தில் கடவுள் பக்தி என்பது எல்லோருடைய மனத்திலும் நிறைந்து இருந்தது. வான வெளி எவ்வாறு பரந்து இருக்கிறதோ, அந்த அளவுக்கு கடவுள் பக்தியும் இருந்தது. ஆனால் இப்போது அந்த கடவுள் பக்தி என்பது கொஞ்சங் கொஞ்சமாக மறைந்து கொண்டே வருகிறது. ஏதோ சிறிதளவேனும் கடவுள் பக்தி இருக்கிறதென்பதை நினைத்து நாம் சந்தோஷப்பட வேண்டும். நகரத்தைவிட கிராம மக்கள் நிறைய பக்தியோடு இருப்பதைக் காணலாம். கிராமங்களி லுள்ள பள்ளிகளில் மட்டும் அல்லது எல்லாப் பள்ளிகளிலும் பக்தியைப் பற்றிச் சொல்லித்தர வேண்டும்.

கடவுள் பக்தி என்பது பொதுவாக எல்லா ஜனங்களிடையேயும் இருக்கும் ஈஸ்வர பக்தி. இந்த ஈஸ்வர பக்தி எல்லோரிடையும் நிறைய இருக்கவேண்டும். பல ஊர்களில் பெரிய பெரிய உற்சவங்கள் நடக்கின்றனவே தவிர கடவுள் நினைப்பே வருவதில்லை. பிரச்சனைகள் வரும்போதுதான் கடவுளைப் பற்றி நினைக்கின்றனர். அதனால்தான் இப்போது பக்தி நிறைய வளர ஆரம்பித்து இருக்கிறது. ஏதோ முயற்சியில்தான் காரியங்கள் நடக்கின்றன. பொதுவாக நம்பக்தியைக்காட்டிலும்தெலுங்கு தேசம் பக்கம் போயாகிவிட்டால் பக்தி அங்கெல்லாம் அதிகமாக இருக்கின்றது. உத்தர பிரதேசம், ஹரியானா. பஞ்சாப் போன்ற இடங்களில் பக்தி ஜாஸ்தியாக இருக்கிறது. கடவுள் பக்தியைவிட உயர்ந்தது வேறு ஒன்றும் இல்லை என்று அந்த தேசத்தவர்கள் நினைக்கின்றார்கள். அந்த அளவுக்கு அவர்களிடம் பக்தியின் வேகம் அதிகமாக உள்ளது. மகா கவிகள் கூட அந்த மாதிரி மாநிலங்களில்தான், அதாவது குஜராத் மராத்தி போன்ற இடங்களில்தான் அதிகமாகத் தோன்றியுள்ளனர் என்பது தெரிய வருகின்றது. அங்கு குளிர் காலத்தில்

அவ்வளவு கடுங் குளிரிலும் கங்கையில் குளித்துவிட்டுச் செல்கிறார்கள். நடு இரவிலும்கூட குளிக்கிறார்கள். அந்த அளவுக்கு பக்தி இருக்கிறது அவர்களிடம். பக்திக்குப் பிறகுதான் மற்ற வேலைகளை எல்லாம் செய்கிறார்கள். அந்த நிலையிலே அவர்களுக்குப் பழக்கம் ஏற்பட்டிருக்கிறது.

முன்பெல்லாம் தமிழ்நாட்டிலேதான் பக்தி ஜாஸ்தி. மற்ற விஷயங்கள் பிறகுதான். பக்கத்திற்கு ஒரு பெருமாள் கோவிலும் இருக்கும், சிவன் கோவிலும் இருக்கும். சிவபக்தி வைஷ்ணவபக்தி இரண்டுமே ஒன்றுதான். அதிக பக்தி வைஷ்ணவ பக்தி என்று சொல்லப்படுகிறது. சைவம், வைஷ்ணவம் இரண்டிலுமே மாமிசம் சாப்பிடமாட்டார்கள். பொதுவாக இரண்டு பேருமே மாமிசம் சாப்பிடுவதாக நமக்குத் தெரியவில்லை. ஆனால் வடநாட்டில் பலரிடையில் மீன் சாப்பிடும் வழக்கம் உண்டு. கங்கையிலே குளித்துவிட்டு கிராம மக்களும் நகர மக்களும் கையிலே பொதுவாக மீனை,சாப்பிடுவதற்கு எடுத்துச் செல்கிறார்கள். எல்லா சமயத்திலேயும் இதை ஒரு மரபாகவே வைத்து இருக்கிறார்கள்.

அதைக்கூடச் சாப்பிடாமல் இருப்பவர்கள் சைவம், வைஷ்ணவம் என்று சொல்லப்படுகிறது. அந்த நிலையிலே ஒரு கலாச்சாரம் அங்கு வைக்கப்படுகிறது. ஸ்ரீராம நவமி, நவராத்திரி, விநாயகசதுர்த்தி என்று நாம் மிக விமரிசையாகக்கொண்டாடுகிறோம். ஆனால் அங்கு பொது மக்களும், சர்க்காரும் சேர்ந்தே இந்தப் பண்டிகைகளைக் கொண்டாடுகிறார்கள். பெரியபெரிய உற்சவம் எல்லாம் நடக்கின்றது. நவமி, விநாயக சதுர்த்தி போன்றவை சமூகமாக -பொதுவாகவே நடைபெறுகிறது. இதற்குக் காரணம் சமூக ஒற்றுமை. அவர்களிடம் சமூக ஒற்றுமை ஜாஸ்தி. இதற்குக் காரணம் பழக்கமே. எல்லாக் கோவில்களுக்கும், எல்லா மதத்தினரும் செல்கிறார்கள். அந்த அளவுக்கு பக்தி அவர்களிடம் வைக்கப்பட்டிருக்கிறது. கடவுள் வழிபாடே மிகவும் பெரிது அவர்களுக்கு. கங்கை நீரைக் குடித்தலும், குளித்தலும் மிகவும் முக்கியமானதும், புனிதமானதும் கூட. செய்த பாவங்களெல்லாம் கங்கையிலே

குளித்தால் போய்விடும் என்று நம்புகிறார்கள். மாளயபக்ஷம் போன்ற நாட்களிலே மிகவும் பக்தி சிரத்தையோடு காரியங்களை நன்றாகச் செய்கிறார்கள். பஜனை, பிரார்த்தனை போன்ற காரியங்கள் நடந்தால் கூட்டம் நிறைய வருகிறது.

நேபாளத்திற்குச் சென்றபோது பார்த்தோம். அங்கு எல்லோரும் கோவிலுக்குச் செல்கிறார்கள். அந்த அளவுக்கு பக்தி அங்கு இருக்கிறது. சனிக்கிழமை தோறும் தவறாமல் எல்லோரும் சேர்ந்து குழந்தைகளுடன் கோவிலுக்குச் செல்கிறார்கள். அந்த சூழ்நிலை அப்படி. சனிக்கிழமை அவர்களுக்கு அவ்வளவு முக்கியம். ஹரியானா பீஹார் போன்ற இடங்களிலே சோம்பேறிகளே கிடையாது. எல்லோரது கையிலேயும் ஒரு நூல் வைத்து இருக்கிறார்கள். படிப்பதற்கு அந்த அளவுக்கு ஆர்வம் இருக்கிறது அவர்களிடம். உழைப்பால் உயர்ந்து வருகிறவர்கள் அவர்கள்தான். ஹரியானா, பஞ்சாப் அந்த அளவுக்கு உயர்ந்து இருக்கிறது.

குருக்ஷேத்திரம் என்ற ஊரில் பிரம்மாண்டமான குளம் ஒன்று இருக்கிறது. அந்த மாதிரிக் குளம் எங்குமே இந்தியாவில் இல்லை. அதைச் சுற்றி வரப்புகள் இருக்கின்றன. பத்துக் கோடி ரூபாய் சர்க்காரும் பொதுமக்களும் சேர்ந்து செலவு செய்து அதை ஏற்படுத்தி இருக்கின்றார்கள். நான்கு மைல் சுற்றளவு இருக்கும் அழகான, மிகப்பெரிய யூனிவர்சிடி அங்கே தான் இருக்கிறது. சமயச்சொற்பொழிவு செய்ய அங்கேதான் அழைத்துக் கொண்டு செல்வார்கள். அந்த அளவுக்கு அங்கே மாணவர்களிடத்திலேயும் பக்தி இருக்கிறது. அந்த யூனிவர்சிடி இருக்கும் இடம்தான் கீதை தோன்றிய இடம். அந்த யூனிவர்சிடியில் பதினாறாயிரம் பேர்கள் இருக்கிறார்கள். அவ்வளவு பேரும் சமயச் சொற்பொழிவைக் கேட்க வருகிறார்கள். தெய்வம் என்று வரும்போது அவர்களிடம் நிறைய ஒற்றுமை இருக்கிறது. நெல்லிக்காய் சாக்கில் இருக்கும்போது சேர்ந்து இருக்கிறது. சாக்கை அவிழ்த்து விட்டால் எல்லாம் தனித்தனியே போய்விடுகிறது. அதைப் போல சண்டை வரும்போது பிரிகிறார்கள். தெய்வம் என்று

வரும்போது, சாக்கில் உள்ள நெல்லிக் கனியைப்போலச் சேர்ந்து கொள்கிறார்கள். இந்த ஒற்றுமை நமக்கும் வர வேண்டும். கடவுளிடையே அப்படியே சங்கல்பம் ஆகிவிடு கிறார்கள் அவர்கள். இதற்குக் காரணம் சுற்றுப்புற சூழ் நிலைகளும், பழக்க வழக்கங்களுமேயாகும்.

முன்பெல்லாம் பஞ்சகச்சம்தான் கட்டுவது வழக்கம். ஆனால் இப்போது வேட்டி கட்டுகிறார்கள். வடநாட்டில் கைலி அணிகிறார்கள். அது அவர்களது வழக்கம். வட நாட்டிலே பத்து மணிக்கு முன்னால் யாரும் எழுந்திருக்க முடியாது. அந்த அளவுக்குக் குளிர் அங்கே இருக்கும். அதேமாதிரிதான் வெய்யிலும் நிறைய அடிக்கும். இதை எதற்குச் சொல்கிறேன் என்றால் இந்த சூழ்நிலையில் பழகி, அதற்கு ஏற்றாற்போல் சூழ்நிலையும் மாறி பழக்க வழக்கங் களும் மாறுகின்றன. ஆனால் பக்தி குறையவில்லை. ஒவ்வொரு தேசத்திலும் இதே மாதிரி நல்ல பக்தியிருந்தால்தான் நாடு முன்னேறும்.

எவன் ஒருவன் கடவுளை துவேஷிக்கிறானோ அவனுக்கு ஒரு மடங்கு பாவம்தான். ஆனால் அதைக் கேட்பவனுக்கு அதைப்போல இரண்டு மடங்கு பாவம். இதை மக்கள் உணர வேண்டும். மக்கள் எல்லோரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். நல்லது கேட்பவனுக்கு இரண்டு மடங்கு நல்லது நடக்கும். அதனாலேயே கிடைக்கிற புண்ணியம் நிறைய உண்டு. அதே மாதிரி நாம் எல்லோரும் நல்ல விஷயங்கள் கேட்பதிலேயும் செய்வதிலேயும் நிறைய பங்கு கொள்ள வேண்டும். குறைந்தபட்சம் எல்லோரும் சனிக்கிழமையாவது கோவிலுக்குப் போகும் பழக்கத்தை வைத்துக்கொள்ள வேண்டும். வேதபாராயணம், பஜனை, கடவுள்துதி முதலிய வைகள் நாம் நிறையச் செய்யவேண்டும். பக்தி நமது வழக்கத்தில் முக்கியமாக இருக்கவேண்டும். அதுவே முக்திக்கு ஏற்ற வழியாகும்.

கிருஷ்ணன்–ஜகத்குரு

வசுதேவ சுதம் தேவம் கம்ச சாநுர மர்த்தனம்
தேவகி பரமானந்தம் கிருஷ்ணம் வந்தே ஜகத்குரும்.

இந்த உலகத்திலே எல்லா இனங்களிலும், தாயாராகவும், தகப்பனாராகவும் இருப்பவர் பார்வதி, பரமேஸ்வரன். நம்முடைய தேசம் நாம் வசிக்கும் இடம் எல்லாம் மனுஷனைச் சேர்ந்தது. அதே மாதிரி விசாலமான எண்ணத்துடன்கூட மனிதனுக்குள்ளே தாயாராகவும், தந்தையாகவும் பார்வதி பரமேஸ்வரன் இருக்கிறார்கள்.

குரு யார் என்றால் அவர்தான் கிருஷ்ண பரமாத்மா. உலகில் எல்லோருக்கும் குருவாக உள்ளவர் கிருஷ்ண பகவான்தான். இவ்வளவு உயர்ந்த ஒரு பாரம்பர்யத்திலே வந்ததுதான் மக்கள் சமுதாயம். தட்சிணாமூர்த்தியையும் குருவாகச் சொல்வதுண்டு. ஆனாலும்கூட ஜகத்குரு என்று சொல்லும்போது பழங்காலம் தொட்டு நமக்கு குருவாக இருக்கும் பெருமை கிருஷ்ண பகவானுக்கு மாத்திரம்தான் உண்டு.

உலகத்தில் எத்தனையோ சமயங்கள் இருக்கின்றன. மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் நம்மை ஏற்றுக் கொண்டால்தான் நாம் ஜகத்குருவாக முடியும் என்று சொல்லலாம். யார் நமக்கு வாழ்க்கையில் நல்லதைச் செய்து நல்லதைக் கொடுத்து வழிகாட்டியாக இருக்கின்றானோ அவனே ஜகத்குரு. அப்படி வந்தவர் கிருஷ்ண பகவான் மாத்திரம் என்றுதான் சொல்ல வேண்டும். அவருடைய கருத்து எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கிறது. அந்த மாதிரி கிருஷ்ண பரமாத்மா நாம் எல்லோரும் இன்பமாக வாழ்வதற்கென்று பகவத் கீதை மூலம் ஒரு வழி காட்டியாக வந்துகொண்டு இருக்கிறார். உலகத்தில் எத்தனையோ நூல்கள் இருக்கின்றன. பகவத் கீதை ஒன்று தான் மிகவும் பிரபல்யமாக நம்மிடம் இருக்கிறது. வெளி

நாட்டிலே இருப்பவர்களுக்குக்கூட கீதையைப் பற்றி மிகவும் தெரியும். எல்லோருக்கும் ஒரு பொதுவான நூலாக கீதை அமைந்திருக்கிறது. நான் மதுரையிலே இருந்தபோது உலக சமய மகாநாட்டின்போது எல்லோருக்கும் பொதுவாக சிறந்த கருத்தைக் கூறக்கூடிய நூல் தேவை என்று எல்லாரும் கேட்டபோது நான் கீதையைக் குறிப்பிட்டேன்.

கிருஷ்ண பகவான் கடவுளைக் கும்பிடு என்று சொல்கிறாரே தவிர என்னைக் கும்பிடு என்று சொல்லவில்லை. பொதுவாகச் சமயச் சொற்பொழிவு என்று சொல்லும்போது அதற்கு ஒரு முறை இருக்கிறது. முதலில் குருவைப் பிரார்த்தித்து, பிறகு தான் ஆரம்பிப்பார்கள். குருவின் அருள் இருந்தால்தான் நமக்கு எல்லா அருளும் கிடைக்கும். அந்த வகையிலே பகவானே அருளிய நூல் கீதை என்று சொல்வார்கள். ஆனால் எந்தெந்த மதத்தை யார் உலகத்திற்கு வெளிச்சமாகக் கொண்டு வந்தார்களோ அவர்களையே பகவானாக வைத்துக் கொள்ளவேண்டும் என்று சொல்வார்கள். கீதை அந்த மாதிரி இல்லை. வேத, உபநிஷத்துக்களை எடுத்துச் சொல்லுகிறது. கீதை மக்களுக்குப் புரியும்படியாகவும், வழிகாட்டியாகவும் இருக்கிறது. உனக்கு எது நல்லது எனப்படுகிறதோ அதையே செய் எனச் சொல்லுகிறது. கிருஷ்ண பகவான் கீதையிலே அர்ஜுனனுக்கு அதையேதான் கூறுகிறார். பொதுவாக உபதேசம் நடக்கின்றது என்றால், மிக அமைதியாக, சாந்தமாக இருக்கும் இடத்தில் பண்ணுவார்கள். ஆனால் கீதையோ குருக்ஷேத்திரம் என்னும் இடத்திலே, எந்நேரத்திலே சங்கநாதம் கேட்குமோ என்ற நிலையிலே, லட்சக் கணக்கான வீரர்கள் விதம் விதமான ஆயுதங்களைக் கையில் வைத்துக்கொண்டு யுத்தம் செய்ய இருக்கும் நேரத்திலே, பகவான் அர்ஜுனனுக்கு உபதேசம் பண்ணுகிறார். பகவத் உபந்யாசம் இது.

பொதுவாக உபதேசம் பண்ணுகிறவர்கள் மேலேயும், கேட்கிறவர்கள் கீழேயும் உட்கார்ந்து இருப்பது பொதுவழக்கம் ஆனால் கீதையிலே அவர் தேரோட்டியாகக் கீழே உட்கார்ந்து இருக்கிறார், அர்ஜுனன் மேலே எஜமானனாக உட்கார்ந்து

கொண்ருடிக்கிருர். அது அந்த பகவத் கீதையிலே பகவாஞல் தான்முடியும். குருவாக இருந்தாலும் தேரோட்டி என்ற முறையிலே இருந்து நீ என்ன சொன்ஞலும் நான் அதைக் கேட்கிறேன், அதன்படி நடக்கிறேன் என்று கூறுகிருனே தவிர, எஜமானன் என்ற அகம்பாவம் சிறிதும் வரவில்லை. அவன் கிருஷ்ணனை சாதாரண தேரோட்டி என்று நினைக்க வில்லை. கிருஷ்ணனை குருவாக ஏற்றுக் கொண்ட பிறகுதான் உபதேசமேஆரம்பிக்கப் படுகிறது. "அரசன் என்ருல் சண்டை வரும், அதஞல் பலர் உயிர் இழக்க நேரிடும். அரசன் என்ருல் நல்லது, பொல்லாதது எல்லாம்தான் வரும்" எனக் கூறிய வுடன் அவன் தன்னை மறக்கிருன். யுத்தம் செய்ய ஆயத்தம் ஆகிருன். கீதை உண்டான இடம் தர்ம பூமி, குருக்ஷேத்திரம். அது உலகத்திலேயே ஒரு புண்ணியமான இடம். கீதையிலே முதல் அத்தியாயத்திலே 'தர்மக்ஷேத்ரே, குருக்ஷேத்ரே' என்று சொல்லப்படுகிறது.

இந்த பாரத நாட்டிலே,தர்மத்தைத் தவிர, கடமையைத் தவிர, வேறு எதுவும் ஏற்பட்டிருக்கமுடியாது. தர்மம் என்று சொல்லும்போது எவன் ஒருவன் தன் கடமையைச் செய் கிருனே அதுவே தர்மம். ஆனுல் இந்தக் காலத்தில் தவறுகளுக் குப் பிராயச்சித்தமாக தானம் முதலியவைகளைச் செய்வது இப்போது தர்மமாகக் கருதப்படுகிறது. தன் கடமையை மற வாமல் இருக்கும் வரை பிரச்சினை நாட்டிலே இருக்காது. கடமையை மறந்து மற்றவன்விஷயத்தில்தலையிடுவதால்தான் நாட்டில் பிரச்சினையே ஏற்படுகிறது. அர்ஜுனனுக்கு அன்று அதைத்தான் இறைவன் சொன்ஞர். "நீ உன் கடமையைச் செய்" என்ருர். கீதையில் துயரம், பக்தி, இன்பம் போன்றவை களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.சாப்பிட வேண்டியவை களைப் பற்றிச் சொல்லப் பட்டிருக்கிறது. செய்ய வேண்டிய கடமைகளைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அவனவன் கடமையைச் செய்து கொண்டிருந்தால் இந்த நாட்டில் ஏழ்மைப் பிரச்சினை இருக்காது.சரியாகக் கடமையைச் செய்து வருவதுதான் தருமம் என்று அர்த்தம். 'காம குரோதங்களை அகற்ற தினமும் ப்பியாசம் செய்யவேண்டும்,' என்று கூறு

கிறுர். ஆகாரத்தில் சுத்தமாக இருந்தால்தான் நம் கடமையைச் சரிவரச்செய்யமுடியும் என்று கூறுகிறுர். ஆகார சுத்தம் சத்வ சக்தி எனக் கூறப்பட்டிருக்கிறது. தூய்மையான எண்ணத்தோடு சாப்பிடவேண்டும் முறையில்லாமல் சாப்பிடக் கூடாது. நல்ல சிந்தனையோடு சாப்பிடவேண்டும்.

தியானம், தானம் பற்றியும் நிறையச் சொல்லி இருக்கிறுர். நல்லஎண்ணங்கள் உண்டானுல் நல்ல செயல்கள் உண்டாகும், கீதையிலே 18 அத்தியாயங்கள் உள்ளன. அவற்றில் கடைசி இரண்டு அல்லது மூன்று அத்தியாயங்களைப் படித்தால் மட்டுமே போதுமானது. அதிலேதான் முக்கியமான நிறைய விஷயங்கள் கூறப்பட்டிருக்கிறது. தனக்கு ஏற்பட்ட கடமையைச் செய்வதன் மூலமாக நாம் கடவுளைக் காணமுடியும். இதையெல்லாம் சொல்லி அர்ஜுனனை யுத்தம் செய்யும்படி சொல்லுகிறுர்.

''சொர்க்கத்திற்குச் செல்லவேண்டுமானுல் நீ உன் கடமையைச் செய். நீ ஜெயித்தால் உனக்குப் பெயரும், புகழும் கிடைக்கும். ஆகவே யுத்தத்தைச் செய்'' என்கிறுர். ஆகவே கடமையை மூலமாக வைத்துக்கொண்டு அருள் பாலிக்கிறுர் என்று சொல்லப்படுகிறது.

பகவான் எவ்வளவு முக்கியமோ, அதைக்காட்டிலும் பகவான் உபதேசம் மிக உயர்ந்தது. ''நல்லது பொல்லாதது அனைத்தையும் என்னிடம் விட்டுவிடு. நான் உன்னை துன்பம் பாவத்திலிருந்தும் விடுதலை பண்ணுகிறேன். உன்னைத் துன்பம் இல்லாதவனுக ஆக்குகிறேன்'' என்றுர். ஆகையால் நாம் எல்லோரும் பக்தியின் தத்துவத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும். அதன் பிரகாரம் வாழ்க்கையை நடத்த முயற்சி செய்ய வேண்டும். அதற்கு நல்ல நூலைப் படிக்க வேண்டும். அந்த நூல் கீதை என்று சொல்லலாம். அவரவர் சூழ்நிலைக் கேற்றவாறு, தகுதிக்கேற்றவாறு எல்லா விஷயங்களும் சொல்லப்பட்டிருக்கிறது கீதையில். ஆகையால் கீதையை எல்லோரும் நன்கு படித்து விஷயங்களைத் தெரிந்து கொண்டால் பலனடையலாம்.

சமூகசேவையும்-இறைவழிபாடும்

முக்கியமாக ஒரு சமயம் வளர வேண்டுமானால், மதம் வளரவேண்டுமானால், இந்த இரண்டும் பிணைந்து செயல்பட வேண்டும். இதற்காக சமயப் பிரசார சொற்பொழிவுகள் செய்து கருத்துக்களை எல்லோருக்கும் ஏற்கும்படியாகச் செய்ய வேண்டும். மற்றொரு முறையில் சமூக சேவை செய்து, பரஸ்பரம்ஒத்துழைப்புக்கொடுத்து, அதன் மூலம்நம்மிடையே ஒரு பழக்கம் ஏற்பட்டு நம்பிக்கை இறைவனிடம் வரச்செய்ய வேண்டும். அப்படியாக இறைவனை அடைவதற்குரிய பலவழிகளில் சமூகசேவை முக்கியமான ஒன்று. இதற்கு எல்லோருக்கும் தேவையான ஒரு சூழ்நிலையை உண்டாக்க வேண்டும். அந்தமாதிரி ஒரு சூழ்நிலையைப் பயன் படுத்திக்கொண்டு, பல சமயங்கள் நன்றாக வளர ஆரம்பித்து இருக்கின்றன.

ஆனால், இந்த மாதிரி சமூகசேவைகளைச் செய்து, 'சமூகத் தொண்டன்' என்ற பெயரால் தன் உடலையும், தன் நலனையுமே பலர் பார்த்துக் கொள்கின்றனர். அந்த மாதிரிசமூகசேவைகள் நாளடைவில் மறைந்துவிடும். இந்தக் காலத்திலே எவ்வளவோ ஸ்தாபனங்கள், ராமகிருஷ்ண மிஷன் போன்றவைகள் சமூக சேவைசெய்து வருகின்றன. இந்த மாதிரி சமூகசேவை பண்ணி அதன் மூலமாக சமயத்தை வளர்ப்பது, நாட்டில் ஒரு முக்கியமானதாக ஏற்பட்டுவிட்டது. இதற்கு முதலில் சாதுக்களை தயார் பண்ணவேண்டும். பிறகுதான் அவர்கள் மூலம் சேவை செய்கிறார்கள். முதன் முதலாக நாங்கள் வேலூரில் சமூக சேவை ஸ்தாபனத்தை ஆரம்பித்தோம். அந்த ஊரில் பலர் வந்து வைத்தியம் செய்து கொண்டும், பல கைங்கரியம் செய்து கொண்டும் வருகிறார்கள். அதற்குப் பிற்பாடுதான் கொஞ்சம் கொஞ்சமாக எல்லா இடத்திலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முக்கியமாக டாக்டரின் தேவை அதிகமாகிறது.

காசு கொடுத்து எல்லோரையும் சம்பாதித்துவிட முடியாது. டாக்டர்கள் தாங்களாக சேவை செய்ய முன்வர வேண்டும். வேலூரில் டாக்டர்கள் இந்த சேவைகளை மாறி மாறிச் செய்து வருகின்றனர். சேலத்திலுள்ள மேட்டூரிலும் இந்த மாதிரி ஒரு திட்டத்தை ஆரம்பித்து சேவைகள் செய்து வருகிறோம்.

நான் ஒருமுறை ஜெயிலுக்கு விஜயம் செய்து அங்குள்ளவர்களுக்குசமயப்பிரசாரம் செய்தேன்.அவர்கள் கடவுள்பக்தி நிறையக் கொண்டிருந்தார்கள். அவர்கள் படிப்பதற்கு புத்தகங்கள் வேண்டும் எனக் கேட்டார்கள். அவர்களுக்காக அங்கேயே ஒரு லைப்ரரிஏற்படுத்தி அதன் மூலம் நிறைய சமயப் புத்தகங்கள் வழங்க ஏற்பாடு செய்துள்ளோம். மேலும் பல ஊர்களில் இந்த சமயப் பணி, சமூகப் பணி செய்ய நிறைய கமிட்டிகள் ஏற்படுத்தித் தொண்டு செய்து வருகிறோம். முக்கியமாக கிராம ஜனங்களுக்கு இந்தப் பணிகள் மிகவும் தேவை. அவர்களுக்கு இருக்கும் சமூகப்பணி ஆர்வம் வேறு யாருக்கும் கிடையாது. எப்படியாவது டாக்டர்கள் தங்கள் கிராமங்களுக்கு வந்தால் போதும் என்கிறார்கள். கும்பகோணம், மாயவரம், சிதம்பரம் போன்ற இடங்களில் எல்லாம் இதைத் தொடங்கினோம். இந்த இடங்களில் எல்லாம், டாக்டர்களும், மெடிக்கல் ரெப்ரசென்டேடிவ்களும் மிக்க ஒத்துழைப்புத் தருகிறார்கள். இது தொடர்ந்து நடத்த வேண்டிய பணி. ஆகையால் பொது ஜனங்கள், பிரதிநிதிகள் டாக்டர்கள் நிறைய உதவி செய்ய வேண்டும்.

பொதுவாக ஒரு உடல் அடுத்த உடலுக்கு உதவுவதாக இருந்தால்தான் நாம் எல்லோரும் பிழைக்கமுடியும். அந்த மாதிரி சமூகசேவை வீட்டிலே இருந்து தொடங்கி கிராமங்கள் வரை நடைபெற்று வரவேண்டும். இதனால்தான் சமுதாயம் முன்னேற முடியும். இலக்குவன், இராமனுக்கு செய்த சேவை மிகப்பெரியது. அதுபோல தியாகபுத்தி நமக்கு நிறைய இருக்க வேண்டும். நமக்குபலவிதமானவேலைகள் இருக்கலாம்.இருந்த போதிலும் அவைகளைப் பொருட்படுத்தாமல் பல ஜனங்கள் தொண்டாற்றிவருகிறார்கள். அவர்களுக்கு எல்லாம்காமாட்சி

பிரசாதம் கொடுக்கிறோம். இந்த மாதிரி நல்ல காரியங்களில் ஈடுபட்டால் நல்லது நமக்கு ஏற்படும். நமக்கு ஆத்ம திருப்தி ஏற்படும்.

பிடி அரிசித் திட்டம் என்று ஒரு திட்டம் வைத்து இருக்கிறோம். இதனால் கிடைக்கும் அரிசியை வைத்துக்கொண்டு கோவில்களுக்கு இதைக் கொடுத்து நிவேதனம் பண்ணச் சொல்லி பிறகு எல்லா ஏழைகளுக்கும் உணவு வழங்க ஏற்பாடு செய்து வருகிறோம். ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொருவரும் இவ்வாறு பிடிப்பிடியாகச் சேர்த்து வைக்கும் அரிசியை சில தொண்டர்கள் வீட்டிற்கே வந்து சேமித்துச் செல்கிறார்கள். பல இடங்களிலும் எல்லோரும் கொடுக்கிறார்கள். ஆகையால் ஜனங்கள் மனம் வைத்தால் அந்த மாதிரிச் செயல்களைச் செய்யக்கூடிய சூழ்நிலை ஏற்படும். வட நாட்டிலே அரிசி இல்லாததால் ரொட்டி முதலானவைகளைச் செய்து கொடுக்கிறார்கள். அதிலே அவர்களுக்கு அதிக ஈடுபாடு இருக்கிறது.

இந்த ஆஸ்பத்திரி, பிடி அரிசித் திட்டம் போன்றவை, ஜெயிலில் உள்ளவர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கிறது. அவர்கள் பஜனை செய்வதைப் பார்க்கும்போது நாம்தான் தவறு செய்தவர்களைப் போலத் தோன்றும். இதை நான் நேரில் சென்றபோது உணர்ந்தேன். டி.பி. ஆஸ்பத்திரியில் இருப்பவர்களுக்கும், குஷ்டம் போன்ற நோய் உள்ளவர்களுக்கும்கூட இந்த உதவி கிடைக்கிறது. ஹோட்டல்கள் வைத்திருப்பவர்களிடம் பட்க்ஷணம் முதலானவைகளையே சேமித்து அவற்றை ஏழைகளுக்குத் தருகிறோம். ஜெயில்களில் இருப்பவர்களுக்கும் ஆஸ்பத்திரியில் உள்ளவர்களுக்கும் கங்கா ஜலம் எடுத்து வரச் சொல்லி தீபாவளி பண்டிகையின்போது சம்ப்ரோக்ஷணம் செய்கிறோம். ஏனென்றால் அவர்கள் நிறைய பக்தியோடு இருக்கிறார்கள். இதில் அவர்களுக்கு திருப்தியும் இருக்கிறது.

ஒரு கதை சொல்வதுண்டு. ஒரு வீட்டில் கணவன், மனைவி மூன்று குழந்தைகள் இருந்தனர். அவர்களிடம் ஐந்து ரொட்டி

கள் இருந்தன. இவர்கள் சாப்பிடுவதற்காக அதை எடுத்த போது கதவைத் தட்டும் ஓசை கேட்டுத் திறந்தபோது ஒருவன் அங்கே இருந்து "அம்மா! தாயே! நான் மிகவும் பசி யோடு இருக்கிறேன். ஏதாவது சாப்பிட இருந்தால் எனக்குக் கொடுங்கள்'' என்றான். அவர்களும் தங்களிடமுள்ள ரொட்டி யில் ஒன்றைக் கொடுத்துவிட்டனர். மற்றதைப்பகிர்ந்து சாப் பிடலாம் என்று எண்ணியபோது, ஒவ்வொருவராக வந்து எல்லாவற்றையும் வாங்கிச் சென்றுவிட்டனர். கடைசியாக ஒரு கிழவன் வந்து 'அம்மா நான் மூன்று நாட்களாகப் பட்டினி ஏதாவது கொடுங்கள்' என்றான். அவர்களுக்கு என்ன செய்வ தென்றே புரியவில்லை. மீதம் இருப்பதோ ஒரே ஒரு துண்டு ரொட்டி. அதையும் கொடுத்துவிட்டால் குழந்தைகள் பட்டினி கிடக்குமே என்று நினைத்தனர். இருந்தாலும் பரவாயில்லை என்று அந்தக் கடைசித் துண்டையும் கிழவனுக்குக்கொடுத்து விட எண்ணி அவ்வாறே செய்தனர். கடைசியில் வந்த கிழவன் மாறுவேடத்தில் வந்தவன். இறைவன் இவர்களது தியாக மனப்பான்மையைப் பார்த்து அதைப்போல் இருமடங்கு அவர் களுக்கு அளித்தான் என்பது கதை. இந்த மாதிரி தியாக மனப் பான்மை எல்லோருக்கும் வரவேண்டும். ஆனால் இன்று அந்த மாதிரி இல்லை.

ஆகையால் நம்மால் முடிந்த அளவு சமுதாயப் பணி செய்யவேண்டும். பிற்காலத்திலே, இந்த சமுதாயம் வளர வேண்டுமானால், சமய-சமுதாயப் பணி பள்ளிக் கூடங்களி லிருந்தே வளரவேண்டும். இதற்குப் பெற்றோர்களும் ஆவன செய்ய வேண்டும்.

ஒற்றையடிப் பாதைபோல் உள்ளது நம் மதம். குறுக்குப் பாதை என்பது தவறு-சுருக்குப் பாதை எனலாம். இந்தப் பாதை ஒருவனால் ஆரம்பிக்கப்படவில்லை. ஸ்ரீ மகரிஷிகள் தொடங்கி இன்றுவரைக்கும் நடந்து வந்த பாதை. ஒற்றை யடிப் பாதையில் நடக்க நடக்கத்தான் பாதை மெருகேறும். ஆனால் தார்ரோடு பார்ப்பதற்கு அழகாக இருக்கும். யாரும்

அதில் செல்லாதவரை. ஆனால் அதில் நடந்து சென்றால் நாளடைவில் பழைய பளபளப்பு இருக்காது. ஆனால் ஒற்றை யடிப்பாதை இதற்கு மாறாக அதில் செல்லாவிட்டால்தான் பாதை தானாக மூடிக்கொள்ளும். அது போன்றது நம் மதம். ஆகையால் நம் மதம் வளர ஒவ்வொருவரும் தங்களால் ஆன முயற்சியை எடுத்துக் கொள்ள வேண்டும்.

அறவழி நடத்தல்

நியாயமான வழியிலே யார் ஒருவன் வாழ்க்கையை நடத்துகின்றானோ அவனுக்கு வழியில் நடக்கின்ற பிராணிகள்கூட அதற்கு உதவி செய்யும். நியாய வழியில் நடக்காதவனுக்கு சொந்த அண்ணன் தம்பிகள்கூட உதவி செய்யமாட்டார்கள் என்பது நீதிமொழி. இதற்கு இராமாயணக் கதையை ஓர் உதாரணமாகக் காட்டலாம். இராம பகவான் தன் வாழ்நாள் முழுவதும் தியாகத்தைச் செய்த ஒரு பெருமான். அவருக்கு உதவியாக ஜடாயு, வானரங்கள் போன்றவைகூட உதவி செய்தன. ராஜ பரிபாலனம் எல்லாம் போய்விட்டது. தனியாக இருக்கும் நேரத்தில் பிராணிகள்தான் அவருக்கு உதவி செய்தன. இராவணனுக்கு சொந்த அண்ணன் தம்பிகள் கூட உதவிகள் செய்யவில்லை. விபீஷணன்கூட இராமன் பக்கம் சேர்ந்து விட்டான். முதலில் கும்பகர்ணன்கூட உதவி செய்ய வரவில்லை. செஞ்சோற்றுக் கடன் தீர்ப்பதற்காகவே உதவி செய்ய வந்தான். இதற்குக் காரணம் தர்ம வழியில் இராவணன் நடக்கவில்லை என்பதாகும். தர்மத்தைக் கொண்டே இராமாயணம் வருகின்றது.

தவறான வழியில் செல்பவனுக்குக்கூட நல்ல காரியங்கள் நடக்கின்றன. இதைப் பார்க்கும்போது நமக்கே ஆச்சரியமாக இருக்கும். நல்ல வழியில் செல்பவனுக்கு முதலில் கெட்டதாகத் தோன்றினால் பின்னுக்கு நல்லதே நடக்கும். என்றைக்கும் நன்மையே வெற்றியடையும். நீதி என்றும் மாறாது. ஆகையால் நியாயத்திற்கும் தருமத்திற்கும் குறைவு கிடையாது. தர்மம், காமம், மோட்சம் என்பவை மனித வாழ்வில் அடைய வேண்டியவை ஆகும். இதை தமிழில் அறம், பொருள், இன்பம், வீடு என்று சொல்வதுண்டு.

கோபத்தை அடக்க வேண்டும். நல்லது எது என்றால் கோபத்தைத் தாழ்த்திக்கொள்வதுதான். கடவுளைமறக்காதே

தெய்வத்தை இகழாதே என்று ஔவை சொன்னார்கள். கோபத்திற்குப் பேர்போனவர்கள் துர்வாசர் விசுவாமித்திரர் இரண்டு பேர்களும்தான். திடீர் திடீரென்று இருவருக்கும் கோபம் வரும்.. கோபத்தினால் எந்த சக்தி நம் மகத்தில் இருந்தாலும் அதை நாம் இழந்து விடுகிறோம். கோபத்தினால் எல்லோரையும் துவேஷிக்கிறோம். கோபத்தைப் பற்றிச் சொல்லும்போது காமம் இல்லையென்றால் கோபமே இல்லை. துர்வாசர் சொல்லும்போது என்னிடத்தில் காமம் இல்லை ஆனால் கோபம் இருக்கிறது என்கிறார்.பந்தை சுவரில்அடிக்கும் போது அது நம்மிடமே திரும்பிவரும். சுவர் இல்லையென்றால் அது தானாகவே போய்விடும். அது போன்றது கோபம்.

சமுத்திர அலை ஓய்ந்தாலும் காம அலை ஓயாது. ஆசை என்பதை ஒரு பண்டம் என்கிறார் ஆதிசங்கரர். ஆசை மனிதனை அரித்துவிடும். ஆசை நிறைவேறாவிட்டால் அதுவே கோபமாக மாறுகிறது. கோபம் குடியைக் கெடுக்கும் என்று சொல்லப்படுகிறது. எத்தனை பூஜை, புனஸ்காரம்,புண்ணியம் பண்ணினாலும் அவை எல்லாம் ஒரே நிமிஷத்தில் கோபத்தினால் பஸ்பம் ஆகிவிடும். இராமாயணமே கோபத்தினால் வந்தது என்பதை அறியலாம். இந்த மாதிரி நமக்கு நேரக் கூடாது என்பதைத்தான் இந்தவரலாறுகள் கூறுகின்றன.

அறம் செய்ய விரும்பவேண்டும். அறம் எது என்றால் உண்மையைப் பேசினால் அது அறம். நாம் பேசும் உண்மை யானது ஒருவருக்குத் துன்பத்தைக் கொடுக்கும் என்று வரும் போது மௌனமாக இருக்கவேண்டும். அதுவும்ஒருஅறமாகும்

ஒரு நாள் ஒரு பெரியவர் காட்டில் தவம் செய்துகொண்டு இருக்கும்போது திருடர்கள் தாங்கள் திருடிய பொருள்களை எங்கே வைப்பது என்று தெரியாமல் திணறியபோது இவருடைய ஆசிரமம் தெரிந்தது. இவர் நிஷ்டையில் இருந்த தால் இவருக்கு எதுவும் தெரியவில்லை. அந்தத் திருடர்கள் ஆசிரமத்திற்குள் உள்ள ஒரு அறையில் சென்று தாங்கள் திருடிய பொருள்களுடன் சப்தம் போடாது உட்கார்ந்து

கொண்டிருந்தனர். இதை உணர்ந்துகொண்ட அவர் காவலர்கள் வந்து கேட்டபோது ஒன்றும் பேசாமல் மௌன மாக இருந்துவிட்டார். அந்தக் காலத்திலே மௌனம்என்பது சம்மதத்திற்குச் சாதகமாக வைப்பது உண்டு. ஆனால் இப்போ தெல்லாம் மௌனம் சாமர்த்தியத்திற்குச் சாதகமாக வைக் கிறார்கள். எப்போதும் நல்ல காரியத்தைச் செய்யும்போது பல இடையூறுகள் வரும். அந்த இடையூறுகளைத் தாங்கிக் கொண்டு அந்த நல்ல காரியங்களைத் தொடர்ந்து எவன் ஒருவன் செய்கிறானோ அவனே உயர்ந்த மனிதன்.

நாம் எல்லோரும் மறு பிறவியிலே நம்பிக்கை உள்ளவர் கள். ஆகையால் இப்போதே நல்லறத்தைச் செய்தால்தான் அடுத்த பிறவியில் சமுதாயம் நல்ல நிலைமையை அடையும். வெளிநாடான எகிப்திலேகூட மறுபிறவியில் நம்பிக்கை வைத் திருந்தனர். அங்கே சென்றால் மலை மலையாக உள்ள பிரமிடு களைக் காணலாம். பிரமிடுகளின் உள்ளே இறந்தவனின் உடலை வைத்து அவனுக்குப் பிடித்தமான எல்லாப் பொருள் களையும் வைத்து மூடுவர். அவன் மறுபடி பிறந்தால் அது அவனுக்கு உதவியாக இருக்கும் என்று நம்பினர். இது எல்லாம் நம்மை அறியாமலேயே ஏற்பட்டதாகும்.

அறம், பொருள், இன்பம், வீடு என்று சொல்லப்படு கிறது. நல்லது செய்தால் பொருள் கிடைக்கும். பொருளின் உபயோகம் அறம். பொருளை இன்பத்திற்காக வைத்துக் கொண்டால் உடனேயே அது போய்விடும். ஒரு சின்ன உதாரணம்.

மாம்பழம் என்றால் சேலத்திலே ரொம்ப பிரசித்தி. தெலுங்கு தேசத்திலே ரசாதி மாம்பழம் மிக ருசியாக இருக்கும். இன்பமாக இருக்கும். அந்த மாம்பழம் எல்லா மாம்பழத்தைப் போல குறைந்த விலைக்குக் கிடைக்காது. ஏழைகள் எல்லாம் இதைச் சாப்பிட முடியாது. இதைச் சாப்பிட வேண்டும் என்று ஏழை ஒருவனுக்கு ஆசை ஏற் பட்டது. அவன் ஒரு ஒரு பைசாவாகச் சேர்த்து வைத்து அந்த மாம்பழ சீசன் வந்ததும் அதை வாங்கினான்.மாம்பழம்

கைக்கு வருமுன் அதை வீட்டிற்குக் கொண்டுபோய்க் கொடுத்து வீட்டில் உள்ள எல்லோரும் சாப்பிடலாம் என்று நினைத்தான். அது உயர்ந்த உள்ளம். ஆனால் மாம்பழம் கைக்குக் கிடைத்தவுடன் புத்தி மாறிவிட்டது. வீட்டிற்குப் போனால் எல்லோருக்கும் பாகம் கொடுக்கவேண்டும் நமக்கு கிடைக்காது என்று நினைத்தான். உடனேயே எண்ணத்தை மாற்றிக்கொண்டான். தானே சாப்பிட்டுவிடலா மென்று எண்ணினான். இதுவரைக்கும் கூட மனித வாழ்க்கையே; தப்பே இல்லை. ஆனால், ஏழை தான் சாப்பிடுவதை எல்லோருக்கும் விளம்பரப்படுத்த எண்ணினான். கையிலே மாம் பழத்தை வைத்துச் சப்பிக்கொண்டே வீதியில் சென்றான். அப்படி நடந்து சென்று கொண்டிருக்கும்போது வேகமாக சைக்கிளில் ஒருவன் வந்து இடித்ததால் கையிலிருந்த மாம்பழம் கீழே விழுந்து மண்ணாகிவிட்டது. கழுவிவிட்டுச் சாப்பிடலாம் என நினைத்து அலம்பினால் எல்லா சாறும் நீரோடு போய்க் கொட்டை மாத்திரம் இருக்கிறது.

வாழ்க்கையிலும் இதுதான் நடக்கிறது. முதலில் இன்ப மாக இருந்தாலும் கடைசியில் துன்பமே கிடைக்கிறது என் பதை நினைக்கிறான். வீட்டிற்குச் சென்றிருந்தால் எல்லாரும் சாப்பிட்டிருக்கலாம் என்று நினைக்கிறான்.

இன்பத்தைப் பற்றிச் சொல்லும்போது ஆற்று மணலில் நீரை ஊற்றினால் அது மேலே வரவே வராது. அது போன்றது இன்பமாகும். வீடு என்பது பகவான் இருக்குமிடம். அதுதான் உண்மையான வீடு. இதைத்தான் மோட்சம் எனச்சொல்வார்கள். கடவுளுக்கே நம்முடைய கடமையைச் செய்தோமானால் நமக்குக் கடைசியாகக் கிடைப்பது மோட்சம். ஆகையால் நாம் எல்லோரும் அறவழியில் நடக்கவேண்டும். நல்லது செய்யும்போது பல இடையூறுகள் ஏற்படும். இவற்றையெல்லாம் பொருட்படுத்தாது, அந்த இடையூறுகளை எதிர்த்து, மனம் தளராமல் முயற்சி செய்து, நல்லவைகளைச் செய்ய வேண்டும். அறமே கடைசியில் நம்மைக் காப்பாற்றும். ஆகையால் எல்லோரும் அறவழியை மேற்கொள்ள வேண்டும்.

கனவு-பரம்பொருள்-கோமாதா

ஒரு நாளானது மூன்று நிலையை அடையும். மனிதன் விழித்துக் கொண்டிருப்பது, கனவு காண்பது, தூங்குவது இந்த மூன்று நிலையிலும் மனிதன் ஒரு நாளில் இருக்கிறான். காலை வேளையில் எழுந்தால் உடலுக்கும் ஆரோக்கியம். எல்லோரும் காலை 4-30 மணிக்கு எழுந்திருக்கவேண்டும். மத்தியான வேளையில் சாப்பிட்ட பிறகு கொஞ்சநேரம் ஓய்வு, எடுக்கவேண்டும். இரவில் படுத்த பிறகு கனவு வந்தால் அது பலிக்கும் என்பார்கள். அதே கனவு விடியற் காலையில் வந்தால் பலிக்காது. காலை 4-30 மணி முதல் இரவு 9 மணி வரைக்கும் நம் கடமைகள் வேலைகள் எல்லாவற்றையும் செய்யவேண்டும். இப்படி உடல் நிலையை அனுசரித்துத்தான் 3 நிலைகளை மனிதனுக்குக் கடவுள் வைத்திருக்கிறார்.

இதிலே மனித வாழ்விற்கு இரண்டு இருந்தால் போதும். கனவு என்பது தேவை இல்லை. கனவு என்பது நாம் தூங்கும் போது எதை நினைத்துக்கொண்டு படுக்கின்றோமோ அதே கனவிலும் வரும். சிலர் இரவில் எதையாவது படித்துக்கொண்டிருக்கும்போது அப்படியே தூங்கிவிடுவார்கள். அதுவே கனவிலும் வரும். ஆனால் இந்த எல்லாவற்றையும் மீறி ஒன்று வரும். அதுதான் பலிக்கக்கூடிய கனவு. இந்த மாதிரிக் கனவுகள் எல்லாம் மிகக் குறைச்சலாகத்தான் இருக்கும். மற்ற கனவுகள் எல்லாம் தேவை இல்லாத கனவுகள். பொதுவாகக் கனவு இல்லை என்றால் முக்கியமாக நாம் வாழ்க்கையில் முன்னேற முடியாது. கனவு வாழ்க்கையைத் தெளிவுபடுத்த உபயோகமாக இருக்கும் என்பது தெரியவருகிறது. இதைப் பார்க்கும் போது கனவு தேவை எனலாம் ஒருவனுக்குக் கனவில் கடவுள் நினைப்பு வந்தால் அது நல்லது. நல்ல சிந்தனை செய்கிறோம். கங்கையிலே ஸ்நானம் செய்கிறோம் என்பது போன்ற கனவுகள்

வந்தால் நல்லது நடக்கும். கனவுகள் ஓரளவு சீர்த்திருத்தத்தை வாழ்க்கையிலே ஏற்படுத்திக்கொள்ள உதவுகிறது. கனவுபோல் உலகம் இருக்கிறது. கனவு எதுவரைக்கும் இருக்குமோ, அது வரைக்கும் நல்லது. கனவு நம்முடைய மனத்திலிருந்துதான் வருகிறது. வேதங்களும்கூட கனவுகளைக் குறித்துச் சொல்லி இருக்கின்றன.

ஒரு மனிதன் உள்ளது உள்ளபடி சொல்கிறான் என்றால் அது மூன்று பேர்களிடம்தான் உள்ளது. (1) குழந்தை (2) பைத்தியம் (3) பிசாசு. இவைகள்தான் உள்ளதை உள்ள படி சொல்லும். மனிதன் மனத்தில் ஒன்று நினைத்தால் செயலில் ஒன்றாகச் செய்கிறான். ஆனால் மேற்சொன்ன மூன்றும் இப்படி இல்லை. குழந்தைகள் மனசிலே ஒன்றும் வைத்துக் கொள்ளாது. இதுதான் நிஜமான குழந்தைக்கு அடையாளம். நான் எத்தனையோ ஊர்களின் ஜெயிலுக்குச் சென்றுள்ளேன். மதராஸில் கீழ்ப்பாக்கம் சென்றபோது எல்லோரும் பக்தியோடு பஜனை செய்தார்கள். குதித்துக் குதித்து களங்கமில்லாமல் பஜனை செய்தார்கள். பைத்தியங்களிடம் நல்ல சுபாவம் உள்ளது.

இதே மாதிரி குணசேகரம் என்று ஒரு ஊர். இங்கே பிசாசு பிடித்தவர்களுக்கு வைத்தியம் செய்கிறார்கள். அவர்களும் மனசில் ஒன்றும் வைத்துக் கொள்ளாமல் நினைத்ததை நினைத்தபடி செய்வார்கள்.

அப்பய்ய தீட்சிதர் என்று ஒரு பெரியவர் இருந்தார். அவர் நூற்றுக் கணக்கான நூல்களை எல்லாம் எழுதி இருந்தார். அவர் காலத்தில் வைணவம், சைவம் இரண்டும் ஒன்றாக விளங்கிக் கொண்டிருந்தது. அவர் பாரபட்சம் இல்லாமல் எல்லா சமயத்தினருக்கும் நூல்களை எழுதிக் கொடுத்தார். அவ்வளவு கெட்டிக்காரர் அவர். இவரைப்பற்றி பல பேர் பொறாமைகொண்டு பலவாறாகப் பேச ஆரம்பித்தனர். இதைக் கண்டதும் இவருக்குச் சந்தேகம் வந்தது. ஏனென்றால் பலபேர் சேர்ந்து ஒரு பொய்யை அடித்துச் சொன்னால் அதுவே

நிஜமாகி விடும். தம்மைப்பற்றிய அவதூறுகளை எண்ணிப் பார்க்க இரவில் கனவு கண்டு பார்த்தார். கனவில் அவருக்குக் கடவுள் ஞாபகம்தான் வந்தது. இவர் ஒரு நூல் எழுதியுள்ளார். அந்த நூலில் முதலில் உலகைப் படைத்தவன் ஒருவன் இல்லாமல் இருக்கமுடியாது என்றுதான் ஆரம்பிக்கிறார். கடவுள் இருக்கலாம் என்பதை நம்ப வைக்கிறார். அந்த சக்திக்கு என்ன பெயர் என்று சொல்லமுடியாது. இதை இயற்கை என்றும் சொல்லமுடியாது. அதற்கு கடவுள், பரமாத்மா என்று சொல்லப்படுகிறது.

தும்பைப்பூ, எருக்கம் பூ என்று இரண்டு பூக்கள் உண்டு. இவை பஜாருக்கு வருவதில்லை. இந்த இரண்டு பூவும் விலை மதிப்பில்லாதது. இறைவனுடைய சிரசில் இந்த இரண்டையும் வைத்துவிட்டால் மோட்ச சாம்ராஜ்யம் கிடைக்கும். பரமேஸ்வரன் தலையில் வைக்கும் இந்தப் பூவை விலை கொடுதது வாங்கலாம். ஆனால் மோட்சத்தை விலைகொடுத்து வாங்க முடியாது. இப்படி ஒரு இடத்திலே சொல்லும்போது இறைவன் பெரியவனா, அதற்கு மேலே மனிதன் பெரியவனா என்று ஒரு சர்ச்சை. இறைவன் சக்தி யாருக்கும் கிடையாது! இறைவனினும் உயர்ந்தது தும்பைப்பூ, எருக்கம்பூ இரண்டும் என்று சொல்லப்படுகிறது. அதற்கு மேலும் உயர்ந்தவன் மனிதன். அதனினும் உயர்ந்தது அவனது கை. இதைப்பற்றி அவர் சொல்லும்போது, 'லிங்கம் ஒன்று இருக்கிறது. லிங்கத்தின் மேல் தும்பைப்பூ, எருக்கம்பூ வைக்கப்படுகிறது. இதனால் லிங்கத்தைவிட உயர்ந்தது பூ. இதைவிட உயர்ந்தது மனிதனுடைய கை. ஏனென்றால் பூ வைக்கும்போது பூவிற்கும் மேலேதான் கை இருக்கிறது' இதை வைத்துத்தான் சொல்கிறார். இறைவனைவிட மனிதன் உயர்ந்தவன் என்று. இந்த மாதிரிக் கற்பனை பண்ணி இறைவனை அடைய நிறைய பத்யங்கள் பாடியுள்ளாரர்.

அப்பய்ய தீட்சிதர் பக்தியைப் பற்றிச் சொல்லும் போது ஆத்ம சிந்தனைதான் உண்மையான பக்தி என்கிறார். ஒருவர் கூறும்போது சிவன், விஷ்ணு இரண்டு பேரும் எனக்கு

ஒரே மாதிரிதான், இருந்த போதிலும்கூட எனக்கு அதிக பக்தி சிவனிடம்தான் இருக்கிறது என்கிறார். அதே மாதிரி இன்னொருவர், நான் சிவ பக்தன்தான், ஆனாலும்கூட என்னுடைய ஞாபகம் எல்லாம் விஷ்ணுவிடம்தான் இருக்கிறது என்றார். சைவத்திற்கு அடையாளமாக விபூதி சொல்லப் பட்டு இருக்கிறது. வைணவத்திற்கு அடையாளமாக திருமண் சொல்லப்படுகிறது. மாத்வத்திற்கு அடையாளமாக கோபி சந்தனம் சொல்லப்பட்டிருக்கிறது. இதைத்தவிர வீர சைவம் என்று ஒன்றுண்டு. இவர்கள் லிங்கத்தைக் கழுத்தில் கட்டிக் கொண்டு இருப்பவர்கள். சைவத்தில் சிவன் ஒருவனைத்தான் பரம்பொருள் என்கிறார்கள். வைணவத்தில் விஷ்ணு ஒருவரே பரம்பொருள் என்கிறார்கள். ஆகையால் இறைவன் ஒருவனே என்ற தத்துவம் அவர்களிடம் உள்ளது.

பொதுவாகச் சொல்லும்போது பல நாம ரூபம் கொண்ட கடவுள் எல்லோரையும் ஒரே மனத்துடன் கும்பிடு என்று சொல்லப்பட்டிருக்கிறது. எல்லோரையும் பரம் பொருளாகச் சொல்லியவர் ஆதி சங்கரர் ஒருவர்தான். பல வடிவங்களில் இருந்தாலும் இறைவன் ஒருவனேதான் என்பதை நினைத்துக் கொள்ளவேண்டும். புராண காலத்திலேகூட வேறுபாடுகள் இருந்தாலும் மூர்த்திபேதம் பார்க்காமல் தொண்டு செய்து வந்தனர். ஏற்றத்தாழ்வு பார்க்காமல் நாம் வணங்கவேண்டும் என்பதையே இது குறிக்கிறது. இறைவனுள்ளே இவர் பெரியவர், அவர் பெரியவர் என்று சொல்லவேண்டிய அவசியம் இல்லை. இதைத்தான் புராணங்களிலும் முறையாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. அந்த மாதிரி ஒரு பொதுவான எண்ணம்தான் நம்மிடையே இருந்துவருகிறது. விபூதி, திருமண், சந்தனம் எல்லாமே நல்லதுதான். அவரவர் மதத்திற்குத் தக்கபடி இதை இட்டுக்கொள்கிறார்கள். எல்லாவற்றிற்கும் அடையாளமாக 'ஸ்ரீ' என்று சொல்வதுண்டு. 'ஸ்ரீ' நம்மிடையே இருந்தவரை நல்லது நடந்தது. இப்போது 'ஸ்ரீ' போய் 'திரு' வந்துவிட்டது. 'ஸ்ரீ'க்கும் 'திரு'வுக்கும் பல வேறுபாடுகள் உள்ளன. உதாரணமாக 'ஸ்ரீ' காளஹஸ்தி

என்ற பெயர் இப்போது 'திரு'க்காளஹத்தி என்று மாறிவிட்டது. 'ஸ்ரீ' என்ற பாம்பு, 'காளம்' என்றால் பூச்சி, ஹஸ்தி என்றால் யானை. இவை மூன்றும் சேர்ந்து பூஜித்த இடம்தான் 'ஸ்ரீ' காளஹஸ்தி. ஆனால் திருக்காள ஹத்தி என்று மாறியதால் பொருளே மாறிவிட்டது. 'ஸ்ரீ' என்பது மங்களகரணம். அதுவே இப்போது 'திரு' என்று மாறிவிட்டது.

அந்த முறையிலே விபூதிக்கு ஐஸ்வரியம் என்று பெயர். அம்மன் ஞாபகத்தை உண்டாக்குவது குங்குமம், சந்தனம், திருமண், விபூதி, குங்குமம் இவைகளை இட்டுக்கொள்வது பழக்கத்திலே வந்த முறை. உலகத்திலே எத்தனையோ பிராணிகள் இருந்தாலும் பசுவைத்தான் நாம் தெய்வமாக வணங்குகிறோம் பசுவைத்தான் கோமாதா என்கிறோம். தாய்க்கு அடுத்தபடியாக பசுவைத்தான் மாதா என்கிறோம். அந்த அளவுக்கு பசு புனிதமானது. பஞ்சகவ்யம் என்று ஒன்று உண்டு. பசும்பால், பசும்நெய், பசுவின் சாணி, பசுவின் மூத்திரம், பசுந்தயிர் இவை எல்லாம் சேர்ந்தவைக்கு பஞ்சகவ்யம் என்று பெயர். இதைச் சாப்பிட்டால் சகல வியாதிகளையும் போக்கக் கூடிய சக்தி உண்டு. கிராமங்களில் வீடுகளை சாணத்தால் மெழுகி இருப்பார்கள். இது தீய பூச்சிகளை அண்டவிடாமல் தடுக்கும். அந்த சக்தி இதற்குண்டு. பசுவின் பின்பக்கத்திலேயே லக்ஷ்மி இருப்பதாகச் சொல்லப்படுகிறது. பூஜை நடத்தும்போது பசுவின் பின்பக்கத்தைத்தான் தெரியும்படி வைத்து இருப்பார்கள் பசுவின் பின்பக்கத்திலேயும், யானையின் தலைப்பக்கத்திலேயும் லக்ஷ்மி இருக்கிறாள். காலையிலே எழுந்தவுடன் இந்த இரண்டையும் பார்த்தால் புண்ணியம் உண்டு என்பார்கள். பசு மாட்டின் பின் பக்கத்திலே இருந்து வரும் சாணத்திலேயேதான் விபூதியைச் செய்கிறார்கள். விபூதி இதனால் மிகவும் உயர்ந்தது. நம் நாட்டிலே அப்பர் ஞானசம்பந்தர் போன்ற பெரியோர்கள் இருந்தனர். இப்போது உள்ளதுபோல் மைக் அந்தக் காலத்தில் இல்லை. சமயத்தை வளர்க்க விபூதியைத்தான் பயன்படுத்தினர். வழியில் செல்லும்போது எல்லோருக்கும் விபூதியைக் கொடுப்பார்கள். திருநீறு வரக்கூடிய இடம் பசுமாடு.

இவ்வளவு மங்களங்கள் நிரம்பிய பசுவையும், கன்றையும் சுற்றி வந்தால் எல்லாக் குறைகளும் நமக்கு நிவர்த்தி ஆகும். தாய்ப் பாலுக்குப் பிறகு சாப்பிடுவது பசுவின் பாலைத் தான். ஆகையால் பசு மாட்டைக் காப்பாற்ற எல்லா முயற்சிகளையும் நம்மால் இயன்ற அளவு செய்யவேண்டும். இதனால் நாட்டிற்கு நன்மை கிடைக்கும். இதனால் உலகம் முழுவதும் நல்ல பயனை அடையும். அந்த முறையிலே நாம் சிவ பக்தியைச் செய்ய வேண்டும். இதற்குக் காரணமாக உள்ளது விபூதி. விபூதிக்குக் காரணமாக உள்ளது பசு. சமயத் தொடர்பு மூலமாகத்தான் முழு கடவுள் நம்பிக்கை வளர வேண்டும். ஆகையால் எல்லோரும் இறைவன் விஷயமாக திருமண், கோபி, சந்தனம் விபூதி போன்றவைகளை இட்டுக்கொள்ள வேண்டும். இதன் மூலமாக ஒருமைப்பாட்டை வளர்க்கவேண்டும.

பகுத்தறிவு

இந்த உலகத்திலே எத்தனையோ வகைப் பிராணிகள் இருக்கின்றன. பறப்பவை, தரையிலே நடக்கக்கூடிய ஆடு மாடு போன்றவை, தண்ணீரிலே ஜீவிக்கக் கூடிய மீன் போன்றவை இருக்கின்றன. இப்படிப் பலவிதமான பிராணிகள் எத்தனை ஜீவராசிகள் என்று எண்ண முடியாது. மனிதர்களைக் கூடப் பிரித்துவிடலாம். ஆனால் பிராணிகளை மட்டும் பிரிக்க முடியாது, அத்தனை எண்ணற்ற உயிரினங்கள் இருக்கின்றன.

ஒவ்வொரு உயிருக்கும் ஒவ்வொரு சக்தி இருக்கும். சிலவற்றிற்குக் கேட்கும் சக்தி இருக்கும். சிலவற்றிற்கு பார்க்கும் சக்தி இருக்கும். சில தொட்டால் உணர்ச்சி அடையக்கூடிய சக்தி உள்ளவையாக இருக்கின்றன. சிலவற்றிற்கு வாசனை முகர்ந்து பார்த்தால் தெரியும். பாம்புகளுக்கு வாசனை எல்லாம் தெரியும். நாய்களுக்கு மோப்பம் தெரியும். மனிதன் எல்லாவற்றைக் காட்டிலும் மேலானவன். ஐந்து அறிவைக் காட்டிலும் ஆறுவது அறிவைக்கொண்டவன் தான் மனிதன். அதுதான் பகுத்தறிவு. இத்தனைக்கும் மேலே பொது சக்தியும் உண்டு. பகுத்தறிவு என்பதைத் தான் விஞ்ஞானம் எனச் சொல்கிறார்கள். விஞ்ஞானம் என்றால் விசேஷ அறிவு என்று பெயர். பகுத்து அறிவது பகுத்தறிவு. அந்த மாதிரி அறிவது விஞ்ஞானம். எந்த ஒரு பிராணியும் விஷமாக இருந்தால் அதைத்தொடவே தொடாது. ஆனால் மனிதன் அப்படி இல்லை. விஷம் கிடைத்தால் அதை வைத்து எப்படிப் பயனடையலாம் என மனிதன் நினைப்பான். இதைத்தான் பகுத்தறிவு என்பார்கள். பகுத்தறிவை நல்லதை அறியப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். தீயதைப் பிரிக்க வேண்டும். இதுதான் பகுத்தறிவு. இதனால் மனிதப் பிறவியைப் பற்றிப் பாடும்போது ஒரு பெரியவர் 'அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது' என்கிறார்.

தீயது வரும்போது மனிதன் துன்பம் அடைகிறான். நல்லது வரும்போது இன்பம் அடைகிறான். தீயதைப் பண்ணுபவன் நன்றாக இருக்கிறான். நல்லதைப் பண்ணுபவன் நன்றாக இருப்பதில்லை. ஆனால் நல்லதைப் பண்ணுபவனுக்கு ஒரு நாளும் தீமை விளையாது. மாங்கொட்டை போட்டால் சில நாள் கழித்து ஒரு முள் செடியைப்போல வளரும், இன்னும் சில நாள் கழித்துப் பார்த்தால் மாமரம் வளரும். முதலில் முள்செடியைப்பார்த்து "நான் மாங்கொட்டைபோட்டேன்; ஆனால் முள் செடி வளருகிறதே" என நினைக்கக்கூடாது. பிறகு தான் பலன் நமக்குத் தெரியும். நல்லது பண்ண வேண்டுமானால் தீயதை முதலில் விடவேண்டும். மேலும் தீயதிலும் கூட நம்மை அறியாமலே சில நன்மைகளையும் நாம் செய்கிறோம். எந்த அளவுக்கு நன்மை பண்ணலாம் என விரும்புகிறோமோ அந்த அளவுக்கு நல்லது பண்ண முயற்சி செய்ய வேண்டும். இதற்குத்தான் பகுத்தறிவை உபயோகிக்கவேண்டும். ஒரு பசுமாடு இருக்கிறது. யாராவது விஷமம் செய்தால் கொம்பைக் கொண்டு முட்டும். ஆனால் மனிதன் தன்னுள் எல்லா பிராணிகளையும் கட்டுப் படுத்திவிடுவான். ஆனால் இவ்வளவு செய்யும் மனிதன் தன்னைத் தானே கட்டுப்படுத்திக் கொள்ள முடிவதில்லை. இதைத்தான் ஆதி சங்கரர் கூறுகிறார். ரொம்ப விஷயத்தில் நாம் ஏமாந்து போகிறோம். ஏனென்றால் பகுத்தறிவு வளரும் அளவுக்கு சிந்தனா சக்தி வளருவதில்லை. இப்போது வாழ்க்கை முறை நிறைய மாறிருக்கிறது. அது வயதானவர்களுக்குப் புரியும்.

நாம் காலையில் எழுந்ததும் நம் உள்ளங்கைகளைப் பார்க்க வேண்டும். ஆனால் இதன் பொருள் தெரியாமலேயே இப்போது நிறையப்பேர் பார்க்கிறார்கள். இதன் பொருள் என்னவென்றால் லக்ஷ்மி கடாக்ஷம் கிடைக்கும் என்பதே. லக்ஷ்மி கடாக்ஷம் கிடைத்தால் கூடவே சரஸ்வதி கடாக்ஷமும் கிடைக்கும். அம்மன் அருளும் கிடைக்கும். இந்த மூன்று சக்திகளும் நம்

உள்ளங்கைகளிலே அடங்கி இருக்கிறது, என்று சொல்லப் படுகிறது.

எழுந்த உடனேயே சாப்பிடக் கூடியவை பிராணிகள் தாம். ஆனல் மனிதன் அப்படியல்ல. எழுந்ததிலிருந்து சாப் பிடும் வரை ஒரு முறை இருக்கிறது மனிதனுக்கு. சாப்பிடு வதிலே ஒரு முறை வைத்துக் கொள்ளவேண்டும். அப்போது தான் நாம் சுகமாக இருக்க முடியும். இல்லாவிட்டால் வயிற்றுக் கோளாறு ஏற்படும். ஆகையால் எதையும் யோசித்து ஒரு முறையோடு செய்தால் தவறுகள் குறையும். இதனுல் வாழ்க்கையிலே நல்லது கிடைக்கும்.

உடல் நன்ருக இருக்க வேண்டுமானுல் காலையில் எழுந்த வுடன் சூரியநமஸ்காரம் செய்யவேண்டும்,எனச் சொல்லப்படு கிறது. சூரிய ஒளி உடலில் படும்போது உணர்ச்சிகள் நன்ருக ஆகின்றன. பிறகு இறைவனைப் பாராயணம் செய்யவேண்டும். வெளியிலே போகும்போது, சகுனம் பார்த்துச் செல்ல வேண்டும். பிறகு இரவு வீட்டிற்கு வந்த பிற்பாடுகூட தூங்க ஒரு முறை உண்டு. தூங்கும்போது காலையிலிருந்து இரவுவரை செய்த வேலைகளை மனத்தில் நினைத்து ஆராயவேண்டும். கெடு தல்கள் செய்திருந்தால் அவைகளை மறுநாள் செய்யாமலிருக்க முயற்சிக்கவேண்டும். கீதையிலே பகவான் சொல்லும்போது "என்னிடம் சரணுகதியடைந்தால் நான் உன்னுடைய வாழ்க் கையில் உன்னைக் காப்பாற்ற முற்படுவேன். உனது யோக க்ஷேமம் எல்லாவற்றையும் நன்ருக நான் பார்த்துக் கொள்ளு கிறேன்" என்கிருர். குரங்குப் பிடிபோல் நம் சிந்தனை இருக்க வேண்டும். அந்த மாதிரிப் பிடி நம் வாழ்க்கையில் இருந்தால் நல்ல பலன் கிடைக்கும் இறைவனின் திருவடியை குரங்குப்பிடி போல் பிடிக்க வேண்டும். அப்போது இறைவன் தானுக நம்மி டையே வருவான். பூனை குட்டி போட்டால் குட்டியை ஓரிடத் தில் வைத்து மிகவும் பத்திரமாகக் காப்பாற்றும். அதுபோல் இறைவன் நம்மைக் காப்பாற்றுவான் என்பது திண்ணம். ஒரே நிலையோடு கூடிய சிந்தனை நமக்கு இருக்க வேண்டும். இந்த

மாதிரி இறைவனிடம் பக்தி பண்ணினால் வாழ்க்கையிலே நிம்மதி அடையலாம். இது முக்கியமானது. முறையோடு வாழ்க்கை நல்லதாக நடக்கும். இதற்கு முயற்சி செய்யச் செய்ய நல்லது உண்டாகும்.

இந்து மதமும் ஆன்ம தத்துவமும்

நம்முடைய தேசமானது பல வகையான அரசாங்கங்கள் மாறி மாறி வந்துள்ளதைப் பார்த்திருக்கும். ஆனாலும் இதற்கு அடிப்படையாக உள்ள தத்துவங்கள் மாறாமல் வந்து கொண்டிருக்கும். இந்த உலகம் தோன்றியது எத்தனையோ கோடிக் கணக்கான ஆண்டுகளுக்கு முன். வரலாற்று ஆசிரியர்கள் பலவாறு இதைப் பற்றிச் சொல்கிறார்கள். எத்தனையோ அரசர்கள் ஆண்ட பிறகு மடிந்து ஒருவர் பின் ஒருவராக வந்து கொண்டிருந்தார்கள். இப்போது நடக்கக்கூடிய அரசு எல்லாம் அரசாகவே இல்லை. அந்தக் காலத்தில் அரசு என்றால் ராஜாக்களை வைத்துக்கொண்டு அதன் மூலமும் தர்மத்தின் மூலமும் அரசு நடந்து கொண்டிருந்தது. அந்தக் காலத்து அரசுகள் வரலாறு படைத்த அரசுகளாக விளங்கின. அப்படிப் பட்ட எத்தனையோ அரசுகள் வளர்ந்திருந்தன. சுதந்திரம் வருவதற்குமுன் சின்ன சின்னதாக இருந்த அரசுகள் இப்போது எவ்வளவோ மாற்றம் பெற்றிருக்கின்றன. இத்தனை மதங்கள் இருக்கும் இந்த தேசத்தில் எவ்வளவோ பெரும் அரசுகள் நடந்திருக்கின்றன. இந்த மாதிரி வேறு எந்த ஒரு தேசத்திலும் நடைபெறவில்லை. இது மிகவும் பெருமைப்படத் தக்க விஷயமாகும். அந்த மாதிரி பண்பாட்டிலும், கலா சாரத்திலும் தத்துவத்திலும் மிகவும் உயர்ந்து விளங்கியது.

நம் தேசம் தத்துவத்தினுடைய அடிப்படையில் வரும் போது பழங்காலத்திலே நம்மிடையே பல தத்துவங்கள் விளங்கியிருந்தது. அப்போது எங்கு பார்த்தாலும் பக்தி பக்தி என்று எல்லோரும் இருந்தார்கள். அந்த பக்தி வளருவதற் கான தொண்டினை கடவுளே நேரில் வந்து இருந்து செய்ததாக பாரத வரலாறு கூறுகிறது. உலகம் தோன்றிய காலத்திலே இருந்து பக்தி என்பது இருந்து வந்திருக்கிறது. ஒவ்வொரு

மதத்திலும் கர்மா என்று உண்டு. கர்மா என்றால் சடங்கு என்று பொருள். சில சமயம் சடங்குகள்மேலே நமக்கு மனசு குறையும். சிலசமயம் அதிகமாகும். அந்த மாதிரி சில வரலாறு நமக்குத் தெரிய வருகிறது. இந்த கர்ம சித்தாந்தத்தின் அடிப் படையிலே நாடு நன்றாக இருப்பதற்கு சடங்கு வேண்டும். அப் போதுதான் குடும்பம் நன்றாக இருக்கும். எல்லா பிரச்சனை களும் தீரும் என்பதற்காக சடங்குகளை வைத்துக் கொள் கிறோம் என்று சொல்லப்படுகிறது. இந்த கர்ம சித்தாந்தத் திலே பலி போன்றவைகள் இப்போது சேர்ந்தன.

இந்தமாதிரி சடங்கு எல்லாம் தேவை இல்லாததாகக் கருதி யது ஹிந்துமதம். ஹிம்சை கூடாது என்பதை ஹிந்துமதம் வலி யுறுத்தி வந்தது. புத்தமதம் கூட இதையேதான் வலியுறுத்தி யது. ஜைனமதமும் தோன்றியது. எல்லாமதங்களும் பிராணி ஹிம்சை கூடாது என்று சொல்லியது. இந்த மாதிரிப் பழக் கத்தை வைத்துக்கொண்டால் அது மோட்சத்திற்கு வழி காட்டியாக இருக்கும் என்று சொல்கிறார்கள். பல மதங்கள் வந்தாலும் ஹிந்துமதம் மாத்திரம் மறையவில்லை. ஹிந்துக்கள் தங்கள் தத்துவத்திலே மாத்திரம் கொஞ்சம் மாறி மாறி வந் தார்கள். சாங்கிய மதம் இருந்தது. அவர்களும் இறைவனை நம்பினார்கள். எத்தனையோ மதங்கள் வந்தாலும் ஹிந்துக்கள் மாத்திரம் தங்கள் கலாசாரத்திலிருந்து மாறவில்லை.

இந்த சந்தர்ப்பத்தில்தான் ஆதிசங்கரர் தோன்றி எல் லோருக்கும் தேவையான கலாசாரத்தைச் சொல்லும் நூல் ஒன்றை உண்டாக்கினார். அவர் சொல்லும்போது ''இதில் கருத்துக்கள் யாவும் என் சொந்தக் கருத்தல்ல. வேத உப நிஷத்துக்களில் சொல்லப்பட்ட கருத்துக்களைத்தான் சொல் கிறேன்'' என்று பல இடங்களிலே கூறுகிறார். ''உலகம் இரண்டு நிலையிலே உண்டாயிற்று. ஒன்று ஒரு பரந்த நிலையில் சொல்லக்கூடியது. இன்னொன்று மனித நிலையிலே தோன்றியது. உலகில் ஒரே பரம்பொருள்தான் இருக்கிறது. ஒரே கிருஷ்ண பரமாத்மாதான் இருக்கிறார். அவர் பல கிருஷ்ணனாக உரு வெடுத்திருக்கிறார் ஆண்டவன் இல்லாமல் இருக்க முடியாது.

ஆன்மா இல்லாமல் இருக்கமுடியாது'' என்று ஆதி சங்கரர் சொல்கிறார். உருவ வழிபாட்டையும் சொல்லியிருக்கிறார். அழுக்கை அழுக்கால்தான் எடுக்க வேண்டும். ஒரு பாத்திரத்தை சுத்தம் பண்ண வேண்டுமானால் மண் முதலிய வற்றால் தேய்த்து அழுக்கை எடுக்கிறோம். பிறகு தான் பாத்திரம் தூய்மை அடைந்து பளிச்சென்று காணப்படுகிறது. கண்ணாடியும் அதே மாதிரிதான். கண்ணாடி அழுக்காக இருந் தால் உருவம் தெரியாது. ஆனால் அதே கண்ணாடியை சுத்தம் செய்து பார்த்தால் நம் உருவம் நன்றாகத் தெரியும். அதுமாதிரி நம் மனம் எனும் கண்ணாடியை சுத்தமாக வைத்திருந்தால் இறைவனைக் காண முடியும்.

பக்தி இருந்தால்தான் இறைவனைக் காண முடியும். கல்கண்டு இனிப்பாக இருக்கும். ஆனால் அந்த இனிப்பு எப்படி இருக்கும் என்று சொல்லமுடியாது. அது போல பக்தி அனுபவத்தால்தான் தெரியும். இதுபோன்ற அனுபவத்தில் இறைவனைக் காணலாம். இறைவனை உருவ வடிவத்திலே காணலாம். ஆனால் சக்தியை அனுபவித்தால்தான் அறியமுடியும். வெறும் வாயால் சொல்லமுடியாது. விநாயகரில் ஆரம் பித்து ஆஞ்சநேயர்வரை இறைவனை நாம் அடைய முடியும். தனியாக இருந்தால் ஒரு பெயர். இறைவன் பரந்த பரம் பொருளாக இருக்கும்போது ஒரு பெயர். பிடித்து வைத்தால் ஸ்வாமி என்கிறோம். இல்லாவிட்டால் மண் என்கிறோம்.

அனுபவத்தினால் உயர்ந்த நிலையை அடைகிறோம். உதாரணமாக நாம் தூங்கும்போது ஒரு நிலை இருக்கிறதே அதை சொல்லமுடியாது. அப்போது என்ன என்பதை யாரும் சொல்லமுடியாது. நன்றாகத்தூங்கினேன் என்றுதான் சொல்ல லுவான். அந்த மாதிரி சொல்லக்கூடிய அனுபவம் நாம் விழித்துக் கொண்டிருக்கும்போது வரவேண்டும். அதுதான் நல்லது. வேதாந்த தத்துவத்தை ஆதி சங்கரர் தான் கொண்டுவந்தார். இறைவன் ஒன்றேதான். பரம்பொருள் ஒன்றுதான் என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்கிறார்கள். ஒரு படித்துறை இருக்கிறது. கீழே உள்ள நீரை அடைய பல

படிகள் இருக்கின்றன. கடைசியில் ஒரே இடத்தில்தான் சேரு கின்றன. இந்த மாதிரிதான் பரம்பொருளும். வாழ்க்கையில் இன்ப துன்பங்களையும் மீறி அடைவதுதான் பரம்பொருள். ஒற்றுமை இருந்தால் பரம்பொருளை அடையமுடியும். இதை அடைய மனிதன் முயற்சி செய்யவேண்டும். ஆன்மா என்பது எங்கும் நிறைந்த ஒரு பரம்பொருள். மனத்துக்குள்ளே இறைவனைப் பார்க்க வெளி நடவடிக்கைகள் நிறைய வர வேண்டும். பல பிறவிகள் எடுத்தாலும் எந்த ஒரு பிறவியி லும் ஆன்மா என்பதை மறந்துவிடக் கூடாது. கீழே இருந்து ஒவ்வொரு படியாக ஏறி கடைசிப் படி வந்தால் அதுதான் ஆன்மா படி. அப்போதுதான் இறைவனை அடைய முடியும். பரமாத்மாவை அடைய முடியும். இதற்கு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து இறைவனது அடியை அடை வோமாக.

மனம்

கிருஷ்ண பகவான் பகவத் கீதை என்ற ஒரு நூலை நமக்கு அருளியிருக்கிறார். அந்த நூலிலே மனிதர்களுக்குத் தேவையானதெல்லாம் நிறையசொல்லியிருக்கிறார். 'தினமும் பூஜை செய்து இறைவனுக்கு நமஸ்காரம் செய். அப்படிச் செய்தால் இறைவனை நீ அடைவாய். நிஜமாக இறைவனருள் உனக்குக் கிடைக்கும்' என்று அதில் கூறியிருக்கிறார். இறைவனை ஒருவன் பக்தி செய்யட்டும். பக்தி செய்ய முடியாதவன் பூஜை செய்யட்டும். அதைத் தெரியாமல் இருப்பவன் நமஸ்காரம் செய்யட்டும். எப்படியாவது இறைவனிடம் நம் மனத்தை அளிக்கவேண்டும். மனம் ஒன்றுதான் நம்முடைய வாழ்க்கைக்கு காரணமாய் இருக்கும். சுகத்திற்கும், துன்பத்திற்கும் மனம்தான் காரணம். இன்ப துன்பத்தை அடையக் காரணமாக உள்ளது மனம்தான். துன்பம் வரும்போது விரும்புவதில்லை. இன்பம் வரும்போது மகிழ்ச்சி அடைகிறோம். இவை எல்லாவற்றிற்கும் காரணம் மனம்தான்.

எந்த ஒரு பிரச்சனை வந்தாலும் மனசு ஒரு முக்கியமானதாகக் கருதப்படுகிறது. ஆகையால் மனசு நமக்குத் தூயதாக இருக்க வேண்டும். அந்த மனசுதான் வாழ்க்கைக்கு இன்பம் தரக்கூடியது. வழி முறையோடு பூஜைபுனஸ்காரம் என்று தொடங்கி தியானம் பண்ணுவது மூலம் ம னிக் கணக்கில் உட்கார்ந்து இருந்தால் மனம் அமைதியாக இருக்கும்.

நமக்கு இரண்டு மூன்று நிமிடம்தான் இறைவனை நினைக்கக்கூடிய சந்தர்ப்பம் கிடைக்கிறது. குரங்கு மாதிரி சபலம் உலகத்திலே வேறு யாருக்கும் இல்லை. அந்த மாதிரி சபல புத்தி நமக்கு வரக்கூடாது. பகவானுக்குக் கட்டுப்பட்டு நம் மனம் இருந்தால் நாம் துன்பப்படமாட்டோம். அப்போது

இறைவனின் திருஷ்டி நம்மீது விழும். சில பேர்களுடைய திருஷ்டி பட்டால் எல்லாமே வீணாகிவிடும். ஆனால் இறைவனுடைய திருஷ்டி படும்போது எந்தவிதமான கஷ்டம் இருந்தாலும்கூட அது மிகவும் இன்பமாக ஆகிவிடும். அது அவ்வளவு நல்ல திருஷ்டியாகும். இறைவன் பார்வை நம் மேலே பட்டாலே போதும் என்று சொல்லப்படுகிறது. வெறும் பொருளை என்ன செய்து வேண்டுமானாலும் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் இறைவன்அருளைப் பெற நன்கு முயற்சிக்க வேண்டும். அதற்கு மனசு சுத்தமாக இருக்கவேண்டும். இந்த மாதிரி இருக்கும்போது இறைவனைக் கொஞ்ச நேரமாவது தியானம் பண்ணினால் ஒரு சில நிமிடமாவது நமக்கு இறைவனின் ஞாபகம் வரும் எல்லாப் பொன்னும் பொருளும் பகவானிடம் நிறைந்து இருக்கிறது. என்னுடைய மனசை உன்னிடம் கொடுத்து விடுகிறேன் என்று நம்முடைய மனத்தை இறைவனின் திருவடியில் விட்டுவிட்டால் அதன் மூலம் இறைவன் நமக்கு அருள் புரிவான்.

எப்படியாவது இறைவனிடம் நம் மனத்தைச் செலுத்த வேண்டும். பக்தி செய்ய வேண்டும். இல்லையேல் நமஸ்காரமாவது பண்ணவேண்டும். நமஸ்காரம் மிகவும் உயர்ந்தது. நம்முடைய குறைகள், பாவங்கள் தீர்ந்து இறைவன் அருளைப் பெறத்தான் நமஸ்காரம் இந்த முறையிலே வழிபாடு செய்தால் நமக்கு நல்லது கிடைக்கும். இறைவனை பக்தி செய்யச் செய்ய நம் மனம் இறைவனிடம் செல்லும். பிறகு படிப்படியாக எல்லாம் உயரும் எனச் சொல்லப் படுகிறது. இந்த மாதிரி எல்லாருக்கும் வழிகாட்டியாக வாழ்ந்தால் நாமும் உயரலாம், நம் நாடும் உயரும்.

கர்ம பலன்

நம்முடைய வாழ்க்கையிலே கஷ்டங்கள், கவலைகள் துன்பங்கள் வந்தால் கடவுளைக் கும்பிட்டால் சரியாகப்போய் விடும் என்று சொல்கிறோம். வாழ்க்கையின்அடிப்படையான தத்துவம் சந்தோஷமாக இருக்கவேண்டும் என்பதுதான். ஆனால் வாழ்க்கை என்றால் துன்பமும் கலந்திருந்தால்தான் வாழ்க்கையாகும். பரம்பொருள் ஒன்றுக்குத்தான் இவை யெல்லாம் இல்லாது இருக்கும். மனிதப் பிறவியாக இருந் தாலும் சரி, மிருகப் பிறவியாக இருந்தாலும் சரி, துன்பத் தைத் தவிர்க்க முடியாது. இதைத் தவிர்க்கக் கூடிய பரமாத் மாவின் அனுக்ரஹம் நமக்கு வந்தால் எதுவும் நம்மை பாதிக் காமல் இருக்கும். உடல் என்பது இருக்கும்வரை நம்மை எல்லாமே பாதிக்கத்தான் செய்யும்.

பஞ்ச பூதங்களினால் உண்டாகக் கூடியதற்குக் கவலைகள் துன்பங்கள் இல்லாமல் இருக்க முடியாது. சுவாமிக்கு மேலே பெரிதாக உள்ள பரமாத்மா, பரம்பொருள் ஒன்றுதான். பரம்பொருளின் மூலமாக துயர்கள் குறைகின்றன. நம்சமயத் தில் சொல்லுவது போல குறைக்க முடியுமே தவிர தவிர்க்க முடியாது. வெயிலில் வெளியில் போகும்போது உடம்பு சுடு கிறது. ஆனால், செருப்பு, குடை இவற்றோடு செல்லும்போது வெம்மை நமக்குக் குறைகிறது.அதுபோலத்தான் துயரமும். நமக்கு நல்லது கெட்டது நடக்கிறது என்றால் எல்லாம் நம் விதியால்தான். கர்ம சித்தாந்தத்தின் அடிப்படை என்ன என்றால், ஒரு மனிதன் தன்னுடைய வாழ்க்கையிலே எத்தனையோ தவறுகள் செய்கிறான். இவை எல்லாவற்றிற்கும் தண்டனை கிடைக்காமல் இருக்காது. இறைவனைத் தியானம் பண்ணினால் ஓரளவு பலன் நமக்குக் கிடைக்கும். எந்த ஒரு நல்லது, கெட்டது பண்ணினாலும் அதற்குத் தக்க பலன் இல்லாமல் போகாது. இதற்கெல்லாம் பின்னால் பலன் கிடைக்கும். இதற்கெல்லாம் ஆகாமி என்று பெயர். ஆகாமி

என்றால் பின்னால் வரக்கூடியது என்று பெயர். பிரத்யட்ச பலன், ஆகாமி என்று இரண்டு பலன்கள் உள்ளன. ஏழையாக இருந்தாலும் மனசால் சுத்தமாக இருப்பான். ஆகையால் எந்தவிதமான துன்பமும் வராமல் இருக்கும். நாம் இறந்தால் ஏதாவது ஒரு பிறவி கிடைக்கும். பிறவியிலே, ஒவ்வொரு கர்மங்களும் சேர்ந்த பெயர்தான் ஆகாமி. கர்மங்கள் எல்லாம் சேர்ந்து ஒரு மூட்டையாக ஆகிவிடும். அப்படி மூட்டையாகச் சேர்ந்த பிற்பாடு அதற்குப் பெயர் சஞ்சிதமாகும். அந்த சஞ்சிதத்திலே இருந்து அவைகளை அனுசரித்துத்தான் பிறவிகளை இறைவன் நமக்குக் கொடுக்கிறான்.

இந்த மாதிரி இவைகளை எல்லாம் அவரவர் கர்மங்களுக்கு ஏற்றபடி எல்லோருக்கும் பிரித்துக் கொடுக்கக்கூடிய ஒரே ஒன்று பரம்பொருள்தான். பிராப்தம் நமக்கு இருக்கும்போது நமக்கு நல்லது நடக்கிறது. உதாரணமாக ரேஷன் கார்டு சிஸ்டத்தைச் சொல்லலாம். தேவையான சாமான்களை அதற்குத் தகுந்தபடி வாங்கிக்கொள்ளலாம். சாமான்கள் அவரவர் குடும்பத்தைப் பொறுத்து வழங்கப்படும். எந்த ஒரு நன்மையோ, தீமையோ வேகத்தை அனுசரித்துத்தான் பலன் கிடைக்குமே தவிர, மற்றபடி எதுவும் நடக்காது. நம் வினைப் பயன் மூலமாகத் துன்பத்தை அடையக்கூடியதாக இருந்தாலும்கூட சூழ்நிலையில் இன்பமே முன்னால் வரும். எப்படியானாலும் இன்பமும், துன்பமும் மாறி மாறி வரும். இதை நினைவு படுத்தத்தான் கோயில், கடவுள், பக்தி என்று சொல்லப்படுகிறது. இதை வைத்துத்தான் நம் கர்ம சித்தாந்தம் வந்தது. கடவுள் வழிபாடு செய்யும்போது துன்பம் குறையுமே தவிர துன்பம் வராமல் இருக்காது.

நிறைய புண்ணியம், பாவம் பண்ணும்போது உடனேயே பலன் கிடைக்கிறது. நல்வினை, தீயவினை அதிகமாகும்போது பலன் உடனேயே கிடைக்கிறது. நம்முடைய வாழ்க்கையில் இன்ப துன்பம் வரக் காரணம் நம்முடைய வினைகள்தான். இறைவன் அருளாலேயும், மனசு பலத்தாலேயும், சூழ்நிலையாலும் இதையெல்லாம் தாங்கிக்கொள்ளக்கூடிய சக்தி நமக்கு உண்டு. கீதையில் அர்ஜுனனுக்கு கிருஷ்ணர் உபதேசம்

செய்யும் போது "ஏன் அர்ஜுனா அழுகிறாய்? பிறந்தவன் எல்லாம் சாகத்தான் போகிறான். செத்தவன் எல்லாம் வேறொரு உயிராகப் பிறக்கத்தான் போகிறான். இதுதான் கர்மம், இதனால் அழாதே'' என்று பகவான் அர்ஜுனனுக்கு உபதேசம் செய்கிறார்.

இறைவனிடத்தில் போய் நாம் நமக்கு இதைச் செய் அதைச் செய் என்று சொல்ல வேண்டியதில்லை. தானாகவே எல்லா சௌகரியங்களும் எல்லோருக்கும் கிடைக்கும். பரம் பொருளினுடைய சக்தியால்தான் எல்லாமே இப்படி நடக்கிறது. பரம்பொருளை அனுபவத்தால் உணர முடியுமே தவிர வேறு எதுவாலும் முடியாது. இதை உணரத்தான் உருவ வழிபாட்டை முக்கியமாக வைத்து இருக்கிறார்கள். அறிந்தும் அறியாமலும் செய்த தவறுகளுக்கும் பலன் உண்டு. ஆண்டவன் நம்மை படைக்கும்போது நன்றாகத்தான் எல்லாவற்றையும் படைக்கிறான். மனிதன் குயுக்தியில் செய்வதால்தான் இன்ப துன்பங்கள் ஏற்படுகின்றன. ஆகையால் நம்முடைய வாழ்க்கையில் சூழ்நிலை நன்றாக அமையவேண்டும். நல்ல சிந்தனைகள் உருவாக வேண்டும். சாஸ்திரத்தில் சொல்லும் போது ஆண்டவனால்தான் உலகம் உண்டாயிற்று என்று சொல்லப்படுகிறது. பௌத்த மதம் சூன்யத்தில்தான் உலகம் உண்டாயிற்று என்று சொல்கிறது. இவ்வாறு ஒவ்வொரு மதமும் ஒரு மாதிரி சொல்கிறது. துன்பம் போக்க ஒரு வழி இறை வழிபாடுதான்.

நாம் எல்லாரும் நல்வழியை மேற்கொண்டால் வாழ்க்கைக்கு நல்லது. இதை விட்டுவிட்டு துன்பம் தரும் வழியில் செல்லக்கூடாது. சம்பந்தர் என்று ஒருவர் இருந்தார். இவரைச் சிலர் கடலில் தூக்கிப் போட்டார்கள். அப்போது அவர் என் வினை என்னைக் காப்பாற்றட்டும் என்றுதான் சொன்னார். ஆகையால் வினை உண்டு என்பதை நாம் நன்றாக உணர முடிகிறது. ஆகையால் தீய வினைகளைக் குறைக்க இறை வழிபாடு முக்கியம். அடித்தளத்திலே இருந்து இந்த நம்பிக்கை வளரவேண்டும். அப்போதுதான் எல்லோரும் சௌக்கியமாக இருக்க முடியும்.

சாதுர்மாச விரதம்

சாதுர் மாசம் என்று சொல்லக் கூடியது நான்கு மாதங்கள். அப்போது முக்கியமாக வியாசருக்குப் பூஜை செய்வது வழக்கம். புராணத்திலே இதைப் பற்றி அநேகமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நான்கு மாதமும் விழா சிறப்பாக ஒவ்வொரு இடங்களிலும் நடைபெறும். நான்கு மாதமும் எங்கேயும் போகாமல் பூஜை 24 மணிநேரமும் செய்வார்கள். சந்நியாசிகள் மாத்திரம் இதை விசேஷமாகச் செய்வது வழக்கம்.

எல்லோருக்கும் பொதுவாக இருப்பது சாதுர்மாசம். இந்த மாதத்தில் உபவாசம் இருந்துகொண்டு பகவானை நினைப்பது வழக்கமாக இருந்து வருகிறது. நிறையப் பேர் இந்த சாதுர்மாச விரதத்தைக் கடைப் பிடிப்பார்கள். இதைக் கடைப்பிடிப்பவர்கள் முதல் மாதத்தில் வெங்காயம் சாப்பிட மாட்டார்கள். மற்றபடி பழங்கள் எல்லாம் சாப்பிடலாம். இரண்டாம் மாதத்தில் பால் சாப்பிட மாட்டார்கள். மூன்றும் மாதத்தில் தயிர் சாப்பிடமாட்டார்கள். நான்காம் மாதத்தில் பருப்பு எல்லாம் சாப்பிடமாட்டார்கள். பாக்கி எல்லாம் சாப்பிடுவார்கள். பிறகு வியாசருக்குக் கல்யாணம் பண்ணி எல்லாம் சாப்பிடுவார்கள். இந்த நான்கு மாதமும் பஜனை முதலானவைகளைச் செய்வார்கள்.

எல்லோருக்கும் பொதுவானவர் வியாசர். வியாசபகவான் வேதங்களை எல்லாம் நமக்கு சுலபமாக வகுத்துக் கொடுத்தவர். இவரைச் சிறப்பிக்கச் செய்வதுதான் சாதுர்மாச பூஜை. வேதங்கள் என்பது சப்த வடிவமாக உள்ளது. அதனால் இதை ஸ்ருதி என்று சொல்வார்கள். ஸ்ருதி என்றால் காதாலேயே கேட்டு இன்புறுவது. தமிழில் சொல்லும்போது 'எழுதாத நூலேடு' என்று சொல்வதுண்டு.

புராண காலத்திலே இருந்து இன்றுவரை அந்த வேதமே நமக்கு முக்கியமாக இருக்கிறது. வேதம் ஆகாடத்திலே பரந் திருக்கிறது. ரேடியோ அலைகள் ஆகாயத்திலே பரந்திருக் கிறதுபோல. ரேடியோவைத் திருப்பியவுடன் அந்த அலைகள் ஒலியாக மாறி நாம் அதைக் கேட்கிறோம். இந்த வேத சப்தங் கள் ஆகாயத்திலே எங்கு பார்த்தாலும் நிரம்ப இருக்கிறது. இந்த சப்தங்கள் எல்லாம் காற்றாகப் பரவி நமக்குக் கிடைக் கிறது. ஆக மனிதனால் ஏற்படுத்தப்படும் ரேடியோ சப்த அலைகள் நிறைய நேரம் இருக்காது. குறைந்த நேரம்தான் இருக்கும். ஆனால் மனிதனால் ஆக்கப்படாத சப்தங்கள் வேதங் களாகும். அது என்றைக்குமே ஆகாயத்தில் எப்பொழுதும் இருக்கிறது. இதை ஞானத்தின் மூலம் நாம் தெரிந்து கொள்ள முடியும். ரேடியோ சப்தங்கள் நமக்குப் புரிவது போல் வேத சப்தங்கள் நமக்குப் புரிவது இல்லை. ரேடியோ அலைகளை ரேடியோக்களின் மூலம் கேட்கலாம். இந்த வேத சப்தங்கள் அறிந்தவர்கள் சொல்லி, அல்லது புஸ்தகங்கள் படிப்பதன் மூலமாக நமக்குத் தெரிய வருகிறது. வேதங்கள் எல்லாம் பூர்த்தியாக நமக்குக்கிடைக்க அருளியவர் வியாசர். அந்த வேதங்களை அடிப்படையாக வைத்துதான் நம் மதம் இருக்கிறது. அந்த வேத வியாசர் நமக்குப் பொதுவாக இருப் பவர். அவருக்குப் பூஜை செய்வதுதான் வியாச பூஜை.

நாம் எல்லோரும் நல்ல விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும். எவ்வளவு வரைக்கும் நல்லது பண்ணுகிறோமோ அவ்வளவு வரைக்கும் நல்லது நடக்கும். ஆகையால் தீமை யைக் காதால் கேட்கும்போது சொல்பவனைவிட கேட்கும் நமக்கு இரண்டு பங்கு தீமை கிடைக்கிறது. தீயதைக் கேட் காதே, தீயதைப் பார்க்காதே; தீயதைச் செய்யாதே என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

மனிதன் மனிதனாக வாழவேண்டும். இது முக்கியமாக வாழ்க்கைக்குத் தேவை. இதன் உட்கருத்து என்ன என்றால் மனிதன்நல்லதையே செய்யவேண்டும் என்பது ஆகும். மனித வாழ்விலே நல்ல சிந்தனைகள் உருவாக வேண்டும். இதுதான்

முக்கியமானது. இதற்கு பகவான் சிந்தனை முக்கியமானது. கலியுகத்துக்கு முன்னதாக கிருஷ்ண அவதாரமும் ஏற்பட்டது. கலியுகம் தோன்றிய பிறகு பகவான் அவதாரம் ஏற்படவில்லை. இன்னும் பல ஆண்டுகள் கழித்து கல்கி அவதாரம் ஏற்படப் போகிறது. அந்த அவதாரத்தின் மூலமாகத் தீயதை எல்லாம் ஒழித்து எல்லாவற்றையும் சரிசெய்வார். எல்லோரும் நல்ல தையே செய்யவேண்டும் என்பதற்காகத்தான் சொற் பொழிவு கள் எல்லாம். கலியுகத்தின் பெருமையே நல்லது கொடுத்து நல்லது செய்யவேண்டும் என்பதுதான்.

தீமைகள் செய்வதன் மூலம் ஏற்படும் விளைவுகளைத் தெரிந்து கொள்ளத்தான் ராமாயணம் மகாபாரதம் போன்ற நூல்கள் ஏற்பட்டுள்ளன. இராமாயணத்தில் இராமனுடைய நிலை மிகவும் உயர்ந்தது. விஷ்ணுவின் அவதாரம் இராமன். அவருக்கு உதவியாக இலக்குவன் அவர்களுக்கு உதவியாக பரத, சத்ருக்னன். இவர்கள் எல்லோரிடத்திலேயும் அறிந்து கொள்ளவேண்டிய விஷயம் நிறைய உள்ளது. இராமன் பக வானுடைய அவதாரமாக இருந்தாலும்கூட மனிதனுடைய வாழ்க்கைக்கு தான் எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்டுகிறார். அந்தப் பெருமை இராமனையே சேரும். அவரை நினைத்துக் கொள்ளவேண்டும். அவருடைய நாமத்தைச் சொல்ல வேண்டும். இதனால் நமக்கு நிறைய பலன் கிடைக்கும். இதைக் குழந்தைகளுக்கும் நிறைய எடுத்துச் சொல்ல வேண்டும். இப்படிச் செய்தால் வாழ்க்கையிலே பிரச்சனையே வராது. இராமனுடைய அருள் நமக்கு நிறையக் கிடைக்க வேண்டும். லக்ஷ்மணனைப் பற்றிச் சொல்லும்போது விளக்கங் கள் நிறையச் சொல்லலாம். வாழ்நாள் முழுவதும் ராமச் சந்திர மூர்த்திக்குத் தொண்டு செய்தவர். அந்த மாதிரி வாழ்க்கையிலே நாம் எல்லோரும் தொண்டு சேவை செய்ய வேண்டும்.

எல்லோரையும் விடப் பெரிய தியாகி பரதன். இராமர் காட்டிலே எப்படி வாழ்ந்தாரோ அதே மாதிரி நாட்டிலே ரிஷி போன்ற வாழ்க்கை நடத்தி ராஜ்ய பரிபாலனம் செய்தவர்

பரதர். ஜடாயு, அணில், வானரங்கள் போன்றவைகள் எல்லாம் இராமருக்குத் தொண்டு செய்தன. இது போன்று பல பிராணிகளும் உதவி செய்தன. எல்லாவற்றிற்கும் மேலே பெரும் உதவி பண்ணியவர் ஆஞ்சநேயர். வாழ்நாள் முழுவதும் இராமருக்கே தன்னை அர்ப்பணம் செய்துகொண்டார். இராமநாமம் எங்கே கேட்டாலும் அங்கே ஆஞ்சநேயர் இருப்பார். அவரைப் பக்தி செய்தால்கூட நாம் சிரஞ்சீவியாக இருக்கலாம். ஆஞ்சநேய சுவாமி இராம நாமத்தைச் சொல்லியே வாழ்ந்தவர். ஆகையால் இராம பக்தியைக் காட்டிலும் இராம நாமம் மிகவும் உயர்ந்தது. இந்தமாதிரி செய்ய எல்லாவற்றைக் காட்டிலும் அதிக தேவையானது புத்தி. நல்ல புத்தி இருந்தால்தான் நமக்கு எல்லாம் கிடைக்கும். இந்த நல்ல புத்தி வேண்டுமானால் ஆஞ்சநேய ஸ்வாமியிடம்தான் கிடைக்கும். இந்த மாதிரி புத்தி இருந்தால் கடவுளின் அருளும் இராமரின் அருளும் கிடைக்கும். இராம ராஜ்யம்போல நாடு நடக்கவேண்டுமானால் நாம் அவரிடத்தில் பக்தி வைக்க வேண்டும். வாழ்க்கையிலே ஒழுங்காக வாழ்ந்தால் இவையெல்லாம் நாம் பெறலாம். மனத்திலே நல்ல சிந்தனைகள் வளர்ந்து உருவாக வாழ்க்கையில் எடுத்துக் காட்டாக விளங்கிய இராமனை வணங்கி அவனது அருளைப் பெறுவோமாக.

வேதம்

நம்முடைய ஹிந்து மதமானது இன்று நேற்று உருவானதல்ல. பழங்காலம் தொட்டு இருந்து வருகிறது. நம்முடைய மதத்திற்கு வேதநூல் அடிப்படையாக உள்ளது. அது வைதீகமாக நம்மிடையே வந்திருக்கிறது. வேதங்களை மூலமாகக் கொண்ட நம்முடைய மதத்தின் மூலமாக எல்லாவித மான நன்மைகளையும் அடைய முடியும். வெறும் ஒரு கோயிலாக இருந்தாலும் வேதங்களைப் படித்து அதை ஓதுவதன் மூலமாக கோயில் ஒரு விசேஷ சக்தியைப் பெறுகின்றது என நம்பப்படுகிறது. வேதங்களை ஜபிக்க ஜபிக்க மனத்தெளிவு பிறந்து இறைவனைப் புரிந்துகொண்டதாக நாம் நம்புகிறோம்.

வேதத்தைச் சொன்னால் நமக்கு என்றைக்கும் பலன் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. ஆகாசத்திலே காற்றாக பரந்துள்ள வேதத்தைத்தான் நாம் இன்று காண்கிறோம். வேதத்தினால் தீமை ஒழிக்கப்படுகிறது. இந்த வேத சப்த ஒலி எங்கெங்கு கேட்கிறதோ அங்கெல்லாம் துஷ்டர்கள் விலக்கப் படுவார்கள் என்று நம்பப்படுகிறது. இந்த ரிஷிதான் வேதத்தை உண்டாக்கினார் என்று சொல்லமுடியாது. வேதம் யாராலும் உண்டாக்கப்படவில்லை. அது தானாகவே உண்டாயிற்று. வேதங்களைச் சொல்லச் சொல்ல தீமைகள் விலகி நன்மைகள் பெருகும். நமக்கு உண்டான துன்பங்கள் எல்லாம் வேத ஒலியால் குறைகின்றது. வேதங்களை அழிக்க முடியாது, குறைக்க முடியாது.

இந்த வேத ஒலி எல்லா இடங்களிலும் கேட்கவேண்டும் என்ற எண்ணத்தினால் நாங்கள் சென்ற இடங்களில் எல்லாம் நிறைய வேத பாடசாலைகள் ஆரம்பித்தோம். அங்கெல்லாம் நன்கு இந்த பாடசாலைகள் நடந்துகொண்டு வருகின்றன. மாணவர்களும் விரும்பிப் படிக்கிறார்கள். நான்கு வேதங்

களும் நிறைந்து இருக்கும் இடம் இந்தியாவில் ஒரிஸா மட்டும் தான். அங்குதான் எல்லா வேதங்களும் சொல்லித் தரப்படு கிறது. நம் தமிழ்நாட்டு வேத ஆசிரியர்களால் சொல்லித்தரப் படுகிறது. சேலத்தில் ஒரு ரிக் வேத பாடசாலை ஆரம்பிக்கப் போகிறோம். எல்லோரும் வேதத்தைப் படித்துப் பயனடைய வேண்டும்.

கடவுளை வழிபடும் முறை

ஆதி சங்கரர்தான் நமக்கு சௌந்தர்ய லஹரி என்று ஒரு நூலை அருளியிருக்கிறார். இதன் பின்பகுதியிலே அம்பாளுடைய தலையிலிருந்து பாதம் வரைக்கும் பாடி முடிக்கிறார். அதிலே ஒரு ஸ்லோகம் எல்லோரும் சுலபமாக கடைப்பிடிக்க கூடியதைக் கூறுகிறது. ஆனால் அதைக் கடைப்பிடிக்கும் போது கஷ்டமாக இருக்கும்.

கடவுளுக்கு 16 விதமான உபசார பூஜை செய்வதுண்டு. முக்கியமாக ஐந்து மாத்திரம் செய்வார்கள். இதற்கு பஞ்சோபசார பூஜை என்று பெயர். இவை எல்லாவற்றையும் செய்ய வேண்டுமானால் எல்லோராலேயும் முடியாது. இதற்காக சுருக்கமாக பூஜை முறையை ஆதிசங்கரர் நமக்கு வகுத்துக் கொடுத்துள்ளார்.

'ஜபோ ஜல்பஹ' என்கிறார். முதலில் பேசுவது எல்லாம் ஜபமாக ஆகட்டும் என்கிறார்.பேசும்போதும் எழுதும்போதும் எழுத்துக்கள் வருகிறது. இந்த எழுத்துக்கள் சமஸ்கிருதத்தில் 51 என்று சொல்லப்படுகிறது. எழுத்து வடிவமாக அம்பாள் இருப்பதால் நீ பேசுவது எல்லாம் ஜபமாக ஆகட்டும் என்று சொல்கிறார். ஆகையால் ஜபம் என்பது எப்படி உருகக்கூடியதாகவும், மென்மையாகவும் இருக்குமோ அந்த மாதிரி நம் பேச்சு இருக்கவேண்டும். கண்டபடி பேசக்கூடாது என்பதற்காகத்தான் பேசுவது எல்லாம் ஜபமாகவே ஆகட்டும் என்கிறார். நிதானமாகப் பேசவேண்டும். இப்படி இறைவனை அர்ச்சனை பண்ணினால் தானாகவே நம்மைத் தேடி இறைவன் நம்மிடம் வருவான். ஜபம் என்பது நம்மிடையே முக்கியமானது.

கோவிலுக்குச் செல்லும் போது இறைவனைப் பிரதக்ஷணம் பண்ணவேண்டும். அதற்காகத்தான் கோவிலில் பிர

காரம் வைத்து உள்ளார்கள். இதைப் பற்றிச் சொல்லும் போது, தலையிலே நெய்க்குடம் வைத்துக்கொண்டு ஒருவன் எப்படி நடப்பானோ அந்த மாதிரி நாம் நடக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. சுற்றுவது எல்லாம் பிரதக்ஷண மாகட்டும் என்று சொல்கிறார். நாம் வெளியில் செல்லும் போது எங்காவது ஒரு சின்னக்கோவில், கண்ணில் பட்டால் நம்மை அறியாமலே நாம் இறைவனை அங்கே வணங்குவோம். அதற்காகத்தான் ஆதிசங்கரர் சுற்றுவதெல்லாம் பிரதக்ஷணம் ஆகட்டும் எனக் கூறுகிறார்.

பாவனையும் முக்கியமானது. இறைவனை நினைக்கும்போது மனத்திலுள்ள பாவங்கள் போகும் என்று சொல்வார்கள். இறைவனுக்கு நைவேத்தியம் மிகவும் முக்கியமானது. பகவானுக்கு நைவேத்தியம் பண்ண வேண்டும். அந்த நைவேத்தியம் மிகவும் ருசியாக இருக்கவேண்டும். சூடாக இருக்கக்கூடாது. காரமாக இருக்கக்கூடாது. மிகவும் ஆறிப்போயும் இருக்கக் கூடாது. மிகவும் மையமாக இருக்கவேண்டும். இதைத்தான் பகவானுக்கு நைவேத்தியமாகப் படைக்கவேண்டும். நாம் சாப்பிடுவதெல்லாம் பகவானுக்கு நைவேத்தியமாக ஆகட்டும் என்கிறார். இறைவனுக்கு எப்படி முன்னால் கூறியவாறு படைக்கிறோமோ அதே மாதிரிதான் நம் உணவும் இருக்கவேண்டும். அதனால்தான் சாப்பிடுவதெல்லாம்நைவேத்தியமாகஆகட்டும் என்று சொல்கிறார். பகவானுக்கு மூன்று வேளை தான்நைவேத்தியம் செய்யவேண்டும். அதுதான் உகந்தது. இதை வைத்துத் தான் நாமும் சாப்பிடுவதில் ஒரு முறையை வைத்துக்கொள்ள வேண்டும். அதுதான்உடம்பிற்கு நல்லது. கால்கள் இரண்டும் பூமியிலே இருக்கும்படி உட்கார்ந்து சாப்பிடவேண்டும். உணவை வைத்துத்தான் மனித வாழ்க்கை அமைகிறது.

பூஜை முடிந்த பிறகு கடைசியாக நமஸ்காரம் செய்ய வேண்டும். உடல் நன்றாகக் கீழேவிழும்படி நமஸ்காரம் செய்ய வேண்டும். நம் நமஸ்காரம் சாஷ்டாங்கமாக இருக்கவேண்டும். ஆண்கள் தங்கள் அவயவங்கள் எல்லாம் பூமியில் விழும்படி நமஸ்காரம் செய்யவேண்டும். பெண்கள் பஞ்சாங்க நமஸ்

-காரம் செய்யவேண்டும். ஆண்களைப்போல் இல்லாமல் சில அவயவங்கள் மாத்திரம் தரையில் படும்படி செய்து வணங்க வேண்டும். தலை கால்கள் தோள்கள் முதலியவைகள் மட்டும் படவேண்டும். இவ்வாறு பெண்கள் நமஸ்காரம் செய்ய வேண்டும்.

தூங்கும்போது நாம் எப்படி இருப்போமோ அந்தமாதிரி நமஸ்காரம இருக்கவேண்டும். இந்த மாதிரி ஒரு முறை இருக்கிறது. முறையோடு நமஸ்காரம் செய்தால் நல்லது நடக்கும். தாயாருக்கும், தகப்பனுருக்கும் நமஸ்காரம் செய்யும் போது ஒரே ஒரு முறைதான் பண்ணவேண்டும். நாம் நமஸ்காரம் செய்யும்போது அவர்கள் நம்மை ஆசீர்வாதம் செய்ய வேண்டும். யாரைநமஸ்காரம் செய்தாலும் அவர்கள் நம்மை ஆசீர்வதிக்க வேண்டும். அவ்வாறு ஆசீர்வாதம் செய்யாதவர்களிடம் நமஸ்காரம் செய்யாதே என்று சாஸ்திரம் சொல்கிறது. கோவிலுக்குச் சென்றால் மூன்று முறை வலம் வர வேண்டும். மூன்று முறை நமஸ்காரம் செய்யவேண்டும். சாஸ்திரம் வேறு, சம்பிரதாயம் வேறு. வைஷ்ணவ சம்பிரதாயத்தில் ஒரு முறை நமஸ்காரம் செய்தால் போதும் எனச் சொல்லப்படுகிறது. இவ்வாறு ஒவ்வொரு மதத்தில் ஒவ்வொரு சம்பிரதாயம் இருக்கிறது. கோவிலுக்குச் செல்லும் போதும் ஸ்வாமி பெயரை சொல்லி வணங்க வேண்டும். சந்நியாசிகளை நமஸ்காரம் செய்யும்போது நான்கு தடவைகள் செய்ய வேண்டும். அவர்கள் நம்மை ஆசீர்வதிக்கும்போது நாராயணு என்று தான் சொல்லவேண்டும். வேறு எதுவும் சொல்லக் கூடாது. இறைவனை ஞாபகப்படுத்தத்தான் இவ்வாறு சொல்லப்படுகிறது. மனத்தில் ஆழ்ந்த தியானம் செய்வதுதான் நல்லது. அப்படிப் பண்ணினால் இறைவனை நாம் நேரில் காண முடியும்.

சும்மா இருப்பதுவே சுகம்

உலகத்தில் அநேக மதங்கள் இருக்கின்றன. எந்தஒரு மதமாக இருந்தாலும் இரண்டு முறையில் கருத்துக்கள் இருக்கும். (1) தத்துவங்கள். (2) வாழ்க்கை முறை. இரண்டும் சேர்ந்து சொல்லப்பட்டு இருக்கும். என்னென்ன மாதிரி வாழ வேண்டும் என்று சொல்லப்பட்டு இருக்கும். பரமாத்மா ஒன்றுதான் நிஜம். மற்ற எல்லாம் பொய் என்றும் பரமாத்மாவை அடைய வழிகளும் சொல்லப்பட்டிருக்கும்.

சத்யத்தைப் பற்றிச் சொல்லும் போது சமுத்திரக் கரையிலே கிளிஞ்சல்கள் நிறைய இருக்கும். அந்தக் கிளிஞ்சல்களைப் பார்த்து இது வெள்ளியாக இருக்குமோ என நினைக்கிறோம் அதைக் கையில் எடுத்துப் பார்க்கும்போதுதான் கிளிஞ்சல் எனத் தெரிகிறது. அதே மாதிரி இருட்டில் போகும் போது ஒரு இடத்தில் கயிறு கிடந்தால் அதைப் பாம்பு என நினைத்து அஞ்சுகிறோம். வெளிச்சப போட்டுப் பார்க்கும் போதுதான் உண்மை நன்கு தெரிகிறது. பிராதிபாஸ்ய சத்யம் என்று சொல்வார்கள்.

அடுத்தபடியாக நாம் வாழ்க்கை வாழ்ந்துகொண்டு இருக்கிறோம். எதுவரைக்கும் ஒரு தொழில் உடலுக்காகப் பண்ணுகிறோமோ அந்த விவகாரம் இருக்கிற வரைக்கும் அது வியாவகார்ய சத்யம். அர்ஜுனனுக்கு கிருஷ்ண பரமாத்மா சொல்லும்போது 'சர்வம் பார்த்த மனோகதாம்' என்று சொல்லி மனசிலே எந்த ஒரு காரியத்தையும் நினைக்காமல் சும்மா எவன் ஒருவன் இருக்கிறானோ அவன் ஞானி என்கிறார்.

பழங்காலத்தில் ஒரு கதை உண்டு. ஒரு ஊரிலே ஒரு சாது இருந்தார். அவர் கோயிலில் தவம் பண்ணிக்கொண்டு இருப்பார். தீபாராதனை ஆன பிறகு சாதுவிற்கு பிரசாதம்

கொடுப்பார்கள். அவர் செய்யும் வேலை நைவேத்தியம் நடக்கும் போது மணி அடிப்பதோடு சரி. ஒரு நாள் கோவில் அதிகாரி வந்து எதற்காக இவனுக்குச் சாதம் கொடுக்கிறாய் என்று அங்கு இருந்தவரைக் கேட்டபோது, சாது இதைப் பற்றிக் கவலைப்படாமல் உட்கார்ந்துகொண்டு இருந்தார். உடனே அதிகாரி சாதுவைப்பார்த்து, 'ஒருவேலையும் செய்யாமல் சும்மா உட்கார்ந்து கொண்டே இருக்கிறாயே' என்கிறார். உடனே சாது 'சும்மா இருப்பது மிகவும் கடினமானகாரியம். நீங்கள் செய்யவேண்டிய வேலைகள் அத்தனையும் சொல்லுங்கள் அதை நான் செய்கிறேன். நீங்கள் என் மாதிரி ஒன்றும் செய்யாமல் சிறிது நேரம் உட்கார்ந்து இருங்கள்' என்றார். உடனே சாது செய்ய வேண்டிய வேலைகள் எல்லாம் சொல்லி விட்டு அவர் சாதுவைப்போல் உட்கார்ந்தார். அவரால் முடியவில்லை. அவரது மனம் எங்கெங்கோ அலைபாய்ந்து, அதற்குள் சாது எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு மறுபடியும் நிஷ்டையில் அமர்ந்துவிட்டார்.

இதைக் கண்ட அவர் ஆச்சரியம் அடைந்தார். 'ஆத்மார்த்தமாக எந்த வேலையையும் செய்யும்போது எதையும் சுலபமாகச் செய்துவிடமுடியும்' என்று கூறினார் சாது அவருக்கு. உடனே சும்மா இருந்த சாமியாருக்கு இரண்டு பட்டைச் சாப்பாடு கொடு என்று தமாஷாகச் சொன்னார் அதிகாரி.

பட்டினத்தாரும், தாயுமானவரும் சொல்லும்போது சும்மா இருக்கும் சுகமே சுகம் என்று பாடியிருக்கிறார்கள். இந்த மாதிரி மனசு ஆடாமல் இருப்பதற்குத்தான் உருவ வழிபாடு என்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். நாம் சாப்பிடும் போது ஐந்தாறுவகைச் சாப்பாடு வைப்பார்கள். அதேமாதிரி ஐந்தாறு சிந்தனைகள் நமக்கு வரும். அந்த ஐந்தில் ஏதாவது ஒன்று நல்ல சிந்தனையாக அமையும். அந்த மாதிரி நல்ல சிந்தனைகள் வரத்தான் சடங்குகள் வைத்து இருக்கிறார்கள். சும்மா இருக்கும்போது அடைகிற சுகத்தை எப்போதும் பெறத்தான் இத்தனை சடங்குகள் வைத்து இருக்கிறார்கள்.

ஒரு ஊரிலே பாகவதம் படிப்பவர் ஒருவர் இருந்தார். அவர் வறுமையால் வாடினார். அரசனிடம் சென்று பாகவதம் படித்தால் நம் வறுமை போக ஏதாவது தருவார், அதனால் நம் வறுமை போகும் என எண்ணி அங்கு போனார். அரசன் 'இப்போது பாராயணம் வேண்டாம். பிறகு வா' என்று ஒவ்வொரு நாளும் கூறினான். மனம் வருந்திய அவர் தானே பாகவதத்தை அனுபவித்துப் படிக்க ஆரம்பித்துவிட்டார். இதனால் மன சஞ்சலங்கள் நீங்கி பேரானந்தம் அடைந்தார். இதை அறிந்த மன்னன் தானும் அதைப்போல் அடைய வழி செய்யுங்கள் எனக்கூறி பணமுடிப்புக்களைக் கொடுத்தான. அவர்'எனக்கு இது இப்போது வேண்டாம். நான் வேண்டியது எனக்குக் கிடைத்துவிட்டது' என்றார், எனக் கதை சொல்வதுண்டு.

நாம் விரும்பும்போது மற்றவன் விரும்பமாட்டான். நாம் விரும்பாதபோது மற்றவன் நம்மிடம் வருவான். இது ஒரு கருத்தாகும். தன்னுடைய ஆத்ம ஸ்வரூபத்தைப் பார்த்து ஆனந்தப்படுகிறவன்தான் ஞானி. இவையெல்லாம் வியாவகாரிய சத்தியம். சத்தியம் காணும்வரைக்கும் எல்லாம் நிஜம், கண்ட பிற்பாடு எல்லாம் பொய். உலகம் இருக்கும் வரைக்கும் சுகதுக்கம் நம்மைவிட்டுப் போகாது. பாலும் தண்ணீரும் போல இரண்டறக் கலந்து இருப்பவன் இறைவன் எனச் சொல்வது வேத சித்தாந்தம். உடம்பு என்றால் கை, கால், தலை எல்லாம்சேர்ந்ததுதான்உடம்பு. இதுபோல் பரமாத்மாவும் ஜீவாத்மாவும் ஒன்றாகத்தான் இருக்கும் என்பது விசிஸ்டாத்வைதம். எல்லாக் கருத்தும் ஒன்றுதான். எந்த ஒரு கருத்தாக இருந்தாலும் ஆழ்ந்து படித்தால்தான் பலன் கிடைக்கும். அவரவர் கடமைகளை ஒழுங்காகச் செய்தால் முடிவு நல்லதாக இருக்கும். அனுபவத்தால்தான் நாம் இறைவனைக் காண முடியும். உயர்ந்த தத்துவங்கள் அருவமும் உருவமுமாகி எனச் சொல்லப்படுகிறது. நாம் எல்லோரும் அருவமாக உள்ள இறைவனை நினைத்துக்கொண்டு எல்லாரும் இன்பமாக இருப்போமாக.

மோட்சம் கொடுக்கும் தலங்கள்

உலகத்திலே பரிபூரண ஆனந்தமாக, எந்த ஒரு கவலையும் இல்லாமலிருப்பவர் பரம்பொருள் ஒன்றுதான். தேவர்களுக்கெல்லாம்கூட சுகதுக்கங்கள் உண்டு. நம் மாதிரி நிறைய கஷ்டங்கள் கிடையாதே தவிர மற்றபடி எல்லாம் உண்டு. இவை எல்லாம் மாறிமாறி வரும். இதை வைத்துக்கொண்டு தான் மனிதன்ஜீவித்துக்கொண்டு இருக்கிறான். உடல் என்றால் துன்பம் தவிர்க்கமுடியாது. இதைத் தவிர்க்கத்தான் மதங்கள் சமயங்கள். ஒவ்வொரு மதமும் பல வழிகளைச் சொல்கின்றது. நம் மதமும் பல வழிகளைச்சொல்கிறது. துன்பத்தினால் ஒருவன் தூக்குப் போட்டுக்கொண்டு இறந்தால் உடலால் துன்பம் அவனுக்குப் போய்விட்டாலும் உள்ளத் துன்பம் இருந்துவரத் தான் செய்யும். பாவங்களை ஒருவன் பண்ணினால் அதைப் போக்க புண்ணிய க்ஷேத்திரங்களுக்குச் சென்று வந்தால் பாபங்களின் சக்தி குறையும். ஆனால், செய்த பாவங்களின் முழுப்பலனும் குறைந்துவிடாது.

காசியில் கங்கையில ஸ்நானம் செய்தால் பாவம் போகும். மிகவும் புனிதமான க்ஷேத்திரம் காசி. அதைப்போல முக்கியமான ஊர்கள் பல உள்ளன. அயோத்தி, இராமபிரான் உதித்த இடம். இங்கு நாம் இறந்தால் நமக்கு மோட்சம் கிடைக்கும். மதுரா, கிருஷ்ணபரமாத்மா அவதரித்த இடம். இங்கு இறந்தாலும் நமக்கு மோட்சம் கிடைக்கும். அடுத்து மாயா (ஹரித்துவார்). இங்கு இறந்தாலும் நமக்கு மோட்சம் கிடைக்கும். 'மோட்சமிச்சேஜனார்த்தனு' என்று இறைவனை இங்கே சொல்வதுண்டு. மோட்சம் கொடுக்கிறவன் என்று பெயர். இங்கெல்லாம் இராமநாமம் எப்போதும் ஜபிக்கப் படுகிறது. இராம நாமத்தைக் காதிலே கேட்பதன் மூலமாகப் பிறவி இல்லாத பெரும்பேற்றை நாம் அடையலாம்,

காஞ்சியில் இறந்தாலும் மோட்சம் கிடைக்கும் என்று நம்பப்படுகிறது. மிகப்பெரிய க்ஷேத்திரம் காஞ்சியாகும். இங்கு எந்தக் கோவிலில் உற்சவம் நடந்தாலும் காமாக்ஷியை வலம் வந்துதான் செல்லும். அம்பாள் இரண்டு நிலைகளில் இருப்பாள். ஒன்று நின்றுகொண்டு இருத்தல். மற்றொன்று உட்கார்ந்துகொண்டு இருத்தல். காஞ்சியிலே அம்பாளுக்குச் செயல் பாசாங்குசமும் வர முத்திரையும் இல்லை. அதற்குப் பதிலாக அவளதுதிருவடியிலேயே எல்லாவற்றையும் அளிக்கக் கூடிய சக்தி உள்ளது. முன் சொன்னஇடங்களில் நாம் இறந்தால்தான் மோட்சம் கிடைக்கும். ஆனால் காஞ்சியில் நாம் இருக்கும்போதேநமக்கு மோட்சம் கிடைக்கும். இதற்கு ஜீவன் முக்தி என்றுபெயர். ஜீவன் முக்திக்கு வழிகாட்டியாக அந்த அம்பாளினுடைய ஸ்வரூபம் அமைந்துள்ளது. ஒரு கையிலே கரும்பும், ஒரு கையிலே ஐந்து புஷ்பங்களும் கொண்டு இருக்கிறாள். ஐந்து இந்திரியங்களுக்கும் உதாரணமாக இருப்பது புஷ்பங்கள். மனசுக்கு உதாரணமாக கரும்பு சொல்லப்படுகிறது. புஷ்பங்களைத்தொட்டால் எப்படிவாடிவிடுகிறதோ அதைப்போல பொருளை அனுபவிக்கும்போது இந்திரியங்களும் வாடிவிடுகின்றன. இதற்கு உலர்ந்த புஷ்பங்களை அம்பாள் கையில் வைத்திருக்கிறாள். கரும்பின் ரசம் இனிப்பாக இருக்கும். ஆனால் கரும்பை கடிக்கும்போது பல் வலிக்கிறது: துன்பம் ஏற்படுகிறது. கரும்பைப்போல மனசு என்பதை உணர்த்தத்தான் கரும்பு எனச் சொல்வார்கள். மனம் அடங்க வேண்டுமானால் அம்பாளை நினைக்க வேண்டும். அம்பாளினுடைய அருள் நமக்குக் கிடைக்கும்.

மத்தியப் பிரதேசத்தில் உஜ்ஜயினி என்று ஒரு இடம் உள்ளது. அங்கு இறந்தாலும் பிறவிப்பேறு கிடைக்கிறது. துவாரகா பட்டணம் குஜராத்தில் உள்ளது. அங்கு இறந்தாலும் பிறவிப்பேறு கிடைக்கிறது. நம் தமிழ் நாட்டிலேகூட மோட்சத்தைத் தரக்கூடிய ஊர்கள் உள்ளன. திருவையாறு, திருவெண்காடு, மாயூரம், திருச்சாயக்காடு, திருவிடைமருதூர், ஸ்ரீவாஞ்சியம், இங்கெல்லாம் இறந்தாலும் நமக்கு,

மோட்சம் கிடைக்கிறது, இவையெல்லாம் காசிக்கு சமானமாக உள்ளன. வாழ்நாளில் சிதம்பரம் ஒரு தடவையாவது சென்றால் போதும். அங்கு இறைவனோடு ஐக்கியம் அடையலாம் என்று சொல்லப்படுகிறது. ஞானஜோதி வடிவமாகத் திருவண்ணாமலையில் காட்சி தருகிறார் இறைவன். அங்கும் நமக்கு மோட்சம் கிடைக்கிறது. பிறவி இல்லாமல் இருந்தால் தான் நல்லது. இதற்கு நாம் நிறைய க்ஷேத்திரங்களுக்குப் போய்வர வேண்டும். இராமேஸ்வரம் எல்லா பாவங்களையும் போக்கக்கூடியது. துன்பத்தைப் போக்க இராம நாமத்தைச் சொல்ல வேண்டும். இதை ஜபித்தால் நமக்கு நல்லது கிடைக்கும். நம்பிக்கையும் உறுதியும் இருந்தால் எல்லாம் நமக்கு நல்லதாக நடக்கும்.

சமஸ்கிருதத்தின் உயர்வு

ஜனங்களிடையே சமஸ்கிருத அறிவு நிறைய வளர வேண்டும். பழங்காலத்திலிருந்தே சமஸ்கிருதம் வந்து கொண்டிருக்கிறது. திடீர் என்று சமஸ்கிருதம் தோன்றவில்லை. சமஸ்கிருதத்தினால் நமக்கு நிறைய நன்மைகள் உண்டாகின்றன, இதைப் படிப்பதன் மூலம் நல்ல சிந்தனைகள் உருவாகின்றன. சமஸ்கிருதம் கற்றுக்கொள்ள வழிகள் உள்ளன பேச்சு வேறு எழுத்து வேறு. பேச்சுக்கு எழுத்து வடிவங்கள் உள்ளன. தமிழ் மொழியைத் தவிர மற்ற மொழிகளில் எழுத்தும் பேச்சும் ஒரே மாதிரி இருக்கும். சமஸ்கிருதத்தை அந்தந்த பிராந்திய மொழிகளில் அதனதன் எழுத்துக்களிலே கற்றுக்கொள்ளலாம். இது 150 வருஷங்களுக்கு முன்பு பழக்கத்திலே கிடையாது.

எந்த ஒரு மொழியாக இருந்தாலும் அதில் சமஸ்கிருதத்தைப் பார்க்க முடியும். இதை நாம் எல்லோரும் நன்கு கற்றுக் கொள்ளவேண்டும. நம்முடைய மதத்தைப் பார்க்கும்போது பரம்பொருள் ஒன்றுதான் பல வடிவங்களில் இறைவனாக இருப்பதைப்போல, ஒரே சமஸ்கிருத மானது பல எழுத்துக்களின் மூலமாக அந்தந்த பிராந்திய மொழிகளில் வடிவெழுத்தாக வருகிறது. சமஸ்கிருதத்தின் மூலம் இறைவனை வழிபட்டால் நல்லருள் கிடைக்கும். மனசு சுத்தமாக தேவாரம், திருவாசகம் இவைகளைப் படிக்கும்போது தானாகவே கண்ணீர் வரும், நல்ல பண்புகளை அளிக்க இவைகளைப் போன்ற நூல்களைப் படிக்கவேண்டும். இம்மாதிரி நூல்கள் சமஸ்கிருதத்தில் நிறைய உள்ளன. எல்லோருக்கும் பொதுவான மொழி சமஸ்கிருதம் என்ற நினைப்பு எல்லோருடைய மனத்திலும் வர வேண்டும்.

வெளிநாட்டில் உள்ளவர்கள் எல்லோரும் நம் சமஸ்கிருத நூல்களை நிறைய விரும்பிப் படிக்கிறார்கள். ஜெர்மனியில்

சமஸ்கிருதம் படித்தவர்கள் நிறையப் பேர் உள்ளனர். நல்ல சங்கதிகள் சமஸ்கிருதத்தில் நிறைய இருக்கின்றன. உலகம் தோன்றிய காலத்திலிருந்தே இம்மொழி உள்ளது. தமிழ் மொழி இதன் மூலம்தான் வந்தது. எந்த ஒரு மொழியிலும் இல்லாத இலக்கண இலக்கியங்கள் சமஸ்கிருதத்தில் உள்ளன.

சமஸ்கிருதம் படிக்க நிறைய நூல்கள் உள்ளன. இறைவன் எப்படி அழிவது இல்லையோ அதே மாதிரி சமஸ்கிருதமும் ஒரு நாளும் அழியாது. உலகம் உள்ள வரைக்கும் அதுவும் இருந்துகொண்டே வரும். சூரியன் கிழக்கே தோன்றி மேற்கே மறைவதைப் போல சில சமயங்களில் சமஸ்கிருதம் மறையலாமே தவிர அழிவது இல்லை. இத்தகைய சிறப்புகளைக் கொண்டது நம் ஹிந்துமதம். ஆண்டவனுடைய அருளினால் நம் மதம் இன்னும் அழியாமல் இருந்து வருகிறது. மற்ற மதங்களைப் போல வெளிநாட்டிலிருந்து நம் மதத்தை வளர்க்கப் பணம் வருவதே இல்லை. இறைவன்தான் நம் மதத்தைக் காப்பாற்றி வருகிறார். இத்தகைய இறைவனை வழிபட மனத்தெளிவோடு சமஸ்கிருதத்தைக் கற்றுக் கொண்டு பகவானை வழிபட்டால் எல்லாம் நல்லதாக நடக்கும்.

மகா பிரதோஷம்

இன்றைய தினம் மகா பிரதோஷம். இந்த நாளில் விளக்குவைத்த சந்தியா நேரத்திலே திரயோதசி திதி என்று இருக்குமோ அன்றைய தினம் மகா பிரதோஷம் என்று சொல்லப்படுகிறது. இன்றைய தினமானது சனி பிரதோஷம். மிகவும் விசேஷமானது. சிவனுக்கு மிகவும் விசேஷமான நாள் ஆகும். பார்வதியும் பரமேஸ்வரனும் இரண்டற்ற வடிவமாக இருக்கிறார்கள். ஈசன்தான் எல்லாவற்றுக்கும் பொதுவாக இருக்கிறார். விருஷபவாகனத்தில் இருந்து காட்சி கொடுப்பது இன்றைய மகா பிரதோஷத்தின் விசேஷமாகும். குடும்பத்தில் உள்ள எல்லோருக்கும் ஒரு அனுகூலம் வரவேண்டும் என்பதற்காகத்தான் ஒரே வடிவத்தில் காட்சி அளிப்பதாகச் சொல்லப்படுகிறது. அவர் அர்த்தநாரீஸ்வரராகவும், உமா மகேஸ்வரராகவும் காட்சி அளிக்கிறார்.

சிவ புராணத்தில் இறைவனது லீலைகள் பற்றிச் சொல்லப்படுகிறது. இது பரஞ்சோதி முனிவர் எழுதியதாகும். சிவனுக்கு கால சம்ஹார மூர்த்தி, காம சம்ஹார மூர்த்தி, பசுபதிநாத் என்ற பலவிதமான பெயர்கள் உண்டு. காமனைக் கண்ணால் எரித்தவர், காலனைக் காலால் உதைத்தவர் என்று தமிழில் பாட்டு உண்டு. தாரகாசுரன் என்று ஒரு அசுரன். அவன் தேவர்களுக்கு எல்லாம் உபத்திரவம் செய்துகொண்டு இருந்தான். அவன் சிவபார்வதியால் உண்டாக்கப்பட்ட சுப்ரமண்ய சுவாமிகள் மூலம் அழிக்கப்படுகிறான். காமனை தன் மூன்றாம் கண்ணாகிய நெற்றிக் கண்ணின் மூலம் எரித்தார் என்று சொல்லப்படுகிறது. அந்தக் கண் இரண்டு கண்களுக்கு மத்தியில் நெற்றியில் இருக்கும் கண் ஆகும். நம் வாழ்க்கையிலே தியானம் பண்ணப் பண்ண நம்மிடையே உள்ள காமங்கள் எல்லாம் அழிந்துவிடும். பசுபதிநாதர் என்ற பெயர் பரமேஸ்

வரனுக்கு உண்டு. நேபாளத்தில் பஞ்சமுகத்தோடு உள்ளார். ஸ்ரீ காளஹஸ்தியிலும் பஞ்சமுகத்தோடு உள்ளார். பழங்காலம் தொட்டு பஞ்சமுகத்தோடு சுவாமி இருக்கக்கூடியது நேபாளம்தான். மற்றவைகள் எல்லாம் இப்போதுதான் வந்தவை. இவருக்குப் பெயர்தான் பசுபதிநாதர். பசு என்றால் உயிர் இனங்கள் என்று பெயர். அப்படி உள்ள பசுக்கூட்டங் களுக்கு எல்லாம் நாதன், தலைவனாக உள்ளார் என்று இதற்குப் பொருள். நம் வாழ்க்கையிலே சுகதுக்கங்கள்எல்லாம் நிறைய வருகிறது. இவைகளைஎல்லாம் பரமேஸ்வரன் அழித்து சமாளித்து நம்மைப் பாதுகாத்துக் கொண்டு வருகிறார். நாமும் பசுவைப்போல ஒரு உயிரினம்தான். பகவானை வழிபட்டால் எல்லாம் கிடைக்கும். சரஸ்வதியினால் அருள் நமக்கு நிறைய கிடைக்கும். லக்ஷ்மியினால் பொன்னும் பொருளும் குறைவில்லாது கிடைக்கும். பகவானை வழிபட் டால் ஜீவன் முக்தி கிடைக்கும் எனச் சொல்லப்படுகிறது.

ஆதிசங்கரர் சொல்லும்போது இறைவனை வழிபடுவதன் மூலமாக நல்ல புத்தி கிடைக்கும், நல்ல ஞாபக சக்தி கிடைக்கும், நல்லருள் கிடைக்கும் எனச் சொல்லுகிறார். இவற்றால் அமைதி, அனுபவம் கிடைக்கும் என்று சொல்லு கின்றார். இறைவனை வழிபடுவதன் மூலம் சிரஞ்சீவத்துவம் நமக்குக் கிடைக்கும். இறைவனை வழிபடுவதன் மூலம் காம குரோதம் இல்லாதவனாக நம்மை இறைவன் ஆக்குவான். 'ஞானம் இச்சேச மகேஸ்வரா' என்று சொல்வதுண்டு. ஞானத் தைக் கொடுப்பவன் இறைவன். அத்தகைய பரமேஸ் வரனுக்கு விசேஷமான நாள். நம்முடைய வாழ்க்கையிலே இன்பங்கள் ஏற்பட அந்த பரமேஸ்வரனை பக்தி பண்ணினால் தான் முடியும். எல்லா துன்பங்களையும் போக்கக்கூடியது மகாபிரதோஷம். யார் ஒருவன் அந்தக் காலத்தில் இறைவனைக் கும்பிடுகிறானோ அவனுக்குத் தோஷமே வராது. அத்தகைய அருள் நம் எல்லோருக்கும் கிடைக்கும்.

உலகை இயக்கும் மாபெரும் சக்தி

இந்த உலகத்திலே ஒரு சாமான் தயாரானலும் அது ஒவ்வொன்றும் மனிதனலேயே செய்யப்படுகிறது. ஆனல் இந்த உலகத்தைப் படைத்தவர் யார் என்று கேட்டால் எவ்வளவு பெரிய பகுத்தறிவு வாதியும்கூட இது இயற்கை என்று கூறிவிடுவான். இந்த உலகம் ஒரு மாபெரும் சக்தியில் இருந்து உருவாக்கப்பட்டு வந்திருக்கிறது. காலம் தவருமல் நடக்கக்கூடிய ஒரு வேலை இறைவனல் நடத்தப்பெறுகின்றது. இந்தமாதிரி ஒரு மனிதன்கூடச் செய்யமுடியாது. இவ்வாறு நடைபெறுவது மனித சக்தியால் அல்ல. மனித சக்திக்கும் அப்பாற்பட்ட ஒரு சக்தி இருப்பதால்தான் இத்தனையும் ஒரு முறையாக நடைபெறுகின்றன. ஒரு பரம்பொருளின் சக்தியின் கீழே இந்த உலகம் நடைபெற்று வருகின்றது. இந்த பரம் பொருள் அநாதியாக இருந்து வருகின்றது.

இதைப் போலவே ஜீவனும் அநாதியாக இருக்கிறது. இது எல்லா உயிர்களிடமும் இருக்கின்றது. ஜீவன் இருக்கக் கூடிய உடல் வரும்போகும். இந்த மனித உடல் நியதி அல்ல. இந்த உலகைப் படைக்கக்கூடிய ஈஸ்வரனும் ஒரு அநாதி. ஈஸ்வரனுக்கும் மேலே ஒரு சக்தி இருக்கிறது. இதைத்தான் பரம்பொருள் என்று சொல்கிரும். பரம் என்ருல் உயர்ந்தது. அவரது உருவம் சுத்த சைதன்ய உருவமாகும். அவர் ஆனந்த மாக உள்ளவர். ஜீவனும் ஈஸ்வரனும் ஒருநாளும் ஒன்ருக ஆகமுடியாது. ஜீவனுக்கு ஒரு சக்தி வேண்டும். அந்த சக்தி தான் மாயா, அவத்தியா என்று பெயர். இந்த உலகத்தில் ப்ருத்வி, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாயம் என்று சொல்லக்கூடிய ஐந்து பஞ்சபூதங்கள் நிறைந்து இருக்கின்றன. இவை ஒவ்வொன்றிற்கும் ஒரு தன்மை உள்ளது. இந்த பஞ்சபூதங்கள் இல்லை என்ருல் இந்த உலகத்தைப் பார்க்க முடியாது. நாம்

மாறியுள்ளோமே தவிர இந்த உலகம் மாறவில்லை. பரம்பொருளின் சக்தியின் கீழ் நாம் எல்லோரும் கட்டுப்பட்டு வந்து கொண்டிருக்கிறோம்.

எல்லாப் பிராணிகளையும் மனிதன் ஆட்டுகின்றான். இதனால் மனிதன் உயர்ந்தவன் ஆகின்றான். மனிதனை ஆட்டுவிக்கப் பரம்பொருளின் சக்தி வருகிறது. ஆனால் பரம்பொருள் எல்லாவற்றிற்கும் மேலாக இருக்கின்றான். நம் வாழ்க்கை கர்ம சித்தாந்தத்தின் அடிப்படையில் அமைந்து இருக்கிறது; எல்லா காரியங்களும் ஒரு தொடர்போடு நடந்து வருகிறது. எல்லாம் ஒரு காரணகாரியத்தோடு நடைபெறுகிறது. நம் வாழ்க்கையில் எந்த அளவுக்குத் தப்பு பண்ணினாலும் அந்த அளவுக்குப் பாதியாவது நல்லது செய்தால்தான் அவனுக்கு முறையான வாழ்க்கை அமைகின்றது. இறைவனுடைய அறிவுக்கு அடுத்தபடியாக அதிக அறிவு உள்ளவன் மனிதன் தான். நம்மிடையே உள்ள சக்தியை உபயோகப்படுத்தி நல்லது பண்ணிவந்தால் எல்லாம் ஒழுங்காக இருக்கும். ஒழுங்காக நடப்பது இறைவன் படைப்பு ஒன்றுதான். உலகம் முழுவதும் நல்லபடியாக வாழவேண்டும் என்பதற்காகத்தான் எல்லாம் ஒரு முறையோடு செயல்படுகின்றது.

நம் தலையெழுத்தை யாராலும் அழிக்க முடியாது. அதன் பலனை நாம் அனுபவிக்கத்தான் வேண்டும். இதை ஒன்றும் செய்ய முடியாது. இதனால் வரும் தீமைகளைக் குறைக்க முடியும். இதற்குத்தான் கோயிலுக்குச் செல்வது போன்றவைகளை நாம் மேற்கொள்கிறோம். மனித வாழ்க்கையிலே நற்குணங்கள் ஏற்படத்தான் மதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. தெளிவான பாதையோடுகூட தப்பே பண்ணமல், பரம்பொருள் காரியங்களை நியதியோடு பண்ணுகிறார். அந்தப்பரம்பொருளை நாம் எல்லோரும் அடையவேண்டும். எல்லோருடைய உள்ளத்திலேயும் இறைவன் இருந்து நம்மை ஆட்டிவைக்கிறான். பரம்பொருளைச் சரணம் அடைந்தால் நமக்கு நன்மைகள் நடக்கும். வெறும் பகுத்தறிவை வைத்துக் கொண்டு நாம் இருக்க முடியாது. அவன் இன்றி ஒரு அணுவும் அசையாது எனச் சொல்லப்படுகிறது. அவனாகிய பரம்பொருளை அடைந்து நல்ல பலனைப் பெறுவோமாக.

கண்ணன்-பரமசிவன்

ஆதி சங்கரர் நூல்கள்எழுதி இருக்கிறார். அதில் எல்லாம் ஈஸ்வரனைப் பற்றி உபாசனை செய் என்று கூறுகின்றார். கண், மனம் இவை மூலம் சூரியனை நினைத்து தியானம் செய் என்கிறார். எந்த ஒரு பெருமாள் கோவிலிலும் சாளக்ராமம் இல்லாமல் இருக்காது. அந்த மாதிரி சாளக்ராமம் இருக்குமிடத்தில் ஒரு துன்பமும் வராது என்று சொல்லப்படுகிறது. சாளக்ராம பூஜை அந்தக் காலத்திலே வீடுகளில் எல்லாம் நடக்கும். சாளக்ராமம் என்பது ஒரு விசேஷமான சிலைக்கல். அதிலே பெருமாளை நினைத்துக் கொண்டு உபாசனை, தியானம் செய் என்று சொல்வதுண்டு. எங்கும் நிறைந்துள்ள பரமேஸ்வரன் நமக்கு பிரசித்தமாகத் தெரிகிறது. பரமாத்மாதான் ஈஸ்வர ஸ்வரூபம், எல்லா ஸ்வரூபமாகவும் இருக்கின்றார்.

கிருஷ்ணன் கீதையில் விஸ்வரூப அத்தியாயத்தில் உலகம் பூராவிலும் நான்தான் இருக்கிறேன், விஸ்வரூபம் எடுத்துக் கொண்டு இருக்கிறேன் என்று கூறினார். சிவன், கிருஷ்ணன் இரண்டு பேரும் ஒரே மாதிரி ஞான உபதேசம் பண்ணுகிறார்கள். அதனால் அவர்கள் இருவரும் ஒருவரே என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். நமது புத்தியில் அறிவுத் தெளிவு ஏற்பட வேண்டுமானால் பரமேஸ்வரன் அருளால்தான் அதுமுடியும் என்று ஒரு முனிவர் சொல்லுகிறார். பரமாத்மாவை பூஜை செய், பரமாத்மா ஸ்வரூபத்தை அடைவாய் என்று பல இடங்களில் பகவான் உபதேசம் பண்ணினார். பரமேஸ்வர ஸ்வரூபம் சுத்தமான ஸ்வரூபம், ஸ்படிகம் போன்று தூய்மையாக இருக்கும். அவரைப் பூஜித்தால் நம் மனமும் தெளிவாக இருக்கும் நமக்கு ஏற்படுகிற கர்மாக்கள் வினைகளால்தான் நாம் கஷ்டங்களை அனுபவிக்கிறோம். மாயா சக்தியினால்தான் எல்லாம் நடைபெறுகிறது. இதைப் புரிய வைப்பதுதான் ஞான உபதேசம்.

குரு என்று சொல்லும் போது தட்க்ஷிணாமூர்த்தி, கிருஷ்ணர் என்று இருவரைத்தான் நாம் சொல்லுகிறோம். பகவானுடைய ஆச்சர்யங்கள் எல்லாம் நம் புத்திக்கு எட்டாமல் போய்க்கொண்டு இருக்கிறது. இறை பக்தியைச் செய்து, நினைத்ததை அடைய நல்ல நூல்களைப் படித்து அதன் பிரகாரம் நடக்க வேண்டும். அதன் மூலம் நல்ல அறிவு பெறுவதற்குத்தான் ஞானம் என்று பெயர். நல்ல அப்யாசங்கள் செய்வதனால் நல்ல ஞானம் நமக்குக்கிடைக்கும்.

ஒரு ஜவுளிக்கடை இருக்கிறது. அதில் பலவிதமான ஜவுளிகள் இருக்கின்றன. அவன் ஒரே மனத்தோடு எத்தனை பேர்கள் வந்தாலும் ஜவுளிகளைக் காண்பிக்கிறான். ஆனால் அவனுக்கு எந்த வித ஆதாயமும் இல்லை. இதனால் சம்பளமும் அவனுக்கு அதிகமாகக் கிடைப்பதில்லை. அந்தக் கடைப் பையனது மனத்தைப் போல நம்மனமும் இருக்க வேண்டும். நமக்குக் கிடைத்ததை வைத்து திருப்திப்படுவது தான் வைராக்கியம். நல்ல எண்ணம் மனசில் உருவாக வேண்டும். அப்போதுதான் இறைவனை நாம் அடைய முடியும் என்று ஞான உபதேசம் பண்ணுகின்றார் இறைவன்.

நல்லதும் தீயதும்

நம் மதத்தில் எந்த ஒரு நல்லகாரியமும், யார் பண்ணினாலும் அதன் பலன் எல்லோருக்கும் கிடைக்கிறது' என்று கூறுவதுண்டு. 'நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோர்க்கும் பெய்யும் மழை.' நல்லது இருந் தால் அதன் மூலம் நல்லது கிடைக்கிறது, அதைப்போல் தீயது இருந்தால் தீயதும் அதன் மூலம் எல்லோருக்கும் கிடைப்பதுண்டு. தீயவர்கள் பட்டியலில் சேரக் கூடாது என்று ஒவ்வொருவரும் நினைத்தால் நாடே நல்லவர்கள் நிறைந்த நாடாகிவிடும். தீயது நமக்கு வரும்போது நாம் கஷ்டப்படுகிறோம். . இது நிஜம். இருப்பதை வைத்துக் கொண்டு நாம் சுகப்படவேண்டும்.

வாழ்க்கையிலே நமக்குச் சாவு நிஜம் ஆக இருந்தாலும்கூட நல்லபடியாகச் சாக வேண்டும். சாகும் சமயத்தில் அதிக துன்பம் இல்லாமல் சாக வேண்டும். அந்த ஒரு நிலை வர வேண்டும் என்பதற்காக நல்ல கதைகள் சொல்வதுண்டு. நல்லவர்களாக வாழ்ந்தால் அதன் மூலம் நல்ல பயன் கிடைக் கும். தீங்கு இல்லாமல், துன்பம் இல்லாமல் இருப்பவர் பர மாத்மா ஒருவர்தான். ஆகையால் அவரை அடைய நாம் பல வேள்விகளைச் செய்கிறோம். அந்த முறையிலே உலகம் முழுவ தும் வாழ, பொருளாதார வளர்ச்சி அடைந்து நன்கு சுபிட்ச மாக வாழ, வழி செய்யவேண்டும்.

உதவிகளைப் பலன் எதிர்பார்க்காமல் செய்யவேண்டும். நல்ல குணங்கள், நல்ல சிந்தனைகள் வருவதற்கு பிரசுரங்கள், பஜனை, பூஜை முதலியவைகள் இருக்கின்றன. வேள்விகள் பழங்காலம் தொட்டு வருகிறது. ஏதோ ஒரு வழியிலே அக்னி வழிபாடு நடந்து வருகிறது. இதனால்தான் நமக்கும் பொரு ளாதார வளர்ச்சி கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது.

வேற்றுமையில் ஒற்றுமையைக் காண்பதுதான் நம் ஹிந்து மதம். மற்ற மதத்தில் உழைப்பு ஒன்றினால் எல்லாம் நடக்கும் எனச் சொல்வதுண்டு. ஆனால் நம் மதத்தில் உழைப்பினாலும் கூடவே கடவுள் அருளினாலும் நல்லது நடக்கும் என்று சொல்வதுண்டு. மற்ற மதங்களுக்கு வெளிநாடுகளின் உதவி கிடைக்கிறது. ஆனால் நம் மதத்திற்கும் வேள்விகளுக்கும் பணம் ஏதோ ஒரு உருவத்தில் வருகிறது.

நல்லது பண்ணுவதற்கு தர்மம் என்றும், தீயதுபண்ணுவதற்கு அதர்மம் என்றும் பெயர். நாம் செய்த வினைகள் தான் அதற்குத் தகுந்த உருவங்களில் நமக்குப் பிறக்கும் குழந்தைகளாக வெளிவருகின்றன. இதற்குத் தாய் தகப்பன் தான் காரணமே தவிர இறைவன் அல்ல. அப்படி இறைவனைக் குற்றம் சொல்வது தகாது. புராணங்களில் இதற்கு ஆதாரம் உண்டு. நல்லது இருக்கும் இடத்தில் ஒரு தீயது சேர்ந்தாலும் நல்லது கெட்டுவிடும். ஒரு குடம் பாலில் ஒரு துளி விஷம் விழுந்ததைப்போலாகும். நாம் தீய எண்ணங்களைக் குறைத்து நல்ல எண்ணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். கொஞ்சம்கொஞ்சமாக நல்லது பண்ணும்போது அதனுடைய பலன் மொத்தமாகச் சேர்ந்து நமக்கு நிறையக் கிடைக்கும்.

நாம் செய்யும் கெடுதல்கள்தான் நம் குழந்தைகளுக்குத் தீயவைகளாக வருகின்றன. வாழ்க்கையில் நல்லது நடக்க அம்பாள் அருள் நிச்சயம் நமக்குக் கிடைக்க வேண்டும். அம்பாளினுடைய கண்கள் நீலோத்பல புஷ்பம் போல இருக்கும். அந்தக் கண்கள் மிகவும் குளிர்ச்சியாக இருக்கும். இதைப் போலவே ஈஸ்வரனின் கண்களும் இருக்கும் என்று சொல்லப்படுகிறது. இத்தகைய கண்களினால் என்னைக்கூட பார் என்று ஆதி சங்கரர் கூறுகிறார்.

சந்திரனின் ஒளி எங்கும் நிறைந்து இருக்கிறது. பகவான் என்பவர் எங்கும் ஒரே மாதிரியாக நிறைந்து இருக்கிறார். இந்தக் கருத்துகள் வேதங்களில் சொல்லப்பட்டுவருகிறது. நம் மதத்திற்கு அடிப்படையாக உள்ளது இந்த வேதங்கள்தான்.

அவை நல்லதைச் சொல்கிறதே தவிர தீயதைச் சொல்லவில்லை. அந்த மாதிரி நல்லது, பரமாத்மா ஒன்றுதான். அவருடைய அருள் இருந்தால் நமக்கு நல்லது கிடைக்கும்.

மக்களிடையே நல்ல உணர்ச்சிகள் வளர வேண்டும். இதற்கு நாம் எல்லோரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். வேதங்கள்தான் நாட்டில் ஒற்றுமையை ஏற்படுத்துகிறது. இறைவனிடம் நாம் எல்லோரும் நல்லவனாக பக்தி செய்ய வேண்டும். அப்போதுதான் நாம் நல்லவனாக இருக்கமுடியும்.

ஆலயம் தொழுதல் சாலவும் நன்று

நம்முடைய வாழ்நாளில் எத்தனையோ பிரச்னைகள் வருகின்றன. அந்தப் பிரச்னைகள் தீருவதற்காக ஆலயத்துக்குச் செல்கிறோம். இறைவன் அருளால் நமது பிரச்சனைகள் தீருகின்றன. இவ்வாறு நமது பிரச்சனைகளைத் தீர்க்கக் கூடிய இடமான ஆலயங்களில் இன்று ஏராளமான பிரச்சனைகள். இதனை அறியும்போது மிகவும் சங்கடமாக இருக்கிறது.

ஹிந்து மதத்தின் ஆணிவேர் ஆலயம். அதற்கு ஆபத்து என்று கூட்டம் போட்டுச் சொல்ல வேண்டிய பரிதாப நிலைமை இன்று ஏற்பட்டிருக்கிறது. ஆலயங்கள் அவதார புருஷர்களும், மகரிஷிகளும் வழிபட்டவை. ஒவ்வொரு ஊரிலும் ஸ்தல விருட்சம், தீர்த்தம் ஆகியவை இருக்கிறது.

தவசிகள் மகான்கள் ஆங்காங்கே மரத்தடியில் அமர்ந்து ஆண்டவனை நோக்கித் தவமிருந்தார்கள். அருகே ஒரு குளமோ கிணறோ இருக்கும். அந்த மரங்கள் ஸ்தலவிருக்ஷமாயின. நீர்நிலை தீர்த்த கட்டமாயிற்று.

தவத்துக்கு உதவும் ஸ்தலவிருட்சமும் தூய்மைக்கு உதவும் தீர்த்தமும் பெருமைக்கு உரியவை. இவற்றை வைத்துக்கொண்டு அக்கால அரசர்கள் ஆகம விதிப்படி ஆலயங்களைக் கட்டினார்கள். அக்கால மனிதன் கோயில் இருக்கும் இடந்தேடிச் சென்று வாழ்ந்தான். இன்று மனிதன் இருக்கும் இடத்திற்கு கடவுள் வருகிறார்.

கோபுர தரிசனம் கோடி புண்ணியம். தலைவலி, வயிற்று வலி என்ற பல நோய்களால் நாம் கஷ்டப்படுகிறோம். சில நோய்கள் டாக்டர் தரும் மருந்தால் தீருகின்றன. சில நோய்கள் அப்படித் தீருவதில்லை. அப்படித் தீராத நோய்களையும் தீர்த்து வைப்பான் இறைவன்.

கோயில் பொது மக்களுக்காகவே இருக்கிறது. கோயிலில் பூஜை நடப்பது தேசத்தின் நன்மைக்காக. கோயிலில் பூஜை

நடந்தால்தான் நகரம் நன்றாக இருக்கும். கோயிலில் தீபம் எரியாவிட்டால் நாட்டில் ஒளி இருக்காது. கோயிலில் நைவேத்தியம் இல்லையென்றால் நாம் பட்டினி கிடக்கவேண்டி இருக்கும். சாப்பிட்டாலும் கல்லும் மண்ணும் கலந்து சாப்பிடுகிறோம்.

'சிவசொத்து குலநாசம்.' ஆதலால் கோயில் சொத்துகளை அபகரிக்க யாரும் நினைக்கக்கூடாது.

இறைவன் ஒருவனே; அவனை நம் சக்திக்கும், விருப்பத்துக்கும் தகுந்தமுறையில் பல வழிகளில் வழிபடுகிறோம். சர்க்கரையைக் கொண்டு பல இனிப்புப் பண்டங்களைச் செய்கிறோம். பண்டங்கள் பலவானாலும் எல்லாவற்றிலும் சர்க்கரைதான் அதிகமாக உள்ளது.

வழிபாட்டில் மொழி, மாநில வர்க்க பேதம்இல்லை.நாம் அனைவரும் ஹிந்துக்கள் என்ற ஒருமை உணர்வுடன் வழிபாடு செய்யவேண்டும்.

நாம் நெல்லிக்காய் மூட்டைபோல இருக்கிறோம். நம்மை இணைத்து வைப்பவன் இறைவன். கோயிலில் கும்பாபிஷேகம் என்றால் எவ்வளவு பேர் திரளாகக் கூடுகிறோம்.

கோவிலுக்கு மக்கள் நிறையச் சென்றால் பிரச்சனைகள் தீரும். சினிமாப் பார்க்கப் போகிறவர், சினிமாவில் பார்த்த மாதிரி அடுத்த நாளே உடையலங்காரம் செய்து கொள்ளுகின்றனர். ஆலயத்துக்கும் நாம் போகிறோம். சினிமாவைப் பார்த்து நம்மை மாற்றிக் கொள்ளுகிறோம். ஆனால் ஆலயத்துக்குப் போவதன் மூலம் நம்மிடம் என்ன மாற்றம் ஏற்பட்டிருக்கிறது? சினிமாவைப் பொழுதுபோக்காக மட்டும் வைத்துக் கொள்ளுங்கள். வாழ்க்கையில் அதனைப் பின்பற்றாதீர்கள்.

இறைவன் அருள் எங்கும் இருக்கிறது. பக்தி என்னும் ரசம், தூய்மை என்னும் நிலை இருந்தால் அவன் அருளைப் பெறலாம். காலையிலும் மாலையிலும் கோயிலுக்குச் செல்லுங்கள். விபூதி, குங்குமம் அணிந்து கொள்ளுங்கள். இறைவனிடம்

பயபக்தியுடன் இருங்கள். நம்மிடம் பக்தி இருக்கிறது. ஆனால் பயம் இல்லை. சமுதாய உணர்வும் இல்லை.

இருபது ஆண்டுகள் முன்பு வரைகூட கடவுள் பக்தி பெருமளவில் இருந்தது. பின்னர் பக்தி குறைய ஆரம்பித்திருக்கிறது. கிராம மக்கள் இன்றும், நகரவாசிகளைவிட பக்தியுடன் இருக்கிறார்கள். நகரங்களில் பெரிய கோவில் திருவிழாக்களில் பலபேர் கூடியபோதிலும், தவ உணர்வோடு ஆண்டவனைத் தொழுவதற்குப் பதிலாக விழாவில் பொழுது போக்காகக் கலந்து கொள்ளவே வருகிறார்கள். மனிதர்களில் பெரும்பாலோர் தங்களுக்குக் கஷ்டங்கள் வரும்போதுதான் கடவுளையே நினைக்கிறார்கள்.

வடக்கே மழை பெய்து கொண்டிருந்தாலும் மக்கள் கங்கையில் புனித நீராடுகின்றனர் நள்ளிரவு வரையிலும் கூட கங்கா ஸ்நானம் செய்கிறார்கள். கங்கையில் குளித்த பின்பே, தங்கள் அன்றாடப் பணிகளை மேற்கொள்வதையே அவர்கள் பழக்கமாகக் கொண்டுள்ளனர்.

தமிழ்நாட்டிலும் ஒரு காலத்தில் பக்தி சிறந்தோங்கியிருந்தது. பல கிராமங்களில் சிவ விஷ்ணு ஆலயங்களும், கிராம தேவதைகளும் இருக்கின்றன. சிவபக்தியும், விஷ்ணு பக்தியும் ஒன்றே. இரண்டும் புலால் உண்பதைத் தடுக்கின்றன. வட மாநிலங்களில் சிவராத்திரி, விநாயக சதுர்த்தி போன்ற திருவிழாக்களை சைவர்களும், வைஷ்ணவர்களும் சேர்ந்தே கொண்டாடுகிறார்கள். அந்த மக்கள் மிகவும் சுறுசுறுப்பாக இருக்கிறார்கள். பஜனைக் கோஷ்டிகளை அமைத்துக் கொண்டு ஆண்டவனைப் பாடிப் பரவசமடைகிறார்கள்.

மனிதன் உடலுக்கும் உயிருக்கும் ஒரு சம்பந்தமிருக்கிறது. இதனைப் போலவே மனித வாழ்க்கைக்கும் ஆலயத்திற்கும் சம்பந்தமிருக்கிறது உயிர் இல்லாவிட்டால் உடல் பலனற்றதாகி விடுவதுபோல, ஆலய சம்பந்தமற்றவர் வாழ்க்கையும் பயனற்றதாகி விடுகிறது.

மக்கள் வாரம் ஒரு முறையாவது கோவில்களுக்குச் செல்லும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

மனிதனின் கடமைகள்

காமம் கோபம் இரண்டும் மனிதனுக்கு முதல் எதிரி. இவை இரண்டும் மனித வாழ்க்கைக்குச் சத்துருவாய் இருக்கின்றன. எல்லாவிதத் துன்பத்திலும் நம்மை மாட்டிவிடுகின்றன. காமம் வந்துவிட்டால் அது குறையாது. கோபம் வந்துவிட்டால் நாம் என்ன செய்வோம் என்று நமக்கே தெரியாது. விவேகம் மறைந்துவிடும். கோபம் வந்தால் மனிதன் தான் பிரயத்தனித்த காரியத்தை எப்படியும் அடைந்தே தீருவோம் என்று நினைத்து, அதே கோபமாக மாறி விடுகிறது. ரப்பர் பந்தை வேகமாகப் போட்டால் அது திரும்பி நம் மேலேயே வந்து அடிக்கும். மனிதனுக்கு ஜன்ம சத்துரு கோபம். அது குடியைக்கெடுக்கும். குரங்குக்கு தேள் கொட்டினால் என்னமாதிரி இருக்கும் என்று யோசித்துப் பாருங்கள். எவ்வளவோ பூஜை புனஸ்காரங்கள் செய்து வந்தும் கோபம் வந்தால் வீணாகிவிடுகிறது. காமத்தினால் வந்ததுதான் இராமாயணக் கதை. குரோதத்தினால் வந்தது மகாபாரதம்.

அறஞ்செய விரும்பு, ஆறுவது சினம், ஆண்டவனை மறவாதே. கோபத்தை அடக்கு. வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டியது தர்மம். அதைக் கைவிடுவது அதர்மம். நாம் நிறைய பக்தி செய்கிறோம். பிரார்த்தனை செய்கிறோம். கோபத்தை அடக்குவது அவசியம். மனிதனுக்கு கடவுள் பக்தி அவசியம். கடவுள் பக்திக்காக பிரச்சாரம் தேவையில்லை.

நாம் கஷ்டப்படாமல் அடுத்தவனும் துன்பப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். உண்மையையே பேச வேண்டும். அப்படி உண்மையையே பேச சாத்தியமில்லாவிட்டால் மௌனமாயிருக்கவேண்டும். அடுத்தவனுக்குக் கெடுதல் வருவதாய் இருந்தால் மௌனமாய் இரு என்று

மனுஸ்மிருதி கூறுகிறது. நல்ல காரியங்கள் செய்வதற்கு எப்பொழுதும் பலன் உண்டு. வாழ்க்கையில் சில சமயம் கெடுதல் வருவதை நமது பகுத்தறிவால் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். நல்ல விஷயத்தில் மனசைச் செலுத்தினால் இந்த ஜன்மம் மட்டும் அல்லாமல் அடுத்த ஜன்மாவிலும் நல்லபலன் கிடைக்கும். நம் இஷ்டத்துக்குக் காரியம் செய்ய முற்பட்டால், நீதி நேர்மையில்லாமல் போய்விடும்.

நாம் இருப்பது பகவான் இடம். நம்முடைய பிற்காலத்து இடம்தான் உண்மையான வீடு. அதுதான் மோக்ஷம். ஒவ்வொருவரும் மோக்ஷத்தையடைந்து மறுபிறவியிலிருந்து விடுதலை அடையவே விரும்புகின்றனர். ஆகையால் எவ்வளவு கஷ்டம் வந்தாலும் அறவழியில் செல்லவேண்டும். இறைவனுக்கு பக்தி செலுத்தவேண்டும்.

உலகம் ஒரு குடும்பம். நாம் அனைவரும் கடவுளின் குழந்தைகள் என்று ஆதி சங்கரர் நமக்குக் கற்பித்துள்ளார். தமிழ் அறிஞரும் வேதாந்தியுமான திருமூலரும், நாம் அனைவரும்கடவுளின் குழந்தைகள் என்றும் அனைவரையும் சமமாக நடத்தவேண்டும் என்றும் கூறியுள்ளார். புத்தாடைகளையோ நகைகளையோ அணியும்பொழுது நமக்கு ஓரளவு இன்பம் கிட்டுகிறது. கடவுளை வழிபடுவதில் நமக்கு நிரந்தர இன்பமுள்ளது. முன்பெல்லாம் சமுதாய சேவை ஒருவிதத்தில் நடந்தது. இப்பொழுது மனிதன் செல்வத்தையும், புகழையும் சேர்ப்பதில் தீவிரமாக ஈடுபடுவதால் சமூக சேவை செய்ய நேரம் கிடைப்பதில்லை. மக்கள் நேர்மையாக இருக்க வேண்டும். தற்காலத்தில் அறநெறிப் பண்புகள் குறைந்து வருவதை நாம் காண்கிறோம். மக்கள் நிலைமைக்கேற்ப மாறி சகோதரர்களுக்குச் சேவை செய்யவேண்டும்.

அத்வைத மகிமை

நம் வாழ்க்கையில் நாம் கஷ்டத்தைத் தாங்கிக் கொள்ள வேண்டும். பரமாத்மா அல்லது பிரம்மம்தான் கவலையின்றி இருக்கமுடியும். நோய் நொடியின்றி இருக்கமுடியும். உலகில் பிறந்து இந்த உடலைத் தாங்கியிருக்கும்வரை நமக்கு ஏதாவது ஒரு வகையில் கஷ்டம் இருக்கும். இறைவன் அருளால் நாம் கஷ்டங்களைக் குறைத்துக்கொள்ளமுடியும். ஆனால் அறவே நீக்க முடியாது. எல்லாம் விதிப்படி நடக்கும்.

ஞான மார்க்கத்தைப் பின்பற்றினால் கஷ்டம் குறையும். துன்பம் நேர்ந்தால் விதியினால் ஏற்பட்டதாகவும் நல்லன ஏற்பட்டால் அதிர்ஷ்டத்தினால் ஏற்பட்டதாகவும் கூறுகிறோம். இப்பிறப்பில் நடைபெறும் நல்லன கெட்டனவெல்லாம் முற்பிறப்பில் நாம் செய்த செயல்களின் விளைவேயாகும். முற்பிறப்புகளில் செய்த பாவங்களெல்லாம் நம்மை இப் பிறப்பில் பாதிக்கும். மஹாபாரதப் போரில் இறந்தவர்கள் அனைவரும் அவரவர் செய்த பாவ புண்யங்களுக்கேற்ப நரகத்திற்கோ சொர்கத்திற்கோ செல்கின்றனர் என்றும் ஆகையால் அவர்களின் மரணம் குறித்துக் கவலைப்படவேண்டியதில்லை என்றும் அர்ஜுனனிடம் போருக்குப்பின் கண்ணன் கூறுகிறார்.

கடவுளை வணங்குபவர்களுக்கு கெட்டன வராது. சில நேரங்களில் நாம் ஏமாற்றம் அடையும்பொழுது கடவுளைக் குறை கூறுகிறோம். மன அமைதியில்லாதவர்களுக்குக் கோவில் வழிபாடு சாலச் சிறந்தது. வெறும் கண்களால் கடவுளைக் காணமுடியாவிட்டாலும் மின்சாரத்தை விளக்கு எரிவதன் மூலம் அறிவது போல கடவுளின் அருளை நாம் உணரமுடியும். இன்பமும் துன்பமும் நமக்கு மாறி மாறி வரும். மனிதனுக்கு துன்பம் தர கடவுள் விரும்பவில்லை. மனிதனின் புண்ய

பாவத்தை அவன் அனுபவிக்கிறுன். நம்முடைய கஷ்டங்’ களுக்காக நாம் கடவுளைக் குறை கூறக்கூடாது. நம்முடைய மனேதிடம், சூழ்நிலை, கடவுளிடத்தில் பக்தி, இவற்றின் மூலம் கஷ்டத்தைக் குறைக்கலாம்.

இந்தியா புராதன நாடு. இங்கு தொன்மையான கலாச் சாரமும் நாகரீகமும் உண்டு. பல அரசர்கள் இந் நாட்டை ஆண்டுள்ளார்கள். முஸ்லீம்கள் அடுத்தடுத்துப் படையெடுத் தனர். பிரிட்டிஷாரும் நம்மை ஆண்டார்கள். பௌத்தர்கள் சமணர்கள் செல்வாக்கும் பரவியது. ஆனுல் அது சிறிது காலமே நீடித்தது. இதன் பின்னரும் இந்துமதம் அழியாமல் நிற்கிறது.

ஆதி சங்கரர். அத்வைதத்தைப் போதித்தார். கடவுள் என்பவர் பரமாத்மா என்றும் முருகன், ராமன், கிருஷ்ணன் ஆகிய எல்லா உருவங்களும் அவருடைய உருவங்களே என்றும்அவர் எங்கும் நிறைந்திருப்பவர் என்றும் அத்வைதம் கூறுகிறது. ’கர்மத்தையும் தர்மத்தையும் கடைப்பிடித்தால் பரமாத்மாவை அடையலாம். அதாவது, மறு பிறப்பிலிருந்து விடுபடலாம். கல்கண்டின் இனிப்பைப் பார்க்க முடியாது. உணரத்தான் முடியும். அது போலவே கடவுளின் அருளையும் உணரத்தான் முடியும்.

ஒருவன் கனவு காணும் வரையில் அவன் கனவில் காண் பனவெல்லாம் உண்மையானவை. ஆனுல் விழித்தவுடன் அவன் கண்ட கனவெல்லாம் உண்மையானவையல்ல என்று தெரிகிறது. அது போல ஒருவன் மோட்சத்தை அடைந்து பிரம்மத்தை உணருகையில் உலகம் அவனுக்கு உண்மையான தல்ல என்று தெரியும். அதுவரை பூஜைகள் முதலியன தேவை. ஒருவன் பிரம்மத்தை உணர்ந்து ஆத்ம ஞானியாகி விட்டால் பூஜைகள் தேவையில்லை.

ஜீவாத்மா, பரமாத்மாவிடம் வேறுபாடு காணுத அனுபவமே பேரானந்தம் என்று அத்வைதம் கூறுகிறது. இந்த அத்வைத நோக்கினுல்தான் இந்துக்களும் தொடர்ந்து

இருக்கின்றனர். சைவம், வைணவம் முதலியவற்றிடையே அவர்கள் வேறுபாடு காண்பதில்லை. எல்லாப் பிரிவுகளுக்குமிடையேயுள்ள அடிப்படை ஒற்றுமையை ஆதிசங்கரர் எடுத்துக் காட்டினர். இந்துமதத்தைச் சிதையாமல் காப்பாற்றினர். அத்வைத வேதாந்தமானது நம்மை அமைதியாகவும், நட்புறவுடனும் வாழச் செய்கிறது. இது உலக நலனுக்கு அவசியமாகும்.

ஆதி அனாதி மதம்

ஹிந்து மதத்தின் வயது என்ன என்பதை யாராலும் நிர்ணயிக்க முடியவில்லை. இதற்கு ஜாதகம், காலம் இல்லை; ஆகவே மரணமும் இல்லை. ஆகவே, இதை அனாதி மதம் எனக் கூறுகிறார்கள். ஆரம்பமோ முடிவோ இல்லாத மதம் ஹிந்து மதம்.

ஆதார கிரந்தமான வேதமும் ஆரம்பமில்லாதது. கடவுளே தந்த தானம். அர்த்த சப்தங்கள் நிறைந்த மந்திரங்கள் வேதத்தில் உண்டு. இவைகளைப் படிப்பதால் நம் மனம் சாந்தியடைகிறது. வரவிருக்கும் தீங்குகள் விபத்துகளிலிருந்து வேதமோதுவதைக் கேட்பதால் நாம் நம்மைக் காத்துக் கொள்ளலாம். குரு சிஷ்ய பரம்பரையாக வாய்மொழி மூலமாகவே வேதங்கள் நமக்குக் கிடைத்துள்ளன. எழுத்து அல்லது புத்தக ரூபத்தில் ரிஷிகள் இதை நமக்குத் தரவில்லை. வேதபாராயணத்தைக் கேட்பதால் நன்மைகள் வந்தெய்தும்.

வேதம் சமஸ்கிருத பாஷையில் இருப்பதால் சமஸ்கிருத பாஷை நமக்கு முக்கியமாகிறது. அந்த பாஷையிலேயே இதைப் பேணிக் காத்து வரவேண்டும்.

ராமாயணம் புகட்டும் நீதிகள்

ஸ்ரீமத் ராமாயணமும், மஹாபாரதமும் ஜனங்களுடைய இரண்டு கண்கள் போன்று ஜனங்கள் வாழ்க்கைக்கு வழி காட்டியாக இருக்கின்றன. இந்த இரண்டு நூல்களும் தர்மத்தையும் நியாயத்தையும் எடுத்துரைக்கின்றன. ராமாயணத்தில் ஸ்ரீ சீதாதேவியையும் மஹாபாரதத்தில் திரௌபதையையும் வைத்து அதர்மங்கள் அழிக்கப்படுகின்றன. அநியாயங்கள் போக்கடிக்கப்படுகின்றன. இந்த இரண்டு பேரும் மனிதர்களிடம் பிறக்காமல்,முன்னவள் பூமியிலிருந்தும்—பின்னவள் அக்கினியிடமிருந்தும் அயோநிஜர்களாகப் பிறக்கிறார்கள். இவ்விருவரும் கொஞ்சம்கூடக் குற்றமில்லாதவர்கள். காலையில் எழுந்தவுடன் இந்த இருவரையும் நினைப்பதினால் மாபெரும் பாபங்களும் நம்மைவிட்டு விலகுகிறது.

ஸ்ரீமத் ராமாயணத்தில் வரக்கூடிய ஒவ்வொரு பாத்திரமும் ஒவ்வொரு நீதியை நமக்குப் புகட்டுகிறது. ராமர் பகவானாக இருந்தாலும் மனித அவதாரத்திற்கு ஏற்றவாறு தாய் தந்தை குரு இவர்களிடம் பக்தியுடனும்—மரியாதையுடனும்—தாய் தந்தையர் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடக்கிறார். ஸ்ரீ லக்ஷ்மணரோ அண்ணனை ஸ்ரீ ராமருக்கு தன் வாழ்நாள் முழுவதும் பணிவிடை செய்தே காலம் கழிக்கிறார். பரதனானவன் ராஜ்ஜியத்திலே சிறிதும் ஆசையில்லாமல் அண்ணனை ஸ்ரீராமர் கொடுத்த பாதுகையை ஏற்று அதை வைத்து ராஜ்ய பரிபாலனம் செய்கிறான். சீதையானவள் ராமருக்கு ஏற்றவாறு ராமருடனேயே ராமர் நிழல் போல கூடவே சென்று பணிவிடைகளைச் செய்து வாழ்ந்து வருகிறாள்.

சாமான்ய படகோட்டியான குகனோ ஸ்ரீராமரிடம் அன்பும் பக்தியும் செலுத்தி ராமராலேயே 'நாங்கள் சகோதரர்கள்

ஐவர் ஆனோம்' என்று புகழும்படியாக விளங்கினன். வானரக் கூட்டமாக இருந்தாலும், சொன்ன சொல்லைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக வாலி வதமும்—சுக்ரீவன் நட்பும் ஏற்படுகிறது. ஸ்ரீ ஆஞ்சநேயரோ தொண்டனாகவும்—பக்தனாக வும்—வீரனாகவும்—ஸ்ரீராமருக்குத் தொண்டு புரிந்து கொண்டு, சதாசர்வ காலமும் அவரைப்பற்றி நினைப்பதும் சிந்திப்பது மாகத் தன் வாழ்நாள் முழுவதும் இருந்து வருகிறார். இறை வனைச் சரணாகதி அடைந்தால், எல்லா நன்மையும் உண்டா கும் என்பதற்கு விபீஷணன் எடுத்துக்காட்டாக விளங்கு கிறான்.

ராவணன் பெரிய சிவ பக்தன். ராவணனுக்கு தேவதை களெல்லாம் அடிமைகள். இவ்வளவும் இருந்தபோதிலும் எல்லோரும் வணங்கும் தெய்வமாக உள்ள சீதாதேவியிடம் மனத்தை தவறான முறையில் வைத்ததனால் அழியவேண்டிய நிலை ஏற்பட்டது. ஆகவே, ராமாயணம் வாழ்க்கைக்கு ஒரு வழிகாட்டி! எல்லோரும் ஸ்ரீ ராமபிரானை பகவானாகப் புகழ்ந்த போதும்கூட, தான் மனிதர்கள் வாழ்க்கையை நல்வழிப் படுத்துவதற்கு மனிதனாகவே வந்திருக்கிறேனென்று பல தடவை ஸ்ரீ ராமர் கூறியிருக்கிறார். ஆகவே, மனிதர்களுடைய வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவுள்ளது ஸ்ரீமத் ராமாயணம்.

இந்த பவித்ரமான நூல்களை பட்டிமன்றம், வழக்காடு மன்றம் போன்றவைகளில் தாறுமாறாக உபயோகப்படுத்தா மல், முறையுடனும்—பக்தியுடனும் பொது மக்களுக்கு எடுத் துரைக்க வேண்டும்.

ராமாயணம் புகட்டும் நீதிகள்

ஸ்ரீமத் ராமாயணமும், மஹாபாரதமும் ஜனங்களு டைய இரண்டு கண்கள் போன்று ஜனங்கள் வாழ்க்கைக்கு வழி காட்டியாக இருக்கின்றன. இந்த இரண்டு நூல்களும் தர்மத்தையும் நியாயத்தையும் எடுத்துரைக்கின்றன. ராமா யணத்தில் ஸ்ரீ சீதாதேவியையும் மஹாபாரதத்தில் திரௌ பதையையும் வைத்து அதர்மங்கள் அழிக்கப்படுகின்றன. அநி யாயங்கள் போக்கடிக்கப்படுகின்றன. இந்த இரண்டு பேரும் மனிதர்களிடம் பிறக்காமல்,முன்னவள் பூமியிலிருந்தும்—பின் னவள் அக்கினியிடமிருந்தும் அயோநிஜர்களாகப் பிறக்கிறார் கள். இவ்விருவரும் கொஞ்சம்கூடக் குற்றமில்லாதவர்கள். காலையில் எழுந்தவுடன் இந்த இருவரையும் நினைப்பதினால் மாபெரும் பாபங்களும் நம்மைவிட்டு விலகுகிறது.

ஸ்ரீமத் ராமாயணத்தில் வரக்கூடிய ஒவ்வொரு பாத்திர மும் ஒவ்வொரு நீதியை நமக்குப் புகட்டுகிறது. ராமர் பகவானாக இருந்தாலும் மனித அவதாரத்திற்கு ஏற்றவாறு தாய் தந்தை குரு இவர்களிடம் பக்தியுடனும்—மரியாதை யுடனும்—தாய் தந்தையர் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடக்கிறார். ஸ்ரீ லக்ஷ்மணரோ அண்ணனை ஸ்ரீ ராமருக்கு தன் வாழ்நாள் முழுவதும் பணிவிடை செய்தே காலம் கழிக் கிறார். பரதனுனவன் ராஜ்ஜியத்திலே சிறிதும் ஆசையில்லா மல் அண்ணனை ஸ்ரீராமர் கொடுத்த பாதுகையை ஏற்று அதை வைத்து ராஜ்ய பரிபாலனம் செய்கிறான். சீதையான வள் ராமருக்கு ஏற்றவாறு ராமருடனேயே ராமர் நிழல் போல கூடவே சென்று பணிவிடைகளைச் செய்து வாழ்ந்து வருகிறாள்.

சாமான்ய படகோட்டியான குகனே ஸ்ரீராமரிடம் அன்பும் பக்தியும் செலுத்தி ராமராலேயே 'நாங்கள் சகோதரர்கள்'

ஜவர் ஆனேம்' என்று புகழும்படியாக விளங்கினன். வானரக் கூட்டமாக இருந்தாலும், சொன்ன சொல்லைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக வாலி வதமும்—சுக்ரீவன் நட்பும் ஏற்படுகிறது. ஸ்ரீ ஆஞ்சநேயரோ தொண்டனுகவும்—பக்தனுக வும்—வீரனுகவும்—ஸ்ரீராமருக்குத் தொண்டுபுரிந்துகொண்டு, சதாசர்வ காலமும் அவரைப்பற்றி நினைப்பதும் சிந்திப்பது மாகத் தன் வாழ்நாள் முழுவதும் இருந்து வருகிறார். இறை வனைச் சரணுகதி அடைந்தால், எல்லா நன்மையும் உண்டா கும் என்பதற்கு விபீஷணன் எடுத்துக்காட்டாக விளங்கு கிறுன்.

ராவணன் பெரிய சிவ பக்தன். ராவணனுக்கு தேவதை களெல்லாம் அடிமைகள். இவ்வளவும் இருந்தபோதிலும் எல்லோரும் வணங்கும் தெய்வமாக உள்ள சீதாதேவியிடம் மனத்தை தவருன முறையில் வைத்ததனுல் அழியவேண்டிய நிலை ஏற்பட்டது. ஆக ›வ, ராமாயணம் வாழ்க்கைக்கு ஒரு வழிகாட்டி! எல்லோரும் ஸ்ரீ ராமபிரானை பகவானுகப் புகழ்ந்த போதும்கூட, தான் மனிதர்கள் வாழ்க்கையை நல்வழிப் படுத்துவதற்கு மனிதனுகவே வந்திருக்கிறேனென்று பல தடவை ஸ்ரீ ராமர் கூறியிருக்கிறார். ஆகவே, மனிதர்களுடைய வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவுள்ளது ஸ்ரீமத் ராமாயணம்.

இந்த பவித்ரமான நூல்களை பட்டிமன்றம், வழக்காடு மன்றம் போன்றவைகளில் தாறுமாருக உபயோகப்படுத்தா மல், முறையுடனும்—பக்தியுடனும் பொது மக்களுக்கு எடுத் துரைக்க வேண்டும்.

ஒற்றையடிப் பாதை

இந்து மதமானது பெரிய ஆலமரம்போல் உள்ளது. ஆல மரத்தினுடைய விழுதானது அவ்வப்போது புதிதுபுதிதாக வந்துகொண்டேஇருக்கும். அப்படி வந்த விழுதானதுகொஞ்ச காலம் தொங்கும். பின்பு பூமியில் பதிந்து ஒரு மரமாக வேர் விட ஆரம்பிக்கும்.அதுபோல அவ்வப்போது இந்து சமயத்தில் பெரியோர்கள் பலர் தோன்றி அந்தந்ததேச கால சூழ்நிலைக்கு ஏற்றவாறு அடிப்படைக்கு விரோதமில்லாமல் பல நல்ல அறிவுரைகளை நல்கி ஒரு வழியை வகுத்துக் கொடுப்பார்கள். அப்படி வந்த வழிவகையில்தான் சைவம்—வைணவம்—மாத்வம்—வீரசைவம் போன்ற தத்துவ வழிகள் வந்திருக்கின்றன.

ஆலமரத்தின் நிழல் அனைவருக்கும் வெயிலின் தாபத்தைப் போக்கடிக்கும். அதுபோல் மக்களுடைய தாபத்தைப் போக்குவது இந்து சமயம். ஆலமரத்தின் சிறிய பழத்தினுடைய சிறிய விதைதான் பிரம்மாண்டமான பெரிய மரமாகவும், பல கிளைகளாகவும், ஆயிரக்கணக்கான பழமாகவும் ஆகியிருக்கின்றது. அதுபோல இறைவனுடைய சிறிய சக்தி பெரிய உலகைப் படைத்து பல ஆயிரக்கணக்கான ஜீவாத்மாக்களாக ஆகி பல வழிகளில் இறைவனை அடைய வழி சொல்லிக் கொடுக்கிறது.

இந்து சமயத்தில் இருந்த பெரியோர்கள் அருளிய தத்துவமே ஒவ்வொரு சமய மார்க்கமாக அமைகிறது. ஆலமரம் ஒன்றுதான். ஆனாலும் விழுதுகள் பல. அதுபோல அடிப்படை தத்துவங்கள் எல்லாம இந்து சமயத்திற்கு ஒன்றேஒன்றுதான். இந்து சமயமானது சொற்பொழிவும் மாநாடும் நடத்துவதோடு மட்டும் வளர்ந்துவிடாது. சொற்பொழிவின் மூல

மாகவும், மாநாட்டின் மூலமாகவும் விஷயங்களை கிரகித்துக் கொண்டு அறிந்துகொண்டு அதன்படி நடக்க வேண்டும்.

பூமியானது வீடுகள் கட்டுவதற்கும் ரோடுகள் அமைப்பதற்கும் காடுகள் வளர்வதற்கும் மற்றும் பலகாரியங்களுக்கும் உபயோகமாக ஆகிறது. அதுபோல் இந்து சமயமானது உலக வாழ்விற்கும் பொருள் தேடுவதற்கும் ஆன்மீக நல்வழி செல்வதற்கும், மற்றும் பல காரியங்களுக்கும் உபயோகமாக ஆகிறது. பூமியில் ரோடுகள் அமைக்கிறோம். வீதிகள் அமைக்கிறோம். வீதிகளுக்குப் பெயர் வைக்கிறோம். அதுபோல் பல சமய பாதைகளை உண்டாக்கி அதில் செல்வதற்கு வழி வகைகளைச் சொல்லி அந்த சமயத்திற்கு சைவம் வைணவம் என்ற பெயரையும் கொடுக்கிறோம். பூமியில் காலால் நடந்து செல்லும் ஒற்றையடிப்பாதையும் உண்டு. அந்தப் பாதை ஒரு நாள் ஒருவரால் அமைக்கப்படாமல் பலரால் பலநாள் நடந்து நடந்து பளிச்சென்று தெரியக்கூடியது அந்த ஒற்றையடிப் பாதை. அதுபோல எங்கும் நிறைந்துள்ள பரம்பொருளை அடையும் வழியான இந்து சமயமானது ஒருநாள் ஒருவராலும் ஆக்கப்படாமல் அந்தப் பரம்பொருளை அனுபவித்து அனுபவித்து அதனை மூலம் வகுக்கப்பட்டது.

ஒற்றையடிப்பாதைக்கு ஆரம்பமும் முடிவும் கிடையாது பரந்த பூமியில் நாம் எங்கெங்கு ஆரம்பிக்கிறோமோ அதுதான் அந்தப் பாதைக்கு ஆரம்பம். நாம் எங்கெங்கு போய் நிறுத்து கிறோமோ அதுதான் அதன் முடிவு. உதாரணமாக ஒரு குடிசைக்குச் செல்லவேண்டுமானால் அதற்கு ஒரு குறுக்குப் பாதையை நாம் தேடி வகுத்துக்கொள்ளலாம். அதுவே ஒற்றையடிப்பாதை! அந்தப் பாதை அந்தக் குடிசையுடன் முடிந்தாலும் அங்கிருந்து மேலும் செல்வதற்கும் வழி இருக் கிறது. குடிசையில் ஒறறையடிப்பாதை முடிந்ததேதவிர பரந்த பூமி நிறைந்து இருக்கிறது. அதுபோல எங்கும் நிறைந் துள்ள பரம்பொருளை அடைவதற்கு நாமும் சைவம்—

வைணவம் என்று ஒரு வழியை வகுத்துக்கொண்டோமே தவிர அந்த வழிக்கு அப்பாலும் செல்வதற்கு பரம்பொருள் நிறைந்து இருக்கிறது.

ஒற்றையடிப்பாதை நடக்க நடக்கத்தான் ஒளிவிட்டு நன்றாகப் பிரகாசிக்கும். அதுபோல இந்து சமயமானது, மனிதர்களுக்குச் சொல்லப்பட்ட கடமைகளைச் செய்யச் செய்யத்தான் நன்றாக வளர்கிறது. ஒற்றையடிப் பாதையில் விபத்துக்களோ நெரிசல்களோ திடீர் என்று முடிவடையாமல் நின்றுவிடுவதோ கிடையாது. அதுபோல இந்து சமயமானது விபத்தில்லாது ஒழுங்காக கட்டுப்பாடாக சந்தேகமில்லாத ஒரு லட்சியத்தோடு முடியக்கூடியது. எப்பொழுது ஒற்றையடிப்பாதையில் நடக்கவில்லையோ அப்பொழுது அந்த ஒற்றையடிப்பாதையானது மறைந்துவிடும்—அழிந்துவிடாது. அதுபோல இந்து சமயமானது கடமைகளைச் செய்துவர செய்துவரப் பிரகாசிக்கும். செய்யாமல் இருக்கும் பொழுது மறைந்ததுபோல் தோன்றும்.

எங்கும் நிறைந்துள்ள ஆகாயத்தை மேகங்கள் மறைப்பது போல் எங்கும் நிறைந்துள்ள பரம்பொருளின் தத்துவத்தைச் சொல்லக்கூடிய இந்து சமயம், மேகம்போல் சிற்சில தீயசக்திகளால் மறைந்ததுபோல இருக்கும். மேகங்கள் விலகினால் ஆகாயம் நன்றாகத் தெரிவதுபோல் சிற்சில தீயசக்திகள் விலகினால் இந்து சமயம் நன்றாக சுவச்சமாகத் தெரியும்; பிரகாசிக்கும்.

முதன்முதலில் இந்து சமயத்தைப் பரப்ப விரும்புகிறவர்கள் முக்கியமாகத் தங்கள் வாழ்க்கையை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். தீயதைக் கேட்கக்கூடாது. தீயதைப் பார்க்கக்கூடாது. தீயதைப் பேசக்கூடாது. தீயதை உண்ணக்கூடாது. தீயதை பொழுது போக்கிற்காகக்கேட்டாலும்கூட அந்தத் தீமையைக் கேட்டதின் பயனாக நாமும் நம்மை அறியாது தீயசக்தியைப் பெறுகிறோம். தீயசக்தியைச்

சொல்பவனையும் தீயவழியில் அழைத்துச் செல்லும் பாபத்தை அடைகிறோம்.

ஆகவே, முக்கியமாக தீய புத்தகங்களைப் படிக்காமல் தீயதான சினிமா நாடகம் போன்றவைகளைப் பார்க்காமல் சொற்பொழிவுகளைக் கேட்காமல், தீய ஓட்டல் உணவுகளை உண்ணாமல், வாழ்க்கை வாழ முயற்சி செய்ய வேண்டும்.

இறையருள் பெறும் வழி

அர்ச்சுனனுக்கு ஸ்ரீ கிருஷ்ணன் தோழனுயிருந்து வழி காட்டியது போல், சுந்தரருக்கு பரமசிவன் தோழனுயிருந்து அற்புதங்களையெல்லாம் காட்டி ஆட்கொண்டார். இக்காலம் ஜனங்களிடையே அற்புதங்களைக் காட்டி வியக்க வைக்கக் கூடிய காலமாக இருக்கிறது. ஆனுல் இன்று அற்புதங்கள் காட்டும் எவரும் உணவுப் பிரச்னையைத் தீர்க்கக் கூடிய முறையில் அற்புதம் எதுவும் செய்ய முடியவில்லை. ஆனுல் அன்றே சுந்தரருக்கு பரமசிவன் காட்டியருளிய அற்புதத்தில் நெல்லை வண்டி வண்டியாகக் கொடுத்து அருளி ஜனங்களுடைய வறுமையை அகற்றினுர் என்று சுந்தரர் வரலாறு கூறுகிறது. இறைவன் அன்று பெரிய புராணத்திலுள்ள அடியார்களின் வரலாற்றை அடிஎடுத்துக் கொடுக்கவில்லை என்றால், இன்று சேக்கிழார் பெருமானுடைய தமிழ்ச் சுவையை நம்மால் அனுபவித்து இருக்க முடியாது.

சுந்தரர் இறைவனைப் பார்த்துப் பொன்னும் பொருளும் கேட்டுப் பெற்றதோடு இறைவனுடைய மேலான அருளையும் கேட்டுப் பெற்றுர். சுந்தரர் கேட்பதையெல்லாம் இறைவனும் அருளினுர். ஆனுல் நாம் கேட்பதையெல்லாம் இறைவன் அருளுவதில்லை. இறைவன் கொடுத்ததையெல்லாம் சுந்தரர் உலக மக்களுக்காக வழங்கினுர். அதனுல் இறைவனும் கொடுத்தார். இன்று நாம் இறைவனிடம் கேட்பதில் நம் குடும்பத்திற்காகக் கேட்பது கூடக் குறைந்து, நமது சுய தேவைக்கு வேண்டிய அற்பப் பொருள்களைக் கேட்பதிலேயே நம்முடைய பிரார்த்தனை நின்று விட்டதினுல், இறைவன் நாம் கேட்பதையெல்லாம் கொடுப்பதில்லை. ஆனுல் நமக்குத் தேவையுள்ளதை மட்டும் கொடுக்கிறுன்.

இன்று குழந்தைகள் கேட்பதையெல்லாம் தாயார் தகப்பனார் கொடுத்துவிட்டு பிறகு அல்லல்படுவது போலல்லாமல், உலகுக்கெல்லாம் தாய் தந்தையாயுள்ள இறைவன் நாம் கேட்பதையெல்லாம் கொடுத்துவிட்டு நம்மை அல்லல்படவைக்காமல் நமக்குத் தேவையுள்ளதை மட்டும் கொடுத்து நாம் அமைதியாக வாழ வழி செய்கிறான். இறைவனுடைய அருள் பெற்றதற்கு அடையாளம் பொன்னும் பொருளும் கிடைப்பதோடுகூட அமைதியும் பெறவேண்டும். அதைத்தான் அன்று சுந்தரர் பெற்றார். இன்று நாமும் பெறவேண்டும்.

கேட்பதென்பது மனிதனுடைய உரிமை. கொடுப்பதென்பது இறைவனுடைய தன்மை. எவ்வளவு இருந்தாலும் நம்முடைய மனம் திருப்தியடைவதில்லை. ஆகவே கிடைத்ததைக் கொண்டு திருப்தி அடையவேண்டும். நம்மைக்காட்டிலும் இன்னும் கஷ்டப்படுகிறவர்களைப் பார்த்து மனசை திருப்தி செய்து கொள்ளவேண்டும். திருப்தியுடன் வாழ்வது தான் மனித வாழ்வின் பூரணத்துவம். இந்த பூரணத்துவத்தைப் பெற பெரியோர்களுடைய வாழ்க்கையை அறிந்து அவர்கள் அருளிய பாடல்களைப் படித்து இறைவன் அருளைப் பெறவேண்டும்.

இறைவழிபாடும் சமுதாயப் பணியும்

அவரவர்கள் தங்கள் தங்களுக்கு ஏற்பட்ட கடமைகளை நன்கு நிறைவேற்ற வேண்டும். அதோடு கூட தினசரியோ அல்லது வாரம் ஒரு முறையோ ஒரு மணி நேரத்திற்குக் குறையாமல், கஷ்டப்படுகின்றவர்களுக்கு மனப்பூர்வமாக உதவிசெய்ய வேண்டும். பணத்தினால் கஷ்டப்படுகின்றவர்களுக்கு சிகிச்சை அளித்தும், மனக்கஷ்டத்தில் துன்பப்படுகின்றவர்களுக்கு, அதற்கேற்றவாறும் உதவி செய்ய வேண்டும்.

கஷ்டம் என்பது தங்கள் தங்களுடைய வினையினால் வந்ததுதான். அவை அவரவர்கள் அனுபவித்துத்தான் தீர வேண்டும். ஆனால் பரஸ்பரம் சகாயம் செய்து கொள்வதின் மூலமாகவும் இறைவழிபாட்டின் மூலமாகவும் கஷ்டங்களைக் குறைத்துக் கொள்ள முடியும். உலகம் தோன்றிய காலம் முதல், சுகமும் துக்கமும் மாறிமாறி வந்து கொண்டேதான் இருக்கின்றன. ஆனால் முன்பெல்லாம் சுகம் அதிகமாகவும் கஷ்டம் குறைவாகவும் வந்து கொண்டிருந்தன. இப்பொழுதோ கஷ்டம் அதிகமாகவும் சுகம் குறைவாகவும் இருக்கின்றன. ஆகவே கஷ்டங்களைக் குறைப்பதற்கு வேண்டிய முயற்சிகளைத்தான் கடவுள் அனுக்ரஹமும் சமுதாயப் பணியும் செய்து கொடுக்கும். வெறும் சமுதாயப்பணியால் மாத்திரம் கஷ்டம் குறைந்து விடாது. எல்லாம் இறைவன் பணி என்ற நினைப்போடு செய்தால் அப்பொழுது அந்த சமுதாயப் பணி தவறு இல்லாமலும் தூய்மையாகவும் இருக்கும்.

நாம் சமுதாயப் பணியை பிரதிபலனை எதிர்பார்த்துச் செய்யக்கூடாது. மனிதனாய்ப் பிறந்தவன் கடமை என்று செய்யவேண்டும். பலனை எதிர்பார்த்தோ, புகழை எதிர்பார்த்தோ பணிகள் செய்தால், அவை ராஜஸம் எனச்சொல்லப்படுகிறது. இதைத்தான் பகவான் கீதையிலே "உன் கட

மையை ஒழுங்காகச் செய். அதனால் ஏற்படக் கூடிய சுக-துக்க பலன்களையெல்லாம் இறைவனிடம் அர்ப்பணித்துவிடு" என்று கூறினார். டாக்டர்கள் எல்லாம் எவ்வளவு முயற்சி செய்து வைத்தியம் செய்தாலும் 'எங்கள் முயற்சி முடிந்து விட்டது. இனி கடவுள் அருள்தான் வேண்டும்' என்று கூறுவார்கள்.

பல கஷ்டங்களுடன் வருபவர்களுக்கு மனம் சுளிக்காமல்—முகம் கோணாமல்-அன்பு வார்த்தையுடனும் ஆறுதல்அளிக்க வேண்டும். பெரும் மழை வந்துவிட்டால் ஒழுகாத வீடாக இருக்கவேண்டும். அல்லது மழையில் வெளியே செல்லவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால், அப்பொழுது மழை அதிகம் நம் மீதுபடாமல் இருக்க மழைக்கோட்டு,குடை முதலிய சாதனங்களுடன் வெளியே செல்லவேண்டும். ஏனெனில் மழை பெய்வதை நிறுத்த முடியாது. ஆனால் நம்மீது படாமல் இருக்கவும் குறைந்த அளவு படுவதற்கும் பார்த்துக் கொள்ள முடியும். அதுபோலத்தான் "இறைவழிபாடும்-சமுதாயப் பணியும்" உதவும்.

மண் கரையும்; மணல் கரையாது

ஸூரியன் உதித்தால் எப்படித் தாமரை மலர்கின்றதோ அதுபோல் கடவுள் நினைப்பு இருந்தால் நம் மனம் எனும் தாமரையும் ஆனந்தத்துடன் மலர்ந்து இருக்கும். தாமரைப் பூவை எப்படி வண்டு வந்து அண்டுகின்றதோ, அதுபோல் நம்மை விஷயங்கள் வந்து அண்டுகின்றன.

தாமரையானது தண்ணீரில் இருந்தால்தான் செழிப்புற்று இருக்கும். அதேபோல் நமது மனம் கருணை (அன்பு) என்னும் குளத்தில் இருந்தால்தான் சாந்தமாக இருக்கும்.

தாமரைத் தண்டின் நூலினுல் எப்படி பெரிய பிராணியைக் கட்டமுடியாதோ, அதுபோல் நம் மனத்தின் நினைப்பினுல் மாத்திரம் எல்லாக் காரியத்தையும் செய்ய முடியாது.

தாமரைப்பூ எப்படி நல்ல வாசனையுடன் திகழ்கிறதோ அதேபோல் நம் மனமும் நல்லபடி திகழ வேண்டும். தாமரைப்பூ எப்படி சிவப்பாகவும் வெண்மையாகவும் இருக்கிறதோ அதேபோல் நம் மனத்தில் ரஜோ குணமும் ஸத்வ குணமும் இருக்கிறது.

செந்தாமரை ரஜோ குணம்; வெண்தாமரை சத்வகுணம்.

தாமரைத் தண்டு எவ்விதம் கறுப்பாகவே இருக்கிறதோ, அதேபோல் நம் மனம் தமோகுணம் உடையதாய் இருக்கிறது. தாமரைக் குளத்தில் தண்ணீர் எப்படி எப்பொழுதும் 'ஜில்' என்று இருக்கிறதோ அதுபோல் நம் மனமானது கடவுள் நினைப்போடு இருந்தால் எப்பொழுதும் சாந்தமாயும், குளுமையாகவும் இருக்கும்.

சந்தன மரத்தைப் பாம்புகள் சுற்றிக் கொண்டேயிருக்கும் அதனுல்சந்தன மரத்திற்கோ சந்தனக் கட்டைக்கோ, எவ்விதம்

கெடுதலும் ஏற்படாது. அதுபோல் மகான்களிடத்தில் எவ்வளவு துஷ்டர்கள் இருந்தாலும் அவர்களுடைய மனத்திற்கோ, உடலுக்கோ, ஒருவிதமான மாறுதலும் ஏற்படுவது இல்லை.

தாமரைப்பூ சூரியனைக் கண்டால் மலருகிறது; இரவில் மூடிக்கொள்கிறது. ஆனால் ரோஜாப்பூ ஒருதடவை மலர்ந்து விட்டால் மறுபடியும் மூடிக்கொள்ளாது.எப்போதும் மலர்ந்த நிலையிலேயே இருக்கும். அதேபோல் சாமான்ய மனிதர்களின் மனம் ஆசைப்பட்ட பொருள் கிடைத்ததும், சந்தோஷத்தால் மலருகிறது; விரும்பிய பொருள் கிடைக்காவிட்டால் மனம் சுருங்குகின்றது; ஆனால், மகான்களுடைய மனசு எப்போதும் மலர்ந்த நிலையிலேயே இருக்கிறது. உன் வாழ்க்கையில் எப்போது கஷ்டங்களும் துன்பங்களும் அதிகமாக ஏற்படுகின்றதோ, அப்பொழுதுதான் உன் மனசை மிகவும் தைரியமாக வைத்துக்கொள்ளவேண்டும். நீ கஷ்டப்படுகிறாய் என்றால் நீ செய்த பாவத்தை அனுபவிக்கிறாய் என்று உன் மனதைச் சமாதானம் செய்துகொள். எனது ஆட்கள், வீடு, மனைவி, புதல்வர்கள், பூமி இவை என்று சந்தோஷப்படாதே. எல்லாம் ஒரு காலத்தில் நீங்கிவிடும்; அல்லது நீ ஒரு நாள் அவற்றை விட்டுப் போக நேரிடும். உன்னுடன் எப்போதும் உன்னைவிட்டுப் பிரியாமல் இருப்பது நீ செய்த நல்வினை தீவினைகளே. இப்போது நீ சந்தோஷமாய் இருக்கிறாய் என்றால் நீ செய்த நல்வினைப் பயன்தான் காரணம். அதை அறிந்துகொண்டு இனியும் எப்போதும் சந்தோஷமாய் இருக்க கடவுள் வழிபாட்டையும் தர்ம காரியங்களையும் நிறையச் செய். அதுவே நீ மேலும் மேன்மையடைய வழியாகும்.

சாமான்யமான மண்ணை எடுத்து ஜலத்தில் கரைத்தால் ஜலம்பூராவும் கலங்கிவிடும். ஆனால் மணலைத் தண்ணீரில் கரைத்தால் தண்ணீரில் கலக்கம் ஏற்படாது. அதேபோல் உலகத்தில் மூர்க்கர்கள் இருப்பது உலகத்திற்குக் கலகத்தைச் செய்யும். ஆனால், ஆண்டவரின் அருள்பெற்றவர்கள், ஆத்ம

ஞானிகள் உலகில் இருப்பதால் உலகத்திற்கு எத்தகைய கெடுதலும் ஏற்படாது.

மண் தண்ணீரில் கரைந்துவிடுகிறது. நல்ல மணல் தண்ணீரில் கரைவதில்லை. அதேபோல் சாமான்ய மனிதர்கள் உலகில் தானும் கலந்துவிடுகின்றனர். ஆத்மஞானிகள் உலகோடு கலக்காமல் ஆனால் உலகிலேயே இருக்கின்றனர். தராசில் ஒரு பக்கம் அளந்து காட்டும் படிக்கல்லும், மற்றொரு பக்கத்தில் அது அளவு காட்டும் பொருளையும் காண்கிறோம். இரும்புப் படிக்கல்லும் உயர்ந்த பொருளும் சமமான அளவில் இருந்தாலும், உயர்ந்த பொருளுக்குப் போடும் மனமதிப்பை சாமான்ய கல்லுக்குப் போடமாட்டார்கள். சாமான்யர்களும் ஞானியும் ஒரே மாதிரி இருந்தாலும் தன்மையில் மேலோங்கி இருக்கிறார்கள். அதேபோல் படித்தவனும், படிக்காதவனும் ஒரே காரியத்தில் சமமாக ஈடுபட்டாலும் படித்தவனுக்குக் கொடுக்கும் மதிப்பைப் படிக்காதவனுக்குக் கொடுக்க முடியாது.

கடிகாரத்தின் முள் நகருவது தெரியாமல் எவ்விதம் நகர்ந்து போய்க்கொண்டே இருக்கிறதோ அதேபோல் நம்முடைய மனத்தில் இன்னதைத்தான் நினைக்கிறோம் என்று தெரியாமல் எதையாவது நினைத்துக்கொண்டேதான் இருக்கிறோம். கடிகாரத்தில் சாவி இல்லாவிட்டால் முள் நகருவதில்லை. அதேபோல் விழிப்பும் சொப்பனமும் இல்லாவிட்டால் நம் மனம் ஒன்றையும் சிந்திப்பதில்லை.

கடிகாரத்திற்கு ஒரு நாளைக்கு ஒரு முறை சாவி கொடுத்தால் போதும். நமக்கு இரண்டு மூன்று தடவை தின்மும் ஆகாரம் கொடுக்கவேண்டும். கடிகாரத்திற்கு சாவி அதிகம் கொடுத்து விட்டாலும் அது சீக்கிரம் கெட்டுவிடும். குறைவாகக் கொடுத்தாலும் அடிக்கடி நின்றுவிடும். அதேபோல் நமக்கும் உணவை அதிகமாகச் சாப்பிட்டாலும் கெடுதல் உண்டாகும். கடிகாரத்திற்கு அளவாகச் சாவி கொடுப்பது

போல் உடலுக்கும், குறையாமலும் அதிகமாகாமலும் உணவை அளிக்கவேண்டும்.

அறிவுள்ள ஒருவனுல் சாவி கொடுக்கப்பட்டு ஜடமான கடிகாரம் ஓடுகிறது. அதேபோல் பேரறிவு சொருபமாய் உள்ள பரம்பொருளின் சக்தியுைல் இந்த ஜடமான சரீரம் உலகில் நடமாடுகிறது.

மின்விசிறி சுற்ற வேண்டுமானுல் ஸ்விட்சைப் போடுகிருேம்; அது சுற்றுகிறது. அதேபோல் நாம் நால்வினை தீவினைக் காரியங்களைச் செய்ததன் பலனுக சம்சார சாகரத்தில் சுற்றுகிருேம். மின்விசிறியின் காற்று சிலருக்கு ஒத்துக் கொள்ளும்—சிலருக்கு ஒத்துக் கொள்ளாது. அதேபோல் உண்மையான சுகத்தை விரும்புகிறவனுக்கு இந்த சம்சார சாகரத்தில் ஏற்படும் சுகதுக்கங்கள் பிடிக்காது. சாமான்ய மனிதர்கள் இந்த சம்சாரத்தில் ஏற்படக்கூடிய சுகத்தையே பெரிதாக நினைத்துவிடுகிருர்கள்.

மின்விசிறியின் காற்று செயற்கை; உண்மையான காற்று அல்ல. அதேபோல் சம்சாரத்தில் ஏற்படக்கூடிய சுகதுக்கங்களும் பொருள்கள் மூலம் எற்படக் கூடிய ஒரு செயற்கைச் சுகமே; உண்மையான இயற்கைச் சுகமல்ல.

இயற்கைக் காற்றின் சுகத்தை அனுபவிக்க வேண்டுமானுல் மரங்கள், செடிகள் இல்லாத பரந்த பிரதேசத்திற்குச் செல்ல வேண்டும். அதேபோல் எங்கும் நிறைந்து பரந்து கிடக்கும் ஆண்டவனின் அருள் எங்கு கிடைக்குமோ அங்கு சென்று உண்மையான நம்முடைய இயற்கையான சுகத்தைப் பெற முயற்சிக்க வேண்டும்.

நதியில் எவ்வளவு வேகத்துடன் ஜலம் செல்கிறதோ அவ்வளவு வேகம் நதியிலிருந்து பாயும் வாய்க்காலில் போகாது. அதேபோல் மனத்தில் எவ்வளவு வேகத்துடன் எண்ணங்கள் எழுகின்றனவோ அவ்வளவு வேகம் இந்திரியங்கள் மூலம் செயல்படுகையில் இருக்காது.

சமுத்திரம் என்றாலே பெரிய பெரிய அலைகள், மீன்கள், முதலைகள், நல்முத்து எல்லாம்தான் இருக்கும். அதேபோல் வாழ்க்கை என்றாலே சுகம், துக்கம், பெரியது, சிறியது, எல்லாம் இருக்கத்தான் இருக்கும்.

மயில்கள் தோகை விரித்து ஆட ஆரம்பித்தால் மழை வரும் என்பார்கள். அதேபோல் மகான்கள் வசிக்கும் இடங்களில் சுபிட்சம் விளங்கும்.

கடவுளின் முத்தொழில்

கிருத்திகை நட்சத்திரம், சுப்ரமண்ய ஸ்வாமிக்கு விசேஷமான நாள். சுப்ரமண்யம் என்றால் பரம் பொருளையும், பிரம ஸ்வரூபத்தையும் சேர்ந்தது என்று பொருள். பிரம்ம ஸ்வரூபமாக முருகன் இருக்கிறான். பரமேஸ்வர, பார்வதியாலே முருகனுக்கு பிரமத்துவம் சேர்ந்து இருக்கிறது.

கோயிலில் தட்க்ஷிணாமூர்த்தியைப் பார்க்கும் போது காலின் கீழே அசுரர்கள் இருப்பார்கள். பக்கத்திலே முனிவர்கள் இருப்பார்கள். அந்த பரமேஸ்வரன்தான் ஒரு நிலையிலே தட்க்ஷிணாமூர்த்தி வடிவமாக இருந்து அருள் பாலிக்கிறார். இந்த வடிவத்திற்குப் பிறகுதான் பார்வதி பரமேஸ்வரனாகவும், உமா மகேஸ்வரனாகவும் காட்சி தருகிறார். பரமேஸ்வரன் தன் சக்தியிலிருந்து ஷண்முகனாக ஆறுமுகத்தோடு தோன்றுகின்றார். ஆகையால் முருகன் வேறு பரமேஸ்வரன் வேறு அல்ல. விநாயகரும் ஓம்கார வடிவமாக உள்ளார். எல்லாவற்றுக்கும் மேல் காரணமாகஉள்ளவர் பரமேஸ்வரர். அந்த ஒரு பரமாத்ம தத்துவம்தான் இத்தனை வடிவமாக உள்ளது. தட்க்ஷிணாமூர்த்தி காலடியில் இருக்கும் அசுரன்தான் அறியாமை என்று சொல்லப்படுகிறது. அறியாமை அகன்ற பிறகு ஞானம் வருகிறது. பிரம்ம தத்துவத்தைத் தெளிவு படுத்த அநுபவம் அவசியம். அதாவது எப்போது பூரணநிலையை அடைகிறோமோ அப்போது அறியாமை அகன்று ஞானம் தானாக பிரகாசிக்கின்றது.

உலகத்தில் மொத்தம் மூன்று சக்திகள் உண்டு. அவை பிரம்மா, விஷ்ணு, சிவம் ஆகும். எல்லாவற்றிற்கும் மேலாக உள்ளது பரமாத்மா. அந்தபரமாத்மா மூன்றுவித காரியங்கள் செய்ய மூன்று சக்திகள் வருகின்றன. பிரும்மா படைப்பதற்காகவும், விஷ்ணு காப்பதற்காகவும், சிவன் உலகத்திலுள்ள

அறியாமையை அழிப்பதற்காகவும் என்று மூன்று சக்திகள் உண்டாயிற்று. அவர்களுக்கு உதவியாக சரஸ்வதி, லக்ஷ்மி, பார்வதி என்ற மூன்று சக்திகளும் உண்டாயிற்று. எந்த ஒரு காரியத்தையும் சக்தி இல்லாமல் செய்யமுடியாது என்று நம்பப்படுகிறது.

பிரம்மா உலகத்தைப் படைத்தார் எனச் சொல்லும் போது, எந்த மாதிரி படைத்தார் என்றால் வேத புஸ்தகத்தைக் கையில் ஆதாரமாக வைத்துக்கொண்டு அதில் சொல்லியதைப் போல உலகத்தைப் படைத்தார் என்று சொல்லப்படுகிறது. எப்போதும் வேதபுஸ்தகத்தைக் கையில் வைத்துக் கொண்டு இருந்தார் எனச் சொல்லப்படுகிறது. அதே மாதிரி பார்க்கும்போது விஷ்ணுவும், சிவனும் தம் தம் வேலைகளைச் செய்கிறார்கள். எந்த ஒரு பணியைச் செய்தாலும் இன்ப துன்பம் இல்லாமல் இருக்க முடியாது. இறைவன் நம்முள் அடங்கி இருப்பதால்தான் இரவில் நாம் தூங்கும்போது நன்றாகத் தூங்க முடிகிறது.

சம்ஹாரத்திற்கு அடிப்படையாக உள்ளவள் பார்வதி தேவி, சிவன் அறியாமையை அழித்தாலும், நீண்ட காலத்திற்குப் பிறவி இல்லாமல் இருக்கக்கூடிய நிலையையும், அடைய உபதேசம் செய்கிறார். துன்பத்திற்குக் காரணமாக உள்ளது அறியாமையே தவிர வேறு எதுவும் இல்லை. இதைப் போக்கத்தான் தட்க்ஷிணாமூர்த்தியாக இருந்து நமக்கு உபதேசிக்கிறார். விஷ்ணு, சிவன், பிரம்மா ஆகியோர் காத்தல், அழித்தல், படைத்தல் போன்றவைகளை தங்களுடைய சக்திகளோடு கூடச் சேர்ந்து செய்து நம்மைக் காப்பாற்றுகிறார்கள். நிழல் போல் சேர்ந்து இருப்பவள்தான் சக்தி.

பழமையான ஹிந்து சமயம்

உலகில் ஆஸ்திகமும் நாஸ்திகமும் உலகம் தோன்றிய காலம் முதல் இருந்துகொண்டுதான் இருக்கிறது. ஜனங்கள் ஸாத்விகமான நிலையில் இருக்கும் பொழுது ஆஸ்திகர்களாகவும், ரஜோகுணம் தமோ குணம் இவைகளை ஒட்டி உள்ள போது நாஸ்திகர்களாகவும் ஆகிறார்கள். ஆஸ்திகன் என்பதற்குப் பொருள்—பரலோகம், வேத நம்பிக்கை, ஈஸ்வரன் மீது விஸ்வாசம் இவைகளைக் கொண்டவர்கள் ஆஸ்திகர்கள் எனப்படுவர். இந்த மூன்றிலும் நம்பிக்கை குறைந்தவர்கள், நம்பிக்கையே இல்லாதவர்கள் நாஸ்திகர்கள் என்று அழைக்கப்படுவார்கள். ஆகவே ஒரு மனிதன் இந்த பூத உடலுக்கும் அப்பாற்பட்ட நிலையைப் பற்றிச் சிந்திக்கும் பொழுதும் அதற்கு ஆகவேண்டிய வேலையைச் செய்யும் பொழுதும் அவன் ஆஸ்திகன் என்று சொல்லப்படுகிறான். கேவலம் இந்த உடல் போஷாக்குக்காக மட்டும் சிந்திக்கும் பொழுதும் காரியங்களைச் செய்யும் பொழுதும் நாஸ்திகன் என்று கூறப் படுகிறான்.

அஸ்தி-இதி ஆஸ்திகம். நாஸ்தி-இதி நாஸ்திகம். அஸ்தி என்றால் இருப்பது. ஒரு காலத்திலோ— ஒரு தேசத்திலோ, ஒரு பொருளிலோ மாத்திரமில்லாமல், எல்லாக் காலத்திலும், எல்லா தேசத்திலும், எல்லாப் பொருள்களிலும் இருக்கிற வஸ்து எதுவோ, அதுவே அஸ்தி என்ற பதத்திற்குப் பொருள். அந்தப் பொருளானது பரம்பொருள், பரமாத்மா. ஆகவே ஆஸ்திகன் என்றால் பரமாத்ம ஞானம் உடையவன், பரமாத்மாவை நம்புபவன் என்று பொருள்; அந்தப் பரமாத்மா ஞானத்திற்கு சாதனமாயுள்ள ஈசுவர நம்பிக்கை, கர்ம சித்தாந்தம், பரலோக விஸ்வாசம் முதலியவைகள் உடையவர்களை ஆஸ்திகர்கள் என்றுஅழைக்கிறார்கள்.

சுமார் 6000—7000 ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது துவாபர யுகத்தில் கிருஷ்ண பகவானின் அவதாரம் நடந்தது. அப்பொழுது எல்லா ஜனங்களுமே ஒரே கிருஷ்ண பக்தியில் திளைத்து தர்மங்களையும், கடமைகளையும், கர்மாக்களையும் செய்வதை மறுத்துவிட்டார்கள். இந்த தர்ம கர்மாக்களின் பலனாக ஸாக்ஷாத் பகவானைக் காணும் பொழுதும் அனுபவிக்கும் பொழுதும் இதற்கு சாதனங்களான தர்ம கர்மாக்களின் மீது விஸ்வாசம் குறைந்துவிட்டது. இத்துடன் சாதனைகளின் மீதும் நம்பிக்கை குறையத் தொடங்கி, இந்த நிலை ஸ்ரீ கிருஷ்ண பகவான் வைகுண்டம் செல்லும் வரை நீடித்து இருந்தது.

பிறகு பழையபடி ஜனங்கள் கர்ம தர்மங்களைச் செய்யத் தொடங்கிவிட்டார்கள். அது போன்று கர்மாக்களைச் செய்யச் செய்ய வேதத்தின் மீதும் கர்மத்தின் மீதும் விஸ்வாசம் அதிகமாகி, வேதத்தில் சொல்லப்பட்ட கர்ம பலனை அளிக்கும் ஈஸ்வரன் தேவையில்லை என்று ஈஸ்வர விஸ்வாசம் குறையும் நிலை உருவாயிற்று. இப்படிக் கர்மாக்களை நிறையச் செய்யச் செய்ய வேள்விகள் நிறையச் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. வேள்விகள் நிறையச் செய்யச் செய்ய ஆடு போன்ற சில பிராணிகளை அந்த வேள்விக்காக நிறைய இம்சை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த நிலை கலி யுகம் தோன்றி 2000 ஆண்டுகள் வரை நீடித்திருந்தது.

அப்பொழுது புத்தர் தோன்றினார். புத்தர் என்பதற்குப் பொருள் புத்தியினாலேயே, அறிவினாலேயே சிந்தனை செய்து ஒவ்வொரு காரியத்தையும் முடிவு எடுப்பவர், பௌத்தர் என்று பெயர். சில புராணங்களில் பௌத்தரை அவதாரம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. பௌத்தர்கள் அநேகர் தோன்றியிருக்கிறார்கள்.

பௌத்த மதக் கொள்கையாவது:— ஈஸ்வரன் தேவையில்லை. நாம் செய்யும் கர்மாக்களே இந்த பூலோகத்திலும் பலன் அளிக்கும்—பரலோகத்திலும் பலன் அளிக்கும்.

மறுபிறவி புனர்ஜன்மம் என்பது உண்டு. இருந்தாலும் வேதத்தில் சொல்லப்பட்ட கர்மாக்களைத்தான் செய்ய வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை. உலக வாழ்க்கைக்குத் தேவையுள்ள காரியங்களை நம் புத்தியினால் சிந்தித்து நல்லதைச் செய்ய வேண்டும். அதை மீறிச் செய்பவர்களுக்கு, இகலோக பரலோகங்களில் முறையே துக்கங்களும் நரகமுமே கிடைக்கும்.

ஆகவே பௌத்த கொள்கையின்படி பரலோகம் ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆனால் வேதம் ஒப்புக்கொள்ளப்படவில்லை. வேதத்தில் சொல்லப்பட்ட வேள்விகளும் ஒப்புக்கொள்ளப்படவில்லை. ஒரு பொருளும் உலகில் சாசுவதமாக இருப்பதில்லை; அழியும் தன்மையை உடையதுதான். இவ்விதம் அனுபவபூர்வமாக ஞானம் வருவதுதான் மோக்ஷம். இதைத் தவிர ஜீவாத்மா-பரமாத்மா ஐக்கியம்-அதாவது ஆத்ம ஞானம் ஏற்பட்டு அதன் மூலம் மோக்ஷம் ஏற்படும் சித்தாந்தத்தை அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை.

'உலகிலுள்ள ஒவ்வொரு பொருளும் மாறிக்கொண்டும் அழிந்துகொண்டும் இருக்கின்றன. ஆகவே அந்தப் பொருள்களின் மேலுள்ள மோகத்தை விட்டுவிட்டு, வைராக்கியம் பெற்று, பிக்ஷுவாகி, தியானம் முதலியவைகளைச் செய்து, மனத்தை ஒரு நிலை நிறுத்தி, மனத்தில் சூன்யத்தன்மையைப் பொறுத்தே மோக்ஷம். ஆத்மா ஆண்டவன் முதலியவைகளோ ஆத்ம ஞானத்தை அடைவதோ ஆண்டவனை வழிபட்டு அவன் அருளைப் பெறுவதென்பதோ கிடையாது. 'ஹிம்ஸையை அறவே செய்யக் கூடாது' என்ற கொள்கையுடன் பௌத்த மதம் வளரத் தொடங்கிற்று. நாம் செய்யும் நல்வினை தீவினையே நமக்குப் பலனை அளிக்கும். அதற்குக் கடவுள் தேவையில்லை என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இப்பொழுது மதக் கொள்கைகளுக்கும் நடைமுறைகளுக்குமிடையில் நிறைய வித்யாசம் இருக்கிறது. ஆனால் பௌத்தர்கள் மூலமாக பல அரசுகள் உருவாயின. அரசாட்சி

கள் நடைபெற்றன. அரசர்கள் மூலமாக அநேக நாடுகள் பௌத்த தேசங்களாக மாறத் தொடங்கின. முக்கியமாக பௌத்தக் கொள்கையைக் காட்டிலும் அஹிம்ஸா கொள்கையையே அடிப்படையாகக் கொண்டு அரசர்கள் மதம்மாறத் தொடங்கினர். அந்தக் காலத்தில்தான் வழிபாட்டு ஸ்தானங்களுக்கு பௌத்த கோயில்கள் தோன்ற ஆரம்பித்தன. சிவன் விஷ்ணு போன்ற கோயில்கள் அவ்வளவு பிரபலமாக இல்லை. ஆனாலும் அங்கு கொஞ்சம் இங்கு கொஞ்சமாக இருந்து வந்தன. அதாவது புண்ய க்ஷேத்திரங்களில் மாத்திரம் சிவ விஷ்ணு ஆலயங்கள் அழியாமல் இருந்து வந்தன. கிராமங்களில் மட்டும் மிகக் குறைவாக இருந்தன. ஆனால் சிறு தேவதா வழிபாட்டு மூர்த்தங்கள் எல்லா கிராமங்களிலும் நிறைய இருந்தன.

பௌத்தர்களுக்கும் கர்ம மீமாம்ஸகர்களுக்குமிடையே தத்வ வாதங்கள் நிறைய நடைபெற்றன. அதேபோல் சாங்கியர்கள் தர்க்க சாஸ்திரிகள் போன்றவர்களும் பௌத்தர்களோடு வாதங்கள் புரிந்தார்கள். ஆகவே அநேகமாக இம் மூன்று தத்வங்களாலும் (கர்ம மீமாம்ஸம், தர்க்க சாஸ்திரம், சாங்கிய சாஸ்திரம்) பௌத்த கொள்கைகள் தோற்கடிக்கப்பட்டன. இந்தக் குழப்ப நிலையில்தான் புராணங்களில் பரமசிவனாகப் போற்றப்படும் ஆதிசங்கரர் நம் நாட்டில் தென்கோடியில்-கேரளத்தில் காலடி என்னும் க்ஷேத்திரத்தில் அவதரித்தார். அவர் முப்பத்தி ரெண்டு ஆண்டுகளே இந்த பூமியில் இருந்தார். பால்யத்தில் எட்டு வயதிற்குள்ளேயே எல்லா சாஸ்திரங்களையும் எல்லா சக்திகளையும் பெற்று அன்னையின் அனுமதியுடன் சன்யாஸம் மேற்கொண்டு காசிக்குச் சென்றார். அங்கு எல்லா பண்டிதர்களையும் சந்தித்துப் பேசிவாதத்தில் வென்று பழமையாய் வந்துகொண்டிருக்கிற வைதீக ஹிந்து தர்மத்தை புனருத்தாரணம் செய்யத் தொடங்கினார்.

ஆதிசங்கரரின் கொள்கைப்படி வேதங்கள் ஒப்புக்கொள்ளப்பட்டன. அது ஒருவரால் ஆக்கப்படாதது. அநாதி

யாய் உள்ளது என்று சொல்லப் பட்டது. இந்த விஷயத் தில் மீமாம்ஸகர்கள் கொள்கையும் சங்கரர் சித்தாந்தமும் ஒன்று. ஈசுவரன் உலகைப் படைத்துக் காத்து ரக்ஷிக்கிறன். நாம் செய்யக் கூடிய நல்ல காரியங்கள்—கெட்டகாரியங்கள் பலன் அளிக்காது. காரியங்களெல்லாம் ஜடமாயிருப்ப திஞல் பலன் அளிக்கும் திறமை அவைகளுக்குக் கிடையாது.

உதாரணமாக வேள்வி முதலியவைகள் செய்கிறேம். அதில் ஹோமங்கள் சடங்குகள் முதலியவைகள் பல இருக் கின்றன. அவை எல்லாம் நம்மால் செய்யப்படுகிறது. ஒரு வரால் செய்யப்பட்ட காரியம் ஆனதிஞல் அதற்கு இயற்கை யாகப் பலன் அளிக்கும் திறமை கிடையாது. அறிவுத் தொடர்புள்ள-சைதன்யம் தொடர்புள்ள ஒருவஸ்து ஸம்பந் தத்திஞல்தான் அந்தக் காரியங்களுக்குப் பலன் கிடைக்கும். ஸைக்கிள் ஜடமானது. செல்ல வேண்டுமாஞல் ஒரு மனித ஞல் பெடல் பண்ண வேண்டும். அப்பொழுதுதான் ஸைக் கிள் ஒரு லட்சியமான இடத்தை அடையும். அதுபோல் நாம் செய்யக் கூடிய எல்லா நல்ல காரியங்களுக்கும் சைதன்ய முள்ள—பேரறிவு படைத்த ஈஸ்வரன் பலன் அளிக்கிறன் என்று ஈஸ்வரக் கொள்கை ஒப்புக் கொள்ளப்படுகிறது. இந்த விஷயத்தில் கர்மா பலனே அளிக்கும் என்ற மீமாம்ஸாகொள் கை.கண்டிக்கப்படுகிறது. கர்ம சித்தாந்த அடிப்படையில் புனர்ஜன்ம சித்தாந்தம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. கர்மா என்ற சொல்லுக்கு நம்முடைய புத்திக்கு ஏற்றவாறுசெய்யக் கூடிய நல்ல காரியங்கள், கெட்டகாரியங்கள் என்பதல்ல பொருள். வேதங்களிலும் ஸ்மிருதிகளிலும் விதிக்கப்பட்ட காரியங்கள் நல்ல கர்மா, கெட்டகர்மா என்று பிரிக்கப்படு கிறது. இந்த விஷயத்தில் பௌத்தமதக் கொள்கை கண்டிக் கப்படுகிறது.

இந்த உலகிற்கும் உலகிற்குக் காரணமான ஈஸ்வரனுக் கும் ஆதாரமாக பரமாத்ம சொரூபம் ஒன்று உண்டு என்று சங்கர சித்தாந்தம் கூறுகிறது. இதஞல் உலகிற்கு காரண மாக ஆதாரமாக உள்ளது சூன்யம்தான் என்று சொன்ன

பௌத்தக் கொள்கை கண்டிக்கப்படுகிறது. பாரமார்த்திக நிலையில் பரமாத்மா ஒருவனே உண்டு. மற்ற வேறு ஒன்று உண்மையானதல்ல; தோற்றமே. ஆனால் இந்த பாரமார்த்திக நிலை ஆத்மஞானம் ஏற்படுவதற்கு முன் வரை எல்லா வைதிக லௌகிக காரியங்களும் வியாவஹாரிக ஸத்யமாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இதனால் பௌத்தமத சூன்யக் கொள்கை கண்டிக்கப்படுகிறது. ஆத்மசொரூபத்தை அடைவதற்காக அதுவரை உருவ வழிபாட்டு முறை சாதனமாக சங்கர சித்தாந்தப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதன்மூலம் ரஜோ தமோ குணத்தினாலான சிறு தேவதா வழிபாடே மோக்ஷத்தை அளிக்கும் என்று சொல்லக்கூடிய காபாலிகம் முதலிய மதங்கள் கண்டிக்கப்பட்டன.

பொதுவாக சங்கர ஸித்தாந்தத்தில் பாமர ஜனங்கள் முதல் பண்டிதர் வரை பலதரப்பட்ட மக்களுக்கும் அவரவர் யோக்யதைக் கேற்றவாறு வழிமுறைகள் வகுக்கப்பட்டு, வேதங்களிலும், ஸ்மிருதிகளிலும் சொல்லப்பட்ட கருத்துக்களையே அடிப்படையாகக் கொண்டு தன் சொந்தக் கருத்துக்களுக்கு இடம் அளிக்காமல், இந்த வேத ஸ்மிருதிகளுக்கு விரோதமான கொள்கைகளையுடைய மதங்களைக் கண்டித்து, அதே சமயம் அவைகளில் நல்லஅம்சங்கள் இருந்தால் அவைகளை மாத்திரம் எடுத்துக்கொண்டு, எல்லா மக்களையும்உலகம் பூராவையுமேகூட, ஒரே ஆத்மா உள்ளது என்ற ஆத்மதத்வத்தின் கீழ் ஒற்றுமைப் படுத்தினார். இது போன்று எல்லோரையும் ஒருமைப்படுத்தி பழமையான வேத சாஸ்திரக் கொள்கைகளை மறுபடியும் நிலைநாட்டின பெருமை சங்கரர் ஒருவருக்கே சொந்தம். அப்பொழுது ஆதிசங்கரர் நாடு எங்கிலும் யாத்திரை செய்து தன்னுடைய கொள்கைகளை மக்களிடையே பண்டிதர்களிடையே எடுத்துச் சொல்லி வாதத்தில் வென்று அத்வைத வேதாந்த சித்தாந்தக் கொள்கையை நிலைநாட்டினார்.

ஆனால் மறுபடியும் சில அரசர்களிடையே சண்டை சச்சரவுகள் தலைதூக்கிற்று. கர்ம சித்தாந்தமும் வேள்வி முதலியவைகளும் ஆங்காங்கு அதிகம் செய்யத் தொடங்கினார்கள்.

அதன்மூலம் ஆடுபோன்ற பிராணிகளின் ஹிம்சையும் அதி கரிக்கத் தொடங்கியது. இந்தச் சமயத்தில் அதாவது சங்கரர் பிறந்து 300—400 ஆண்டுகளுக்குப் பிறகு சுமார் தற்போது 2000 ஆண்டுகளுக்கு முன்பு ஜெயின மதம் தோன்றிற்று. ஜெயினதேவர் தோன்றினர். அந்த ஜெயின மதக் கொள் கையும் பௌத்த மதக் கொள்கையைப் போல் அஹிசம்யை அடிப்படையாகக் கொண்டு இருந்தது. ஆனால் சூன்யதத்வத் தை ஜெயினர் ஒப்புக் கொள்ளவில்லை. எவ்வளவு துன்பம் வாழ்க்கையில் உண்டோ அத்தனை துன்பங்களையும் அனுபவிப் பதன் மூலம் நம்முடைய பாபங்கள் குறைந்து மோக்ஷம் என்கிற நிர்வாணம் கிட்டும் என்றனர்.

ஜெயின மதத்திலும் அநேக உட்பிரிவுகள் உண்டு. சிலர் உருவ வழிபாட்டை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். சிலர் உருவ வழிபாட்டை ஏற்றுக் கொள்வார்கள். அப்படி உருவ வழிபாட்டை ஏற்றுக்கொண்டாலும் அது கடவுள் உருவ வழி பாட்டை அல்ல. அவர்களுடைய முன்னோர்களுடன் ஆசார் யர்களுடன் தீர்த்தங்கரர்களை சிலைகளாக ஆக்கி அந்த உருவங் களையே வழிபடுவார்கள். அவர்களுக்கு பாப புண்யத்திலும் கர்ம சித்தாந்தத்திலும் நம்பிக்கை உண்டு. ஆனால் வேள்வி போன்றவைகள் கிடையாது. வாழ்க்கையை நல்லபடியாக சரி யானபடியாக நடத்திக் கொள்ளுதல், இவ்விரண்டினாலேயே எல்லா நன்மைகளையும் அடைய முடியும் என்ற கொள்கை யைக் கொண்டது ஜெயின மதம். இந்தக் கொள்கையைக் கண்டு பலர் ஜெயின மதத்தைத் தழுவ ஆரம்பித்தனர்.

பௌத்த சமயமானது இந்தியாவில் தற்போது மிகவும் குறைந்த நிலையில் உள்ளது. ஆனால் வெளிநாடுகளில் பழங் காலத்திலிருந்தே நிறைய பரவிவிட்டது. இருந்தபோதிலும் பௌத்த சமயத்திலுள்ள கொள்கைகளுக்கும் தற்போதுள்ள நடைமுறைக்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. ஜெயின சமயமானது இந்தியாவை விட்டு வெளி நாடு செல்லவில்லை. ஆனால் இந்தியாவில் ஆங்காங்கு இன்னும் பரவலாக இருந்து வருகிறது. இவ்விதம் சில காலம் நாட்டின் நிலைமை இருந்து

வந்தது. பிறகு தேசமெங்கிலும் பக்தி இயக்கங்கள் தோன்ற ஆரம்பித்தன. பஜனைகளும் கோவில் வழிபாட்டு முறைகளும் நிறைய வளரத் தொடங்கின. இதை அடிப்படையாகக் கொண்டு சிறிது காலத்திற்குப் பின்பு வந்த ராமாநுஜர் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தைத் தொடங்கினார்.

அதாவது கோவில்களில் பக்தி இயக்கங்களையும் வீட்டில் மனித வாழ்க்கையில் கர்ம சித்தாந்தத்தையும் இணைத்துப் பரப்பினார். இதற்குச் சிறிது காலத்திற்கு முன்பிருந்தே அன்னிய நாட்டிலிருந்து அன்னிய மதஸ்தர்கள் அதாவது கிறிஸ்துவ-முஸ்லிம் மதத்தினர்கள் கொஞ்சம் கொஞ்சமாக வரத்தொடங்கினார்கள். அவர்கள் கட்டுப்பாட்டையும் சமூக சேவையையும் வலியுறுத்தி அவர்களுடைய கோவில்களான Church-Mosque முதலியவைகளை அடிப்படையாகக் கொண்டு அதன்மூலம் மதத்தை வளர்த்தார்கள். அத்துடன் மக்களுக்கும் அந்த சர்ச்-மசூதி இவைகளிலுள்ள பொறுப்புள்ளவர்களுக்குமிடையே தொடர்பு ஏற்படுத்தி மதத்தை விரிவுபடுத்தினார். இந்த அடிப்படையில் ராமாநுஜரும் தன்னுடைய சித்தாந்தத்தை வளர்க்கத் தொடங்கினார். ஜனங்களுடைய மனோபாவம் எப்படி மாறுகிறதோ அதற்கு ஏற்றவாறு கொள்கைகளையும் வகுத்துக்கொண்டு இந்திய நாட்டில் இந்து மதம் செழித்து வளர்ந்துகொண்டு வந்திருக்கிறது. அன்னிய மத ஆக்ரமிப்பு, உள்நாட்டில் ஜையினர்களின் ஆதிக்கம்—இதன் மூலம் ஹிந்துக்களின் எண்ணிக்கை குறைதல்-இவைகளை மனத்தில் வைத்துக்கொண்டு ராமாநுஜர் ஸித்தாந்தம் பரவத் தொடங்கியது.

ஆகவேதான் ராமாநுஜர் ஸித்தாந்தம் கோவிலை அடிப்படையாகக்கொண்டு காரியங்களைச் செய்யத் தொடங்கியது. அதேபோல் ஜனங்களுக்கும் ஆசாரியனுக்கும் தொடர்பாக பஞ்ச ஸம்ஸ்காரகர்மாவும் ஏற்படுத்தப்பட்டது. தமிழ்மொழியிலும் ஆழ்வார்கள் பாடிய பாடலெல்லாம் கோவில்களில் தாராளமாக உபயோகப்படுத்தப்பட்டன. வேதங்களும் உபயோகப்படுத்தப்பட்டன. ஆகவே வைஷ்ணவர்களைக்

குறிப்பிடும்பொழுது தமிழ் வேதங்களிலும் சமஸ்கிருத வேதங்களிலும் புலமை கொண்டவர்கள் என்று கருத்து தெரியும் வகையில் 'உபய வேதாந்தம்' என்று சொல்லுவார்கள். ராமாநுஜர் சித்தாந்தம் வேதத்தை அடிப்படையாகக் கொண்டது என்ற போதிலும், பக்தியை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்த சித்தாந்தமாகிறது.

ராமாநுஜர் சித்தாந்தத்தில் பகவான் உண்டு. அவதாரங்கள் உண்டு. கர்ம சித்தாந்தம் உண்டு. மோக்ஷம் உண்டு. அதாவது பகவானை பக்தி செய்து வைகுண்டலோகம் சென்று மோக்ஷம் அடைவது. இப்படி பகவானை பக்தி செய்பவர்களில் உயர்வு தாழ்வு பார்க்கக்கூடாது என்ற அடிப்படையின் கீழ் வளரத் தொடங்கியது ராமாநுஜர் சித்தாந்தம். இந்த சித்தாந்தத்தில் பல பேர்களுக்கு விருப்பம் ஏற்பட்டு புறச் சமயத்தில் சென்றவர்கள்கூட திரும்பி இந்து சமயத்திற்கு வரத் தொடங்கிவிட்டார்கள்.

விசிஷ்டாத்வைதம் என்றால் ஒரு சரீரத்தில் கைகால் முதலிய அவயவங்கள் தனியாகவே இருந்தாலும் எவ்விதம் சரீரம் ஒன்று என்பதுபோல், இரண்டற்ற நாராயணன் ஒருவரே. உலகம், உலகிலுள்ள ஜீவர்கள் எல்லாம் அவருடைய அவயவங்கள்; அவருடைய சேஷங்கள் விசிஷ்டமே. அதுவே விசிஷ்டாத்வைதம். கைகால்கள் எவ்விதம் சரியாக இருந்தால் சரீரம் சௌக்கியமாக இருக்குமோ அதுபோல் ஜீவர்கள் எல்லாம் நல்ல ஸம்ஸ்காரங்களைப் பெற்று பகவத் பக்திசெய்து, நல்ல ஜீவகர்கள் ஆகிவிட்டால் அதுவே பரமாத்மாவுக்கு பரம சந்தோஷம். அப்பொழுது பரந்தாமன் அருள் அந்த ஜீவர்களுக்குக் கிட்டுகிறது. அந்த பரந்தாமனுடைய அன்புக்கும் அருளுக்கும் பாத்திரமாவதுதான் மோக்ஷம்.

இவ்விதம் சில காலம் சென்றதின் பிறகு த்வைத சித்தாந்தத்தை மத்வாசாரியார் துவக்கி வைத்தார். இந்த சித்தாந்தப்படி பகவான் வேறு நாம் வேறு, நாம் பகவானை வழிபட்டு அவன் மூலம் அருளைப் பெறவேண்டும். பகவானுடைய அவயவங்களாக நாம் ஆகமுடியாது. பகவான்

பரிபூரண பரசொரூபி. எங்கும் நிறைந்தவர். எல்லா நல்ல குணங்களையும் உடையவர். ஜீவர்களாகிய நாம் எப்போதும் துன்ப திசையில் இருக்கிறோம். மிகவும் சிறியவர்களாக குறிப்பிட்ட பகுதிக்குள் இருக்கிறோம். உலக சுகங்களில் ஈடுபாடு உள்ளவர்களாக இருக்கிறோம். ஆகவே சிறியவர்களாகிய நாம் ஒரு பொழுதும் பகவானாக ஆகமுடியாது. உலகில் ஐந்து விதமான பேதங்கள் எப்போதும் இருக்கும். 1. ஜடபரஸ்பரபேதம் 2. ஜடஜீவபரஸ்பரபேதம் 3. ஜீவேஸ்வர பரஸ்பரபேதம் 4. ஈஸ்வரஜடபேதம் 5. ஜீவஜீவ பரஸ்பர பேதம்.

இவ்விதம் ஐந்துவிதமான பேதங்கள் த்வைத சித்தாந்தத்தில் ஒப்புக்கொள்ளப்படுகிறது. இந்த சித்தாந்தத்திலும் ஜனங்களுக்கும் ஆசாரியருக்கும் தொடர்பு உபதேசம் மூலமாகவும், முத்ராஸம்ஸ்காரம் மூலமாகவும் ஏற்படுத்தப்பட்டது. மதக் கட்டுப்பாடும், ஒற்றுமையும் பால்யத்திலிருந்தே வலியுறுத்தப்பட்டுவந்தன. இந்த சித்தாந்தத்திலும் கடவுள் உண்டு. பரலோகம் உண்டு; கர்ம சித்தாந்தம் உண்டு. மோக்ஷம் உண்டு. வேதத்தை அடிப்படையாகக் கொண்ட மதமே என்ற போதிலும் பக்தியை விசேஷமாக அடிப்படையாகக் கொண்டது.

விசிஷ்டாத்வைத பக்திக்கும் இந்த த்வைத பக்திக்கும் வித்தியாசம் நிறைய உண்டு. பகவானுக்கு கோவிலில் ஆராதனை செய்வது, பகவானைச் சரணமடைவது போன்றவைகள் இராமனுஜ சித்தாந்தத்தின் அடிப்படை பக்தி. கோவிலில் பகவானை ஆராதனை செய்வது பகவத் நாம பஜனை செய்வது போன்றவைகளை அடிப்படையாகக் கொண்டது த்வைத சித்தாந்தம். விசிஷ்டாத்வைதத்திலும் அநேக உட்பிரிவுகள் உள்ளன. இருந்தபோதிலும் அடிப்படைக் கொள்கைகளில் மாறுதல் கிடையாது.

இராமானுஜ சித்தாந்தத்திற்கு முன்பும் ஜெயின பௌத்த சாங்கியம் போன்ற பல சித்தாந்தங்கள் இருந்து

வந்தன. ஆனால் அவைகளை அதிகமாகக் கண்டிக்காமல் கொஞ்சமாகக் கண்டித்துவிட்டு சங்கர சித்தாந்தத்தை பலமாகக் கண்டித்தது விசிஷ்டாத்வைதம். அதேபோல் மாத்வஸித்தாந்தத்திற்கு முன்பும் இராமானுஜர் சித்தாந்தம்போல் பல சித்தாந்தங்கள் இருந்தன. அவைகளையெல்லாம் கொஞ்சமாகக் கண்டித்து விட்டு சங்கர ஸித்தாந்தத்தை மட்டும் பலமாகக் கண்டித்து வந்திருக்கிறது த்வைதம்.

இராமானுஜ சித்தாந்தத்தைச் சேர்ந்தவர்கள் வேறு சித்தாந்தம் வந்தபின்பும் அதைப் பின்பற்றவில்லை. வேறு சித்தாந்தத்தைப் பின்பற்றியவர்கள் ஆதிசங்கரர் சித்தாந்தத்திலிருந்து வந்தவர்களே. இராமனுஜ சித்தாந்தத்தில் வந்தவர்களும் ஆதிசங்கரர் சித்தாந்தத்தின் வழி வந்தவர்களே. ஆதிசங்கரர் சித்தாந்தத்தைச் சேர்ந்தவர்கள் இவ்வுளவு இடர்ப்பாட்டிலும் அதே சம்பிரதாயத்தை விடாமல் கடைப்பிடித்துக்கொண்டு இன்றும் பாரத தேசத்தில் அதிகமாகவே உள்ளனர்.

ஆதிசங்கரர் சித்தாந்தத்தைச் சேர்ந்தவர்களுக்கு, குருவின் மூலம் உபதேசம், தீக்ஷை போன்ற தொடர்பு கிடையாது. கோவிலில் பூஜை, பிரஸாதம், மரியாதை போன்றவைகளின் தொடர்பும் கிடையாது. சிறு வயதிலிருந்து கட்டுப்பாடு போன்ற குணங்கள் போதிக்கக்கூடிய இயக்கங்களும் கிடையாது. அப்படி இருந்தும் பௌத்த சமயம், ஜைன சமயம் இராமானுஜர் சித்தாந்தம், வீரசைவ ஸித்தாந்தம், மத்வர் ஸித்தாந்தம் அன்னிய நாட்டிலிருந்து வந்த கிறிஸ்து இஸ்லாமிய ஸித்தாந்தம் இத்தனை சித்தாந்தத்திற்கும் ஆதி சங்கரர் சித்தாந்தம் வழிவந்தவர்கள் போயும்கூட, இன்னும் ஆதிசங்கரர் ஸித்தாந்தத்தைக் கடைப்பிடித்துக்கொண்டு ஜனங்கள் அதிக அளவில் இருந்து வருகிறார்கள் என்பது ஆதி சங்கரர் சித்தாந்தத்திலுள்ள கொள்கைகளின் விசேஷமே.

எல்லா சித்தாந்தப்படியும் பரமாத்மா ஒருவரே. அவர் எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிந்தவர், அவர் தொடர்பு இல்லாத வஸ்து கிடையாது என்றெல்லாம் சொல்லிக்கொண்

-டிருந்தபோதிலும், தங்கள் சித்தாந்தத்திற்கு, தங்கள் கொள்கைகளுக்கு முரண்பாடாகவே மற்ற சித்தாந்தக் காரர்கள் காரியங்களைச் செய்துகொண்டு வந்திருக்கிறார்கள். ஆதிசங்கரரும் தன் சித்தாந்தத்தில் அதற்கு முன்னுள்ள சித்தாந்தத்தைக் கண்டித்திருக்கிறார். அவர் அவைகளைக் கண்டித்தது வேதங்களுக்கும், உபநிடதங்களுக்கும் அவை முரணானவை என்ற முறையில்தான். ஆனால் மற்ற சித்தாந் தங்களைக் கண்டிக்கும்பொழுது கால தேச சூழ்நிலைகளை அனுசரித்தும், யுக்திக்கும் பிரத்யக்ஷத்தையும் அனுசரித்து, புராணங்களை அதிக ஆதாரமாகக்கொண்டு வேத உபநிஷ தங்களுக்கும் புராணக்கருத்துகள் வரும்படியான முறையில் அர்த்தம் பண்ணிக்கொண்டும் அன்னிய மதங்களைக் கண்டிக் கிறார்கள்.

ஆதிசங்கரர் கொள்கையைப் பின்பற்றுபவர்கள் பரமாத்மா எங்கும் நிறைந்துள்ளதால் நம் சித்தாந்தம் உயர்ந்தது, மற்றவர்கள் சித்தாந்தம் தாழ்ந்தது என்ற எண்ணம் கொள்ளாமல், எங்கிருந்தாலும் எந்த சித்தாந்தத் தில் இருந்தாலும் நமக்கு பரமாத்மாவின் அருள் கிடைக்கும் என்ற உறுதியான நம்பிக்கையோடு அதிகப் பேர் இருந்து வந்திருக்கிறார்கள். சிலர் அத்வைத சித்தாந்தத்தின் கருத்துப் புரியாமல் மாயை உலகம் பொய் என்றவைகளை மாத்திரம் சாமான்யமாக எடுத்துக்கொண்டு மனக்கலக்கம் அடைந்து இறை வழிபாடே முக்யம் என்ற கருத்தோடு அன்னிய சித்தாந்தத்தில் போய் சேர்ந்துவிட்டார்கள். அதேபோல் அந்தந்தக் கால தேசத்திற்கு ஏற்றவாறு கொள்கைகளைப் பார்க்கும்பொழுது அது அவர்களுக்குப் பிடித்ததினால் அதில் அவர்கள் சேர்ந்துகொள்ள ஆரம்பித்தனர்.

தற்காலத்தில் அரசியல் கொள்கைகளைக்கொண்டு புதுப் புதுக் கட்சிகள் உருவாகும்பொழுது அந்தக் கொள்கைகளைக் கொண்டு பலருக்கு அதில் ஒரு திருப்தி ஏற்பட்டு, அந்தக் கட்சி யில் எப்படிச் சேருகிறார்களோ மாறுகிறார்களோ அதுபோல் அந்தக் காலத்தில் சித்தாந்தத்தில் ஒருவித பிடிப்பு ஏற்பட்டு, பலர் மாற்று சித்தாந்தத்திற்குப் போயிருக்கிறார்கள். பலர்

தங்கள் ஒரே தேசியக்கொள்கையுடன்,எத்தனை புதியகட்சிகள் தோன்றினாலும் அதிலொன்றும் ஈடுபடாமல் தாங்கள் முதன் முதலில் சேர்ந்த அந்த லட்சியத்திலுள்ள பாதையிலேயே இன்றும் எவ்விதம் இருந்துவருகிறார்களோ அதேபோல் உலகம் தோன்றிய காலம் முதல் இன்றும்கூட மாறாத ஒரே பாதையோடு-பாரதீய கலாசாரத்தோடு-இந்து கலாசாரத்தோடு ஆதிசங்கரர் சித்தாந்தத்தின் வழியாக வந்துகொண்டு இருக்கிறார்கள். மற்ற சித்தாந்தக்காரர்களெல்லாம் தங்கள் சித்தாந்தங்களையே கடைபிடிக்க வேண்டும், அப்படிக் கடைப்பிடிக்காதவர்களுக்கு மோக்ஷம் கிட்டாது என்றெல்லாம் சொல்லி வருகிறார்கள்.

ஆனால் ஆதிசங்கரர் சித்தாந்தமோவெனில், எல்லா சித்தாந்தமும் சொல்லுவதுபோல் பரமாத்மா எங்கும் நிறைந்தவர் என்ற கொள்கையைஒப்புக்கொண்டு, 'தன் சித்தாந்தத்தையே கடைப் பிடிக்க வேண்டும். அப்படிக் கடைப்பிடிப்பவர்களுக்கு மோக்ஷம்' என்றும் ஆதிசங்கரர் வலியுறுத்தவில்லை. எந்த சித்தாந்தத்தில் உள்ளவர்களாக இருந்தாலும் அவைகளையெல்லாம் மோக்ஷத்திற்குப் போகும்படியாக ஒப்புக்கொள்ளுகிறது ஆதிசங்கரர் சித்தாந்தம்.

இந்து மதத்திற்கு அடிப்படையான நூல்கள்,வேதங்கள், ஸ்மிருதிகள், புராணங்கள், இதிகாசங்கள் போன்ற நூல்கள் பல இருந்தபோதிலும் வேதங்களே, முதல் நூல்களாகவும் முக்ய நூல்களாகவும் கருதப்பட்டு வருகின்றன. இந்த வேதங்களை அடிப்படையாகக் கொண்டுதான், அதற்கு ஏற்றம் தரும் முறையில்தான் ஆதிசங்கரர் சித்தாந்தம் உருவானது. ஹிந்து சமயத்தில் அநேக உருவ வழிபாட்டு முறைகள்சொல்லப்பட்டிருக்கின்றன. இத்தனை உருவங்கள் ஒரே பரம் பொருளிலிருந்து வந்ததாகச் சொல்லப்படுகின்றன. இதைத் தான் ஆதிசங்கரரும் ஏற்று ஷண்மத ஸ்தாபனம் என்ற பெயருடன் விநாயகர், சுப்பிரமணியர், சிவன், பார்வதி விஷ்ணு, சூரியன் என்ற ஆறுக்குள் எல்லா மூர்த்தங்களையும் தொகுத்து இந்த ஆறு மூர்த்திகளுக்குள் எந்த உருவ

மூர்த்தியை வழிபட்டாலும் அந்த உருவ மூர்த்தியின் அருளால் மோக்ஷத்தை அடைய முடியும், பரமாத்மாவை அடைய முடியும். பரம்பொருளை அடைய முடியும் என்று கூறியுள்ளார்.

ஹிந்து சமயத்தின் அடிப்படை கர்ம சித்தாந்தம். ஒரு மனிதன் பிறந்தது முதல் நியதிப்படி தான் செய்யவேண்டிய கடமைகள் மோக்ஷம் அடையும் வரையில் செய்யவேண்டிய கடமைகள் எல்லாம் கர்மா என்று சொல்லப்படுகிறது. இப்படி இந்தக் கர்மாக்களைச் செய்வதின் மூலமாக மனத்தில் ஸம்ஸ்காரங்கள் ஏற்படுகின்றன. அந்த ஸம்ஸ்காரங்களின் பலத்தினால்தான் மனிதன் வாழ்க்கையில் முன்னேறுகிறான். அதாவது நல்ல காரியங்கள் நல்ல கர்மாக்கள் செய்யும் பொழுது அதன் மூலம் நல்ல ஸம்ஸ்காரங்கள் நல்ல சிந்தனைகள் உண்டாகின்றன. அந்தச் சிந்தனையின் மூலம் மேலும் மேலும் நல்ல கர்மாக்களைச் செய்து சித்த சுத்தி ஏற்பட்டு, பகவானை வழிபட்டு, பகவத் அனுக்ரஹத்தினால் நல்ல ஞானம் எய்தி, மோக்ஷத்தை அடைய முடியும் என்ற கர்மசித்தாந்தத்தை ஆதிசங்கரர் ஒப்புக்கொள்கிறார்.

கிறிஸ்து போன்ற புறச் சமயமானது ஏழைகளுக்கு உதவி செய்யச் சொல்லுகிறது. ஹிந்து சமயமும் அதிதி போஜனம் போன்றவைகளின் மூலமாக எல்லா மனிதர்களுக்கும் உணவளிப்பதையும், கோவில்களில் நிவேதனம் செய்துவிட்டு அந்த ப்ரஸாதங்களை வினியோகம் செய்வதின் மூலமாகவும் ஏழைகளுக்கு சேவை செய்ய வாய்ப்பு அளிக்கிறது. அதோடு மாத்திரமல்லாமல் எல்லா பிராணிகளுக்கும் உணவளிக்கவும், மண்ணாகி மரமாகிச் சென்றவர்களுக்கும் கூட, தண்ணீர் அளிப்பதின் மூலம் எல்லா உயிரினங்களுக்கும் வாழ வழிவகை வகுத்துக் கொடுக்கிறது. தர்ப்பணம், வைஸ்வதேவம் போன்ற கர்மாக்கள், இந்தக் கொள்கைகளையும் ஆதிசங்கரர் சித்தாந்தம் ஏற்றுக் கொள்ளுகிறது.

கைலாஸம் வைகுண்டம் போன்ற லோகங்களில் பகவான் வஸிப்பதாக ஹிந்துசமய நூல்கள் கூறுகின்றன. ஆதிசங்கரர்

ஸித்தாந்தம் இந்த லோகங்களை கர்ம முக்திகளாக ஏற்றுக் கொள்ளுகிறது. எல்லா சமயத்தவர்களும் இந்த உலக வாழ்க்கையை நிந்தித்து பரமாத்மாவை வழிபடவேண்டும் என்று கூறுகிறார்கள் ஆதிசங்கரர் ஸித்தாந்தமும் இந்த உலகை நிந்திப்பதோடு மாத்திரமல்லாமல், இந்த உலகை நிந்திப்பதற்குக் காரணமாக இந்த உலகமே பொய், அநித்யம், சாஸ்வதமல்ல, நிஜமல்ல, பிரமையே, மாயையின் காரியம், அக்ஞானத்தின் காரியம் என்று, நிந்திப்பதற்குக் காரணத்தையும் எடுத்துக் கூறுகிறது.

கங்கை கோதாவரி காவேரி போன்ற மஹாநதிகளில் அவ்வப்போது விசேஷ நிகழ்ச்சிகள் மூலம் மக்களை ஒன்று படுத்தும் மேளா முதலிய நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அதேபோல் கோவில்களில் ரதோத்ஸவம் போன்ற நிகழ்ச்சிகள் மூலமாகவும், மக்களை ஒன்று படுத்தும் வைபவங்கள் நடைபெறுகின்றன. இவைகளெல்லாம் ஹிந்துசமயக் கொள்கைகளாய் இருந்தாலும், ஆதிசங்கரர் ஸித்தாந்தமும் இவைகளை ஏற்றுக்கொள்ளுகிறது. ஆகவே இந்து சமய ஸித்தாந்தமும் ஆதிசங்கரரின் ஸித்தாந்தமும் ஒன்றே. ஹிந்து சமயத்திலிருந்துதான் மற்ற ஸித்தாந்தங்களும் சமயங்களும் ஒரு இலட்சியத்தை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு உருவாயின.

இந்து சமய ஸித்தாந்தத்தைப் பெரிய ஸமுத்திரத்திற்கு ஒப்பிடலாம். ஸமுத்திரத்தின் விஸ்தீர்ணத்தையும் கரையையும் எவ்வளவு நீளம் எங்குள்ளது என்று கண்டுபிடிக்க முடியாது சமுத்திரத்தின் ஆழமும் கணக்கில் அடங்காது. அதுபோல் ஹிந்து சமயத்தின் தத்வங்களையும் ஸித்தாந்தங்களையும் கலாசாரத்தையும் ஆழ்ந்து பரிசீலித்தும்கூட பரிபூர்ணமாக யாராலும் தெரிந்துகொண்டுவிட முடியாது. சமுத்திரத்தில் பெரும், பெரும் அலைகள் வந்து போகும். அது போல் ஹிந்து சமயத்திலும் அவ்வப்போது பெரிய பெரிய மஹாபுருஷர்கள் ஞானிகள் தோன்றிப் போவார்கள்.

சமுத்திர ஜலத்தை அப்படியே நம்மால் நேரடியாக உபயோகிக்கமுடியாது. ஆனல் அதைப் பண்படுத்தி உப்பாக்கி

எல்லாப் பொருள்களிலும் சேர்த்துச் சாப்பிடுகிறோம். அந்த உப்பில்லாமல் சாப்பிடுவதே முடிவதில்லை. அதுபோல ஹிந்து சமயக் கருத்துக்களும் தத்துவங்களும் கலாசாரங்களும் அப்படியே நேரடியாகப் பார்க்கும் பொழுது ஒன்றுமே விளங்காது; புரியாது. உபயோகமற்றதாகத் தோன்றும். ஆனால் பண்பட்ட பெரியோர்கள் மூலம் நமது கலாசாரங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளும் பொழுது எந்த ஒரு காரியத்திலும் நம்முடைய கலாச்சாரம் சம்பந்தப்படாமல் இருக்கவே முடியாது. எல்லா காரியங்களிலும் நம்முடைய கலாச்சாரத்தின் அம்சம் இருந்துகொண்டே இருக்கும்

ஸமுத்திரத்தில் நவரத்னங்களும் முத்துக்களும் நிறையக் கிடைக்கும். ஆனால் அதை எவரும் எளிதில் எடுத்துவிட முடியாது. அதற்கென்று சில முத்துக்குளிப்பவர்கள் இருப்பார்கள். அவர்கள் மூலமாகத்தான் அவைகளை எடுக்க முடியும். அதுபோல் நம்முடைய ஹிந்து சமயத்தில் அரும் பெரும் வேதாந்த தத்துவங்களெல்லாம் நிறைய இருக்கின்றன. ஆனால் அவைகளையெல்லாம் சுலபமாக எல்லோராலும் தெரிந்துகொள்ள முடியாது. அதை அறிந்த சில ஞானிகள் அனுபவஸ்தர்கள் இருப்பார்கள். அவர்கள் மூலமாக அந்த தத்துவங்களை நன்றாக அறிந்துகொள்ள முடியும்.

சமுத்திரத்தில் அநேக விதமான மீன்கள் நிறைய இருக்கும், அவைகளையெல்லாம் சாமான்யர்களாலேயே சுலபமாக கொண்டு வந்துவிட முடியும். அதுபோல் ஹிந்து சமயத்திலுள்ள பொதுக் கருத்துக்களை சாமான்யக் கருத்துக்களை எல்லோராலும் அறிந்துகொள்ள முடியும்.

ஆனால் சமுத்திரத்தில் திமிங்கலம் போன்ற அநேகவிதமான பெரிய பெரிய உயிரினங்கள் இருக்கும். சிலசமயம் அந்த திமிங்கலங்களே சமுத்திரத்தில் செல்லும் பெரிய கப்பல்களையும் கவிழ்த்துவிடும். அதுபோல் ஹிந்து மதத்தில் சிலபேர் இருந்துகொண்டு ஹிந்துமதத்தையே அழிக்கவும் முற்படுவார்கள்.

சமுத்திரத்தில் கப்பல்களும் சிறு படகுகளும் செல்லும். அதில் கப்பல்கள் அயல் நாடுகளுக்கு பல சரக்குகளையும் பல சாமான்களையும் மனிதர்களையும் ஏற்றிச்செல்லும். அதுபோல் ஹிந்து சமயமானது சிறிய சிறிய கர்மா செய்வதின் மூலமாக சிறிய சிறிய பலன்களை அளிப்பதுடன் பெரிய கர்மாக்கள் செய்வதின்மூலம் கைலாசம் வைகுண்டம் அழைத்துச் செல்லும். பாப கர்மாக்கள்செய்வதின் மூலமாக நரகலோகம் முதலியவைகளுக்கும் அழைத்துச் செல்லும்.

சமுத்திரத்தில் அலைகளை எத்தனை நேரம் வேணுமானு லும் பார்த்துக்கொண்டே இருக்கலாம். அலுப்பு என்பது தட்டாது. அதுபோல் ஹிந்து சமயத்திற்கு ஆதாரமான ராமாயணம் மஹாபாரதம் போன்ற நூல்களை எத்தனை தடவை படித்தாலும் கேட்டாலும் மேன்மேலும் அலுப்புத்தட்டாமல் படித்துக்கொண்டும் கேட்டுக்கொண்டும் இருக்கிறோம்.

ஆகவே சமுத்திரமானது முத்துக்களையும் திமிங்கலங்களையும் அலைகளையும் மீன்களையும் கரையில்லாத் தன்மையையும் ஆழத்தையும் உடையதாய் எவ்விதம் உள்ளதோ அதுபோல் ஹிந்து சமயமானது பல கலாசாரங்களையும் பல தத்துவங்களையும் கொண்டு அதை நம்புகிறவர்கள் எல்லோருக்கும் ஆனந்தத்தை அளிக்கும் ஆனந்த சமுத்திரமாக விளங்குகிறது.

நமது வரலாறு

உலகம் (பிரபஞ்சம்) மிகவும் விசாலமானது. இதன் அகல நீளங்களைக் கற்பனை செய்து பார்க்கவும் முடியாது. இன்றும்கூட இவற்றை மிகச் சரியாகக் கண்டறிய யாராலும் இயலவில்லை. இந்த பூமியின் பரப்பளவுடன் இது இணைத்துப் பார்க்கப்படலானது எப்போது? இது தொடங்கியது எங்கிருந்து? இன்று வரையிலும்கூட இதற்கு உறுதியான சான்று கிட்டவில்லை. பூகோள இயல், தாவர இயல் ஆகியவற்றின் கருத்துப்படி, லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான ஆண்டுகளாகப் படைப்புத் தொழில் நடைபெற்று வருகிறது என்ற சான்றுதான் கிட்டியுள்ளது. மக்களிடையே இப்படிப்பட்ட கருத்துத்தான்உருவாகியிருக்கிறது. பாரதத்தின்வரலாற்றுப் படி, பூமி ஏழு பாகங்களாகப் பிரிந்திருந்தது. இவற்றில் ஏழு 'மஹாத்வீப'ங்களும் 'ஏழு' மஹா சமுத்திரங்களும் அடங்கின. ஆனால் இன்று ஒரு துண்டுநிலமும் ஏழு மஹாசமுத்திரங்களும்தான் எஞ்சியுள்ளன. சில இயற்கையின் மாற்றங்களாலும், இன்னும் சில இயற்கையின் வேகத்தாலும் அழிந்தோ கண்ணுக்குப் புலப்படாமலோ போயின. இத்தனைக்குப் பிறகும் இன்றுகூட பல்வேறு நாடுகளில் பல புராதனச் சின்னங்கள் கிடைத்துள்ளன. எல்லா நாடுகளிலும், ஒரே பண்பாடு நிலவிய காலம் ஒன்று இருந்தது. நமது ாட்டிலும் சரி மற்ற வெளி நாடுகளிலும் சரி இதற்குச் சான்று கிடைத்துள்ளது. கிழக்கே தாய்லாந்து, கம்போடியா, இந்தோனேசியா, லாவோஸ் பாலி, மேற்கே — இஸ்ரேஸ் எகிப்து: வடக்கே ஆப்கானிஸ்தானம், ரஷ்யா, திபேத் முதலிய நாடுகளில் ஆராய்ச்சிகளின் மூலம் ஒரே மொழி ஒரே பண்பாடு ஆகியவற்றுக்கான சின்னங்கள் கிட்டியுள்ளன.

ஐரோப்பியக் கண்டத்தின் பல பாகங்களிலும் புதை பொருள் ஆராய்ச்சிகளில் விலை மதிப்புயர்ந்த பல பொருள்களில் ஒரே மொழி, ஒரே கலை—பண்பாட்டுத் தகவல் கிடைத்துள்ளது.

எல்லா நாடுகளிலும் நமது பாரத தேசம்தான் இன்றும் தனது புராதனக் கலையம்சங்களைக் கட்டிக்காத்து வருகிறது. இதைத் தவிர மற்ற நாடுகளில் எல்லாம் காலத்தின் சுழற்சியினாலும் முற்போக்குத் தன்மையினாலும் இவை மாற்றம் அடைந்து அழிந்துவிடும் நிலையடைந்துவிட்டன; அல்லது வேறு வடிவங்களில் ஆங்காங்கு காணப்படுகின்றன.

புராதன காலந்தொட்டே மக்கள் இரண்டு பிரிவினராக இருந்து வருகிறார்கள். ஒரு பிரிவினர் கிராமவாசிகள், மற்றொரு பிரிவினர் நகரவாசிகள். இவர்களுடைய நடையுடை பழக்க வழக்கங்கள் எல்லாமே இரண்டு வெவ்வேறு தன்மையுடையவைதான்.

கிராமிய வாழ்க்கை: மக்கள் ஏழைகள்; கடும் உழைப்பாளிகள்; சிறு தேவதைகளை வழிபடுவார்கள்; பசுவினத்தையும் கால்நடைகளையும் பராமரித்து வருவார்கள். நெசவு கூடை முடைதல் போன்ற கைத்தொழில்களில் ஈடுபடுவார்கள். குடிசைகளில் வசிப்பார்கள். குடிசைகளை சிற்றாறுகளின் கரையிலோ ஏதேனும் நீர்நிலை அருகிலோ கட்டிக்கொள்வார்கள். பயந்த சுபாவமுள்ளவர்களாக இருப்பார்கள்.

நகர வாழ்க்கை: படிப்பாளிகளாக இருப்பார்கள்; கூரிய மதி கொண்டு செல்வம் தேடிச் சேர்ப்பார்கள்; கட்டிடங்கள் கட்டி வசிப்பார்கள்; பயமற்றவர்களாக இருப்பார்கள். திடமான உள்ளத்துடன் செயல்படுவார்கள்; ஆடம்பரமான வாழ்க்கை நடத்துவார்கள். சிவபெருமான், பார்வதி, விநாயகர் போன்ற பெரிய தெய்வங்களை வழிபடுவார்கள்.

பூமியில் தொடக்க முதலே நகரவாசிகள் நாகரிகமாகவும் கிராம வாசிகள் கிராமிய பாணியிலும் வாழ்க்கை நடத்தி

வருகிறார்கள். இதுபோலவே மலைவாழ் மக்கள் சிறுசிறு தேவதைகளை வழிபட்டு வந்தார்கள்; வேட்டையாடிப் பிழைத்து வந்தார்கள்; திடமான உள்ளம் உடையவர்களானாலும் வேறு பிரதேசத்தினரைத் திடீரென்று பார்த்து விட்டால் பயந்து போவார்கள்; இவர்களை நாகரிகமுள்ளவர்களாக்குவது மிகவும் கடினமான காரியம். ஆனால் கிராம வாசிகளை நாகரிக முள்ளவர்களாக்குவது அவ்வளவு கடினம் அல்ல. காரணம் அவர்கள் வியாபாரத்தின் பொருட்டு நகர்ப் புறங்களுக்குச் சென்று வந்து கொண்டே யிருக்கிறார்கள். இதனால் சிறிது சிறிதாக அவர்கள் மீது நாகரிக வாழ்க்கையின் சாயல் படிகிறது.

ஆதிகாலத்தில் ஒரு வேளை கிராமவாசி, நகரவாசி, மலைவாழ் மக்கள் அனைவரும் ஒருசேர வசித்து வந்திருக்கக்கூடும். இடமாற்றம் காரணமாக அவரவர்களின் கலை—பண்பாடு மாற்றமடைந்திருக்கக்கூடும். ஆனால் இன்றும் அவர்களுடைய பண்பாடுகளின் லட்சியம் ஒன்றேதான். அவர்களுடைய நோக்கமும் ஒன்றேதான். இந்த மூன்று விதமான குழுவினர்களும் தம்மிடையே பரஸ்பர அன்பு, ஒருமைப்பாடு ஆகியவற்றை மாறவிடவில்லை. கிராமங்களிலும் நகரங்களிலும் சண்டை சச்சரவுகள் நடந்து வந்து கொண்டிருந்தாலும் கிராமத்துச் சண்டை கிராமங்களோடும் நகரத்துச் சண்டை நகரங்களோடும் நின்றுவிட்டன. ஆனால் இந்தச் சண்டைகளில் கிராமம், நகரம் என்ற பேச்சு எழவில்லை.

ஆதிகாலந் தொட்டே உலகியல் பணிகளைச் செவ்வையாக நடத்தும் பொருட்டு ஒவ்வொருவருக்கும் அவரவர் தகுதியைப் பொறுத்து பொறுப்புக் கொடுக்கப்பட்டது. ஒவ்வொருவரும் உயர்வு தாழ்வு என்று பிரித்துப் பார்க்காமல் தமது நல்ல இயல்புகளின் மூலம் வரைமுறைகளுக்கு உட்பட்டுத் தமக்குரிய கடமையை நிறைவேற்றி வந்தார்கள். பொறாமை வெறுப்பு இல்லாது மனத்தில் ஒருமைப்பாட்டு உணர்வை அமைத்துக்கொண்டு தமக்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட பணியை உவகையுடன் ஏற்றுக்கொண்டார்கள். அதைத்

தமது கடமையாகக் கொண்டு எப்போதும் கட்டிக்காத்து வந்தார்கள்.

நமது பாரத நாட்டில் மனித குலம் முழுவதற்கும் பல் வேறு புண்ணியத் தலங்களினாலும் நகரங்களாலும் ஒருமைப் பாடு காணப்படுகிறது. இவை நம்மிடையே பரஸ்பர அன்பை மேலும் வளர்ப்பதில் உறுதுணை புரிகின்றன. பல புனித நதிகளும் மனிதகுல ஒருமைப்பாட்டிற்குத் துணை நிற்கின்றன. கங்கை, யமுனை, கோதாவரி, சிந்து, காவேரி, நர்மதை, சரஸ்வதி, கிருஷ்ணா, பிரம்மபுத்ரா என்பவை அத்தகைய நதிகளில் சில. புண்ணியத்தலங்களில் பன்னிரு ஜ்யோதிர் லிங்க க்ஷேத்திரங்கள் அடங்கும். அவையாவன: ராமேஸ் வரம், காசி, ஸ்ரீசைலம், திரியம்பகம், வைத்யநாதம், சோம நாதம், உஜ்ஜயினி, கேதார், நாகேஷ், ஓங்காரநாதம், டாகினி பீமசங்கரம், குஸ்ருணேஸ்வரம். மக்கள் அனைவரும் எண்ணற்ற இத்தகைய புண்ணியத் தலங்களுக்குத் தமது வாழ்க்கையில் ஒரு முறையாவது அவசியம் வந்து தரிசனம் செய்கிறார்கள். இதன் காரணமாக நமது நாட்டில் சமய அடிப்படையில் ஒருமைப்பாடு இன்றளவும் நிலவி வருகிறது.

நமது பாரத நாட்டில் இரண்டு முக்கிய மலைகள் உள்ளன. அவை இமயமலையும் விந்திய மலையும் ஆகும். இவை இரண் டிற்கும் இடைப்பட்ட பிரதேசம் 'ஆர்யவர்த்தம்' எனப் பட்டது. புராதன காலத்தில் ஆர்யவர்த்தத்தில் வசித்தவர் கள் நன்னெறி நடப்பவர்களாகவும் ஒழுக்க சீலர்களாகவும் விளங்கினார்கள். தங்களுடைய கடமைகளை தக்க விதத்தில் நிறைவேற்றி வந்தார்கள். இவர்களுடைய செயல் திறமை களால் கவரப்பட்ட அண்டை அயல் பிரதேச வாசிகளும் கூட இவர்களின் வாழ்க்கை சாதனங்களால் பயனடைந்தி ருக்கிறார்கள். இத்தகையவர்கள் புராதன காலத்தில் கௌட தேசத்தவர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். இதுபோல விந்தியப் பிரதேசத்திற்குத் தெற்கேஅமைந்திருந்த பகுதிகள் திராவிட தேசம் என்று அழைக்கப்பட்டன. இந்த எல்லாப் பிரதேசங்களிலும் வசித்தவர்களுக்கு லட்சியம் ஒன்றுதான்.

தட்பவெப்ப, நீர்வள மாற்றங்களுக்கு இசைந்தபடி அவரவர்களின் நடையுடை, உணவு, உறைவிடம் இவற்றில் மட்டும் மாற்றங்கள் ஏற்படலாயின.

பாரதவாசிகள் தத்தமது பிரதேச மொழிகளை ஏற்றுக்கொண்டவாறே தமது கலை, பண்பாடு ஆகியவற்றின் தத்துவங்களை வளர்க்க தெய்வமொழி என்று அழைக்கப்படும் சமஸ்கிருதத்தைப் பயன்படுத்தினர். சமஸ்கிருதத்திலிருந்து அவற்றை மொழி பெயர்த்துக் கொள்ள முயற்சி செய்யலாயினர். இதனால்தான் தீர்த்த யாத்திரைகளின் போதும் தல தரிசனங்களின் போதும் சமஸ்கிருதத்தின் மூலமாகவே தொடர்பு கொள்வது காணப்படுகிறது.

தங்கள் வாழ்க்கையின் நடைமுறைகளைப் பல பாகங்களாக வகுத்துக்கொண்டு அதன் வாயிலாக வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்குவதற்காகப் பாரதவாசிகள் தமது மூதாதையர்களின் வழிகாட்டலின்படி வேத சூத்ரம், ஸ்ம்ருதி சூத்ரம், புராண சூத்ரம், ஆகம சூத்ரம், என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு நடக்கமுயன்றுவந்துள்ளார்கள். இதன்பின் மத்தியகாலத்தில் அன்னிய மதஸ்தர்கள் வந்தார்கள். அவர்கள் அறிவற்றவர்களைத் தமது மதத்திற்கு மாற்றுவதற்காக இவர்களுடைய மொழிகளைக் கையாண்டனர். வெற்றியும் கண்டனர். இதைப் போலவே ஹிந்து மதத்தைச் சேர்ந்தவர்களும் பிராந்திய மொழிகளில் ஹிந்து ஆகம சூத்திரங்களை எழுத ஆரம்பித்தார்கன். எனவேதான் கடினமான ஸம்ஸ்கிருத மொழியை அறியாத மக்கள் தமது மொழி, வரிவடிவத்தின் வாயிலாக சாஸ்திரங்களையும் தத்துவங்களையும் மதத்தையும் காப்பாற்றினர். பிராந்திய மொழிகளில் மதப் பிரசாரம் இவ்வளவு வேகமாக நடைபெறுவது கண்ட சமஸ்க்ருதமொழி வல்லவர்கள் தங்களுடைய குறைபாடுகளை உணரலாயினர்.

மக்கள் தங்கள் கடமைகளையும் சமய வளர்ச்சியையும் குரோதமோ, துவேஷமோ இல்லாமல் நிறைவேற்றி வந்தவரை தர்மம் பாதுகாக்கப்பட்டுவந்தது என்பதில் சந்தேக-

மில்லை மக்கள் தங்கள் கடமைகளை லட்சியமாக ஏற்று நிறை வேற்றிவந்த வரைமுறையும் நிலைத்திருந்தன. இவற்றைப் பேணிப் பாதுகாக்கும் பொறுப்பு அந்தந்தப் பிரதேச மன்னர் களைச் சார்ந்திருந்தது. அவர்களும் என்றும் அவற்றைப் பாது காத்து வந்தனர். இதற்கிடையில் மன்னர்களிடம் ஆசையும் குரோதமும் துவேஷமும் புகுந்தன; இதனால் பல பிரதேசங் களுக்குமிடையே பரஸ்பர கலகமும் பிரஜைகளிடையே அராஜகமும் அமைதியின்மையும் பரவின. இந்தச் சூழ்நிலை யில்தான் ஜைன பௌத்த மதங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. இந்த நேரத்தில்தான் ஆளும் வேட்கையால் மன்னர்களிடை யே பகை மூண்டது. அவர்கள் சுயநலத்தில் மூழ்கி, பிரஜை களின் நன்மையையும் மதத்தைப் பாதுகாக்கும் கடமையை யும் மறந்து போரிட்டுக்கொண்டு அழியலாயினர். நியாய உணர்வும் அனுபவமும் குறைவுபட்டுப் போனதால் சில காலத்திற்கு நாட்டில் அராஜகம் பரவியது. அதன் பிறகு கொஞ்ச காலத்திற்கு முரட்டு பலத்தின் அடிப்படையில் பல ருடைய ஆதிபத்யம் இங்கு நடைபெற்றது. இதன் விளைவாக அன்னிய மதஸ்தர்களும் வெளிநாட்டினரும் வளம் கொழிக் கும் இந்த தேசத்தைப் பேராசை நிறைந்த கண்களுடன் நோட்டமிடலாயினர். மற்ற தேசங்களுடன் ஒப்பிடுகையில் இந்தத் தேசம் சிறியதாக இருந்தாலும்விவசாயத்தைஆதார மாகக் கொண்டு, தனதான்யங்கள் நிறைந்து விளங்குகிறது என்பதைப் புரிந்துகொள்ள அதிக காலம் பிடிக்கவில்லை. வாணிபம் செய்யும் போர்வையில்இங்குவந்தனர். இங்குள்ள வர்களின் பரஸ்பர பகைமையைக் கண்டு பாரதத்தில் அந்த அன்னியர்கள் தம் ஆட்சியை ஏற்படுத்தினர். இதனால்தான் நமது தேசம் அன்னியர்களின் வசப்பட்டு அன்னிய ஆளுகை எனும் சங்கிலியால் தளையுண்டு கிடந்தது. பாரதத்தின் இழி நிலை, மக்கள் மதத்தைப் புறக்கணித்த ஆகிய காரணங்களி னால் ஏராளமான மஹான்கள் பிறவியெடுக்க வேண்டியிருந் தது. இவர்களில் ஸ்ரீசங்கரர், ஸ்ரீராமானுஜர், மத்வர், வல்லபாசார்யார், சைதன்யர், குருநானக், துளஸிதாசர், சமர்த்த ராம தாஸ், வித்யாரண்யர், சிவாஜி, சந்திர

குப்தர், ஜான்ஸிராணி, சேர சோழ பாண்டியர் போன்ற மன்னர்களும் பக்தர்களும் தியாக புருஷர்களும் அடங்குவர். இறுதியில் நமது தேசத்தைப் பகைவர்களின் பிடியிலிருந்து விடுவிப்பதற்காக வல்லபாய் படேல், ஜவஹர்லால் நேரு போன்ற தலைவர்கள் பல இன்னல்களை ஏற்றனர். தமது அளவற்ற முயற்சியினுல் சத்தியத்தையும் அகிம்சையையும் பரப்பியவாறே ஒவ்வொரு பிரஜையின் உள்ளத்திலும் ராமநாம மந்திரத்தைக் குடிகொள்ளச் செய்தவரே மகாத்மா காந்தி. இவரது பெருமுயற்சியினுல் ஒவ்வொரு பிரஜையின் உள்ளத்திலும் ராம நாமம் எனும் பெரு வெள்ளம் பிரவகித்துப் பாய்கிறது.

எந்த ஒரு தேசத்துக்கும் அதன் தொடக்கம் முதற் கொண்டு இன்றுவரையிலான ஒவ்வொரு துறையின் விவரங்கள்தான் அந்த தேசத்தின் வரலாறு என்றும் பூகோளம் என்றும் கூறப்படுகிறது. பல்வேறு பகுதிகளின் அரசர்களுடைய சரித்திரங்களும் அவர்களால் செய்யப்பட்ட நல்ல-தீய காரியங்களும் வரலாற்றில் வர்ணிக்கப்படுகிறது. பூகோளத்திலோ ஒவ்வொரு பிரதேசத்திலுமுள்ள நிலப்பரப்பு, ஆறுகள், மலைகள், அங்கு கிடைக்கும் பொருட்கள் ஆகியவை கூறப்படுகின்றன. இவற்றுல் மனிதனுக்கு ஏற்படும் நன்மைகள் ஆகியவையும் கூறப்படுகின்றன. இந்த இரண்டு துறைகளின் வாயிலாக எந்த தேசத்தின் நிலைமை அறியப்படுகிறதோ அந்த தேசத்தில் வாழும் மக்களின் ஆசாரவிசாரங்கள் அவர்கள் பின்பற்றும் நெறிமுறைகள் அவர்களின் சிந்தனுமுறை ஆகியவற்றைக் கருத்தில் கொள்வது முறையானதாக இருக்கும்.

ஆனுல் நமது நாடு சுதந்திரமடைந்து 25 ஆண்டுகள் கடந்த பின்னரும், இன்றும் நமது பாடநூல்களை (வரலாறு மற்றும் பூகோளம்) அந்நிய நாட்டினரைகொண்டு எழுதச் செய்துதான் பயன் படுத்துகிறேம் என்று கூறுவது மிகையாகாது. நமதுநாட்டின் வரலாற்றை அந்நியர்கள் எழுதுவதும் அவர்கள் எழுதி வைத்தவற்றை உண்மையான சான்றுகளாக நாம் கொள்ளுவதும் மிகவும் வருத்தம் தரும் விஷயமாகும்

நாம் நமது நாட்டில் தோன்றிய பெருந்தகையாளர்களையும் உண்மை மொழிகளையும் தியாக உள்ளத்தையும் கலைப்படைப்புக்களையும் மறந்துகொண்டே வந்திருப்பது இதனால்தான். நாம் நமது தேசத்தின் வரலாற்றை எழுதும்போது நமது பெருந்தகையாளர்களால் வாழ்ந்து காட்டப்பட்ட நெறிகளையும் அவர்களுடைய மகத்தான கலைப்படைப்புக்களையும் மேற்கோள் காட்டி எழுத முயற்சி செய்வோமானால்தான் நமது அடுத்த தலைமுறையினர் மீது நமது மேன்மைகளின் செல்வாக்குப்படியும். பண்புகளை விவரிக்கும் போதெல்லாம் நமது தேசத்தின் வரலாற்றை முன்வைக்கவேண்டும். சமுதாயத்திலுள்ள ஒவ்வொருவர் மனத்திலும் இந்த விஷயம் நன்கு பதிய வேண்டும் என்பதற்காகவே இவற்றைக் கூற வேண்டியிருக்கிறது.

நமது நாட்டு வரலாறு அந்நியர்களால் எழுதப்படுவதால் அதில் அவர்களைப் பற்றிய விஷயங்களுக்கு மதிப்பு அளிக்கப்பட்டு வருவதை இன்று நாம் காண்கிறோம். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர்களுடைய பண்புகளே மேற்கோள் காட்டப்பட்டு வருகிறது. வரலாற்றின் ஏதாவது ஒரு அம்சத்தை நினைவூட்ட அதை 'கிறிஸ்துவுக்கு முன்' 'கிறிஸ்துவுக்குப்பின்' என்றுதான் தொடங்கிக் குறிப்பிடுகிறார்கள். இதனால்தான் நாம் நமது கலைப்படைப்புக்களையெல்லாம் மறக்கலானோம். நமது வரலாற்றை எழுதும்பொழுது நமது நாட்டின் ஏதாவதொரு தலையாய அறிஞர் அல்லது மன்னர் பெயரைக் குறிப்பிட்டு அவருக்கு முன் அல்லது அவருக்குப் பின் என்று கணக்கிட வேண்டும்; இது நமது வரலாற்று ஆசிரியர்களுக்கு எனது வேண்டுகோள். உதாரணமாக அறநெறி நின்ற அசோகரை எடுத்துக்கொள்ளலாம். அல்லது கலியுகத்தின் தொடக்கத்திலிருந்து கணக்கிடலாம். கிறிஸ்துவை வைத்துக் கணக்கிடுவதைக் கைவிட்டு மேலே கூறிய விஷயங்களை நமது வரலாற்று ஆசிரியர்கள் நன்றாக நினைவில் கொள்வார்களானால் நம் நாட்டுக்குக் கிடைத்த சுதந்திரத்தின் பயனை முழுமையாக அடையமுடியும்.

தொல்பொருள் துறையின் ஆதாரத்தில் வாலாறு எழுதும்பொழுது நிலத்தின் அடியிலிருந்து கிடைக்கும் பொருள்களின் நீள அகலங்களையும் வடிவத்தையும் வைத்து எந்தப் பொருட்கள் எவ்வுளவு காலமாக இருந்துவருகின்றன என்பதையும் வைத்து அவற்றை எந்த விதத்தில் எவ்வளவு காலம் பயன்படுத்த முடியும் என்பதையும் அவை எந்தக் கால கட்டத்தைச் சேர்ந்தவை என்பதையும் கணிக்கிறார்கள். அதேபோல மொழி, கட்டுரைகளின் விஷயங்கள் ஆகியவற்றை வைத்து அவற்றின் வடிவம் எழுதுகிற முறை வடிவழகு ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு மொழிகளின் காலத்தைக் கணக்கிட்டு அவை மாற்றமின்றி இருப்பதையும் கணக்கில் கொண்டு இந்தக் கருத்துக்களின் அடிப்படையில் வரலாற்று ஆராய்ச்சி நடத்தப்பட்டு வருகிறது.

இதன் விளைவு பொருத்தமற்றதாகவும் போகக்கூடும். அவ்வாறே காலகட்டத்தின் அடிப்படையில் எழுதப்பட்ட வரலாறு தொல்பொருள்துறை ரீதியாகப் பயன் உள்ளதாக இருக்கமுடியும். உயர் கல்வியில் இந்த முறை எளிதாகவும் கூடும். இன்று அது பயன் உள்ளதாகவே இருந்துவருகிறது. ஆனால் இது நமது பொருத்தமான அறிவு வளர்ச்சிக்குத் தடையாகவும் ஆகிவருகிறது. எனவே இரண்டு வகையிலும் பயன் பெறுவதன் பொருட்டு இதை இரண்டு பாகங்களாகப் பிரித்துக் கொள்வோம். ஒன்று ஆராய்ச்சிப் பணியில் உதவியாக இருக்கும்; மற்றொன்று முன்னோர்களின் நாகரீகத்தையும் ஒழுக்கத்தையும் அறிந்து பயன்பெற உதவும். இவ்வாறு செய்வதால் நமது வருங்காலத் தலைமுறையினர் இவ்வாறு இருவிதமாகப் பயன் அடைவது எளிதாகும்.

உதாரணமாக நமது பாரத நாட்டில் பௌத்த சமயமும் சமண சமயமும் உச்சநிலையில் இருந்த காலகட்டத்தில் ஆதிசங்கரர் அவதரித்து பௌத்தசமயத்தை நாட்டைவிட்டு வெளியேற்றினார் என்பது பெரிய பெரிய அறிஞர்களின் நூல்களிலிருந்து தெரியவருகிறது. பௌத்தசமயம் கிறிஸ்துவுக்கு 600 ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்டதென்று எழுதப்பட்

டிருக்கிறது. ஆனால் ஆதிசங்கரருடைய காலம் கிறிஸ்துவுக்கு 400 ஆண்டுகளுக்குப் பின் என்று காணப்படுகிறது. மேலே கூறப்பட்ட இவ்விரண்டு காலங்களுக்கிடையே பௌத்தமதம் ஸ்தாபிக்கப் பட்டிருந்தது என்பது ஆதிசங்கரர் புத்தர் ஆகியோரின் அவதார காலங்களைப் பார்க்கும்பொழுது தெளிவாகிறது. ஆனால் 2500 ஆண்டுகளுக்கு முன்பு பௌத்த மதம் இருந்தது என்றும் அனுமானிக்கப்படுகிறது. மீமாம்சை கருத்தைப் பின்பற்றுகிறவர்களை அவர்களுடைய ஆதிக்கத்திலிருந்து அகற்றுவதற்காகவே பௌத்த சமயத்தின் பிரசாரம் நடைபெற்றதாகவும்கூட வரலாறு கூறுகிறது. அந்த மீமாம்சைக் கருத்தின் தூண் போன்ற ஸ்ரீ மண்டனமிசரர் மற்றும் குமாரில பட்டர் ஆகியோரை ஆதிசங்கரர் சந்தித்து வாத விவாதத்தில் அவர்களை வென்றிருக்கிறார். அவர் மீமாம்சைக்காரர்களையும் பௌத்த சமயத்தவரையும் வாதத்தாலேயே வென்றிருக்கிறார். பௌத்தக் கருத்தை முறியடிப்பதற்கு முக்கிய கருவிகள் சாங்க்ய சாஸ்திர நிபுணர்களும் மீமாம்ஸை சாஸ்திர நிபுணர்களும்தான் பௌத்த சமயத்தையும் சமண சமயத்தையும் வென்றது போலவே ஆதிசங்கரர் இந்த இரண்டு சாஸ்திரங்களில் நிபுணர்களையும் வாத விவாதத்தாலேயே வென்று தமது ஹிந்து சமயத்தைப் பரப்பினார்; அத்வைத தத்துவத்தை நிலை நாட்டினார். ஆதிசங்கரரை வைத்து வரலாறு எழுதியவர்கள் அனைவருக்கும் குறிக்கோள் ஒன்றுதான்.

இவ்வாறு ஆதிசங்கரர் அவதரித்து 2000 ஆண்டுகளுக்குக் குறையாமல் ஆகிறது. அதாவது கிறிஸ்துவுக்கு 300 ஆண்டுகளுக்கு முன்னர்தான் என்பது உறுதி. ஆதிசங்கரரின் அவதாரம் மற்றும் அவரது மறைவு ஆகியவை குறித்து அறிஞர்களிடையே கருத்து வேற்றுமை இருக்கலாம்; ஆனால் அவரால் நிறைவேற்றப்பட்ட பணி அவர் பெரிய பெரிய சாஸ்திர நிபுணர்களைச் சந்தித்தது ஆகிய விஷயங்களில் எல்லா வரலாற்று ஆசிரியர்களுக்கும் ஒரே குறிக்கோள்தான் என்று தெரியவருகிறது.

இந்த ஆதாரங்களையெல்லாம் கொண்டு பார்க்கும்போது ஆதிசங்கரருடைய காலம் கிறிஸ்துவுக்குப் பின் என்ற பேச்சே எழுவதில்லை. பொதுவாக ஆராய்ச்சிக்கான விஷயத்தில் இதுபோன்ற முறைகளை அகற்றுவதே நலம். இனிவரும் நூல்களில் கிறிஸ்துவுக்கு முன் பின் என்ற பிரச்சனையையே அகற்றிவிட்டு வருடங்களைக் கணிக்கும் முறையை வைத்துக் கொள்ளவேண்டும். தொடக்கக் கல்வியின்போது ஆசிரியரால் குழந்தைகளின் மூளையில் பதியச் செய்கிற விஷயங்கள் அவர்களின் வாழ்வு முழுவதும் நிலைத்து நிற்கும். எனவே அவர்களுடைய பாடநூல்களை உருவாக்கும்போது இந்த விஷயங்களை நல்ல முறையில் சிந்தனை செய்து குழந்தைகளின் மூளையில் தொடக்க முதலே தங்களுடைய தேசத்தின் மீது ஈடுபாடும் நமது மகான்களிடம் மதிப்பும் உறுதியாக ஏற்படுத்துவதற்கு உதவுகிற ஆற்றல் மிக்க நூல்களை உருவாக்க வேண்டும். நமது குழந்தைகளின் எதிர்காலம் குறித்து நாம் இந்த வகையில் சற்று கருத்துச் செலுத்துவோமானால் நிச்சயமாக நமது பாரத தேசம் உன்னத நிலையை அடைந்து ஒளி வீசத் தொடங்கும்.

ஃ ஃ ஃ

நாம் வாழும் உலகம் பூலோகம் எனக் கூறப்படுகிறது. இந்த பூலோகத்தில் பல பிரதேசங்கள் இருக்கின்றன. ஒரு காலத்தில் இந்த பூலோகத்தில் ஏழு சமுத்திரங்களும் ஏழு மஹாத்வீபங்களும் இருந்தன. ஆனால் இப்போது 'ஜம்பூத்வீபம்' என்கிற ஒரு த்வீபம் மட்டுமே எஞ்சியுள்ளது. அது போலவே அந்த ஏழு சமுத்திரங்களில் உப்புக் கடல் (லவண சமுத்திரம்) மட்டுமே எஞ்சியுள்ளது. இந்தப் படைப்பு எப்போது முதல் நடைபெற்று வருகிறது என்பதைச் சரிவர எவராலும் விளக்கிக்கூற முடியவில்லை. இன்று பூமியின் எந்தெப் பகுதியில் நாம் வசிக்கிறோமோ அதற்கு பாரதவர்ஷம் என்று பெயர். இது ஜம்பூத்வீபத்தின் பாகங்களில் சிறிய ஒன்று. இன்று இந்தோனேஷியா, ஜாவா, பாலி, கம்போடியா கிரீஸ், எகிப்து, தாய்லாந்து, ஸ்ரீலங்கா, பர்மா, சிங்கப்பூர்

முதலிய மற்ற பிரதேசங்களில் நமது பாரதியக்கலைச் சின்னங்கள் (உதாரணம்: ராமாயணம் மகாபாரதம், நமது புராதன ஸமஸ்கிருத மொழி) பல காலகட்டங்களிலும் இருந்து வருகின்றன. அதாவது, நமது கலைகளும் பண்பாடும் நெடுங்காலமாகவே உன்னத நிலையில் இருந்து வந்திருக்கின்றன. ஆனால் இடைக் காலத்திலிருந்த அரசர்களின் அட்டூழியங்களால் அவற்றின் சின்னங்களே அழிகிற நிலை ஏற்பட்டது. நமது தேசத்தின் அந்தக் கலைப் படைப்புகளுடைய சிறப்பை நிர்ணயித்துக் கூறுவது கடினம். சுதந்திரம் கிடைத்த பிறகு, நமது மாபெரும் வீரர்கள் எந்த தேசத்திற்காக மகத்தான தியாகங்கள் செய்திருக்கிறார்களோ அந்த தேசத்தின் எல்லையைத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். காஷ்மீர் முதல் கன்யாகுமரி வரை காசியும் ராமேஷ்வரமுமாய் இந்த தேசம் அமைந்துள்ளது.

சிருஷ்டி எப்பொழுது நடைபெற்றது? இதை யாரும் அறிந்துகொள்ள முடியவில்லை. எப்படியிருந்தாலும் சிருஷ்டியின் தொடக்கம் முதல் பலவிதமான மனிதர்களையும் பல் வேறு பிராணி வகைகளையும் செல்வங்களையும் காண்கிறோம். சிருஷ்டியின் ஆரம்பத்தில் மனிதர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தது. ஆனால் தாவரங்கள், மரங்கள், மலைகள், பறவைக்கூட்டங்கள் முதலியவை அதிக எண்ணிக்கையில் இருந்தன. மெல்ல மெல்ல அந்த மனிதர்கள் மரங்களை வெட்டி வீடு கட்டத் தொடங்கினார்கள். அதன் பிறகு மனிதர்கள் வசிப்பதற்கு ஏற்ற கிராமங்களும் நகரங்களும் உதயமாயின. எப்போதுமே கிராமங்களிலும் நகரங்களிலும் நாகரீகம் இருந்து வந்திருக்கிறது. ஆனால் மலை, மலைசார்ந்த இடங்கள் ஆகியவற்றிலும் வசிக்கும் நதியோரம், காட்டுப் பகுதிகள் ஆகியவற்றிலும் வாழ்கிறவர்களிடையே எப்போதுமே நாகரீகம் குறைவாக இருந்து வந்திருக்கிறது.

நிறையப் பேர்களைப் பார்க்கும்போதுதான் ஒவ்வொருவருடைய கௌரவம் நினைவுக்கு வருகிறது. ஒவ்வொருவரும்

தாமாகவே அம்மாதிரி வாழ்வதற்கான முயற்சியில் ஈடுபட்டிருப்பது தெரிய வந்துள்ளது. அங்கேதான் நாகரீகம் முளை விடுகிறது. மலைவாசியும், நதிக்கரை வாசியும், வனவாசியும் குறைந்த எண்ணிக்கையில் இருந்தாலும் தமக்குத் தகுந்த நாகரிகத்தையும் கலையையும் மேம்பாடு அடையச்செய்து கொண்டே வருவதைப் பார்க்கிறோம். அவர்கள் அந்தந்த இடங்களில் கிடைக்கும் உணவையே பயன்படுத்தி வருகிறார்கள். பறவைகளையும் மிருகங்களையும் வேட்டையாடிச் சமைத்துப் புசிக்கிறார்கள். இந்த வழக்கம் சிற்சில நகரவாசிகளிடமும் காணப்படுகிறது. பச்சை மாமிசத்தை உண்ணுதல் கள்ளைக்குடித்தல் முதலிய சில காட்டுப் பழக்கங்கள்கூட நகரங்களில் ஆங்காங்கு தென்படுகின்றன. இவர்களை நாம் குடிகள் என்கிறோம்.

இதேபோல மலைவாசியும் வனவாசியும் உடை விஷயத்தில் பற்றாக்குறையால் தங்களது உடம்பை அரைகுறையாகப் போர்த்திக்கொள்ள முயற்சி செய்கிறார்கள். அவர்களை நாம் கேவலமாகக் கருதுவதில்லை. ஏனென்றால்அவர்கள் இருப்பதே கொஞ்சம் பேர்தான்; எனவே அங்கே கேவலமாகக் கருதும் பிரச்சனையே எழுவதில்லை. அதே வனவாசிகள் நகரில் அடியெடுத்து வைத்ததுமே நகர மக்கள் தங்களைத் துச்சமாகக் கருதி நோக்குவதை உணர்ந்துகொள்ளுகிறார்கள். அவர்களைப் போலவே உடை தரிக்க முயல்கிறார்கள். இவர்களை நாலுபேர் மத்தியில் அரைகுறை உடலில் பார்க்க நகரவாசிகளாகிய நாம் விரும்புவதில்லை. எனவே இவர்களைத் துச்சமாகக் கருதுகிறோம், 'தேசம் தோறும் வேஷம் வேறு' என்று சொல்லப் பட்டிருப்பதெல்லாம் சரிதான். அதாவது, எங்கு எந்தவித நடையுடை அணிமணிகள் உண்டோ அவற்றையே பழக்கத்தில் கொள்ள வேண்டும். அதுவே இயல்பானது. கொஞ்சமாக இந்த நகரவாசிகளின் எண்ணிக்கை இன்று மிகவும் பெரியதாகிக்காணப்படுகிறது. நமது தேசத்தில் இன்றுவரை எந்த அமைப்பிலும் நகர்புற இயல்பு (நாகரிகம்) இல்லாமல் போனதில்லை.

கட்டையைக் கடைந்தால் நெருப்பு உண்டாகும் என்பது நியதி. யக்ஞம் முதலானவற்றுக்கெல்லாம்கூட கட்டையின் மூலமாகவே அக்னி உண்டாக்கிக் கொண்டிருந்தார்கள். ஆனால், இப்பொழுதெல்லாம் மண்ணெண்ணெயைப் பற்ற வைத்து அக்னி உண்டாக்குகிறார்கள். மண்ணெண்ணெய்கூட தொன்றுதொட்டுப் பயன்படுத்தப்பட்டே வந்திருக்கிறது. வைதிககாரியங்களில் பயன்படுத்தப்படும் அக்னிக்கும் இல்லங்களில் சமைக்கப் பயன்படும் அக்னிக்கும் வித்தியாசம் உண்டு. இன்றுகூட மலைக்குகைகளில் கல்லோடு கல்லை உராய்த்து அக்னி உண்டாக்கப்படுவதைக் காணலாம்.

கற்களில் உராய்வுக் கல்லும்—சிக்கிமுக்கிக் கல்லும் இன்றும் கிடைக்கின்றன. இந்த ரகங்களை இன்றையக் கல்லுடன் ஒப்பிடுவது சரியல்ல. நல்ல வகைக் கற்களைக் கோவில் கட்டப் பயன்படுத்துகிறோம். சாதாரணக் கற்களோநாய்மீது எறிந்து காயப்படுத்துவதற்கு எப்போதுமே பயன்பட்டு வந்திருப்பதைக் காண்கிறோம்.

மரங்களிலும், அரச மரத்தையும் வேப்ப மரத்தையும் பார்க்கும்போதேஒரு தெய்விக உணர்வு ஏற்படுகிறது; மக்கள் அவற்றை வலம் வருவதைக் காண்கிறோம்.

கிராமங்களில் சூலம், வேல் போன்று பயன்படும் ஆயுதங்கள் கோவில்களில் தெய்வங்களின் கரங்களை அலங்கரிப்பதைக் காணலாம்.

அதாவது படைப்புக் காலந்தொட்டே மனிதன், மரம் உலோகம் கல் ஆகியவற்றை மதிப்புடனும், பக்தியுடனும் போற்றிவந்தான். இன்றும் உலோகங்கள் விஞ்ஞான ரீதியில் பயன்படுத்தப்படுகின்றன.

படைப்புக் காலந்தொட்டே ஒவ்வொரு பொருளும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்று கூறப்படுகிறது. நகரவாசிகள் மட்டும் நாகரிகம் உள்ளவர்களாக இருந்தார்கள். இன்று ஒவ்வொருவருக்கும் நாகரிகத்தின் மீது மோகம், ஆசை ஏற்பட்டிருக்கிறது; எனவே பெருவாரியாக மக்கள் நாகரிக

மடைந்து வருகிறார்கள். அதாவது நகர்ப்புறத்தைச் சார்ந்தவர்களாகி வருகிறார்கள். நாகரிகம் என்றால் மக்கள் ஆடம்பரம் என்று நினைக்கத்தொடங்கியிருக்கிறார்கள். நாகரிகம் என்பது பண்பட்டது என்றுபொருள்படும். நாகரிகம் என்பதுகாட்டுத்தனம் அல்ல. படைப்பின் தொடக்கத்திலிருந்தே இந்த இரு பிரிவினரும் இருந்து வருகிறார்கள். என்றுமே நாகரிகமயமான யுகம் என்றோ, நாகரிகமே அற்றுப்போன காலம் என்றோ இருந்தது கிடையாது.

ஆதிகாலத்திலிருந்தே வேதங்களை அனுசரிப்பதும், சமஸ்கிருதத்தைப் பயன்படுத்துவதும் இருந்து வந்துள்ளது. தத்துவம்—தத்துவசாஸ்திரம், மந்திரம்—மந்திர சாஸ்திரம், வேதம், இதிஹாசம், ஸ்மிருதி, புராணம் முதலியவை சமஸ்கிருதத்திலே விளக்கப்பட்டு வந்துள்ளன. சமஸ்கிருதமொழி அன்றும் இருந்தது; இன்றும் இருக்கிறது; இனி என்றும் இருக்கும். தொன்மையானகாலந்தொட்டே இதை அவரவர் பிராந்திய மொழிகளில் எழுதியெடுத்துக் கற்கும் முயற்சி எப்போதும்நடைபெற்று வந்திருக்கிறது. சமஸ்கிருத மொழிக்குக் குறைவே ஏற்படவில்லை. ஆனால் அதை உபயோகத்தில் கொணரும் வித்வான்கள்தான் குறைந்திருக்கிறார்கள். சமஸ்கிருதம் தூய தண்ணீர் போன்றது என்றும் அது எந்த வண்ணத்தையும் ஏற்றுக் காட்டும் என்றும், அதற்கு ஒரு குறிப்பிட்ட குறிக்கோள்தான் உண்டு என்றும் கூறப்படுவது பொருந்தாது. ஒவ்வொரு பிராந்தியத்தைச் சேர்ந்தவர்களும் சமஸ்கிருதத்தைப் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். ஆனால் பெரும்பாலும் இதை சமயசம்பந்தமான காரியங்களிலேயே பயன்படுத்தி வருகிறார்கள்; சாதாரண காரியங்களிலும் சமஸ்கிருதத்தைத் தங்கள் பிராந்திய மொழிகளில் பயன்படுத்தித் தான் வருகிறார்கள்.

சமஸ்கிருத காவியங்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே ஆக்கப்பட்டுள்ளன. அவற்றை அக்காலத்திய மன்னர்கள் ஈடுபாட்டுடன் ஏற்றுப் போற்றினார்கள். இலக்கியமும், கலைப் படைப்புக்களும், அவற்றை ஆதரிப்பவர்கள் இருக்கும்போது

தான் உன்னத நிலையை எய்துகின்றன. அந்த ஆதரவின், மதிப்பின் விளைவாகத்தான் அவை பிராந்திய மொழிகளில் மொழி பெயர்க்கப்படுகின்றன. இதனால்தான் ஒவ்வொரு வரும் அதிலிருந்து பயன்பெற முடிகிறது. சமஸ்கிருதத்தி லிருந்து பிராந்திய மொழிகளில் பெயர்க்கப்படும் பணி, அன்று முதல் இன்றுவரை நடைபெற்று வருகிறது; இவ்வாறு ஒவ்வொருவர் உள்ளத்திலும் அது பதியச் செய்யப்படுகிறது. இதை 'மொழியின் உன்னத வளர்ச்சிக் காலம்' என்று இலக்கிய கர்த்தாக்கள் குறிப்பிடுகிறார்கள்.

உரைநடை தோன்றியது எப்படி, எப்போது அது தோன்றியது என்றெல்லாம் படித்து வருகிறோம். உரைநடை தோன்றியதேயில்லை; செய்யுள் கூடத்தான். ஆனால் சமயப் பற்றுள்ள அரசர்களாலும், மந்திரங்கள் மிகுந்ததாலும் அவை வளர்ந்துதான் வந்திருக்கின்றன. இதேபோல் வேத காலம், புராண காலம், இதிஹாஸ காலம் என்றும் குறிப் பிடப்படுகிறது. இம்மாதிரிக் காலம் எதுவும் இருந்ததாக நாம் கருதுவதில்லை. இவற்றை மதிக்கவேண்டும் என்பதை வலியுறுத்தி வந்தது, காலம் என்ற சொல்லால் குறிப்பிடப் பட்டலாயிற்று. வேதத்தையும் ரிக்வேத காலம், யஜுர்வேத காலம் மற்றும் உபநிஷத காலம் என்று விதவிதமான வடிவங் களில் குறிப்பிடலாயினர். வேதமும் உபநிஷதமும் தனித்தனி யானவை அல்ல; ஒன்றுதான் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். வேதத்தின் ஒரு பகுதியே உபநிஷதம் என்று அழைக்கப்படுகிறது. வேதங்களில் கர்ம மார்க்கத்தின்படி தேவதைகளின் வர்ணனை உள்ளது. அதாவது மனிதன் செய்ய வேண்டிய கர்மாக்கள் என்னென்ன, அவனது கடமை என்ன என்பது பற்றியது. கர்மங்கள் செய்யாததற்குரிய பிராயசி த்தங்களும் அதில் கூறப்பட்டுள்ளன. கர்ம மார்க்கத்துடன் உபநிஷதங்களில் ஞானமார்க்கமும் விவரிக்கப்பட்டிருக்கிறது. கர்ம மார்க்கத்துக்குப் பிறகு ஞானமார்க்கமும் தோன்றியது என்று கூறுவது பொருந்தாது. எல்லா மார்க்கங்களும் ஒரே

காலத்தில் நிலவின. பலர் கர்ம மார்க்கத்தையும், பலர் ஞான மார்க்கத்தையும் ஏற்றனர்.

வேதகாலத்துக்கு முன், வேதகாலத்துக்குப் பின் என்பதும் பொருந்தாது. சரீர பலத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் கர்ம மார்க்கத்தை ஏற்றனர். ஆத்ம பலத்தில் அல்லது உபாஸனையின் சக்தியில் நம்பிக்கை கொண்டவர்கள், உப நிஷத மார்க்கத்தில் செல்வதைக் காண்கிறோம். அதாவது வேதமும் உபநிஷதமும் வேறுபட்டவை அல்ல. வேதமே உபநிஷதம். ஏற்றெடுத்துக் கொண்டவர்களின் கர்ம அனுஷ்டானமும் ஞான உபாஸனையும் வெவ்வேறானவை போலத் தோற்றமளித்தாலும் காலத்தால் வேறுபட்டவை என்று ஆகாது. வேதம், 'த்வனி' களுடைய கூட்டம். அதில் எழுது முறைக்கு முக்கியத்துவம் இல்லை. வேதத்தின் 'த்வனி'வின் வெளியெங்கும் நிறைந்துள்ளது. சொற்கள் வடிவில் அலை யெழுப்பின. பிரம்மர் முதல் மகரிஷிகள் வரை, அவரவர் தவ வலிமையைப் பொறுத்து, அவர்களின் செவிகள் தெய்விக சக்தி பெற்று, அதன் துணையுடன் கிரகிக்கப்பட்டு அந்தச் சொற்கள் மற்ற மகான்களுக்கு உபதேசிக்கப்பட்டு வந்திருக்கின்றன. இந்த முறையில் வேதம் தோன்றியது; வேதம் இல்லாதிருந்த காலம் என்ற ஒன்று இருந்ததாகக் கூறமுடியாது. நம்மைப் படைத்த பிரம்மனுக்கும் முன்பே வேதம் இருந்திருக்கிறது. கலியுகத்தில் வேதம் தோன்றியதை வேதத்தின் துவக்கமாகக் குறிப்பிட்டுவிடுகிறோம்.

வேதம் நான்கு வகைப்படும். அவற்றில் முதலில் ரிக் வேதமும், பிறகு யஜுர் வேதமும் தோன்றின என்று கூறுவதும் பொருந்தாது. இன்றும் நாதவடிவில் வேதம் எங்கும் நிறைந்துள்ளது. வேதம் பிறந்ததுமில்லை. அழியப் போவதுமில்லை. அது நசிவற்றது (அவிநாசி); சிலர் ரிக் வேதத் தையும் யஜுர் வேதத்தையும் தனித் தனியானவை என்று கருதி, அவற்றை மகரிஷிகள் எழுதியதாகக் குறிப்பிடுகிறார் கள். இதற்கு ஆதாரமாக ரிஷிகள் பலர் பலம் பெறுவதற் காக வேதங்களை எழுதியதாக விவரிக்கப்படுகிறது. எந்த

அளவுக்கு இது உண்மை? இதை அறிந்துகொள்ள நாம் ஒரு விஷயத்தைப் புரிந்துகொள்ள வேண்டும்.

ரிஷிகள் தமது தவ வலிமையால் அந்த அபூர்வ த்வனியை கேட்கும் சக்தியைப் பெற்று, எங்கும் அலை வடிவில் நிறைந்துள்ள வேதத்தை உணர்ந்து, தங்களுடைய சீடர்களுக்கு உபதேசித்தனர். அந்தந்த மகரிஷிகள் தத்தமக்கு செவியில் கேட்ட இனிய வேதச்சொற்கள், என்ன ஸ்வரங்கள், விருத்தங்கள் கொண்டவையோ, அந்த சந்தங்களின் பெயர்கள் மேலே குறிப்பிடப்பட்டன. வேதத்தை உணர்ந்த நிபுணர்கள் வரிசைப்படி தங்கள் சீடர்களுக்கு அவற்றை உபதேசித்து வந்தார்கள். இவ்வாறு ஒருவர் மற்றொருவரிடமிருந்து கேட்டுக் கேட்டே வேதம் பரவியது. எழுதியெடுத்துக் கொண்டதால் அல்ல.

இன்று நமது ஞானசக்தி நலிவடைந்திருப்பதால்தான் வேதங்களை அச்சிட்டுப் பயன்படுத்துகிறோம். வெறும் சொற்களின் கூட்டம்தான் வேதம் என்றால் நாம் அதை எளிதில் கற்றுக்கொள்ள முடியும். ஆனால் சொற்களின் உச்சரிப்பு, ஸ்வரங்களின் சிறப்பு; அவற்றின்விருத்தம்ஆகியவைஉள்ளன. இவற்றில் சிறிதளவு மாற்றம் ஏற்பட்டாலும், அவற்றின் உச்சரிப்பு மட்டுமின்றி அவற்றின் பலனும் மாறிவிடக்கூடும். எனவே வேதத்தைப் புஸ்தகங்கள் மூலம் கற்பது விலக்கப்பட்டது. இதைக் கேட்டுக் கேட்டு, மனப்பாடம் செய்ய வேண்டியுள்ளது. வேதத்திற்கு 'ச்ருதி' என்ற பெயரும் உண்டு. வேதத்தின் கிளைகள் 'சாகைகள்' பல உண்டு. இவற்றைத் தேர்வு செய்து தொகுத்தவர் வேதவியாசர் துவாபர யுகத்தின் இறுதியில் இத்தொகுப்பு நடைபெற்றது. இதையே மகரிஷி வேதம் எழுதியதாகக் குறிப்பிடுகிறார்கள். வேதம் எழுதப்பட்டதல்ல. செவி வழியாகக் கேட்டுக்கேட்டே அது வெளிப்பட்டது—என்பதை நாம் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். வேதத்தின் காலத்தை நிர்ணயிப்பது பொருந்தாது.

பாரதத்தின் ஆதிவாசிகள் யார் என்பதுபற்றி நூலாசிரியர்கள் இவ்வாறு கூறுகிறார்கள். முதலில் ரஷ்யா போன்ற வெளியிடங்களிலிருந்து கைபர் கணவாய் வழியாக திராவிட

ஜாதியினர் பாரதத்தில் சிந்து சமவெளிக்கு வந்தார்கள். இவர்களை நாட்டிலிருந்து வெளியேற்றும் உத்தேசத்துடன் ஆரியர்கள் வந்தார்கள். பிறகு இவர்கள் இணைந்து கலந்து வாழ்ந்ததாகவும் எழுதி வைத்திருக்கிறார்கள். திராவிடர் நாகரிகம் பற்றி எழுதுகையில், அவர்கள் மரங்களையும் கற்களையும் வணங்கியதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். பசுவினம் காத்து, இந்திரன் முதலான தேவதைகளைப் போற்றினார்கள் என்றும் கூறுகிறார்கள். ஆரியர்கள் நதிக்கரையில் வாழ்ந்தார்களாம். கரங்களில் கத்தி, சூலம், தண்டம் முதலிய ஆயுதங்களை ஏந்தினார்களாம். இவர்களும் ஆடுமாடுகளை வளர்த்தனராம். இந்திரன் முதலிய தேவதைகளை வணங்கினார்களாம். யக்ஞங்கள் செய்தார்களாம். ஆரியர் என்றால் பிராமணர் என்றும் பொருள் படலாம். மற்றவர்களையும் குறிக்கலாம்.

இந்த இரு ஜாதியினருமே பாரதத்தின் வடபகுதியில் இருந்து தெற்கே வந்ததாக நூலாசிரியர்கள் கூறுகிறார்கள். அப்படியானால் பாரதத்தின் வடபகுதியில் வாழ்ந்தவர்கள் யார் என்ற கேள்வி எழுகிறது. இதற்கு இன்றுவரை சரியான விடை கிடைக்கவில்லை.

பூமியின் ஒவ்வொரு பகுதியிலும் வேத மார்க்கத்தைப் பின்பற்றும் ஹிந்துக்கள் வசித்ததாக நமது வரலாறு தெரிவிக்கிறது. காலகதியில், பகைவர்களின் படையெடுப்பினால் ஆங்காங்கு வேதநெறி நசித்து, பாரதத்திலும் நேபாளத்திலும்தான் ஓரளவு எஞ்சியுள்ளன. ஆனால் இங்கும் ஹிந்துக்களின் மதிப்பு குறைந்தது. காரணம் அன்னிய ஆட்சி. ஹரப்பா, மொஹஞ்சதாரோ ஆகிய இடங்களின் அகழ்வாராய்ச்சிகளிலிருந்து, நமது கலைப்படைப்புக்கள் எத்தனையோ காலங்களாக இருந்து, இன்றும் நிலவுவது புலனாகிறது.

இத்தனைக்கும் பிறகு, ஆரியரும் திராவிடரும் வெளியிலிருந்து வந்தார்கள் என்பது முற்றிலும் பொருந்தாது. 'ஆரிய' என்பது பண்பைக் குறிக்கும் சொல். நமது தேசத்துக்கு 'ஆர்யாவர்த்தம்' என்றே பெயர். விந்திய மலைக்கும் இமய மலைக்கும் இடைப்பட்ட பிரதேசத்தை இவ்வாறு அழைப்பார்

கள். அங்கு வாழ்வோரை மதிப்பு காரணமாக ஆரியர் என்று அழைத்தார்கள். ஆரியர் என்பது உயர்வு தாழ்வு கருதாமல், ஜாதிவேறுபாடின்றி ஒவ்வொருவரையும் குறிப்பிட்ட சொல் லாக இருந்தது புலனாகும். இச் சொல் தொன்மைக் காலத் திலேயே இளவரசர்களைக் குறிப்பதற்கு 'ஆர்ய புத்ர' பயன் பட்டது என்பது நமது வரலாற்றிலிருந்து தெரிய வருகிறது. ஆக, ஆரியர்கள் வெளியிலிருந்து வரவில்லை என்றே நாம் நம்ப வேண்டியிருக்கிறது.

இதேபோல, திராவிடர்கள் என்பது ஒரு ஜாதியாரைக் குறிக்கும் சொல் அல்ல. மகாராஷ்டிரம், ஆந்திரா, கேரளா, கூர்ஜரம், கர்நாடகம் ஆகிய ஐந்து பகுதிகளையும் 'பஞ்ச திராவிட' என்று குறிப்பிட்டார்கள். திராவிட என்ற சொல் சிற்ப சாஸ்திரத்திலிருந்து எடுத்தாளப்பட்டதுதான். எனவே மீண்டும் மீண்டும் நமது வாக்கு ஆரியர்களும் திராவிடர் களும் வெளியிலிருந்து வரவில்லை, இங்கேயே இருந்தவர்கள் தான். இவர்களிடையே மனஸ்தாபம இல்லை. இவர்களிடை யே பரஸ்பர மோதல்கள் ஏற்பட்டதாகக் கூறுவது முற்றிலும் பொருந்தாது. நமது தொன்மையான கலைப்படைப்புக்கள் இன்றும் லட்சக் கணக்கில் ஆங்காங்கு நின்று நிலவுகின்றன. ஆரியரும் திராவிடரும் ஒன்றுதான் என்று நாம் கருத இதுவே போதும்.

'கிறிஸ்துவுக்கு முன்' 'கிறிஸ்துவுக்குப் பின்' என்று வைத்து காலத்தைக் கணக்கிட்டு, வரலாறு எழுதுவது ஹிந்து சமுதாயத்திற்கு இழைக்கப்படும் அநீதியாகும். எந்த வர லாற்றை எழுதினாலும் நமது தேசத்தின் மகத்தான அரசரின் காலத்தை வைத்துக் கணக்கிடுவோம். சமயப் பற்று மிக்க அசோகர் அல்லது விக்ரமசகாப்தம் அல்லது சாலிவாஹன சகாப்தத்தை வைத்துக் கணக்கிட முடியும். இவ்வாறு கணக்கிட்டு நாம் வரலாறு எழுத முயன்றால், அந்த வரலாறு உண்மையின் ஒளி வீசும் காட்சியாகத் திகழும். இது மட்டு மல்ல. நாம் அடைந்த சுதந்தரத்தின் உண்மைத் தன்மை யையும் புரிந்து கொள்ளமுடியும்.

ஹிந்து கோட்பாட்டின்படி நான்கு யுகங்கள் உள்ளன. 1. சத்ய யுகம் 2. த்வாபர யுகம் 3, த்ரேதா யுகம் 4. கலியுகம் த்ரேதா யுகத்தில் பகவான் ஸ்ரீ ராமசந்திரர் அவதரித்தார். த்வாபர யுகத்தில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் அவதரித்தார். பல லட்சம் ஆண்டுகள் கொண்டது ஒரு யுகம். ஆனால் ஆராய்ச்சியாளர்களும் வரலாற்று ஆசிரியர்களும் ஆழ்ந்த ஆராய்ச்சியுடன் இதில் முயற்சி செய்வதை விடுத்து, அன்னிய நாட்டினர் மூலம், அன்னிய சமயங்களின் உதவியுடன் அனுமானம் செய்து, கிருஷ்ணவதாரம், ராமாவதாரம், மற்றும் எல்லா அவதாரங்களும் சேர்த்து ஆயிரம் ஆண்டுகளுக்குள் நிகழ்ந்ததாகக் கூறியிருக்கிறார்கள். இதை நிறுவுவதற்காக தர்சன சாஸ்திரத்தின் அடிப்படையில் தங்களுடைய கற்பனை சக்தி மூலம் ஆராய்ந்திருக்கிறார்கள்.

தொல்பொருள் துறை மூலம் கிடைத்த பொருள்களை அவை தரும் ஆதாரத்தை வரலாறு எழுதுவதற்குப் பயன் படுத்துகின்றனர். இதே போல ராமாயணம், மஹாபாரதம் மற்றும் பாகவதம் ஆகிய ஆதாரங்களில், தொன்மைக் காலத்திய சுலோகங்களின் இடையில் புதிய இடைச்செருகல் இருப்பதாகச் சொல்கிறார்கள். இவை அனைத்தையும் ஆதார பூர்வமாக நிரூபிக்க அவர்கள் இயலாதவர்களாக இருப்பது தெளிவாகியுள்ளது.

ஒவ்வொரு பொருளின் தொன்மையையும் வைத்து அதன்படி ஒவ்வொரு நிகழ்ச்சியையும் கணக்கிடுவது பொருத்த மனதாகத் தோன்றவில்லை. ஏனென்றால் தங்கம், வெள்ளி, உலோகங்கள், பித்தளை முதலியவை படைப்பின் தொடக்கத்திலிருந்தே இருந்துவந்திருக்கின்றன. எனவே ஒரு பொருள் எவ்வளவு காலமாக இருந்து வந்திருக்கின்றது. அது இன்னும் எவ்வளவு காலம் பயன்படும் என்பதை வைத்து ஆராய்ச்சி செய்வது பொருத்தமற்றது. அதே போல எழுதும் முறையை வைத்தும் பொருள்களின் காலத்தைக் கணக்கிடுவதும் பொருந்தாது.

புரியவே புரியாத எழுத்துக்களை எழுதிக் காட்டக்கூடிய திறமை சாலிகள் இன்றுகூட இருக்கிறார்கள். புதிய வர்ணனை பழைய வர்ணனை ஆகியவை தெரிந்தவர்களும் இன்று இருக்கிறார்கள். இதனால் ஆராய்ச்சியின் அடிப்படையில் எதையும் அனுமானித்துவிடுவது முடியாது. மொழி, நடையுடை, பழக்கங்கள் ஆகியவற்றைக் கொண்டும் இதனை அனுமானிப்பது, கடினம்தான். கடினத்திலும் கடினமான மொழிகளையும் எழுது முறைகளையும் கையாளக் கூடியவர்களும் இருக்கிறார்கள்; எளிமையிலும் எளிமையான மொழிகளைக் கையாளக் கூடியவர்களும் இருக்கிறார்கள். இதில் எந்த சந்தேகமும் இல்லை.

சில பதில்கள்

பதில்: 1

உலகில் தற்பொழுது பிரசித்தமாக உள்ள மதங்கள் மூன்று கிறிஸ்தவம், இஸ்லாமியம், ஹிந்து மதம். இந்த மூன்று மதத்திலுள்ள ஜனங்களும் அந்தந்த மதத்தில் பற்று உள்ளவர்களாகத்தான் இருக்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு மதத்தவர்களும் அந்த மதத்தில் வைத்துள்ள முறைதான் மாறி இருக்கிறது. பொதுவாக மதப்பற்று என்பது எல்லா மதத்திற்குமே குறைந்துகொண்டு வருகிறது. அதற்கு காரணம் நாகரிகமும் நாகரிகத்தின் பழக்க வழக்கங்களும்—நாகரிகத்தின் பழக்க வழக்களிலுள்ள மோகமும்—தற்போது கல்வி கற்கும் முறையும்—சினிமா பிரசாரங்களும்—பத்திரிகை இதழ்களும், மனோ துர்பலமும்தான்.

மதப்பற்று என்பது, நாம் குழந்தைகளிடத்தில் வைக்கும் பற்று போலவோ, மனைவி யிடத்தில் வைக்கும் பற்று போலவோ, தாய், தந்தை, பெரியோர்களிடத்தில் காட்டும் மரியாதை பற்று போலவோ அல்லாமல், ஒவ்வொரு மனிதனுடைய வாழ்விலும், வாழ்க்கையின் ஏற்பட்ட சொந்த அனுபவத்திலும், சிறு வயதிலிருந்து தங்கள் பெற்றோர்கள் வளர்த்துக் கற்றுக் கொடுத்த முறையிலும்தான் வளர்கிறது.

ஆண்டவன் ஒருவன் உண்டு என்று மூன்று மதங்களும் ஒப்புக் கொள்கின்றன. அந்த அளவிலே மூன்று மதத்தினர்களுக்கும் மதப்பற்றுகுறையவில்லை. ஆனால் அதேசமயம் தாம் செய்யும் தவற்றுக்குப் பிரதிபலன் உண்டு என்ற நம்பிக்கை இல்லாமையும் வளர்ந்து கொண்டே வருகிறது. இதற்குக் காரணம் ஆண்டவன் கருணை உள்ளவன், அவனிடம் நாம் செய்யும் தவறுகளுக்குக் கருணை காட்ட வேண்டுமென்று பிரார்த்திக் கொண்டோமானால், அவன் கருணையினால், நாம்

செய்த தவற்றின் பிரதி பலன் நம்மை அணுகாமல் போய் விடும் என்று நம்பி,ஒழுக்கச் சிதைவுக்கு காரணமான காரியங்களும், சூழல்களும், நமது கலாச்சாரத்திற்கும், நமது தர்ம நூலுக்கும் நீதிக்கும் முரண்பாடான காரியங்களும் இன்று நாம் செய்து வருகிறோம். ஒரு பக்கத்தில் ஆண்டவனின் நம்பிக்கை மதப் பற்று என்ற பெயரில் வளர்ந்துகொண்டு மற்றொரு பக்கத்தில் ஆண்டவனின் கருணையின்மீது நம்பிக்கை வைத்து தவறான பாதையில் சென்றுகொண்டே இருக்கிறோம். மேலும் இன்றுள்ளநிலையில்கிறிஸ்துவ மதத்தில் உள்ள பலருக்கு தங்கள் மதத்தில் உள்ள நம்பிக்கை சிறிது குறைந்து இருந்தாலும்கூட, இந்து கலாச்சாரத்தின் மீது சிறிது நம்பிக்கை இருந்தாலும், தங்கள் மதக் கருத்துக்களைப் பரப்புவதில் அவர்களுக்குள்ள ஆர்வம், மதப்பற்று, குறையவில்லை.

இஸ்லாமியர்களுடைய மதப்பற்றானது, தங்கள் மதத்தில் நம்பிக்கை இருப்பதோடுகூட, தங்களுடைய செய்கைகள் எந்த முறையில் இருந்தாலும், தங்கள் மதத்தைக் காப்பதிலும்—பரப்புவதிலும்—வளர்ப்பதிலும், தங்கள் உயிரையோ தங்கள் சொத்துக்களையோ லட்சியம் செய்யாமல் எல்லாவிதத் தியாகமும் செய்யத் தயாராக அவர்களுடைய மதப்பற்று இருக்கிறது.

ஹிந்துக்களுடைய மதப்பற்றோவெனில், ஹிந்துக்களுடைய ஒற்றுமைக் குறைவு—மத அறிவுக் குறைவு—இதற்காகத் தியாகம் செய்ய வேண்டுமென்ற உணர்வுக் குறைவு இத்தனையும் இருந்த போதிலும், ஆண்டவனுக்காகவும், மதத்திற்காகவும், சில சில சமயங்களில் அவர்களுடைய தியாகமும், ஒற்றுமையும், சொல்லுக்கடங்காத முறையில் இருக்கிறது.

ஹிந்துக்களுடைய மனோபாவமானது, ஒரு மனிதனுவது ஒழுக்கத்தோடும், சீலத்தோடும், தர்ம சிந்தனையோடும் இருந்துகொண்டு. தன் மதத்திற்காக ஆண்டவனிடமே அர்ப்பணித்துக் கொண்டு இருந்து விட்டால், அதன் மூலம் மதத்

திற்கு எந்த கஷ்டம் வந்தால்கூட அதைச் சமாளிக்க முடியும் என்ற நம்பிக்கை உண்டு. அதேபோலத்தான் ஹிந்து மதத்தில் அவ்வப்போது ஒவ்வொரு மஹாபுருஷர்கள், ஆசாரிய புருஷர்கள் முதலியவர்கள் தோன்றி, அந்த தேச காலத்திற்கு ஏற்றவாறு மக்களை ஒருமைப் படுத்தி இன்று வரை நடத்திச் சென்றிருக்கிறார்கள். மற்ற மதங்களைப் போல் எல்லா மக்களும் ஒரே ஒழுக்கத்துடனும், நேர்மையுடனும், தர்ம சிந்தனையுடனும், கடவுள் பக்தியுடனும், நம்முடைய ஹிந்து மத வளர்ச்சி என்ற நினைப்பே இல்லாமல், எங்கு மஹா புருஷர்கள்—ஞானிகள்—மதாச்சாரியார்கள் இருக்கிறார்களோ அவர்கள் மூலமாகவே, நமது மக்கள் எல்லாம் ஒன்றுகூடி, தங்கள் வாழ்க்கை நெறிமுறைகளைச் சிறிதளவாவது கைக்கொண்டு வருகிறார்கள். ஆகவே, ஹிந்துக்களின் மதப்பற்று என்பது வியாபகமானது. சுய நலத்தில் மாத்திரம் இல்லாதது. தன் வாழ்க்கையை மாத்திரமே நம்பி குறிக்கோளாகக் கொள்ளாதது. காலம், தேசத்திற்கு ஏற்றவாறு வளைந்து நிமிர்ந்து கொடுத்துவருவது இந்துக்களின் மதப்பற்று.

பதில்: 2

உலகிலுள்ள ஒவ்வொரு மதத்தைக் கடைப்பிடிப்பவர்களுக்கும், உடல் வியாதிகளும், மனத்தில் தீயதை நினைக்க வேண்டாமென்றாலும் நினைக்கச் செய்யும் தன்மையும், மனதினால் கவலைப்படும் தன்மையும் இருக்கின்றன. இதற்கு ஹிந்து மதம் தவிர, பிறமதத்தினர் கூறும் காரணங்கள், 'ஆண்டவனை சரணமடை. பிரார்த்தனைசெய். உன் கஷ்டங்கள், துன்பங்கள் வியாதிகள், கவலைகள், பாபங்கள் எல்லாம் நீங்கிவிடும்' என்பதே. அவர்கள் அறியாமலேயே இந்த துன்பங்கள் எல்லாம் முன் ஜன்மாவில் செய்தது என்று ஒப்புக் கொள்ளப்படுகிறது. ஆகவே, கர்ம சித்தாந்தமானது, முன்ஜன்ம வினையானது, ஹிந்துக்களுக்கு மாத்திரம் சாட்டப்படும் குற்றச்சாட்டு அல்ல.

ஏனென்றால், மற்றைய மதத்தினர்களுக்கும் ஹிந்து மதத்தினரைப் போலவே எல்லா விதமான கஷ்டங்களும், சுகமும்

களும் இருக்கவே இருக்கின்றன. இந்தப் பிறவியில் நல்லவனாய் பிறருக்குத் தீங்கு நினைக்காதவனாய் இருப்பவனும் கூட இந்த இன்ப துன்பங்களிலிருந்து மீளுவது இல்லை. ஆண்டவன் சரணாகதியில் மாத்திரம், ஆண்டவனைப் ப்ரார்த்தனை செய்வதால் மாத்திரம் துன்பங்கள் போய்விடுகிறது என்று ஒப்புக்கொள்ளும் பிற மதத்தினர்களுக்கு, இன்ப துன்பங்கள் இல்லாமல் இருக்கவேண்டுமே அப்படித் தென்படவில்லையே! ஆண்டவனை வழிபடுகிறவன், வழிபடாதவன் எல்லோருக்கும் எல்லா மதத்தினருக்கும் இன்ப துன்பங்கள் ஒன்றாகவே இருக்கின்றன.

இன்ப துன்பங்கள் என்று சொல்லும்போது, பசி இல்லாமல் இருப்பது, மன சந்துஷ்டியுடன் இருப்பது, உடலில் வியாதி இல்லாமல் இருப்பது, இவைகளைக் குறிப்பிடும். மனித உடல் எடுத்த எவ்வளவு பெரிய அவதார புருஷர்களாக இருந்தாலும் ஞானிகளாக இருந்தாலும் மஹா புருஷர்களாக இருந்தாலும், அவர்களிடம் மேற்கூறிய மூன்றும் பரிபூரணமாக இருக்கும் என்று சொல்ல முடியாது. ஏனென்றால், இந்த உடல் வந்ததே முன் செய்த நல்வினை, தீவினைப் பயனால்தானே. ஆகவே, கர்ம சித்தாந்தம் மறுபிறவி சித்தாந்தம் என்பது நேரிடையாகவோ மறைமுகமாகவோ எல்லா மதத்தினராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த முறையிலே, ஹிந்து மதமும் கர்ம சித்தாந்தத்தை ஒப்புக்கொள்கிறது.

'கர்மா' என்பதானது ஒவ்வொருவருக்கும் ஏற்பட்ட கடமைகளைவலியுறுத்துவது. குழந்தையாய் இருக்கும் நிலையில் செய்யவேண்டியகாரியங்கள் என்னென்ன—யௌவன காலத்தில்செய்யவேண்டியகாரியங்கள்என்னென்ன-கிருஹஸ்தனாய் இருக்கும்போது செய்ய வேண்டியகாரியங்கள் என்னென்ன முதியோரான பிற்பாடு செய்ய வேண்டிய காரியங்கள் என்னென்ன—மனைவி புருஷனுக்கு பிள்ளைகளுக்கு—தாயார், தகப்பனாருக்கு—மாமனார், மாமியருக்கு இவர்களிடம் நடந்துகொள்ள வேண்டியமுறை எப்படி இதுபோன்ற கடமைகளை வலியுறுத்துவதுதான் கர்மா. என்னென்ன காரியத்தை

எந்தெந்த முறைப்படி, அதாவது மனசினாலோ வாக்கினாலோ பொருளினாலோசெய்யவேண்டுமோ,அப்படியப்படிச்செய்யப் படவேண்டியதுதான்கர்மா.இந்தக் கர்மமார்க்கங்களிலிருந்து தவறிக் காரியங்களைச் செய்பவன் பாபங்களைச் செய்பவன் ஆகிறான். சரியான முறையில் செய்தால் புண்ணிய பலனை அடைகிறான்.

விருப்பு வெறுப்பற்றுத் தனக்கு ஏற்படுத்தப்பட்ட காரியங்களைச் சிறிதுகூட வழுவாது செய்து வருபவன் 'நிஷ்காமிய கர்மாவை'க் கடைப்பிடிப்பவன் ஆகிறான். இது போன்று நிஷ்காமிய கர்மாவைக் செய்தவனோ—தத்துவ விசாரத்தின் மூலம் உண்மை அறிவைப்பெற்றவனோ—யோக அப்பியாஸத்தின் மூலம் மனத்தை ஒருமைப்படுத்தி இறைவனையே அடைந்தவனோ—பக்தி மூலம் கரைந்து உருகி இறைவனோடு இரண்டறக் கலந்தவனோ, இறந்துவிட்டால் அவனுக்கு மாத்திரமே மறுபிறவியோ துன்பமோ, கவலையோ கிடையாது. அப்படியல்லாமல், பிறவி எடுத்த யாராய் இருந்தாலும் இன்பதுன்பங்களிலிருந்து தப்பமுடியாது.ஆனால் இன்ப துன்பங்களைக் குறைத்துக்கொள்ளமுடியும்.

இதற்காகத்தான்ஆண்டவனை வழிபடுவது, பிரார்த்தனை செய்வது, பிராயச்சித்த கர்மாக்களைச் செய்வது, க்ஷேத்திரங்களில் புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்வது முதலிய காரியங்களைச் செய்யச் சொல்லியிருக்கிறது. உதாரணமாக பெரும் மழைக்கும் வெயிலுக்கும் குடை உதவுவதுபோல தீமைகள் குறைய உதவும்.

இதுபோன்று தான் கர்ம வினையைத் தவிர்க்கமுடியாது. குறைத்துக்கொள்ளமுடியும். 'நடப்பது நடந்தேதான் தீரும், என்று சோம்பேறியாக இல்லாது, முயற்சி செய்தால், சிறிதளவு துன்பத்தைக் குறைத்துக்கொள்ள இயலும். எல்லாம் கர்மா என்றுசொல்லிக் கொண்டு சோம்பேறியாக உட்காருவதற்கு ஏற்பட்டதல்ல கர்ம சித்தாந்தம். கர்மாவின்வேகத்தை குறைத்துக் கொள்வதற்கு, போக்கடித்துக் கொள்வதற்கு

செய்யவேண்டிய முயற்சியைத் தூண்டுவதுதான் கர்ம சித்தாந்தத்தின் முக்கியமான இலட்சியம்.

ஆகவே, எல்லாம் ஆண்டவன் செயலென்றும், எல்லாம் கர்மாவின் பலன் என்றும் ஒதுக்கிவிட்டு இராமல் நம்முடைய முயற்சியை முக்கியமாய்க் கொண்டு மனிதன் முன்னேற வேண்டும்.

மின்சார சக்தி இல்லாமல் மின்சக்தி சம்பந்தப்பட்ட எந்தப் பொருளும் இயங்காது. அதிலும் அதை இயக்குபவன்இருந்தா லொழிய அது இயங்காது. உதாரணமாக ரேடியோ—Fan—Light—முதலியவைகள் இருக்கின்றன. இவைகளுக்கு மின் சார சக்தியின் தொடர்பு கொடுக்கப்பட்டுள்ளது. இருந்த போதிலும் இவைகள் தானுகவே இயங்க இயலாது. இதற் கென்று ஒரு மனிதன் இயக்குவிக்கவேண்டும். இயக்குவதிலும் Bulb எவ்வளவு power உள்ளது வைக்கிருேமோ அந்தப் பவ ருக்கு ஏற்ற வண்ணம் பிரகாசமும், மெதுவாக, அதிகமாக வோ 'Fan' ஐ இயக்கிஞல், அதை அனுசரித்துக் காற்று வரு வதும்,ரேடியாவை நாம் வைக்கும் 'வால்யூ'மை அனுசரித்தும் நாம் வைக்கும் 'ஸ்டேஷனை' அனுசரித்தும்தான் சப்த ஒலிகள் வருவதும் இயல்பு.

ஆகவே நம்முடைய செய்கைகளை நாம் மாற்றிக்கொள்ள முயற்சித்தோமாஞல், நம்முடைய இன்ப துன்பங்களைக் குறைத்துக்கொள்ள வாய்ப்புண்டு. வாழ்க்கையில் நாம் முன்னேற வழியுண்டு. ஆனல் மறுபிறவி எடுக்காமல், இன்ப துன்பங்களுக்கு ஆளாகாமல் இருக்க வேண்டும் என்றவர்கள் விருப்பு வெறுப்பு அற்று, கடமையை மாத்திரம் நிஷ்காமிய மாகச் செய்துகொண்டு வந்தால் அவர்களுக்கு ஆண்டவன் மனச் சாந்தியையும், ஆனந்தத்தையும்,அமைதியையும் அளிக் கிருன். ஆகவே கர்ம மார்க்கமானது, சாமான்ய வாழ்க்கை யில் உள்ளவர்களுக்கு மேன்மேலும் முன்னேறிச் செல்ல வழி காட்டும் ஒருமுறை.

பதில்: 3. உலகிலுள்ள கலாச்சாரங்களுள் ஹிந்து மத கலாச்சாரமானது பழமையானது என்பதோடு மாத்திரமல்லாமல், தற்போது பிற மதங்களிலுள்ள கலாச்சாரங்களைக் கூடத் தன்மதத்தில் அடங்கியுள்ள கலாச்சாரத்தோடு கொண்டுள்ளது. கலாச்சாரம் என்பதற்கு வாழ்க்கை நெறி என்று பொருள். தற்காலத்தில் கலாச்சாரத்தின் பெயரால் சிலர் நடனம், நாட்டியம் இவைகளைக் குறிப்பிடுகிறார்கள். நடனம் நாட்டியம் இவைகள் 'ஆர்ட்;' கலாச்சாரமல்ல கலாச்சாரத்தின் ஒரு பாகமே. கலாச்சாரமானது, உணவு உண்ணுதல், உடை உடுத்துதல், ஆண்டவனை வழிபாடு செய்தல், பிறந்தது முதல் இறக்கும்வரை செய்யும் சடங்குகள் முதலியவைகள் எல்லாமாகும்.

இந்தப் பண்பாடானது, இந்த கலாச்சாரமானது 'ஹிந்து' என்று சொல்லக்கூடிய எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களானாலும் எல்லோருக்கும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாக இருந்து வருகிறது. உதாரணமாக, ஆண்டவன் உண்டு என்ற நம்பிக்கை பரலோகம் உண்டு, கர்ம மார்க்கம் உண்டு என்ற நம்பிக்கை, இன்ப துன்பங்களைக் குறைத்துக்கொள்ள பிராயச்சித்த முறையை அனுசரித்தல், பிறந்தது முதல் இறக்கும்வரை அக்னியை சாக்ஷியாக வைத்துக்கொண்டு காரியங்களைச் செய்தல், வேதங்கள், புராணங்கள், இதிகாசங்கள் இவைகளை நம்புதல் (ஒப்புக் கொள்ளுதல்) நெற்றிக்கு இட்டுக்கொள்ளுதல் சிகை (குடுமி) யை அங்கீகரித்தல்-வேஷ்டி, பஞ்சகச்சத்தை அங்கீகரித்தல்-உருவ வழிபாட்டில், தேவதா வழிபாட்டில் நம்பிக்கை வைத்தல்-பெண்களுக்கு மறுவிவாஹத்தை ஏற்றுக் கொள்ளாமலிருத்தல், குழந்தைகளுக்குத் தாயாகவும், புருஷனுக்கு நல்ல இன்பத்தை அளிப்பவளாயும், அதிதிகள், தாய் தந்தைகளுக்குத் தொண்டு செய்பவளாகவும், வீட்டிற்கு எஜமானியாகவும் இவ்வளவு லக்ஷணங்களோடு கூடிய ஒரு பெண்மையை ஹிந்து சமயத்தில்தான் காணமுடியும். காரியத்திற்கு ஏற்றவாறு மக்கள் சமுதாயமானது பலவாறாகப் பிரிந்து வந்து கொண்டிருந்தாலும், மேற்சொன்ன இலக்கணங்

களுக்குள் ஏதாவது ஒன்றை அன்றும், இன்றும், என்றும் கைக் கொண்டேதான் வந்துகொண்டிருக்கிறார்கள்.

மேலும் ஒரு விசேஷ காலங்கள் வரும்போது, பெரிய க்ஷேத்திரங்களிலும் பெரிய நதிகளிலும் எழுத்தறிவில்லாத பல வகுப்பினரும்கூட, ஒருவர் சொல்லாமல் தானாகவே உள் பிரேரணையோடும், பிரேமையுடனும்கூட எல்லா வேற்றுமை களையும் மறந்து, லட்சக்கணக்கானமக்கள் ஒன்றுகூடுகிறார் கள். அப்பொழுது கங்கையில் மூழ்குவது க்ஷேத்திரங்களில் தரிசனம் செய்துகொள்வது என்பது எல்லாருக்கும் சமமாக வோ, பொதுவாகவோ ஆகிறது. அவரவர்கள் வசிக்கும் பகுதிக்கேற்றவாறு அவரவர்களுடைய உடை உடுத்தும் முறைகள்-உணவு உண்ணும் முறைகள்-பாஷை பேசும் முறை கள் மாறுபடலாமே ஒழிய, மேற்சொன்ன கலாச்சாரங்களில், பழக்க வழக்கங்களில் ஒன்றுகூட மாறாது. சிலர் அதைக் கடைப்பிடிக்கலாம். கடைப்பிடிக்காமலும் இருக்கலாம். அது அவர்கள் சொந்த விஷயம். இருந்தாலும் எல்லோருமே இவற்றை எல்லாம் ஒப்புக்கொள்வார்கள். ஆகவே ஹிந்துக் களுக்கென்று புதுமையாக சில கோட்பாடுகளைச் சொல்லி அவைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று வற்புறுத்த வேண்டியதில்லை. அவர்கள் செய்ய வேண்டிய கடமைகளை மட்டும் அவ்வப்போது ஞாபகப்படுத்தி வந்தால் அதுவே போதுமானது.

பதில் 4:

உடலில் அனேக உறுப்புகள் இருக்கின்றன. ஒவ்வொரு உறுப்புக்களின் வழியாக ஒவ்வொரு காரியங்கள் செய்யப் பட்டு வருகிறது. இந்த ஒவ்வொரு உறுப்புக்களும் மனிதன் பிறக்கும் போதே உடலோடு கூடப் பிறக்கின்றன. பிறந்தது முதல் உடலில் உள்ள அந்த உறுப்புகள், ஒருவர் சொல்லிக் கொடுத்தோ, சொல்லிக் கொடுக்காமலோ, தானாகவே அந்தந்தக் காரியங்களைச் செய்யத் தொடங்கிவிடுகின்றன; வாயால் பேசுவது, காதால் கேட்பது, கண்ணால் பார்ப்பது, காலால் நடப்பது இதுபோன்று ஒவ்வொரு உறுப்பின் மூலமும் தானாகவே வெளிப்பட்டு காரியங்கள் செயல்படுகின்றன. இந்த

உறுப்புகளின் கோளாறினால் ஏதாவது ஒரு காரியத்தடை ஏற்பட்டுவிட்டால் உடனே டாக்டரிடம் சென்று உறுப்புகள் சரியான முறையில் இயங்குவதற்கு முயற்சி செய்கிறோமே அல்லாது இந்த உறுப்புகளில் இது உயர்ந்தது ,இது தாழ்ந்தது என்ற எண்ணமோ இன்றி உறுப்புகளில் குறைபாடு வந்த சமயத்தில் அதைத் கவனித்துச் சீர்திருத்துகிறோம். இது உயர்ந்தது. இது தாழ்ந்தது என்ற முறையில் துரிதமாக வோ, தாமதமாகவோ செய்யும் எண்ணமே கிடையாது.ஒரு உறுப்பின்செய்கை மற்றொரு உறுப்பின்மூலம் செய்வது உல கினருக்கு ஆச்சரியமாக இருக்கலாம். ஆனால் அந்தச் செய்கை அதனால் உயர்ந்தது தாழ்ந்தது ஆகிவிடாது.

உதாரணமாக, புல்லாங்குழல் வாசிப்பது வாயினால்தான். ஆனால் சிலர் அதை மூக்கினால் வாசிக்கிறார்கள். அது உலகின ருக்கு ஆச்சரியமாக இருக்கலாம். அதனால் அந்த புல்லாங்குழல் வாத்தியத்திற்கு ஏற்றமும் தாழ்வும் ஒன்றும் கிடையாது. வாயினால் அந்த வாத்தியத்தை வாசிக்கும்பொழுது அதனால் எத்தனை ரசனையும், எத்தனைஸ்வரமும்— எத்தனை இனிமையும் உண்டாகிறதோ அத்தனை மூக்கினால் வாசிக்கும்பொழுது இருக்காது. ஆனால் ஆச்சர்யமாகத் தோன்றும். அதே போல புஷ்பங்கள்இருக்கின்றன.ஒவ்வொருபுஷ்பத்தையும்ஒவ்வொரு முறைப்படி பதியன் போட்டு அந்தச் செடிகளை வைக்கிறோம். அது எல்லாவித முறையிலும் புஷ்பித்து எல்லாக் காரியங் களுக்கும் உபயோகம் ஆகின்றது. ஆனால் தற்காலத்தில் கலர் புஷ்பங்கள்சிலசேர்க்கையின்மூலம் தயாராகின்றன.அவைகள் பார்ப்பதற்கு ஆச்சர்யமாகவும், அழகாகவும் இருந்தாலும்கூட எல்லாக்காரியங்களுக்கும்அவை உபயோகமாவதில்லை.ஆகவே இதே போலத்தான் உலகிலுள்ள ஒவ்வொரு காரியத்தையும் திறம்பட செய்வதற்கென்று சமுதாய அமைப்பு ஏற்பட்டிருக் கிறதே தவிர, பிரிவினைக்காகவோ— சண்டை சச்சரவிற் காகவோ-ஏற்றத்தாழ்வுக்காகவோ ஏற்பாடு செய்யப்பட்டது அல்ல. தற்கால அரசியலும்-ஹிந்து சமுதாயத்தை குறைகூற வேண்டும்என்றவர்களும்-பிறமதத்தினர் போன்ற சிலராலும்

மாத்திரமே, வகுப்பு வாத பிரிவினையை தூண்டிவிட்டுப் பெரிது படுத்துகிறார்களே தவிர, மற்றபடி பொதுவாக ஹிந்துக்களிடையே எந்தவிதமான ஏற்றத் தாழ்வும்- வேறுபாடும் ஏற்படுவதில்லை. மேலும் 3வது கேள்விக்குச் சொன்ன பதிலில் இதனுடைய விளக்கமும் அடங்கி இருக்கிறது.

பதில் 5:

சம்ஸ்கிருதம் என்பது நிர்க்குணமான பரப்பிரும்மம் போல ஒரு சொரூபம். நிர்க்குணமான பரப்பிரும்மத்திற்கு உருவம்-பேர்-இடம்-இவைகள் குறுகிய நிலையில் ஒரு வரம்புக்கு உட்பட்டுக் கிடையாது. எல்லா இடத்திலும் இருக்கும். இங்கும் அங்கும். எல்லாப் பெயரும் உண்டு. இந்தப் பெயரும் உண்டு எக்காலத்திலும் இருக்கும். இக் காலத்திலும் இருக்கும். அதுபோல் சம்ஸ்க்ருதமானது, ஒரு நாள், ஒருவரால் உண்டுபண்ணப்படவில்லை. தயாரிக்கப்படவில்லை. உலகம் தோன்றினது முதல் ஆண்டவன் எவ்விதம் இருந்துகொண்டு வருகிறானோ அதுபோல் சம்ஸ்கிருதமும் இருந்துகொண்டே வருகிறது.

சம்ஸ்கிருதம் என்ற சொல்லுக்கு சுத்திகரிக்கச் செய்வது, சுத்தப்படுத்துவது என்று பொருள். அதாவது எந்த இடத்தில் சம்ஸ்கிருதம் இருக்கிறதோ அந்த இடம் சுத்தமாக இருக்கிறது என்று அர்த்தம். ஆகவே ஒவ்வொரு மனிதனிடமும் சம்ஸ்கிருதம் இருக்கவேண்டியது மிகவும் அவசியம். இதற்கு இனப்பாகுபாடோ, மதப்பாகுபாடோ அவசியமல்ல.சிலருக்கு சம்ஸ்க்ருதம்என்று சொன்னவுடன் வேதத்தின் ஞாபகம்தான் வருகிறது. அந்த வேதத்தைப் படிக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றுகிறது. அப்பொழுதே அந்த வேதத்தை படிக்க வேண்டுமோ வேண்டாமோ என்ற சர்ச்சையும் கூட உண்டாகிறது. ஆகவே அந்த சர்ச்சைக்கு உண்டான வேத பாகத்தை வேண்டுமானால் ஒதுக்கிவிட்டு, எல்லையில்லாமல் இருக்கும் சம்ஸ்கிருத இலக்கியங்களை ஒவ்வொருவரும் படித்துத் தெரிந்து கொள்வோம். சம்ஸ்கிருதத்திற்கென்று தனி எழுத்துக் கிடையாது. யார்யார் எந்த பாஷையில் பேசு

கிறார்களோ. அந்தந்த பாஷைக்கு ஏற்ற எந்த எழுத்து உண்டோ அதன் மூலம் சம்ஸ்கிருதத்தைக் கற்றுக் கொள்ள முடியும். மற்றும் பிற பாஷைகள் கற்றுக் கொள்ள வேண்டுமானால், எழுத்து, பாஷை இரண்டும் கற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் சம்ஸ்க்ருதம் கற்றுக் கொள்வதற்கென்றாலோ, எழுத்து கற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. அது ஒரு சௌகரியம். எல்லா பாஷையிலும் சம்ஸ்கிருதம் கொஞ்சம், கொஞ்சம் கலந்திருப்பதினால், அதைக் கற்றுக் கொள்வதிலும் கடினம் இருக்காது.

மேலும் சாமான்ய பாஷையின் மூலம் உலக வாழ்க்கைக்குத் தேவையுள்ள பொருள்கள் கிடைக்கலாம்; ஆனால் சம்ஸ்க்ருத பாஷை கற்றுக்கொள்வதன் மூலம், உலக வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களும், ஆன்மீக வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களும் கிடைக்கின்றன. சமஸ்கிருத பாஷையைச் சிலர் இறந்த பாஷையென்று கூறுவர். அது சரியல்ல. அது என்றோ ஒரு நாள் பிறந்திருந்தால் இன்று இறந்த பாஷையென்றால் அது பொருந்தும். பிறக்காத ஒரு பாஷையை, உண்டாகாத ஒரு பாஷையை, உண்டாக்கப்படாத ஒரு பாஷையை இறந்த பாஷை என்று சொல்வது சரியல்ல.

ஒரு காலத்தில் சம்ஸ்கிருதம் பேச்சுப் புழக்கத்தில் இருந்தது. அது இன்று பேச்சுப் புழக்கத்தில் இல்லாததால் அப்படி அபிப்ராயப்படுகிறார்கள் என்று கருதலாம். ஆனால் என்றுமே, எக்காலத்திலுமே இரவு பகல் பேசும் மொழியாக சம்ஸ்கிருத பாஷை உபயோகப்பட்டது என்று வரலாறு கிடையாது. பேசுவது அவரவர் கால—தேச—சூழ்நிலைக்கேற்றவாறு உள்ள பாஷைகளில் பேசலாம். ஆத்ம சம்ஸ்காரத்திற்காகவும்—தத்துவ சம்ரக்ஷணைக்காகவும் அன்றும் இன்றும் என்றுமே சம்ஸகிருதம் உபயோகப்பட்டு, ரக்ஷிக்கப்பட்டு, பேசப்பட்டு வந்துகொண்டிருக்கிறது.

ஆண்டவன் எவ்விதம், எக்காலத்திலும் எல்லா இடத்திலும்—எப்பொழுதும் நிறைந்திருக்கிறானோ, அதுபோல் சம்ஸ

கிருதமும் ஏதோ ஒரு வடிவத்திலே இருந்து கொண்டுதான் இருக்கிறது. ஆண்டவனுக்கு அசல் வடிவம் என்று ஒன்று இல்லாவிட்டாலும், எல்லா உருவத்தின் மூலமும் அவன் விளங்குகிறுன். அதுபோல சம்ஸ்கிருதமானது, எல்லா பாஷைகளின் மூலமாகவும் தன்னுடைய பாரதீய கலாச் சாரத்தோடு துளிர்விட்டுக் கொண்டுதான் இருக்கிறது.

பாஷை என்பது பேச்சில் உள்ளது. அதைக் காதால் கேட்பது மூலமே நன்ருக வளரும். எழுதி, படித்து, தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் மொழி, எழுத்து, உருவாகிறது. ஆகவே சம்ஸ்கிருதம் கற்றுக்கொள்ள விருப்பம் உள்ளவர்கள் எழுத்தின் மூலமாகவோ, காதால் கேட்டுத் தெரிந்து கொள்வதின் மூலமாகவோ பாஷா ஞானத்தை பலருக்கு சர்ச்சைக்கிடமான வேதபாகத்தைத் தவிர, கற்றுக் கொள்ளலாம். மேலும் மனச் சந்தோஷத்தை அளிக்கக் கூடியது சம்ஸ்கிருதம் மாத்திரமே என்பதைத் தெளிவுபடுத் திஞல், எல்லோருக்கும் அதைக் கற்றுக்கொள்ள விருப்பம் ஏற்படும்.

பதில் 6:

நமது ஹிந்து மதத்திற்கு ஆதார கிரந்தம் வேதங்கள். இவை ஒரு நாள் ஒருவரால் எழுதப்படாமல் உலகம் தோன் றின காலம் முதல் இருந்துகொண்டு வருகின்றன. இவை எழுத்து வடிவத்தில், புஸ்தக வடிவத்தில், இன்று நமக்குத் தென்பட்டாலும் முன்பெல்லாம் செவி வழியாகக் கேட்டுக் கேட்டே வேத சப்தங்கள் உலகில் பரவிநின்றன. இந்த வேத சப்தங்கள் ஆகாசத்தில் சப்த அலைகள் மூலமாகப் பரவி நிறைந்து நிற்கின்றன. இந்த வேத சப்தங்களை மாதவம்செய்த மஹரிஷிகள், தங்கள் காதுக்கு விசேஷ சக்தி பெற்று, அந்த சக்தியின் மூலம் ஆகாயத்தில் நிறைந்து நிற்கும் சப்தங்களைக் கிரஹித்து — மனத்தில் தியானித்து, நிலைநிறுத்தி அதை சிஷ்யர்களுக்கு உபதேசித்தார்கள். இதை அறியாத சிலர் இன்னின்ன மஹரிஷியால் இன்னின்ன வேதங்கள் இயற்

றப்பட்டன என்று தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். சாதாரணமாக,ரேடியோவில் கீர்த்தனைகள்பாடப்படுகின்றன. இப்பொழுது தியாகராஜ கீர்த்தனை என்று சொல்லிவிட்டு பாடுபவர்களின் பெயரைத்தான் குறிப்பிடுகிறார்கள்.பாட்டை கேட்டவர்களும் இன்று நன்றாகப் பாடினார்கள் என்றுதான் சொல்லுகிறார்களே தவிர, கீர்த்தனை இயற்றியவருடைய பெயரை நினைத்துக்கொள்வதில்லை. பாடியவர் பெயரே நினைவில் நிற்கிறது. கீர்த்தனம் பழமையானது. அதே போலத்தான் பழமையானவேதத்தைக் கண்டுபிடிப்பவர்களின் மூலம் இவர்களால் ஆக்கப்பட்டது என்றே சொல்லிவிடுகிறார்கள்.

மேலும் கடைசியாக மஹரிஷிகளால் கேட்டு வந்த மந்திரங்களே குறிப்பெடுக்கப்பட்டு, தற்போது புஸ்தக ரூபத்தில் வந்திருக்கின்றன. குறிப்பெடுக்கப்படாத பல வேத சப்தங்களும் இருக்கலாம். கேட்கப்படாத பல வேத சப்தங்களும் இருக்கலாம். ஒரே சப்தத்தை பல பேரும் கேட்டிருக்கலாம். ஆகவே சப்தம் நித்யமானது. அழிவில்லாதது. அந்த சப்தங்களை, அழிவில்லாத வேதங்களை ஆதாரமாகக் கொண்டதே நமது ஹிந்து மதம்.

இந்த வேதத்திற்கு விளக்கங்களாகத்தான் அந்த மஹரிஷிகளால் வேதத்தைக் காதால் கேட்டு வேதசப்தங்களைத் தெரிந்து கொண்டார்களோ அதே வேத மந்திரங்களின் அர்த்தங்களை விளக்குவதற்கு அதே மஹரிஷிகளால் அந்த வேதங்களின் அனுபவங்களின் நினைப்புகளாகத்தான் ஸ்மிருதி கிரந்தங்கள் எழுதப்பட்டன. ஸ்மிருதி என்ற சொல்லுக்கே நினைப்பு என்று பொருள். நினைப்பு என்றாலே அது அனுபவத்தை ஒட்டித்தான் வருகிறது. ஆகவே வேதசப்தமானது மஹரிஷிகள் எவ்விதம் அனுபவித்தார்களோ அந்த அனுபவத்தின் நினைவாகவே, ஸ்மிருதியாகவே, ஸ்மிருதிகள் விளங்குகின்றன. ஆகவே வேதங்களின் கருத்துக்களை நம்மால் காலதேசத்திற்கு ஏற்றவாறு எவ்விதம் மாற்றமுடியாதோ அது போலத்தான் அதே வடிவத்தின் நினைவாக—ஸ்மிருதியாக விளக்கமாக உள்ள ஸ்மிருதிகளையும் காலதேசத்திற்கு ஏற்ற

வாறு, மாற்ற முடியாது. வேதங்களிலும் ஸ்மிருதிகளிலுமே கால தேசத்திற்கு வளைந்து—நிமிர்ந்து கொடுக்கக் கூடிய பல வழிகள் சொலலப்பட்டிருக்கின்றன. தற்காலம் வரை காணப் பட்ட மாறுதல் எல்லாம், வேத—ஸ்மிருதிக்கு ஒட்டியவாறே ஏற்பட்டு இருக்குமே தவிர, அதற்கு விரோதமாக மாறுதல் எதுவும் ஏற்பட்டிருக்க முடியாது.

பதில் 7:

பொதுவாக பக்தி என்று நாமஜெபம், கீர்த்தனைகள் ஜபிப் பது, கோவிலுக்குச் செல்வது ஆகியவைகளைக் குறிப்பிடு கிறார்கள். ஆனால் பக்தி என்ற சொல்லானது மனம் பரமாத்ம சிந்தனையை, அனுசந்தானம் செய்வதையே குறிக்கும். அதுவே பரிபூரண பக்தி. அந்த நிலையை அடைவதற்கு சாதன மாக ரூபவழிபாடு—நாமஜெப பக்தி முதலியவைகள் அமை கின்றன. கலியுகத்தில் பக்தி செய்து முக்தி பெறலாம் என்ப தெல்லாம் யுகதர்மத்தின் பெருமையைக் குறிக்கிறதே தவிர வேதாந்தம் முதலிய நூல்களை அப்யசிக்காமலே இருந்து விடலாமென்று கூறி விடவில்லை.

பதில் 8:

ஆன்மீகப் பாதைக்குச் செல்பவர்கள் மாத்திரமல்லாமல், லௌகீக வாழ்க்கையில் இருந்து கொண்டு வாழ்க்கையை நல்ல முறையில் நடத்திச் செல்வதற்கும்கூட ஒவ்வொருமனித னுக்கும்குரு அவசியமாகிறார். அந்த குருவானவர், நம்முடைய தாய் தந்தையர்கள் எவ்விதம் பரம்பரை பரம்பரையாக வந்து கொண்டிருக்கிறார்களோ அதேபோல நமது குடும்பத் திற்கு, குலகுருவாக வந்துகொண்டிருப்பவரையே நாம் குரு வாக அமைத்துக் கொள்ளவேண்டும். ஒரு சமயம் குலகுரு வாக வந்தவர் ஆன்மீகப் பயிற்சியில் அதிக நாட்டம் இல்லா மல் இருந்தாலும், ஆன்மீகப் பயிற்சிக்கு வழிகாட்டியாகப் பெரியோர்களை—ஞானிகளை—மஹா புருஷர்களை—நாம் அண்டலாமே தவிர, அவர்களைக் குலகுருவாக நாம் ஏற்றுக் கொள்ளக் கூடாது. ஆகவே, குருவைக் கண்டுபிடிப்பது கஷ்ட

மல்ல. ஆனால் வழிகாட்டிகளைத் தேர்ந்து எடுப்பதில்தான் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

வழிகாட்டியாக உள்ளவர்கள் ஜனங்களை கவர்வதற்காக கவர்ச்சியான சில வழிமுறைகளைக் கடைப்பிடித்தால், அந்த வழிகாட்டியிடம் நாம் செல்லக்கூடாது. சுயமாக தானே நல்ல அனுபவத்தின் மூலமும், அனுஷ்டானத்தின் மூலமும், இருந்துகொண்டு, பிறருக்கு வழிகாட்டியாக உள்ளவரிடமே நாம் செல்லவேண்டும். எவரைப் பார்த்தவுடன் அவருடைய செய்கையில் மனம் ஆச்சரியப்பட்டு மூழ்காமல், இயற்கையாக அவருடைய நடவடிக்கைகளில் மாத்திரம் மனம் லயித்து விருப்பம் கொள்கிறதோ, அவரை நமது வழிகாட்டியாக ஏற்றுக்கொள்ளலாம். ஆன்மீக வளர்ச்சிக்கு அந்த வழிகாட்டியினுடைய உபதேசத்தையும் வழிமுறைகளையும் அறிந்து கொள்ளலாம். ஆனால் பரிபூரண பலனை அடைவதற்கு நம்முடைய தலைமுறை தலைமுறையாக வரும் குருவின் அருளே மிகச் சிறந்தது.

பளல் 9:

மந்திரங்கள் எல்லாம் அட்சர வடிவமானது; எழுத்து வடிவமானது. மந்திரங்களுக்கு முக்கியமானது உச்சரிப்பும் ஸ்வரமும். இவை மந்திரங்களுக்கு சக்தியைக் கொடுக்கக் கூடியவை. ஆகவே ஒரு மந்திரத்தை உச்சரிப்பவரின் தகுதியைப் பொறுத்தும், உச்சரிக்கவேண்டிய முறைகளினாலுமே அந்த மந்திரத்தின் சக்தியால் பலன் ஏற்படுகிறது. அப்படி இந்த மந்திரங்களைச் சரியான முறையில் உச்சரிப்பதன்மூலம் நாம் புனிதத் தன்மையை அடைய முடியும்.

புனிதத் தன்மை என்பது, உலகில் பல வஸ்துக்களிடமும் இருக்கின்றது. உதாரணமாக, கங்கை புனிதம். இறைவன் புனிதம். ஞானிகள் மஹான்கள் புனிதர்கள். இதுபோன்ற புனித வஸ்துக்கள் அனேகம் இருக்கின்றன. ஆனால் மந்திரம் அப்படியல்ல. புனிதத் தன்மையோடுகூட சக்தியும் வாய்ந்தது.

ஆகவே சக்தியுடன் இருப்பதற்காக மந்திரங்கள் சம்ஸ்கிருத மொழியில் இருக்கவேண்டி இருக்கின்றது.

பதில் 10:

ஆன்மீக வளர்ச்சிக்கு மனச் சுத்தமும், ஏகாக்கிரதையும் மிகவும் அவசியம். இவை வளர்வதற்கு இந்திரியங்களின் கட்டுப்பாடு ஓர் அளவு அவசியம். இந்திரியங்கள் கட்டுப்பட வேண்டுமானால், அதற்கு விஷயங்களின் எண்ணம் வராமல்—ஆசை வராமல்—அவற்றை அனுபவிக்காமல் இருக்கும்படி இந்திரியங்களைச் செய்ய வேண்டும். இதற்கு அனுசரணையாகத்தான்விரதங்கள், உபவாசங்கள் முதலியவைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. இவை ஆன்மீக வளர்ச்சிக்கு நேரிடைச் சாதனங்களாக இல்லாவிட்டாலுங்கூட, பரம்பரை சாதனங்களாக அமைகின்றன. விரதங்கள் உபவாசங்கள் ஒருநாளும் ஆன்மீக வளர்ச்சிக்கு எதிரானவை அல்ல.

பதில் 11:

ஹிந்து மதத்தில் பிறந்ததுமுதல் இறக்கும்வரை, ஒவ்வொரு ஜீவனின் ஆன்மீக வளர்ச்சிக்கு உறுதுணையாகவே ஒவ்வொரு செய்கையும், அதாவது சடங்குகள்—சம்ஸ்காரங்கள்-கர்மகாண்டங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு சடங்கு செய்வதின்மூலம், அந்த ஜீவன் லௌகிக வாழ்விலிருந்து ஆன்மீக வளர்ச்சிக்குச் செல்ல ஒரு சம்ஸ்காரத்தைப் பெறுகிறது. சீர்திருத்தவாதிகள், நாகரீக இகலோக வாழ்க்கையை மாத்திரமே அடிப்படையாகக் கொண்டவர்கள். ஆதலினால் ஆன்மீக வாழ்க்கைக்குச் செல்ல விருப்பம் உள்ளவர்கள் சடங்குகளை ஒன்றுகூட விடாமல் செய்யவேண்டும். அது எவ்விதம் ஆன்மீக வாழ்க்கைக்கு உதவுகிறது என்பதை நல்ல வேத சாஸ்திரம் படித்த அறிஞர்களின்மூலம் நாம் அறிந்துகொள்ள வேண்டும். மக்களும் அறிந்துகொள்ளும்படி செய்யவேண்டும்.

பிறந்தது முதல் இறக்கும் வரையிலுள்ள சம்ஸ்காரங்களுள் அவரவர்களுக்கு ஏற்பட்ட சம்ஸ்காரங்களில் சிறிதளவாவது விடாமல் செய்யவேண்டும். அப்படிச் செய்யும்

போது இது சம்ஸ்காரத்திற்கு ஏற்பட்டதே தவிர வேறு லௌகீக வாழ்வுக்காக ஏற்பட்டதல்லவென்று அறிந்து கொண்டு செய்யவேண்டும். நமது வேத சாஸ்திர நூல்களில் சொல்லப்பட்ட காரியங்களை, கால தேசத்திற்கு ஏற்றவாறு எல்லோராலும் செய்ய முடியாவிட்டாலும் சிலரையாவது ஆங்காங்கு செய்து கொண்டிருக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டும்.

இன்றுள்ள நாகரீக காலத்தில் எத்தனையோ புதுவித மான விஞ்ஞானங்களைக் கண்டுபிடிப்பதற்கு கோடிக்கணக்கில் செலவிடும்போது, நம்முடைய வேத சாஸ்திரங்களில் சொல் லப்பட்ட யக்ஞங்கள்-யாகங்கள்-கர்மாக்கள் முதலியவை களையும் சிலரையாவது செய்யச் செய்வதின்மூலம் நாட்டிற்கு க்ஷேமம் ஏற்படும். விஞ்ஞான வளர்ச்சிக்கும் அது உதவும். பிற்காலத்தில் ஒரு நாள் பலருக்கு இதைச் செய்ய விருப்பம் தோன்றினால் சிறிது பேரையாவது நாம் தயார் செய்து வைத்த பணியாக இது ஆகும்.

ஹிந்து மதத்தினர் பிறந்ததுமுதல் இறக்கும்வரை குறைந்த பக்ஷமாகவாவது கடைப்பிடிக்க வேண்டிய கடமை கள், அக்னி சம்ஸ்காரத்தின் மூலம் காரியங்களைச் செய்வது-சிரார்த்தம் போன்ற காரியங்களைவிடாமல் செய்வது-வீட்டில் அவகாசம் கிடைக்கும் போதெல்லாம் நமது கலாச்சாரப்படி நமது வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்வது - ஆகிய வையே.

பதில் 12:

அத்வைதிகள்-த்வைதிகள்-விசிஷ்டாத்வைதிகள் இவர் கள் எல்லோருடைய இலட்சியமும் ஒன்றுதான் உண்மை யான பரமாத்வை நாம் வாழ்நாளில் அடைந்துவிட வேண்டும் என்ற இலட்சியமே. அதற்கான வழிமுறைகள் மாத்திரமே மாறுபடுகின்றன. தத்துவத்திற்கெல்லாம் மூல புருஷர் வேதவியாஸர். தத்துவத்திற்கெல்லாம் மூல கிரந்தம் வேத—ஸ்மிருதி—புராண-இதிகாசங்கள். ஆகவே

மேற்சொன்ன மூவரும் ஆசாரம், அனுஷ்டானங்கள் மூல மாகத் தத்துவத்தை அடைவதற்குள்ள சாதனங்களில் மாறு பட்டு இருந்தாலும் ஒற்றுமையாய் இருப்பதற்கு நிறைய வழிகள் இருக்கின்றன. மனம் மாத்திரம் தேவை.

பதில் 13:

ஹிந்து மதப் பிரகாரம் ஒவ்வொரு யுகத்திற்கும் ஒவ் வொரு தர்மம் உண்டு. அதை யுகதர்மம் என்று கூறுவார்கள். இப்பொழுது கலியுகம் பிறந்து ஐயாயிரம் வருடங்களுக்கு மேலாகிறது. இன்னமும் நாலு லட்சம் வருடங்களுக்குமேல் பாக்கி இருக்கின்றது. ஆகவே வரும் காலம் யுகதர்மத்தை ஒட்டியே செல்லும்.

பதில் 14:

உலகிலுள்ள எல்லா மக்களையும் ஒன்றுபடுத்துவதற்கு வாழ்க்கைக்கு வேண்டிய வழி முறைகளை சொல்லிக் கொடுப் பதற்கும் கற்றுக்கொள்வதற்கும்-அழைத்துக் கொள்வதற்கும் உள்ள வழிகளைத் திட்டமிட்டு ஆலோசித்து அதன்மூலம் எல்லோரையும் ஒருமுகப்படுத்த முடியும். அதாவது தன் னுடைய வாழ்க்கை முறையை சீர்திருத்திக் கொள்வதற்காக வும்-பொது ஜனங்களுடைய வாழ்க்கையில் சமுதாய வேலை களைச் செய்யத் தன்னை ஈடுபடுத்துவதற்காகவும் ஒன்றுபட முடியும்.

பதில் 15;

மேற்கு நாடுகளில் பல காலமாக பல மதங்கள் இருக்கின் றன. இருந்தபோதிலும், மனித வாழ்க்கையின் தூய்மைக்காக வும்-நேர்மைக்காகவும் பாடுபட எல்லா மதத்தினருக்கும் பங்கு உண்டு. ஆண்டவன் ஒருவன் இருக்கிறான் என்ற நம்பிக் கையிலும், எல்லா மதத்தினருக்கும் பங்கு உண்டு. மனிதாபி மானம் என்ற முறையிலே பரஸ்பரம் எல்லோரும் எல்லா வித முறையிலும் சகாயம் செய்து கொள்ளவும் வழி உண்டு.

ஆலயம் போற்று

ஹிந்து மக்களின் இல்லங்களில் சுவாமி படம் இல்லாத வீடுகள் அநேகமாக இருக்காது. ஒவ்வொரு வீட்டிலும் ஏதாவது ஒரு சுவாமி படம் இருக்கும். வீட்டில் இருப்பவர் கள் குளித்ததும் வீட்டில் உள்ள அனைவரும் சேர்ந்து கூட்டுப் பிரார்த்தனை செய்ய வேண்டும்.

இவ்வாறு வழிபாடு நடத்தும்போது பக்திப்பாடல்கள் பாடிப் போற்றவேண்டும். அருளாளர்கள் பாடிய பாடல் களைத்தான் பாடவேண்டும். சினிமாபாடல் மெட்டில் எழுதிய பாடல்களைப் பிரார்த்தனைப் பாடல்களாகப் பாடுவது சரியல்ல.

அருளாளர் பாடல்களில் பலிதமாக உயிர் எழுத்துக்கள் அமைந்திருக்கும். புதிய பாடல்களில் மெட்டும் ராகமும் நன்றாக இருக்கலாம். அதில் உள்ளம் உருகும் உணர்வை ஏற்படுத்தும் ஆற்றல் இருக்காது.

வீட்டுப் பிரார்த்தனையால் குடும்ப க்ஷேமம் ஏற்படும். தான் தன் குடும்பம் மட்டும் க்ஷேமமாக இருந்தால் போதுமா? சூழலும் சுகமாக இருந்தால்தானே பயமோ, கவலையோ இல்லாமல் வாழ முடியும்.

ஊரின் க்ஷேமத்திற்காகவும் நாட்டின் க்ஷேமத்திற்காக வும் ஆலயங்களில் சென்று பிரார்த்தனை செய்யவேண்டும். ஆலய பிரார்த்தனை தேசபக்திக்கும், சமுதாய மேன்மைக் காகவுமே ஏற்பட்டவை.

ஆண்டவன் சந்நிதியில் ஏழை பணக்காரன் உயர்வு தாழ்வு ஏதும் இல்லை. திருவிழா என்றால் எல்லா ஜனங்களும்

சேர்ந்து ஒத்துழைத்து ஜனசக்தியைத் திரட்டுவதற்காகவே தேரும் திருவிழாவும் ஏற்படுத்தப்பட்டன.

தேர் திருவிழா என்றால் வீடு சுத்தம் செய்து, தெரு சுத்தம் செய்து, தண்ணீர் தெளித்து, மகுட தோரணம்கட்டி, சுகாதார ஏற்பாடுகள் பூராவும் நடத்தப்படுகின்றன.

பொது நன்மைக்குப் பாடுபட மக்களைப் பயிற்றுவிக்கும் பயிற்சிக்கூடமாக ஆலயங்கள் விளங்குகின்றன.

கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்கிறார்கள். ஏன் தெரியுமா? சுயநலம் மிகுந்த அகம்பாவம் உடையவர்கள் வாழும் இடமாக அந்த ஊர் அமைந்துவிடும். ஆலயமும் தெய்வ பக்தியும் இருக்குமிடத்தில் அக்கிரமம் ஏற்படாது. மனிதனை மனிதன் மதிப்பான்.

அந்தக் காலத்தில் கோயிலை மையமாக வைத்தே வீடுகள் அமைத்தார்கள். இப்பொழுதெல்லாம் வீடு கட்டிய பிறகு கோயிலை அமைத்துக் கொள்கின்றோம்.

கோயிலில் உயர்ந்த ராஜ கோபுரம் ஏன் அமைத்தார்கள் தெரியுமா! ராமனை நாம் பார்க்காவிட்டாலும் ராமன் நம்மைப் பார்த்துக்கொண்டே இருக்கிறான் என்று ஒரு வாசகம் இருக்கிறது.

நாம் கோயிலைப் பார்த்தாலும் பார்க்காவிட்டாலும் கோபுரம் நம்மைப் பார்த்துக் கொண்டேயிருக்கிறது என்பதை மனத்தில் வைக்கவேண்டும். அதனால்தான் கோபுர தரிசனம் கோடி புண்ணியம், கோபுர தரிசனம் பாபவிமோசனம் என்ற வாக்கியங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

கோயில்களில் தட்டு இல்லாமல் பூஜை நடப்பதற்காக மன்னர்களும் செல்வந்தர்களும் மான்யங்கள் வழங்கினார்கள். ஆடுகளும் மாடுகளும் கோயிலுக்கு காணிக்கையாக விடப்பட்

டன. ஆடு மாடுகளை வெட்டுவதற்காக அல்ல. கால்நடைகள் விருத்தியேற்பட்டு கோயிலின் வருவாய் பெருகும் என்றுதான் இந்த ஏற்பாட்டை பெரியவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

மக்கள் நலனில், பண்பாட்டில், ஒற்றுமையில், ஆலயம் பிரதான பங்கு வகித்திருந்ததால் அன்றைய ஆலய பூஜை தட்டின்றி நடைபெற அரசு கஜானாவில் இருந்து பணம் உதவி செய்தார்கள்.

அன்று மக்களிடம் தெய்வ பக்தி அதிகம் இருந்ததால் குற்றம் குறைகள் குறைந்திருந்தன. இன்று ஆலயங்களை அலட்சியப்படுத்திய காரணத்தால் சிறைக் கூடங்களும் கோர்ட்களும், போலீஸ் ஸ்டேஷன்களும் அதிகம் ஏற்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டு வருகிறது.

மண்ணை நோண்டாதே என்றொரு வாசகம் உள்ளது ஆலயத்துக்குச் சேர்ந்த நிலத்தில் வரப்பைக்கூட வெட்டக் கூடாது. ஆலயத்திற்கு நிலம் மான்யமாக விட்டவர்கள் இந்த தர்மம், சூரியன் சந்திரன் உள்ளவரை நடைபெற வேண்டும்; எவராவது இதற்கு இடர் செய்வார்களானால் கங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற பாவத்திற்கு உள்ளாவார்கள் என்று சாபம் கொடுத்து கோயில் சுவர்களில் கல்வெட்டு வெட்டி வைத்திருப்பார்கள்.

சிவன் கோயிலில் பிரசாதமாக திருநீறு கொடுத்தால்கூட நெற்றியில் தரித்துக்கொண்டது போக எஞ்சியதை அருகே இருக்கும் கிண்ணத்தில் போட்டுவிடுவார்கள். சிவன் சொத்து குல நாசம் என்ற மொழியையும் சொல்லியிருக்கிறார்கள்.

சிவன் கோயில் பிரசாதத்தையே அதிகம் உபயோகிக்கக் கூடாது என்றால் சிவன் கோயில் நிலத்தை தனதாக்கலாமா? குத்தகைக்கு ஏற்றுக்கொண்டு குத்தகையை கொடுக்காமல் இருக்கலாமா?

பெருமாள் கோயில் பிரசாதங்களை உண்ணலாம். பெருமாள் சொத்தையும் மோசடி செய்து அனுபவிக்கக் கூடாது. பெருமாள் சொத்து பெரு நாசத்தை ஏற்படுத்தி விடும் என்பார்கள்.

பொதுவாக ஆலய சொத்து பொது சொத்து. ஆண்டாண்டு காலம் இருக்கவேண்டிய சொத்து. அதனை அபகரிப்போன், அபகரிக்க நினைப்போன் ஆகியோர் கிராம பொது உடைமைக்கு விரோதிகள்.

ஆலய சொத்தைப் பாதுகாக்க ஒவ்வொருவரும் முன்வர வேண்டும். நமக்கேன் என்று இருப்பது கூடாது ஆலயங்களில் விளக்கு எரிகிறதா பூஜை நடைபெறுகிறதா என்று கவனிக்க வேண்டும்.

கோயில் பூஜை நடைபெறாமல் போனால் நாட்டில் பஞ்சமும் பசிப்பிணியும் பரவும். வானம் வழங்காது; கிணற்றில் நீர் ஊறாது; நோய் மலிந்து நிற்கும்.

தினசரி ஆலய பிரார்த்தனைக்கு ஒவ்வொருவரும் செல்ல வேண்டும். தினசரி போக முடியாதவர்கள் வாரத்தில் ஒரு தினமேனும் ஆலயத்திற்குச் சென்று வணங்கவேண்டும்.

தமிழகத்தின் கோயில்களில் உள்ள கோபுரங்களைக்கண்டு அயல் நாட்டாரே வியக்கின்றார்கள். இதனை பூமியில் கட்டி பிறகு நிமிர்த்தி வைத்தார்களோ என்று வியக்கிறார்கள்.

நான் இந்தியா பூராவும் சுற்றிப் பார்த்திருக்கிறேன். உயர்ந்த கோபுரங்கள், அதில் சிறந்த சிற்பங்கள் உள்ளவை தமிழ்நாட்டில் உள்ள கோயில் கோபுரங்களே ஆகும்.

நாம் பார்க்காவிட்டாலும் நம்மைப் பார்க்க கோபுரங்கள் உயர்ந்து நிற்கின்றன. கோபுரங்களை தரிசனம் செய்து நாம் உயர வேண்டாமா?

ஆலயம், மடம் இவைகள் நாட்டின் நன்மதிப்புக்கும் மக்களின் நல்வாழ்வுக்கும் சிறந்த சிந்தனையாளர்களால் தோற்றுவிக்கப்பட்டவை.

மடத்திற்கு வருமானம் போதாவிட்டால், கிராமம் கிராமமாக முகாம் போட நான் புறப்பட முடியும். ஆங்காங்கு மக்களுக்கு நீதியும் தர்மமும் போதிக்க முடியும். மக்களுக்காக பூஜை பிரார்த்தனை செய்ய முடியும். பக்தர்கள் பூஜைக்கு வேண்டியவற்றை வழங்கி எங்கள் சேவை குறைவு படாமல் செய்துவிடுவார்கள்.

மடங்களைப்போல ஆலயங்கள் ஊர் ஊராக முகாம் போட முடியுமா? நகரத்தான் முடியுமா? மடம் வந்து பெற்றுக் கொள்ளும்; ஆலயங்கள் இருக்கும் இடங்களுக்கு மக்கள் சென்றுதான் வழங்கவேண்டும்.

உள்ளூரில் இருக்கும் கோயிலில் பூஜை இல்லாமல் விளக்கு எரியாமல் இருக்கும்போது 50 ரூபாய் டூரிஸ்ட் பஸ் டிக்கட் வாங்கி க்ஷேத்திராடனம் செய்தால் நிச்சயம் பயன் கிடைக்காது. பெற்ற தாய் வயிற்றுப் பசியால் அழும்போது, மகன் கும்பகோணத்தில் கோதானம் செய்தானும் என்று ஒரு பழமொழி இருக்கிறது. அதுபோல உள்ளூர் கோயில்களை பராமரிக்காமல் வெளியூர் கோவில்களை தரிசனம் செய்து புண்ணியம் சம்பாதிக்கலாம் என்று கருதாதீர்கள்.

அந்தந்த ஊரில் உள்ளவர்கள் அந்தந்தக் கோவில்களை பாதுகாக்க முன்வரவேண்டும். சேலத்திற்கு முகாம் இடுவதற்கு முன்பு, மூவர் தேவாரம் பாடிய திருக்கோவில்கள், ஆழ்வாராதிகள் மங்களாசாசனம் செய்த திருக்கோயில்கள் இங்கு இருக்கின்றனவா என்று விசாரித்தேன். இல்லையென்று சொன்னார்கள். ஆயினும் மாரியம்மன் கோயில் விவகாரம் தமிழ்நாடு பூராவும் செய்தி பரவியிருக்கிறது.

விக்கிரக வழிபாடு

பரம்பொருள் எங்கும் நிறைந்ததாக யாவும் அறிந்ததாக எல்லாம் வல்லதாக விளங்குகின்றது. அதனை அப்படியே அனுபவிக்க சாதாரண மனிதர்களால் ஆகாது. எனவே பல்வேறு மூர்த்தங்களாக அறிந்து அனுபவித்தவர்கள் நமக்கு உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.

உதாரணமாக மின்சாரம் இருக்கிறது. எதையும்செய்ய வல்ல ஆற்றல் அதற்கு இருக்கிறது. விளக்கில் ஒளியைத் தருகிறது. ஒலிபெருக்கியில் ஒலியை நெடுந் தொலைவு கொண்டு செல்லும் ஆற்றல் உடையதாகிறது. விசிறிகளில் காற்றைத் தருகிறது. பெரிய இயந்திரம் முதல் சிறிய இயந்திரம் வரை செயல்பட வைக்கிறது.

மின்சாரத்தைப் போல பரம் பொருளும், அதனால் செயல்படும் கருவிகளைப்போல விக்கிரகங்களும். நமது பெரியோர்கள் கண்டு அறிந்து தேர்ந்து அனுபவித்து, நமக்கு அறிமுகப்படுத்தி வைத்திருக்கின்றார்கள்.

வினைகள் தீரவேண்டுமானால், செய்கின்ற காரியங்கள் செம்மையாக நடைபெறவேண்டுமானால் விநாயக மூர்த்தத்தை வணங்கு.

அழகும் வீரமும் ஞானமும் வேண்டுமானால் முருகப் பெருமானை வணங்கு.

இவ்வுலகத்திலே எல்லாவிதமான இன்பங்களும் அடைய உன் மனம் விரும்பினால் திருமாலை வணங்கு.

எல்லா சக்திகளையும் பெற்று தீரனாக தைரியவானாக விளங்க வேண்டுமானால் அம்பிகையை வணங்கு.

கல்வியைப் பெற விரும்புகிறாயா? சரஸ்வதியைப் போற்றி வணங்கு.

செல்வத்தை விரும்பி யாசிக்கின்றாயா? திருமகளை வணங்கிப் போற்று.

முக்தியை விரும்பி நிற்கின்றாயா? சிவபெருமானைத் துதித்து அருள்பெறு.

இவ்வாறு நமது பக்திக்கு வழியமைத்து இஷ்ட சித்தியைப் பூர்த்தி செய்துகொள்ள மூர்த்தங்களும் ஆலயங் களும் அமைத்திருக்கிறார்கள்.

அரசாங்கம் ஒன்றேயாயினும் செயல்பட பல்வேறு டிபார்ட்மென்ட் இருபபதுபோல் நமக்கு அனுகிரகம் செய்ய வல்ல மூர்த்தங்களை வழிகாட்டியிருக்கிறார்கள்.

பெரியவர்கள் அமைத்துக்காட்டிய ஆலய மூர்த்தங்களை, அவர்கள் ஆகம விதிகளின்படி அமைத்த விக்கிரகங்களை சாஸ்தி. ங்களை அனுசரித்து வழிபட்டால்தான் பலன் கிடைக்கும்.

ஆலயம் நமது உயிருக்கு உயிர். ஆலயம் காப்போம் என்று சொல்லும்போது, நமது பண்பாடும், கலாச்சாரமும், வகுப்பு ஒற்றுமையும், தேசநலனும், கட்டுப்பாடும், மொழி வளர்ச்சியும், பிறருக்கு உதவும் மேலான குணங்களும், நம்மி டையே வளரும் அனைவரும் ஆலய நலனில் அக்கறைகொண்டு மேலான நலன்களை அடைய பிரார்த்திக்கின்றேன்.

உவமை மொழிகள்

சமுத்ரமானது பார்ப்பதற்கு மிக அழகாக இருக்கும். ஆனால் அதே சமயத்தில் அதன் ஆழத்தையும் விஸ்தீரணத்தையும் அலைகளையும் பார்த்தால் பயமாக இருக்கும். அதுபோல் சம்சாரம் என்னும் வாழ்க்கையைப் பார்க்கும்போது பொதுவாக சந்தோஷமாக இருக்கும். ஆனால் வாழ்க்கையில் ஏற்படக் கூடிய சுக துக்கங்களைப் பார்க்கும்போது பயமாக இருக்கும்.

சமுத்ரமானது பெரிய பெரிய அலைகளோடு இருக்கும். அதேபோல சம்சாரம் என்னும் வாழ்க்கையில் பெரிய பெரிய துக்கங்கள் ஏற்படும்.

பெரிய பெரிய அலைகள் கரையை அடைந்தவுடன் மடிந்து விழுந்துவிடும். அதைக் கண்ணுறும் நமக்கு சந்தோஷமாக இருக்கும். அதே போல் சம்சாரம் என்னும் வாழ்க்கையில் ஏற்படும் பெரிய பெரிய துன்பங்களும் இறைவனுடைய அருளால் நிவர்த்தியாகிவிடும். அப்பொழுது மனச் சாந்தி, சந்தோஷம் கிட்டும்.

சிறிய படகின் மூலமாகக்கூட சமுத்திரத்தில் பல பணிகளைச் செய்துகொண்டு கரைக்கு வந்துவிடலாம். பெரியபடகு கூட சில சமயம் சமுத்திரத்திலேயே மூழ்கிவிடும். அதுபோல சிறிய சிறிய முயற்சிகள், சாதனைகள் மூலமாக பல பலன்களைப் பெற்று, பெரிய பணிகளைச் சாதித்துக்கொண்டு இறைவனை அடையலாம். பெரிய முயற்சிகள் செய்து பெரிய சாதனைகளைச் சாதித்தும்கூட பலர் சம்சார வாழ்க்கையிலேயே மூழ்கி விடுவார்கள்.

சமுத்திரத்திலே நல்ல முத்துக்களும் உண்டு. திமிங்கிலம் போன்ற பெரிய உயிரினங்களும் இருக்கின்றன. அதுபோல்

சம்சாரம் என்னும் வாழ்க்கையில் பல நல்ல விஷயங்களும் அனுபவிக்க நேரிடும். பல பெரிய துன்பகரமான நிகழ்ச்சிகளும் வரக் கூடும்.

சமுத்திரத்தினுடைய ஜலமேதான் பெரிய அலைகளாக வந்து வந்து போகிறது. அதுபோல் சம்சார வாழ்க்கையே தான் பலவிதமான இன்ப துன்பங்களாக இருக்கிறது.

சமுத்திர ஜலத்தை எங்கு எடுத்தாலும் அது உப்பாகத் தான் இருக்கும். அதுபோல் வாழ்க்கையென்பதும் துன்பகர மாகத்தான் இருக்கும்.

சமுத்திரத்தின் அலைகள் வந்து வந்து போகும். ஆனால் நிலைத்து நிற்காது. அதுபோல சம்சார வாழ்க்கையானது, நித்யமானதல்ல—அழியக் கூடியது; மாறக் கூடியது.

சமுத்திரத்திற்கு ஆரம்ப இடம் என்று ஒன்று கிடையாது. அதுபோல் சம்சாரமாகிற வாழ்க்கைக்கு ஆரம்பம் என்பதும் கிடையாது.

சமுத்திரத்திற்கு முடிவும் கிடையாது. ஆனால் அலைகள் அடங்குவதற்குகரைகள் உண்டு. அதுபோல சம்சாரம் என்ற வாழ்க்கையிலும் இன்பதுன்பங்கள் அடங்குவதற்கு இறைவன் அருள் கரையாக ஆகிறது.

சமுத்திரத்தில் கிடைக்கும் கிளிஞ்சலைப் பார்த்து வெள்ளி யாக நினைக்கிறோம். அதுபோல் சம்சாரம் என்கிற வாழ்க்கை யில் கிடைக்கக் கூடியவைகளை எல்லாம் நிஜமாக நினைக் கிறோம்.

சமுத்திரமானது பௌர்ணமியில் பெரிய அலைகளுடன் பொங்கும். அதுபோல் சம்சாரம் என்கிற வாழ்க்கையில் இருப்பவனும் பெரியோர்களை, ஞானிகளை, வாழ்க்கையில் பரிபூர்ணத்தைப் பெற்றவனைப் பார்க்கும்பொழுது ஆனந்த மாக சந்தோஷமாக இருப்பான்.

சமுத்திர ஸ்நானமானது பாபத்தைப் போக்கி புண்யத்தை அளிக்கும். அதுபோல சம்சாரம்என்கிற வாழ்க்கையில் பல நல்ல காரியம் செய்து பாபத்தைப் போக்கிக்கொண்டு புண்யத்தைப் பெற முடியும்.

சமுத்திரத்தை ஆஞ்சநேயரானவர் பகவத் அனுக்ரஹத்தாலே பகவான் நாமாவைச் சொல்லிக்கொண்டே சுலபமாகத் தாண்டினார். அதுபோல் சம்சாரம் என்னும் வாழ்க்கையில் உள்ள நாம், நல்ல குருவை அடைந்து அவர் உபதேசம் பெற்று சம்சாரம் என்னும் சாகரத்தை சுலபமாகத் தாண்ட முடியும்.

சமுத்திரத்தில் பல நதிகள் வந்து சேர்கின்றன. அதுபோல பல வழிபாட்டு முறைகளும் சமுத்திரம் போன்ற இறைவனையே சேருகின்றன.

நதியினுடைய ஜலம் எவ்வளவு வந்தாலும் அவ்வளவையும் சமுத்திரம் ஏற்றுக்கொள்ளும். அதுபோல் வழிபாட்டு முறையில் எவ்வளவு பேர் வழிபட்டு வந்தாலும் எவ்வளவு புண்ய பாவங்களோடு சேர்ந்து இருந்தாலும் அவ்வளவையும் இறைவன் ஏற்றுக் கொண்டுவிடுகிறான்.

நதிகளின் ஜலங்களெல்லாம் சமுத்திரத்தை அடைவதற்கு முன்பாக பலவிதமான ருசிகளுடன் இருக்கும். சமுத்திரத்தை அடைந்தவுடன் ஒரே உப்பாகத்தான் இருக்கும். அதுபோல வழிபாட்டு முறைகள் பலவாக இருந்தாலும் அந்த வழிபடும் முறையில் பலவித அனுபவங்கள் இருந்தாலும் கடைசியாக இறைவனுடைய நிலையை அடைந்தவர்களுக்கு ஒரே ஆனந்தம்தான் இருக்கும்.

ஒரு சிலர் சமுத்திரத்தை வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பார்களே தவிர இறங்கி ஸ்நானம் செய்து பாபத்தைப் போக்கிக்கொண்டு புண்யத்தைப் பெறமாட்டார்கள். அது

போல சம்சார வாழ்க்கையிலுள்ள சிலர் வாழ்க்கையிலுள்ள இன்ப துன்பங்களை அனுபவித்துக்கொண்டு இருப்பார்களே தவிர வாழ்க்கையில் இருக்கக் கூடிய இன்ப துன்பங்களை போக்கடித்துக்கொள்வதற்கு வேண்டிய நல்ல காரியங்களைச் செய்யாமல் இறைவன் அருளைப் பெறுமலேயே இருந்து விடுவார்கள்.

சமுத்திரத்தின் மத்தியில் பலவிதமான தீவுகள் இருக்கும். அங்கேயும் மக்கள் வசித்துக்கொண்டிருப்பார்கள். ஆனால் புதுமனிதர்கள் போகவும் முடியாது. செல்லவும் மாட்டார்கள். ஏதோ ஒரு சிலர் மட்டும் பிரயாசைப்பட்டு தைரியமாகச் சென்று தீவுகளையும் தீவுகளில் வசிக்கும் மனிதர்களையும் பார்த்து களிப்பார்கள். அதுபோல இந்த உலகத்தில் சொர்க்க லோகம் போன்ற பல விதமான லோகங்கள் இருக்கின்றன. அந்த சொர்க்க லோகம் போன்றவைகளை ஒரு சிலர் சிரமப்பட்டு வேள்விகள் உபாசனை முதலியவைகளைச் செய்து அந்த லோகங்களுக்குச் சென்று அங்கு உள்ளதைக் கண்டு களிக்கிறார்கள்.

எங்கும் பரந்து இருக்கும் சமுத்திர ஜலமே அலை அலைகளாகத் தோன்றி பிறகு சமுத்திர ஜலத்தோடு ஐக்கியமாகி விடுகின்றது. அதுபோல அகண்ட பரிபூர்ண சச்சிதானந்த பரமாத்ம சொரூபத்திலிருந்து ஜீவர்கள் தோன்றி, கடைசியில் பரமாத்மாவோடு ஐக்கியமாகிவிடுகிறார்கள்.

பல திசைகளிலிருந்தும் பல நதிகள் பல பெயர்களுடன் சமுத்திரத்தை அடைந்துவருகின்றன. அதுபோல பல வழிபாட்டு முறைகளும் பல பெயர்களுடன் இறைவனை வந்து அடைகின்றன.

கப்பலில் பலவிதமான பொருள்களை ஏற்றிக்கொண்டு ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குச் சென்று கொடுத்து அங்கிருந்து இந்த நாட்டிற்குவேண்டிய பொருள்களை ஏற்றிக் கொண்டு வருவார்கள். அதுபோலவே வேள்விகள் முதலியவைகளை

நாம் செய்து சொர்க்க லோகங்களிலுள்ள தேவதைகளுக்கு வேண்டிய ஆகாரங்களை வேள்விகள் மூலமாக அனுப்பி அவர்களிடமிருந்து மழை வெப்பம் போன்ற நமக்குத் தேவை யானவைகளைப் பெறுகிறோம்.

இங்குள்ள ஜலமெல்லாம்தான் சூரியன் மூலமாக இழுக்கப்பட்டு மேகமாகப் போய் பிறகு மழையாக இங்கே நமக்குக் கிடைக்கிறது. அதுபோல இங்கே கிடைக்கக்கூடிய பொருள்களையும் அபிஷேகம் முதலியன மூலமாக இறைவ னுக்கு அர்ப்பணம் செய்து, அந்த இறைவன்அருளால் நமக்குத் தேவையாயுள்ள எல்லாப்பொருள்களையும் நாம்பெறுகிறோம்.

மழை பெய்வதை நம்மால் நிறுத்த முடியாது. ஆனால் ரெயின் கோட், குடை உதவியால் அந்த மழைத் தண்ணீர் நம் மீது படாமல் தடுத்துக் கொள்ளமுடியும். அதுபோல நம் வாழ்க்கையில் வரக்கூடிய இன்ப துன்பங்களை நம்மால் நிறுத்த முடியாது. ஆனால் அவைகள் நம்மை அதிகம் துன்புறுத்தாமல் இருப்பதற்கு நல்ல காரியம் செய்து இறைவன் அருளைப் பெற்றாலே முடியும்.

மழையானது மலை மேலே விழுந்து உருண்டு ஓடி, அருவி களாய் கீழே வந்து நதிகளாக வளர்ந்து வாய்க்காலின்மூலமாக விவசாயத்திற்கு உபயோகமாகின்றது. அதுபோல இறைவ னுடைய அருளும், அவதாரங்களாகக் கீழே இறங்கி, அந்த அவதார சொரூபமும், அந்த அவதார சொரூபத்தின் அருளைப் பெற்றவர்களுமாக வந்து சாமான்யமான பொது ஜனங்கள் இறைவன் அருளை அனுபவிப்பதற்கு அருள் புரிகிறார்கள்.

மழையானது மேலே பெரிதாகப் பொழிந்து பலவகை யான நதிகளாகச் சென்று கடைசியில் கொஞ்சம் ஜலம்தான் சமுத்திரத்தை அடைகின்றது. அதுபோல் மனத்தில் பெரிய எண்ணங்கள் எல்லாம் எழும்பி அவைகளெல்லாம் செயல் பட்டு பலன் அடையும் பொழுது சிறிதாகவே இருக்கிறது.

சிறிய நெருப்புப் பொறி பெரிய தீயாக ஆகி வீடுகளையெல்லாம் எரிக்கச் செய்கிறது. அதுபோல சிறிய சங்கல்பமும் நல்ல சிந்தனையும் வளர்ந்து பெரிதாக ஆகி மாபெரும் பாபத்தையும் எரித்து மோக்ஷத்தையும் அளிக்கிறது.

நெருப்பைக் கையால் தொட்டால் சுட்டுவிடும். அதே நெருப்பில் சாதம் போன்றவைகளைச் சமைத்தால் அது நன்ருக பக்குவம் ஆகி அமுத உணவாக ஆகிறது. அதுபோல் இறைவனை நாம் நேராக காணமுற்பட்டால், சில துன்பங்கள் வருகின்றன. ஆனுல் குருவின் மூலமாக உபதேசம் பெற்று அந்த முறைகளோடு வழிபட்டால் ஆனந்தம் கிட்டுகிறது.

நெருப்பில் எவ்வளவு எண்ணெயும், விறகும் போட்டாலும் அது மேன்மேலும் எரியுமே தவிர அணையாது. மேலே தண்ணீரைக் கொட்டினுல்தான் அந்த நெருப்பு அணையும். அதுபோல் மனத்திலே மனச்சாந்தி ஏற்படாமலும் மேலும் காமம் குரோதம் போன்ற சிந்தனைகளும் காரியங்களும் செய்து கொண்டேயிருந்தால் மனக்கவலை வளருமே தவிர குறையாது. இறைவனை பக்தி சம்பந்தமான சிந்தனைகளைச் செய்து தொழ மனச் சாந்தி—அமைதி கிட்டும்.

நெருப்பைத் தண்ணீரால் அணைத்தும்கூட சிறிது நேரம் வரை சுடும். புகையும் இருக்கும். அதுபோல இறைவன் அருளைப் பெறுவதற்கு சாதனை செய்பவர்களிடம்கூட சோதனையும், துன்பமும் சற்றுகாலம் இருக்கத்தான் செய்யும்.

பெரும் நெருப்பு பிடித்துக்கொண்டபொழுது அதன் ஜ்வாலையானது எவ்விதம் ஜ்வலிக்கிறதோ அதுபோல் இறைவன் அருள் பெற்றவர்களுடைய முகமானது நன்ருக ஜோதியாகப் பிரகாசிக்கும். ஆயிரம் சூரியனும் ஆயிரம் சந்திரனும் ஏக காலத்தில் வந்தால் எவ்வளவு ஒளியும் எவ்வளவு குளிர்ச்சியும் இருக்குமோ அவ்வளவு ஒளியும் குளிர்ச்சியும் இறைவனைக் கண்டவர்களுடைய முகத்தில் தெரியும்.

இறைவன் இல்லையென்று யாராலும் சொல்ல முடியாது. எங்கும் நிறைந்துள்ள இறைவன் சொல்பவனுடைய உள்ளத்திலும் சொல்லிலும் நிறைந்து நிற்கிறன்.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்த்தால் போதும் என்பார்கள். அதுபோல ஒரு மனிதன் நல்லவனு தீயவனு என்பதற்கு அவனுடைய சிந்தனையும் நடை உடையும் கண்டு தெரிந்துகொள்ள முடியும்.

நாயின் வாலை எத்தனை நீட்டி வைத்தாலும் அது மறுபடியும் மறுபடியும் வளைந்து போய்விடும். அதுபோல துஷ்டனை எவ்வளவு திருத்தினுலும் அவனுடைய மனம் தீய வழிகளிலேயே திரும்பத் திரும்பச் செல்லும்.

யானை எவ்வளவோ பெரிய பிராணி. சாமான்யமான ஒரு மனிதனுக்கு அது கட்டுப்பட்டு நடக்கிறது. ஆனல் உணவை பாகன் அளிக்கும்போது உபசாரம் செய்து நல்ல வார்த்தை சொல்லித்தான் உணவை அளிக்க வேண்டி வரும். கம்பீரமாக இருந்துகொண்டுதான் யானை உணவை உட்கொள்ளும். அதுபோல சான்ருேர்—பெரியோர்கள் சாமான்ய மனிதர்களிடம் பழகி வந்தாலும் ஒரு சிறிய காரியத்திற்குக் கூட மானத்தை இழந்து எந்த ஒரு காரியத்தையும் செய்ய மாட்டார்கள்.

சிம்மம், புலி, யானை போன்ற பிராணிகளுக்குள்ள பெரும் பலம் மனிதனுக்கு இல்லை. ஆனுலும் பெரிய பிராணியையும் அடக்கும் சக்தி மனிதனுக்கு இருக்கிறது. எவ்வளவோ பெரிய பெரிய பிராணியை அடக்கும் சக்தி மனிதனுக்கு இருந்தபோதிலும் தன்னுடைய சூட்சமமான மனசையும், உறுப்புக்களையும் அடக்க முடிவதில்லை.

ஒவ்வொரு பிராணியும் ஒவ்வொரு செய்கையால் இறந்து போகிறது. உதாரணமாக மீன் தூண்டிலிலுள்ள ஆகாரத்தின்

மூலமாக இறந்துவிடுகிறது. வண்டு தாமரைப் பூவிலுள்ள தேனை அருந்தப் போய் அந்தப் புஷ்பம் மூடிக்கொள்ளும் போது வண்டு இறந்துவிடுகிறது. யானை பெண் யானையின் தீண்டுதலால்—ஸ்பரிசத்தால் பந்தப்படுகிறது. மானானது வேணுகானத்தின் மூலமாக பந்தப்படுகிறது. விட்டில் பூச்சி தீப ஒளி அழகைக் கண்டு அதிலேயே வீழ்ந்து இறந்துவிடுகிறது. தவளை தன் ஒலியின் மூலமாய் பாம்புக்கு இரையாகிறது. இது போல ஒவ்வொரு பிராணியும் ஒவ்வொரு செய்கையினால் துன்பப்படுகிறது; பந்தப்படுகிறது; மரணமடைகிறது. மனிதனுக்கு இத்தனை உறுப்புக்களும் இத்தனை செய்கைகளும் ஒரே சமயத்தில் இருப்பதினால் அவன் துன்பப்படாமல், பந்தப் படாமல், மரணமடையாமல் இருந்தால் ஆச்சரியமே தவிர, துன்பப்பட்டு—பந்தப்பட்டு—மரணமடைவதில் எவ்வித ஆச்சரியமுமில்லை.

மனிதனுடைய உடம்பிற்குள்ள ஒன்பது துவாரங்கள், ஓட்டைகள் எப்பொழுதும் திறந்தே இருக்கின்றன. இந்த ஒன்பது ஓட்டைகளில் ஒன்றின் மூலமாக சாகும்போது உயிரானது உடலை விட்டு வெளியே செல்லும். அதாவது கண் இரண்டு, காது இரண்டு, மூக்கு இரண்டு, வாய் ஒன்று மல மூத்திரத் துவாரங்கள் இரண்டு ஆக ஒன்பது. ஆகவே, மனிதன் இத்தனை ஓட்டைகளோடு இருந்து உயிர் வாழ்வது ஆச்சரியமே தவிர மனிதன் இறப்பது ஆச்சரியமல்ல.

மிளகாய்க்கு காரம் இயற்கை. சர்க்கரைக்கு இனிப்பு இயற்கை. புளிக்குப் புளிப்பு இயற்கை. உப்புக்கு உவர்ப்பு இயற்கை. பாகற்காய்க்கு கசப்பு இயற்கை. இதுபோல மனிதனுடைய வாழ்க்கையிலே கோபம்—தாபம் சந்தோஷம் எல்லாம் இயற்கை. ஆனால் இயற்கையாயுள்ள குணங்களை மாற்றுதற்கு ஒன்றோடொன்று சேரும்போது மாறுதல் கிடைக்கும். உப்பு, புளி, மிளகாய், பாகற்காய் எல்லாவற்றையும் சேர்த்து ஒரு ஆகாரமாக ஆக்கும்போது அத்தனை உறைப்பு, கசப்பு போன்றவைகள் தனித் தனியாத் தெரியாது. சமமான

இனிப்பாக இருக்கும். அதுபோல் சத்வம், ரஜஸ், தமஸ் என்று சொல்லக்கூடிய குணங்கள் தனித் தனியாக மனித வாழ்க்கையில் ஒவ்வொன்றும் மேல் ஓங்கி நிற்கையில் கோப தாபங்கள் முதலியவைகள் நிற்கின்றன. ஆனால் எல்லாவற்றை யும் அடக்கி ஒருமுகப்படுத்தி மனம் ஒருநிலைப் படும்போது எல்லாக் குணங்களும் செயல்களும் இருந்தாலும் மனித வாழ்க்கையும் இறைவன் அருளால் இன்பமாக இருக்கும்.

விளையாடும் பந்தைச் சுவரில் அடித்தால் அந்தப் பந்து சுவரில் பட்டுத் திரும்பி வரும். அதுபோல பலன் எதிர் பார்த்து மனிதன் ஒரு காரியம் செய்தால் பலன் கிட்டும். திரும்பவும் திரும்பவும் காரியம் செய்யத் தூண்டும்.

பந்தை பூமியில் அடித்தால் கீழே பூமியில் பட்டு மேலே எழும்பும். அதுபோல் நல்லோர்கள் அறிவாளிகள் அறியாமை யால் சிறு தவறு செய்தாலும் சமாளித்துக்கொண்டு பிறகு மேலே எழுந்து விடுவார்கள்.

மண்ணினால் பந்துபோல் செய்து அதை பூமியில் அடித் தால் அது எழும்பாது. அதுபோல் அறியாமையினால் வாழ்ப வர்கள் தவறு செய்தால் அவர்கள் மேலே எழுந்து வரமுடி யாமல் கஷ்டப்படுபவர்கள்.

சேற்றிலே மாட்டிக் கொண்டவர்கள் சேற்றிலே மாட் டாது கரையில் உள்ளவர்கள் மூலமாகத்தான் அந்தச் சேற்றி லிருந்து வெளிக்கிளம்ப முடியும். அது போல் வாழ்க்கையில் கஷ்டப்படுவார்கள், துன்பப்படுபவர்கள், வாழ்க்கையி லிருந்து, துன்பத்திலிருந்து, நீங்கின பெரியோர்கள் மூலமாக வோ இறைவன் மூலமாகவோதான் வாழ்க்கைத் துன்பத்தி லிருந்து விடுபடமுடியும்.

நாம் ஒரு ஆற்றைக் கடக்க வேண்டுமானால், அந்த ஆற்றிலுள்ளசேற்றிலே நாம் விழாமலும், ஆழத்தில் மாட்டிக்

கொள்ளாமலும், ஜலம் மேலே படாமலும் கடந்து செல்ல வேண்டும். அதற்கு உதவியாய் இருப்பது படகு போன்றவைகள். அதுபோல் வாழ்க்கைத் துன்பத்திலிருந்து கரை சேர வேண்டுமானால்- விடுபட வேண்டுமானால்- இறைவனுடைய திருவருளால் நல்லோருடைய சேர்க்கையினால்தான் முடியும்.

படகானது ஜலத்திலும், ஆழத்திலும், சேற்றிலும்கூட செல்லும். ஆனால் படகில் உள்ளவர்கள், தாங்கள் சௌக்கியமாய் பிரயாணம் செய்கிறோமா என்றுதான் பார்ப்பார்களே தவிர, படகு தண்ணீரில் நனைகிறதே, சேற்றில் படுகிறதே, ஆழத்தில் போகிறதே என்று நினைக்கமாட்டார்கள். அதுபோல் நம்மை வாழ்க்கைத் துன்பத்திலிருந்து கரை சேர்க்கும் ஞானிகள், பெரியோர்கள், குருமார்கள், இறைவன் கஷ்டப்படுவதுபோல் நமக்குத் தோன்றினாலும் அவைகளைப் பற்றி நாம் நினைக்க நமக்கு அருகதை இல்லை.

படகின் இயற்கை தண்ணீரில் மிதந்து எல்லோரையும் கடத்திவைப்பது. அது போல நல்லோர்கள், பெரியோர்கள் கடமை பிறரைத் துன்பத்திலிருந்து கடத்திவைப்பது.

ஒரு சமயம் ஒரு படகு ஒரு வண்டியையும் மாட்டையும் ஆற்றின் இக்கரையிலிருந்து அக்கரைக்கு கொண்டு சேர்த்தது. மற்றொரு சமயம் அந்தப் படகையே அந்த வண்டி ஏற்றிச் சென்றது. அதுபோல ஒருவருக் கொருவர் பரஸ்பரம்உதவிக் கொண்டுதான் வாழ்க்கை நடத்த வேண்டும்.

சிறிய விதையில் இருந்து பெரிய ஆலமரம் தோன்றி அதிலிருந்து விழுதுகள் பூமியில் இறங்கி அவைகளே மரங்களாக ஆகிவிடுகின்றன. அதுபோல் இறைவனுடைய சிறு சக்தி இந்த உலகத்தைப் படைத்துக் காத்து நிலைத்து நிற்கிறது.

பெரிதாக வளர்ந்த ஆலமரத்தின் ஆரம்ப விழுது எது முடிவு விழுது எது என்று பிரித்துச் சொல்ல முடியாது. அது போல இந்த உலகிற்கு ஆரம்பம்எது முடிவு எது என்று கூற முடியாது.

ஒவ்வொரு விழுதின் மூலமாக மரம் வளர்ந்துகொண்டே வருகிறது. அதுபோல ஒவ்வொரு வழிபாட்டு முறையின் மூலமாகவும் சமயம் வளர்ந்துகொண்டே வருகிறது.

எல்லா விதைகளும் மரமாவதில்லை. சில விதைகள்தான் மரமாகிறது. அதுபோல இறைவன் அருளால் வந்த நாமெல்லோரும் முக்தி அடைவதில்லை. சிலரால்தான் முக்தி அடைய முடிகிறது.

எல்லா விதைகளும் மரமாகிவிட்டால் உலகத்தில் மனிதனே வாழ முடியாது. அதுபோல எல்லா மனிதர்களும் முக்தி அடைந்துவிட்டால் அப்புறம் இந்த உலகமே இருக்காது.

மா, வடுவாக இருக்கும்போது ஒரு ருசி, காயாக இருக்கும்போது ஒரு ருசி, பழமாக இருக்கும்போது ஒரு ருசி. அது போல இளமையிலே சிலவித விருப்பம், யெளவனத்திலே சில விருப்பம், விருத்தாப்யத்திலே சில விருப்பம்.

ஒரு மாமரத்தைப் பார்த்து குழந்தைகள் மாங்காய் வேண்டுமென்று நினைப்பார்கள். தச்ச ஆசாரிகள் இந்த மரத்தின் பலகை கதவுக்கு உபயோகப் படுமென்று நினைப்பார்கள். வெய்யிலிலிருந்து வந்தவர்கள் நிழல் கிடைத்ததே என்று சந்தோஷப்படுவார்கள். இது போல் இறைவனிடம் தங்கள் தேவைக்கேற்றவாறு பலவாறாக பிரார்த்தனை செய்வார்கள்.

தேங்காயானது ஒரு உயர்ந்த பொருள். இறைவனுக்கே அர்ப்பணிக்கும் பொருள். ஆகவே அது உயர்ந்த இடத்தில் மேலோங்கி நிற்கிறது. அதுபோல உயர்ந்த பொருள்களெல்லாம் உயர்ந்த குணமுள்ள மனிதர்களெல்லாம் மேலோங்கி நிற்பார்கள்.

தேங்காயை உடைத்தால் அதற்குள் இளநீர் உண்டு. இரண்டு தேங்காய் மூடிகள் உண்டு. அவ்விரண்டு மூடிகளும்

சுத்தமாக வெளுப்பாக இருக்கும். தேங்காயின் மேல் பாகம் மிகவும் கடினமாக இருக்கும். அவைகளைப் பிய்த்து வெளியில் போட்ட பிறகுதான் தேங்காயை நம்மால் உபயோகப் படுத்த முடியும். அதுபோல கண்ணுக்குத் தெரியக் கூடிய நம்முடைய உடலானது பிய்த்து எறியவேண்டியதே. அதாவது ஒன்றுக்கும் பிரயோஜனமற்றது. ஆனால் இந்த சரீரத்திற்குள்இருக்கும் தேங்காய் போன்ற மனத்தைத்திறந்து உள்ளே பார்த்தால் ஜீவாத்மா, பரமாத்மா ஸ்வச்சமாக அன்பு என்னும் நீருடன் கலந்து நிற்பர்.

பாகற்காய் கசப்பாக இருந்தாலும் உடலுக்கு நல்லது. அதுபோல பெரியோர்களின் நல்லுரைகள் கேட்பதற்கு கடினமாக இருந்தாலும்கூட அவை உடலுக்கும், உள்ளத்திற்கும் நன்மை அளிக்கக் கூடியது.

சர்க்கரை இனிப்பாக இருந்தாலும் நிறையச்சாப்பிட்டால் வியாதி வந்துவிடும். அதுபோல நல்ல காரியங்களென்று நினைத்து நிறையச் செய்தாலும் அதிலும் சில துன்பங்கள் வரும்.

தண்ணீரிலேயே தாமரை இலை கிடந்தாலும் தண்ணீர் அதில் ஒட்டாது. அது போல இறைவன் அருளைப் பெற்றவர்கள் உலகிலேயே வாழ்ந்தாலும் உலக பந்தங்கள் சுகதுக்கங்கள் அவர்களைப் பாதிக்காது.

தாமரைத்தண்டிலிருந்து எடுக்கும்நூல் மிகவும் மெல்லியதாக இருக்கும். அந்த மெல்லிய நூலைக் கொண்டு மதம் பிடித்த யானையை எவ்விதம் கட்ட முடியாதோ, அதுபோல தீய குணமுள்ள துஷ்டனை மூர்க்கனை நல்லுரைகளால் திருத்த முடியாது.

வெறும் மாவினாலும் வெறும் சர்க்கரையினாலும் ஒரு பதார்த்தமும் பண்ணமுடியாது. இரண்டையும கலந்து ஒருவிதர் தயாராக்கினால் அப்பொழுது மைசூர்பாகு, லட்டு

போன்ற பக்ஷணங்களாக ஆகும். அதுபோல சுத்த ஆத்ம சொரூபத்தினலேயும் இந்த உலகைப் படைக்க முடியாது. மாயையை வைத்துக்கொண்டு ஆத்மாவின் சம்பந்தத்தினல் தொடர்பினல்—ஈஸ்வரன் படைக்கிருன்.

மாவும் சர்க்கரையும் சேர்க்கையினல் தன் பெயரை இழந்து புதிதாக லட்டு, மைசூர்பாகு போன்ற பல பெயர் களைப் பெறுகிறது. அதுபோல மனிதர்கள் உண்மையான ஆத் மாவின் நிலையையும், மாயையின் நிலையையும் தெரியாமல் இறைவனையும், இறைவனல் படைக்கப்பட்ட உலகங்களையும் பல பெயரிட்டு அழைக்கிருர்கள்.

இத்தனை இனிப்புப் பண்டங்களையும் உண்டபின் கடைசி யில் இனிப்பு மாத்திரமே எஞ்சி நிற்கும். அதுபோல இந்த உலகம் உலகிலுள்ள பொருள்கள் எல்லாவற்றையும் அனு பவித்தாலும் கடைசியில் இறைவனுடைய அருள் மிஞ்சி நிற்கும்.

கடிகாரத்தின் முள் ஒவ்வொரு நிமிஷமும் நகர்ந்து கொண்டே செல்கிறது. அப்போது நமக்குக் காலம் செல்வ தாகத் தெரிகிறதில்லை. சிலமணி நேரம் சென்ற பிறகு "ஓ இத்தனை மணி நேரம் சென்று விட்டதோ" என்று எண்ணு கிருேம். அதுபோல ஒவ்வொரு நிமிஷமும் நம்முடைய உடல், உடலில் உள்ள நகம், மயிர், ஆயுள் முதலியவைகள் சென்றுகொண்டே, மாறிக்கொண்டே வருகிறது. ஆனல் எப்பொழுதும் அது தெரிவதில்லை. குழந்தைப் பருவம், இளமைப் பருவம், முதுமைப் பருவம் இப்படி வரும்போது தான் இத்தனை ஆகிவிட்டதே என்று தெரிகிறது.

கடிகாரம் இயங்குவதற்கு சில கடிகாரத்திற்கு குறைந்த பட்சம் ஒரு நாளைக்கு ஒரு தரமும் சில கடிகாரத்திற்கு வாரத் திற்கு ஒரு முறையும், சாவி கொடுக்க வேண்டும். சில கடிகாரத் திற்கு உடம்பின் சூடே போதுமானதாகிவிடும். அதுபோல

சாமான்ய மனிதர்கள் குறைத்த பக்ஷம் ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது சாப்பிட வேண்டும். அப்பொழுதுதான் உடம்பு நன்ருக இயங்கும். தபஸ்விகள், சித்தபுருஷர்கள் முதலியவர்கள் எப்பொழுதோ ஒருமுறை உணவு உட்கொள்வதோ அல்லது பரமானந்தத்திலே லயித்து வாழ்நாள் முழுவதும் இந்த உடலோடு இருந்து வருவதோ உண்டு.

கடிகாரத்திற்கு அதிக சாவியும் கொடுக்கக் கூடாது, குறைந்த சாவியும் கொடுக்கக் கூடாது. கடிகாரத்திற்குத் தேவையுள்ள சாவி கொடுக்கவேண்டும்- அப்போதுதான் கடிகாரம் சரியாக இயங்கும். அதுபோல கிடைத்த ஆகாரங்களையெல்லாம் கிடைத்தபோதெல்லாம் சாப்பிடக்கூடாது. உடம்புக்குத் தேவையாய் உள்ளவரைக்கும் மாத்திரமே உணவு உட்கொள்ள வேண்டும்.

கடிகாரத்திற்கு சாவி கொடுக்கும்போது ஒரு முறையோடு நிதானமாகக் கொடுக்கவேண்டும். கண்டபடி முறைதவறி திருகக் கூடாது. அப்படித் திருகிஞல் ரிப்பேர் ஆகிவிடும். அதுபோல கண்டபடி ஆகாரங்களை உண்ணக்கூடாது. முறையோடு உட்கொள்ள வேண்டும். கண்டபடி எல்லாம் ஆகாரத்தை உட்கொண்டால் அதஞல் காம க்ரோதம் ஏற்பட்டு சண்டைதான் வரும்.

மின்கலத்தால் இயங்கக்கூடிய விளக்கு-அதாவது டார்ச் லைட்- மூலம் ஒளி வெளிச்சம் வந்துகொண்டே இருந்தால் சிறிது காலத்தில் பாட்டரி வலுவிழந்து அதாவது வீக் ஆகி ஒளி சக்தி குறைந்துவிடும். அதுபோல எப்பொழுதும் சிந்தனை செய்துகொண்டே இருந்தால், கவலைப்பட்டுக்கொண்டே இருந்தால், வேலை செய்துகொண்டே இருந்தால் அப்பொழுது உடலிலும், மனத்திலுமுள்ள சக்தி குறைந்துவிடும். பிறகு புதிதாக ஷெல் போட்டோ, அல்லது பாட்டரி சார்ஜ் ஏற்றிக் கொண்டோமாஞல் அப்போதுதான் பிரகாசமான வெளிச்சம் வரும். அதுபோல இறைவனுடைய அருளைப்

பெறுவதாலும், நல்லோர்களுடைய சேர்க்கையினாலும், நல்ல பணிகள் செல்வதினாலும் உடலிலும், மனசிலும் புதிய சக்தி பிறக்கும்.

மின்சாரத்தின் சக்தி கண்ணுக்குத் தெரிவதில்லை. ஆனால் அந்த சக்தி இல்லாமல் எந்த ஒரு காரியமும் இயங்க முடிவதில்லை. காரியம் நடப்பதைக் கண்டு அதற்குக் காரணமாக மின்சக்தி இருப்பதை உணர்கிறோம். அதுபோல ஆண்டவன் இருப்பது நம்முடைய கண்ணுக்குத் தெரிவதில்லை. இத்தனை உலகங்களும், உலகில் காரியங்களும் இயங்குவதைப் பார்த்து இதற்குக் காரணபுருஷனான ஒருவன் இருக்கவேண்டுமென்பதை உணர்கிறோம்.

கண்ணுக்குத் தெரியாததனால் ஆண்டவன் இல்லை என்று கூறிவிடமுடியாது. நம்முடைய மனமும், மனத்தில் உள்ள கவலைகளும் நம்முடைய கண்களுக்குப் புலப்படவில்லை. மற்றவர்கள் கண்களுக்கும் புலப்படவில்லை. ஆனாலும் கவலைகளின் மூலமாக மனம் ஒன்று இருக்கிறது என்பதை அனுபவபூர்வமாக உணர்கிறோம். அதுபோல இந்த மனம், புத்தி, உலகம் எல்லாவற்றிற்கும் காரணமாக இறைவன் ஒருவன் இருந்து ஆட்டிவைத்துக்கொண்டுதான் இருக்கிறான் என்பதை நாம் உணர வேண்டும்.

மின்சக்தி கண்ணுக்குத் தெரிவதில்லை. அதைத் தொட்டு அனுபவிக்கவேண்டுமென்றால் அப்பொழுது ஷாக் அடித்து துன்பவேதனை வருகிறது. இது செயற்கை சக்தியின் நியதி. இயற்கையாக உள்ள ஆண்டவனை அனுபவித்துப் பார்த்தோமானால் அப்பொழுது ஆனந்தம் மாத்திரமே கிடைக்கிறது.

செயற்கை மின்சக்தியை தொட்டவனை நாம் தொட்டால், நம்மையும் அந்த மின்சக்தி துன்பத்திற்கு அழைத்துச் செல்லும். இயற்கை ஆண்டவன் சக்தியைப் பெற்றவனைப் பற்றிக் கொண்டால் நம்மையும் அந்த சக்தி ஆனந்தத்திற்கு அழைத்துச் செல்லும்.

மின்சாரத்தின் மூலம் பலவிதமான கலர் பல்புகளை பொருத்தி இன்பங்களை அனுபவிக்கிறோம். அதுபோல் பலவித மான நல்வினை தீவினைகளைச் செய்து பலவிதமான இன்ப துன்பங்களை அனுபவிக்கிறோம்.

மின்சார சக்தி எங்கும் நிறைந்திருந்தாலும் பல்பையும் பொருத்தி சுவிட்சையும் 'on' பண்ணவேண்டும். அப்பொழுது தான் ஒளி, வெளிச்சம் கிடைக்கும். அதுபோல ஆண்டவன் அருள் எல்லாவற்றிலும் நிறைந்து இருந்தாலும் புத்திபூர்வ மாக நாம் செய்த வினைகளே நம்முடைய இன்ப துன்பங் களுக்குக் காரணமாக ஆகிறது.

பல்பைப் பொருத்தாமல் இருந்தால், சுவிட்சைப் போடா மல் இருந்தால் மின்சாரம் இருந்தாலும் அங்கு ஒளி வராது. அதுபோல வினையைச் செய்யாமல் இருந்தால் இன்ப துன்பம் வராது.

ரப்பராலான கையணியை மாட்டிக்கொண்டு எலக்ட்ரி சிடியை, மின்சாரத்தைத் தொட்டால் அப்பொழுது (Shock) ஷாக் அடிக்காது. அதுபோல் வினையின் பயனால் இன்பதுன்பங் கள் இருந்தாலும் இறைவனின் பரிபூரண அருள்பெற்றவர்களை இன்ப துன்பங்கள் பாதிக்காது.

நெருப்பிலே போடப்பட்ட இரும்பானது பழுக்கக் காய்ந்ததும் எப்படி நெருப்புப் போலவே ஜொலிக்கிறதோ அதுபோல் நாம் எவ்வளவு பாபகாரியங்களைச் செய்து கொண்டிருந்தாலும் பகவானை நினைக்க, நினைக்க நம்மிடமும் கடவுளின் தேஜஸ் ஜொலிக்கும்.

தங்கக் கட்டியாயிருந்தாலும் நகைகளாகச் செய்வதற் காக நெருப்பிலேபோட்டு, பழுக்கக் காய்ச்சி அடிக்கத்தான் வேண்டியிருக்கிறது. அதேபோல் எவ்வளவு பெரிய ஞானி களாயிருந்தாலும், நல்ல மனிதர்களாயிருந்தாலும் லோக க்ஷேமத்துக்கான காரியங்களில் ஈடுபடும்போது இன்பதுன்பங் களுக்குட்பட்டுத்தான் ஆகவேண்டும்.

சுத்த தண்ணீரில் உப்பைப் போட்டால் சுத்த தண்ணீரும் உப்பாகிவிடும். அதேபோல் நாம் நல்ல மனிதராய் இருந்தாலும் கெட்டவர்களுடன் சகவாசம் செய்தால் நாமும் கெட்டவர்களாகி விடுவோம்.

குருடர்களாய் இருப்பவர்களுக்குக் கண் மூலம் சூரிய ஒளி தெரியாது. உடல் மூலமாக சூரிய உஷ்ணத்தை உணர முடியும். அதேபோல் கண் தெரிகின்ற நம்மால் கடவுளின் ஜோதியைக் கண்ணால் காணமுடியாது. ஆனால், பிரார்த்தனை மூலம் ஆண்டவனின் அருளைத்தான் உணரமுடியும்.

அரிசி நெல்லாக இருக்கையில் அதனுள் இருக்கும் அரிசியின் உருவை நம்மால் காணமுடியாது. உமியை நீக்கிவிட்டால் அரிசியின் உருவம் நமக்குத் தெரிகிறது. அதேபோல் நமது மனமானது குழப்பமான நிலையில் இருக்கையில் மனசின் உண்மையான நிலையை நம்மால் அறியமுடிவதில்லை. உமி போன்ற எண்ணங்களை மனதிலிருந்து அகற்றிவிட்டால் அப்போது உள்ளத்தின் உண்மையான ஸ்வரூபம் நன்கு விளங்கும்.

உமியை அக்கினி குண்டத்தில் போட்டுவைத்தால் கொஞ்சம் கொஞ்சமாக கருகிப்போய் அக்கினி குண்டத்தையும் கருகவைத்துவிடும். அதேபோல் மனதில் எண்ணங்களை அலைமோத விட்டால் அந்த எண்ணங்களால் எவ்வித காரியங்களுக்கும் உபயோகமில்லாமல் நம்மையும் ஆழ்ந்த துக்கத்தில் ஆழ்த்திவிடும்.

மேகத்திற்குள் ஜலம் பரிணமித்திருக்கிறது. அதேபோல் மனமும் எண்ணங்களால் பரிணமித்திருக்கிறது. மேகம் சதா நகர்ந்துகொண்டே இருக்கும். அதேபோல் மனமும் ஓரிடத்தில்

அடங்கி நிற்பதில்லை. எதையாவது எண்ணிக்கொண்டே இருக்கும் மேகம் ஒன்றோடொன்று உராய்வதினால் தான் இடி என்ற கர்ஜனை சப்தம் எழுகின்றது. அதேபோல் உள்ளத்தில் விருத்தமான எண்ணங்கள் தோன்றி மோதுவதால்தான் மனதில் கஷ்டங்கள், துக்கங்கள் உண்டாகின்றன.

பனி இருக்கும்போதும், சூர்யன் அஸ்தமித்தபின் இருட்டிலும் தாமரை மலர்வதில்லை. சூரியனின் பிரகாசம் வளர வளரப் பனியும் அகன்று தாமரையும் மலர்கிறது. அதே போல் நம் மனசாகிற தாமரை மலரவேண்டுமானால் மனதில் இருக்கிற ஆசையும், அந்தகாரமும் அகன்றால்தான் நம் மனமும் மலரும். ஆசையும், அகங்காரமும் அகன்றால்தான் மனமாகிற தாமரையும் மலர்ந்து பெருவாழ்வு பெறலாம்.

கிழத்தனத்தால் அழகு போய்விடுகிறது. ஆசையானது தெய்வ சிந்தனையை மறக்கடிக்கிறது. அசூயையானது நல் நடத்தையைப் போக்கடிக்கிறது. கோபமானது ஐஸ்வரியத்தைப் போக்கடிக்கிறது. துஷ்டர்களின் சேர்க்கையானது ஒழுக்கத்தைக் குலைக்கிறது. காமமானது வெட்கத்தைப் போக்கடிக்கிறது. அகங்காரமானது எல்லாவற்றையுமே போக்கடிக்கிறது. கங்கா ஜலத்தைக் குடிப்பது பாபத்தை போக்கடிக்கிறது.

பிரியமில்லாமல் கொடுக்கும் தானம் பலனளிக்காது. தாளமில்லாமல் பாடும் பாட்டில் இனிமை இருக்காது. காவில்லாத குழந்தை அழகில்லை. ராஜ்யம் இல்லாத அரசன் பிரயோஜனமற்றவன். ஆயுதமில்லாத சூரன் நன்கு பிரகாசிக்க மாட்டான். ஆலோசனை செய்யாமல் செய்யும் காரியம் நன்றாக இருக்காது. தந்தமில்லாத யானை சோபிக்காது. வாசனை இல்லாத புஷ்பம் பிரயோஜனமற்றது. நிழல் தராதது மரமாகாது. ஜலமில்லாத ஏரி பலனில்லாத பிரதேசம். நீதி தெரியாத அரசன், வெட்கமில்லாத பெண்கள், சோம்பேறியான மனிதன் கெட்ட நடத்தையுள்ளவன் ஆகியோர்

பிரகாசிக்க மாட்டார்கள். பொறுமையில்லாத தபசு-பிரயோஜனமற்றது. ஓடாத குதிரை சோபிக்காது. ஐசுவரியம் இருந்து அகங்காரம் இல்லாதவன் துர்லபம். சஞ்சலமில்லாத குரங்கு அபூர்வம். தரித்திரம் இல்லாத சாது துர்லபம். பிறருக்கு நன்மை செய்வதற்காக மரண-மடைவது உயர்ந்தது. தானம் செய்து தரித்திரம் ஆவது கொண்டாடத் தக்கது. ஐசுவரியம் இல்லாத மனக்கோட்டை மனதிலேயே அடங்கியிருக்கிறது. கருமியிடம் உள்ள ஐசு-வரியம் பூமியிலேயே புதைந்து போகிறது. மூர்க்கனுக்கு சொல்லும் வித்தை, ஐசுவரியம் உள்ளவனுக்குச் செய்யும் தானம், குடிகாரனுக்குப் புகட்டும் புத்திமதி ஆகியவை வியர்த்தம்.

கேள்வியும் பதிலும்

கே: ஒரு மனிதன் புகழப்படுவது எதனுல்?

ப: நல்ல குணங்களாலும்—நன்னடத்தையினுலும்.

கே: சாமான்ய மனிதன் கவலைப்படுவதற்கும் நல்லோர் கவலைப்படுவதற்கும் வித்தியாசம் என்ன?

ப: சமான்ய மனிதன் தனக்கு இதுவேண்டும் அது வேண்டும் என்று தன் தேவைக் கேற்றவாறு கவலைப்படுவான். நல்லோர்கள் நாட்டு மக்கள் நல்ல குணத்துடனும் நன்னடத்தையுடனும் வாழவேண்டுமென்று கவலைப்படுவார்கள்.

கே: யாருடைய பொருளானது ப்ரயோசனத்திற்கு அற்றதாக ஆகிறது!

ப: கருமியினுடைய பொருள்.

கே: யார் தரித்திரனுக இருக்கிருன்?

ப: யார் ஒருவருக்கும் ஒரு பிராணிக்கும் முன்பு சகாயம் செய்யாமல் இருந்தானே-இப்பொழுது சோம்பேறியாக இருக்கிருனே அவன் தரித்திரனுக இருக்கிருன்.

கே: படிப்புக்கு இடையூறுகள் என்னென்ன?

ப: பந்தயம் வைத்து ஆடுதல்—சோம்பேறித்தனம், தூக்கம்!

கே: எவனொருவன் எப்பொழுதும் வருத்தப்பட்டுக் கொண்டே இருப்பான்? கவலைப்பட்டுக் கொண்டே இருப்பான்?

ப: தரித்திரனாயுள்ளவன்; வியாதியுள்ளவன் பிறர்; பொருளை அண்டி வாழ்பவன்!

கே: பெண்களுக்கு அழகு எது?

ப: வெட்கமும் கற்பும்!

கே: யார் பாகுபாடின்றி எல்லோரையும் அழைத்துச் செல்கிறான்?

ப: யமதர்மராஜன்!

கே: யாருடைய வாழ்க்கை ப்ரயோசனமற்றது ஆகிறது?

ப: நல்ல குணம் நன்னடத்தை யில்லாதவருடைய வாழ்க்கை.

கே: நம்மிடம் எல்லோரும் பிரியமாக இருப்பதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?

ப: பிறர்க்குப் பொருளுதவி செய்வதும், எல்லோரிடமும் இனிமையாகப் பேசுவதும், எல்லோரிடமும் விநயத்துடனும் எல்லா பிராணிகளிடத்தும் ப்ரியத்துடனும் இருப்பதும் பிறர் நம்மிடம் ப்ரியம் கொள்ளச் செய்யும்.

கே: எப்பொழுது நம்முடைய உறவினர்களும், நம்முடைய புத்தியும் சோதனையில் வெற்றி பெற முடியும்?

ப: ஆபத்துக்காலத்திலும்—கஷ்டம் வந்த காலத்திலும் உறவினர்களுடைய உதவியும், புத்தியினுடைய ஆலோசனையுமிருந்தால் அப்பொழுது உறவினர்களும்— புத்தியும் சோதனையில் வெற்றி பெற முடியும்!

கே: மனித வாழ்க்கையில் அடையவேண்டியது என்ன?

ப: துன்பக் கலப்பில்லாத அகண்ட பரிபூர்ணஆனந்தம்.

கே: காதிற்கு அலங்காரம் எது?

ப: தீயதைக் கேட்காமல் நல்லதையே கேட்பது!

கே: தாயாராக நினைக்கவேண்டியவர்கள் யார்?

ப: நம்முடைய தாய்—நம்முடைய குருபத்தினி—நம்முடைய சகோதரர்கள் மனைவி—நம் மனைவியின் தாய்—பசு—பூமாதேவி.

கே: யாரைத் தகப்பனாராக நினைக்கவேண்டும்?

ப: நம்முடைய தகப்பனார்—நம்முடைய குரு—நமக்கு உணவு அளிப்பவர்—பயத்திலிருந்து நம்மைக் காப்பாற்றுபவர்—வயதிலே மூத்தவர்.

கே: மனிதன் எதில் திருப்தி அடைய வேண்டும்?

ப: உணவு உட்கொள்வதில் போதுமென்ற எண்ணம் வரவேண்டும்! பொருள் ஈட்டுவதில் போதுமென்ற எண்ணம் வரவேண்டும்! தன் மனைவியிடத்திலேயே எல்லா சந்தோஷத்தையும் பெறும் எண்ணம் வரவேண்டும்.

கே: எதில் போதுமென்ற எண்ணம் இருக்கக்கூடாது?

ப: பிறர்க்குப் பொருள் அளிப்பதிலும்—நல்ல விஷயங்களைப் படிப்பதிலும்—பூஜை தவம் செய்வதுபோன்ற வழிகளிலும் போதுமென்ற எண்ணம் இருக்கக் கூடாது.

கே: ஆபத்துகள் எதனுல் வருகின்றன?

ப: புலன் அடக்கமில்லாமையினுலும், முன்ஜென்ம வினையினுலும், தற்போதுள்ள சூழ்நிலையினுலும் ஆபத்துகள் வரும்.

கே: யார் குருடன்?

ப; நல்ல விஷயங்களைப் படித்திருந்தும் தவருன வழியில் வாழ்க்கையை நடத்துபவன் குருடன்!

கே: எது நமக்குச் சத்ரு?

ப: கோபம்!

தெய்வ வாக்கு

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்



வானதி பதிப்பகம்